45

# தேரையர் வெண்பா

## மூலமும் - உரையும்

உரையாசிரியர் :

திருவாளர். டாக்டர் ஆர். தியாகராசன் எல். ஐ. எம்.

பதிப்பு :

எஸ். எஸ். ஆனந்தம்

த்துவ ஆராய்ச்சி நிலையம்

சென்னை - 600017.

1975

LC
N74
43264

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்
சித்த இலக்கிய மறுமலர்ச்சி வரிசை எண் : உ

# தேரையர் வெண்பா

மூலமும் உரையும்

உரையாசிரியர்

திருவாளர் டாக்டர் ஆர். தியாகராசன் எல்.ஐ.எம்.

பொறுப்பு அலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
சென்னை-10.

தலைவர், சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு, சென்னை-29

பதிப்பு

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்
சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களால்

அன்புச் செல்வி அச்சகத்தில்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

எண்: 14, ராகவையா சாலை, தியாகராயநகர், சென்னை-600017.

முதற்பதிப்பு: 1974.

உரிமை :
டாக்டர் ஆர். தியாகராசன் எல். ஐ. எம.

விலை :

தமிழக அரசு

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு பேராசிரியர்

உயர்திரு. **க. அன்பழகன்** எம். ஏ., எம். எல். ஏ,

அவர்களுடைய பரிவுடன் கூடிய ஆர்வமே, இம்மாதிரி சித்த மருத்துவ நூற்கள் வெளிவருவதற்குக் காரணமாகும்.

தமிழகமும், இந்தியாவும், உலக நாடுகளும் எதிர்காலத்தில் பயன்பெறத் தக்க வகையில் சித்த மருத்துவ விஞ்ஞானத்தைப் போற்றிக் காக்கும், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நீண்ட ஆயுளுடனும், உடல் உரத்துடனும் பல ஆண்டுகள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த எமது பணிவன்பான வாழ்த்துக்கள்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்

சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தினர்.



உயர்திரு.
மாங்காடு, வடிவேலு முதலியார்
ஆசிரியர்:
" தமிழ் மருத்துவப் பொழில் ".



உயர்திரு.
வி. ஆர். சுந்தரம் அவர்கள்.
" தேரையர் வெண்பா "வைக்
கொடுத்து உதவியவர்.

# பதிப்புரை

" மடுத்த வாயெல்லாம் பகடன்னன் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து "

—திருவள்ளுவர்.

உடல் நோய்களையும், உள நோய்களையும் போக்குவதோடு வராமலும் தடுத்து இறப்பையும் மறுப்பதுதான் 'மருந்து' என மருந்துக்கு இலக்கணம் வகுத்தது சித்த மருத்துவ விஞ்ஞான மாகும். அந்த விஞ்ஞானத்துக்கே ஒரு வகையான வறட்சி ஏற் பட்டு விட்டது என்றால் அஃது உண்மையே; மிகையன்று. எந்த ஒரு விஞ்ஞானமும் அதை ஆதரிப்பவர்களும், பயிலுகின்றவர்களும், பயின்றதை அன்றாட அனுபவத்தில் இருத்துபவர்களும் இல்லா மல் போனால் அந்த விஞ்ஞானம் நாளடைவில் இறந்து விடுகின் றது. பல நூற்றாண்டுகளாக, சித்த மருத்துவத்துக்குத் தமிழக மன் னர்களின் ஆதரவு இருந்தமையால் அம்மருத்துவமும், அதனை மன் னர்கட்குச் செய்து வந்த அரச மருத்துவர்களும் (ராஜ வைத்தி யர்கள்) ஏனைய சித்த மருத்துவர்களும் செல்வச் சிறப்புகளுடனும் வசதிகளுடனும் வாழ்ந்து வந்தனர். எனவே அம்மருத்துவர்கள் கலை, இலக்கியச் சுவையில் ஈடுபாடு கொண்டு இலக்கியங்களைப் பயின்றார்கள், வளர்த்தார்கள், மேம்படுத்தினார்கள். தமிழகத்தி லும், அனைத்து இந்தியாவிலும் அரசாட்சியில் எண்ணிப் பார்க்க இயலாத மாற்றங்கள் ஏற்பட்டு, அன்னியர் ஆட்சிக்கு நாடு அடி மையான காரணத்தால் அரசின் ஆதரவைச் சித்த மருத்துவர்கள் இழந்தனர். சித்த மருத்துவர்கள் வறியர்களானதால் அவர்களி டம் இருந்த சித்த விஞ்ஞானமும் வறட்சிக்கு ஆளாகியது. இந்நிலை யில் சித்த மருத்துவ இலக்கியங்களைக் கற்பாரும் இல்லை, கற்பிப்பாரும் இல்லை, காப்பாற்றுவாரும் இல்லை; என்ற அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்றவாறு வறுமை வந்த பிறகு நவிலு கின்ற நூல் நயத்தினைப் பயிலுகின்ற பண்புடையாளர் எங்கே இருக்கப் போகின்றனர்? இந்த வறுமைப் பிணியுடன், பதினெட் டாம் பெருக்கு (ஆடிப்பெருக்கு) சமயத்தில் ஓலைச்சுவடியில் எழு திய இலக்கியங்களை ஆற்று நீரில் விட்டு விடுவது போன்ற அறி வீனங்களும் கூடவே சேர்ந்து பொதுவாகப் பண்டைத் தமிழ் இலக் கியங்களுக்கும், சிறப்பாகச் சித்த மருத்துவ இலக்கியங்கட்கும் பெருத்த அழிவைத் தந்தன. பண்டைத் தமிழகம் கடல்கோள்

களுக்கு இலக்காகியிருப்பதாக வரலாற்றின் மூலம் அறிகின்றோம். இந்தக் கடல் கோள்களினால் ஏற்பட்டதை விட அதிக ஆபத்தினை சித்த மருத்துவர்களின் வறுமையும், மக்களின் மூடநம்பிக்கைகளும் சித்த இலக்கியங்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

வறுமை, அறிவீனம், தற்கொலைச் செயல்கள் இவற்றாலெல்லாம் அழிந்து போனது போக எஞ்சியுள்ள சித்த மருத்துவ இலக்கியங்கள் இன்றும் தமிழகக் கிராமப் புறங்களில் உள்ள, வெளியுலகுக்குத் தெரியாத, ஆடம்பரமற்ற, விளம்பரமற்ற, போலிக் கவுரவமற்ற, பரம்பரை சித்த மருத்துவர்களின் இல்லங்களிலே பரணின் மீதும், கோணிகளுக்குள்ளேயும் மக்கிக் கொண்டும் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுக் கொண்டும் இருந்து வருகின்றன.

இந்த சித்த மருத்துவ இலக்கியங்களின் மீது பல்லாண்டுக் காலமாகப் படிந்திருக்கின்ற தூசிகளைத் தட்டி, பூச்சிகளைப் போக்கி ஒருங்கு திரட்டிப் போற்றிக் காத்து, பிற்காலத்துக்குப் பயன்படச் செய்யும் உயர்ந்த எண்ணத்துடன், தற்போதைய தமிழக அரசு, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பேராசிரியர் **க. அன்பழகன், எம். ஏ.,** அவர்கள், "சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு" என்ற ஒரு குழுவினை நிறுவி, அதற்கென சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரை ஒதுக்கியும் இருக்கின்றார்கள். பண்டைத் தமிழ் இலக்கியங்களைக் காப்பாற்றிய நற்பணியில் மகாமகோபாத்தியாய, உ. வே. சாமிநாதய்யர் அவர்கட்கு ஒப்பாக சித்த மருத்துவ இலக்கியங்களை அழிந்து போகாமல் மீட்டுக் காப்பாற்றித் தரும் அருஞ்செயலுக்குரிய பெருமை அனைத்தும் மாண்புமிகு அமைச்சர், பேராசிரியர், **க. அன்பழகன்** அவர்களையே சாரும்.

சித்த மருத்துவம் மறுமலர்ச்சியடைய வேண்டி மருத்துவப் பெரியார், பண்டித **எஸ். எஸ். ஆனந்தம்** அவர்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கு அரியது; வரலாற்றுப் பெருமையுடையது. **ஆனந்தர்** ஆற்றிய அருந்தொண்டுகளைப் பற்றிய முக்கால் நூற்றாண்டுக் காலத்துக்குரிய குறிப்புகளைக் காத்து வருவதன்றி, அவர் ஆற்றிய பணியில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட நான் செய்ய இயலவில்லையே, என்ற மனக்குறையுடனிருக்கும் எனக்கு, **பண்டித ஆனந்தரது** சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் இரண்டாவது வெளியீடாக இந்த நூல்—மிக உயர்ந்த நுண் பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது—அதுவும் முதன் முறையாக அச்சிடப் பெறுவது—வெளி வருவது: ஒரு சிறிது ஆறுதலைத் தருகின்றது.

இந்நூலுக்கு உரையெழுதியுள்ளவரைப் பற்றி நான் ஒரு சிறி தேனும் கூறியாக வேண்டும். இற்றை நாளில், சித்த இலக் கியங்களுக்கு உரை எழுதக் கூடியவர்களை வரிசைப் படுத்தினல் அதில் முதலில் இருப்பவர் டாக்டர் **ஆர். தியாகராசன்** எல்.ஐ.எம். அவர்கள் ஆவார்கள். பல ஆண்டுகள் தொடர்ந்து தமிழக அரசில் பணியாற்றி ஓய்வு பெற்ற பின், தற்போது மத்திய அரசின் தொடர்புடன் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி வருகின்ருர். இவர் பணியாற்றிய காலங்களில் ஓர் அரிய அனுபவம் இவருக்குத் தொடர்ந்து ஏற்பட்டது. தமது மாணவர்கள், தமக்கு மேலேயுள்ள பதவிகளில் பணியாற்ற, அவர் களுக்குக் கீழேயுள்ள அடுத்த பதவியில் தாம் பணியாற்ற வேண் டிய ஒரு நிலை தான் அது. இந்த நிலையில் டாக்டர் **தியாகராசன்** அவர்கள் ஒரு சிறிதும் மனக்கிலேசமில்லாமல், இனிய பண்போடு, முழுமனதுடன் பணியாற்றியது, அரசாங்க ஊழியர்கள் அனைவருக் கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்த, கடமை, கண்ணி யம், கட்டுப்பாடு ஆகிய மூன்றும் ஒருங்கு இணையப்பெற்ற உயரிய குணமாகும்.

டாக்டர் **ஆர். தியாகராசன்** அவர்களுக்கு வேலைகளும், பொறுப்புகளும் மிகுதி. இம்மாதிரி கடினமான உரையெழுத முற்படுதலால் அவருக்கு ஓய்வே இல்லாது போகக்கூடும். எனினும் மேலே மேலே வேலைகளைக் கொடுக்க வேண்டியுள்ளது; கொடுத் துக் கொண்டே போனலும் செய்யும் திறன் படைத்தவர். தலைப் பில் கண்ட திருக்குறளின்படி 'மடுத்த வாயெல்லாம் பகடன்னன்' என்றதற்கு இலக்கியமாகத் திகழ்கின்றவர் இவர்.

இத்தகைய உயர்ந்த பேராசிரியரது உரை நூல்களை முதல் முறையாக வெளியிடுவதில் நான் பெருமைப்படுகின்றேன். இதைப் போல நூறு மடங்கு வேலைகளை இனி முடிக்கவும், இனிது முடிக்க வும், இறையருளை வேண்டி இதை முடிக்கின்றேன்.

ஆனந்தகுமார்

இயக்குநர், **பண்டித எஸ். எஸ். ஆனந்தம்**

*சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்*

*14, ராகவையா வீதி, தியாகராயநகர், சென்னை, 600017.*

# பொருளடக்கம்

(எண்: செய்யுளெண்)


அ

அகத்தி 376
அகில் 173
அங்கணம் 315
அசனம் 452
அசோகு 26
அடுப்பு 241
அணங்கு 383
அணில் எச்சம் 147
அண்டங்காக்கை 95
அண்டவாதம் தீர 554
அண்டவாத விரேசனம் 552
அண்டவீக்கத்திற்கு 553
அதிசாரத்திற்கு 705
அதிசாரம் குன்மம் தீர 721
அத்தி 54, 378
அத்திசுரம் நீங்க 696
அந்தணன் 272
அபூபம் 213
அப்பிரக பற்பத் தருமை 431
அப்பிரகபற்பம் செய்முறை 483, 503
அம்பருத்தூணி 268
அயக்களங்கு 570
அயச்செந்தூரப் பெருமை 435
அயச்செந்தூரம் செய்முறை தீரும் பிணிகள் 514, 515 516, 517, 518
அயம் 273
அரிதாரம் 40
அரோசகம் நீங்க 695
அலரி 159
அல்லி 188
அவிழ்தக் கடுமை 596
அவிழ்த உபசாந்தி 447
அவையடக்கம் 11
அழிஞ்சில் வித்து 134
அறுகம்புல் 44
அனிச்சம் 359
அனுபானங்கள் 594
அனுபானப் பெருமை 446

ஆ

ஆகா அனுபானங்கள் 595
ஆகாயத் தாமரை 35
ஆகாயம் 20
ஆக்கிராண இராசபேதி 559
ஆடுதின்னாப்பாளை 30
ஆட்டுச்சாணம் 66
ஆத்தி 165
ஆமணக்கு 29
ஆமலக கற்பம் 478
ஆமாத்தியர் 638
ஆமை 118, 401
ஆமைக்கட்டுக்கு மருந்து 560
ஆம்பல் 201
ஆலம்விழுது 482
ஆல் 24
ஆளிவித்து 319
ஆறு 317
ஆனந்த கலிக்கம் 579

இ

இஞ்சி 288, 325, 468, 612
இஞ்சி சுக்கு கடுக்காய்க் கற்பங்கள் 483
இஞ்சிச் சூரணம் 528
இஞ்சி ரசாயனக்குணம் 439
இஞ்சி ரசாயனம் 740
இடையர் 280
இந்திரகோபம் 153
இந்துப்பு 308
இரசகுளிகை 584, 585, 586
இரசகுளிகை மகிமை 444
இரசக்கட்டு 567
இரசித பற்பப்பெருமை 429
இரத்தத்தின் பரியாயப் பெயர்கள் 112

இரவு 351
இராசவிரேசனம் 550
இருப்பை 256
இருவாட்சி 108
இலகு சந்தனாதித்தைலக் குணம் 426
இலகு சந்தனாதித் தைலம் செய்முறை 461
இலகு வில்வாதி லேகியப் பெருமை 437
இலகு வில்வாதி லேகியம் செய்முறை 525
இலந்தை 266, 287, 391
இலாங்கலி 405
இலிங்கம் 92
இலைக்கறி 608
இளைப்பு நோய் நீங்க 676
இறைச்சி 309
இனிய குரல் உண்டாக 678

ஈந்து 154
ஈரப்பலா 394
ஈளை தீர 715

உ

உச்சிப்பிளவை தீர 730, 731
உடும்பின் கறி 77
உடைவேல் 227
உட்டணவாதம் 715
உணவு 218, 615
உத்தாமணி 282
உபதை 450, 602
உப்பளம் 251
உப்புசம் தீர 714
உரல் 362
உருத்திராட்சம் 388
உளுந்து 205
உளைப்பு தீர 715

ஊ

ஊசிப்பாலை 148
ஊர்ப்பொதுவிடம் 364
ஊழ் 320
ஊன்விற்போர் 332

எ

எட்டி 264
எருக்கு 27
எருமைப்பால் 73
எலிக்கடிக்கு 753
எலுமிச்சை 28, 612
எலும்பின் பரியாயப் பெயர்கள் 111
எள் 204

ஏ

ஏலம் 291, 310

ஒ

ஒட்டகத்தின் சிறுநீர் 67
ஒட்டகத்தின் பால் 82
ஒருதலைநோய்க்குமாத்திரை 624
ஒளி 247
ஒற்றிடம் 630

ஓ

ஓந்தி 98
ஓமம் 262, 469
ஓரிலைத் தாமரை 36

க

கக்குவான் தீர 661
கஞ்சா 200
கஞ்சி 240
கடம்பு 182
கடலை 197
கடல் 253
கடுகு 375, 377
கடுக்காய் 25, 473
கடுக்காய் வேர் 141
கட்டளை 322
கட்டின் குணம் 441
கண்புகைச்சலுக்கு 681
கதிர்ப்பச்சை 368
கத்தரி 226, 609
கத்தூரி 140
கந்தகம் 415
கந்தம் (பல பொருள் ஒரு சொல்) 237

கந்தாதி கிருதம் 540
கந்திக்கட்டு 571
கபம் பிரமியம் தீர 662
கமுகு 287
கரடி எச்சம் 365
கரடிப்பிச்சு 68
கரி 244
கருடன் 150
கருணைக்கிழங்கு 217
கருணைநெய் 542
கருணை லேகியம் 541
கருநெய்தல் 233
கருப்பொருள்களைத் தன்மந்திரி காட்டினர் எனல் 10
கருவங்கம் 298
கருவேல் 42
கருணீகர் 334
கலிக்கம் 576, 577, 581, 625
கலிக்கம் வகைகள் 575
கலிக்கங்களின் பயன் 582
கழற்சிக்காய் 246
களங்கு மகிமை 442
கள் 220
கள் விற்போர் 331
கற்கண்டு 160
கற்சூரம் 131
கற்பங்கள் 417
கற்பத்தருமை 427
கற்றாழை 369
கன்றின் சாணம் 145

கா

காக்கை 97
காக்கைச்சிலை ... 132
காக்கை வலி நீர்க் ... கோவை தீர 667
காசம் தீர 549, 597, 712
காடி 381
காட்டுப் பசுவின் பால் 70
காட்டுமரவட்டைக் கடி நீங்க 747
காணுக்கடிக்கு 749
காதிரைச்சலுக்கு 735
காந்தச் செந்தூரப்பெருமை 434
காந்தச் செந்தூரம் செய்முறை தீரும் பிணிகள் 510, 511, 512, 513
காந்தள் 46
காமாலை தீர 656
காமாலை மண்டை வலிக்கு 679
காய்ந்தாறிய உதகம் 610
காரகத்திற்கு 682
காரசாரப் பெருமை 443
காரம் 587
காரீய பற்பத்தருமை 433
காரீய பற்பம் செய்முறை தீரும் பிணிகள் 507, 508
காரை 62
காலசதி நீங்க 677
காலெரிவிற்கு 683
கால்முடம் நீங்க 725
காருக்கருணைக் கருக்குக் குடிநீர் 543
காற்று 19

கி

கிண்ணம் 355
கிலுகிலுப்பை 52
கிளிஞ்சில் 743

கீ

கீரியின் எச்சம் 155

கு

குடசப்பாலை 187
குட்டம் போக 693
குணவாகட மகிமை 613
குதிரையின் வாயூறல் 72
குமரிகற்பம் 477
குயவர் 276
குயில் 382
குயில்பிச்சு 101
குரங்கின் விந்து 74
குரு 644
குருக்கத்தி 167
குருட்டுக்கண் தீர 493
குலம் 222
குழந்தைகள் சரும நோய்க்கு மருந்து 562
குழுக்கள் 277
குளிர்ந்த தண்ணீர் 611

குறிவற்று புற்றுக்கு 694
குன்மம் தீர 666

கை

கைக்கோளர் 333
கை முடம் நீங்க 724

கொ

கொக்கின் கால் 387
கொசுத்தேன் 115
கொத்தமல்லி 260
கொல்லன் கோவை இலை 158
கொன்றை 22
கொன்றைப் பிசின் 156
கொள் 195

கோ

கோரைக்கிழங்கு 202
கோவை 157
கோவைக்காய் 100
கோழிமுட்டைக் கரு 91
கோள் 323

கௌ

கௌரிகட்டு 572

ச

சங்கு 103, 125, 345
சடத்தின் இயல்பு 5
சதுரக்கள்ளி 389
சத்திச்சாரணை 263
சந்தனாதித்தைலக்குணம் 425
சந்தனாதித்தைலம் செய்முறை 456 457, 458, 459, 460
சர்க்கரை 206
சர்ப்பமாடாதிருக்க விநோதம் 746
சலப்பிணிக்கு மருந்து 561
சலரத்த சீப்பிளிசம் தீர 629
சவுக்கிய விரேசனம் 555
சனிக்கோள் 270
சன்னி தீர 669 674
சன்னி நோய்க்குப் பற்று 621

சா

சாத்திய அசாத்திய நாடி நடை 742, 743
சாத்திய அசாத்தியத்தைச் சாத்தியமாகக் கூறல் 692
சாரம் (பூநீறு) 588

சி

சித்திர மூலம் 380
சிரநீர் நோய்க்கு 739
சிராவணம் 363
சிவல் 102
சிவனார் வேம்பு 33
சிவை (பல பொருள் ஒரு சொல்) 239
சிறுகீரை 393
சிறு செருப்படை 249
சிறு பீளை 395, 408

சீ

சீதஅனல் உப்புசம்-இரைப்பு நீங்க 673
சீதசுரம் நீங்க 671, 723
சீதக்கழிச்சலுக்கு 700
சீந்திற்கொடி 318
சீயக்கொடி 79
சீரக கற்பம் 472
சீரகம் 814, 471

சு

சுகவிரேசனம் 557
சுரபுன்னை 198
சுளகு 398

சூ

சூசிகா வாய்வு நீங்க 738
சூதக வாய்வு போக 698
சூதகுரு 589, 590, 591, 592, 593
சூதகுரு மகிமை 445
சூரியகாந்தி 129
சூரியன் 274

சூலை, பித்தசன்னி, சோகை,
குன்மம், காலெரிவிற்கு 683

### செ

செங்கண்ணுக்குக் கலிக்கம் 583
செங்கல் 321
செங்கழுநீர் 51
செந்தாமரை 360
செம்பட்டை தீர 737
செம்மறியாட்டுப் பால் 607
செம்பு பற்பத்தால் தீரும்
நோய்கள் செய்முறை துணை
மருந்து 498, 499, 500
501, 502
செருப்படி 328
செல் 104

### சே

சேட்பம் காங்கை வெப்பம்
பித்தம் நீங்க 672
சேட்ப வெப்பவாத நோய்கள்
நீங்க 659
சேத்துமக் கழிச்சலுக்கு 699
சேத்துமநாடி குணம் 4
சேறு 242, 285

### சோ

சோணிதா கருடணீ 390
சோளம் 192
சோற்றுப்பு 307

### த

தங்க பற்பம் 741
தண்ணீர் 17
தந்தவாயு பல்லசைவு தீர 664
தம்பனக் குளிகை 757
தம்பனம் உண்டாக 758
தம்பி 342
தயிர் 208
தர்ப்பைப் புல் வேர் 135
தவசி முருங்கை 386
தவசி முருங்கை இலைக்கறி 89
தளிர் 164
தன் மந்திரி 645
தன்மந்திரி மார்க்கம் எனல் 421
தன்மந்திரி முதல் சீடன் 12
தன்னுணர்வு நீக்கம் 243

### தா

தாமரை 53
தாம்பிரபற்பப் பெருமை 430
தாம்பிரம் 294
தாய் 341
தாழை 161
தாளகக் குளிகை 654
தாளக பற்பம் 539
தாளக மாத்திரை குணம்
செய் முறை 651, 652, 653
தாளிசபத்திரி சூரணம் 526, 527
தாளிசபத்திரியின் குணம் 438

### தி

திணை 286, 632, 633
திப்பிலி 32, 47, 299
திமிர்வாத வாயு போக 722
திரிகடுகு கற்பம் 467
திரிநாடி குணமறிதல் 6
திரைச் சீலை 361
திரை நீங்க 713

### தீ

தீ 18,:48, 257
தீச்சுடர் 245

### து

தும்பை 56
தும்பை கற்பம் 480
தும்பை மலர் 406
துவரை 196
துர்ச்சன்னி வர்க்கம் 732

### தெ

தெத்துவாய் போக 687
தெறுபதக்கடி போக 751
தென்னை 154, 370

தே

தேர்ப்பாகர் 336
தேவர் 643
தேவாங்கு 146
தேள்கடி போக 752
தேள் கொடுக்குச் செடி 38
தேற்றுங் கனி 474
தேற்றுன் விதை 258
தேன் 149, 221

தொ

தொடி 306

தோ

தோஷ சுர தாகம் நீங்க 708
தோலின் பரியாயப் பெயர் 110

ந

நசியம் 619
நசியம் முதலியவற்றின் பெருமை 453
நடுக்கம் 400
நடுக்கு வாதம் தீர 720
நண்டுக்கல் 124
நண்டின் சினை 87
நண்டு தெறுக்கால் 117
நந்தியாவட்டப் பூ 57
நரப்பிரமர் 641
நரி எச்சம் 78
நரை உண்டாக்க 754
நரை நீங்க 707
நல நெல்லி 284
நல்ல பாம்பு 121
நவநீத பற்பத்தின் பெருமை 462
நவநீத பற்பம் 428
நவநீத பற்பம் செய் முறை 463, 464
நற்காட்சி 451
நற்பண்டிதர் 636
நன்னாரி 128

நா

நாகக்கட்டு 569
நாகணவாய்க் கறி 89
நாகண வாய்ப் புள் 99
நாகண வாய்ப்புள்ளின் முட்டை 139
நாக்கிரட்டைக் கறி 89
நாக்குப் பூச்சி 116
நாசித் திரி 626, 627
நாசிப்புகை 628
நாடிகளின் காலக்கூறு 7, 8, 9
நாட்டெரு 409
நாணல் 186
நாரை (பிதா) 151
நார் 230
நாவல் வித்து 133
நாவிதர் 254
நாழிகை 350

நீ

நீராகாரம் 211
நீர் 614
நீர்த்தோஷம் தீர 758

நெ

நெட்டி 50
நெய் 209
நெய்தல் 55
நெருஞ்சில் 327, 378, 414
நெருப்பு 92
நெல் 81
நெல்லி 190

நே

நேத்திர வாயு தீர 491
நேத்திர வலி தீர 655
நேர்வாளம் 301, 470

நோ

நோய் 122, 399, 403
நோய்க்காரணம் 448, 598
நோய்த் துன்பம் 404

ப

பசு நெய் 283
பசுவின் பால் 75, 604
பச்சிலை மூலி 338
பச்சை 357
பச்சைக் கர்ப்பூரம் 384
பஞ்ச கௌவியம் 75
படுமரம் 373
பட்சிராசக் கலிக்கம் 580
பண்டிதர்க்குச் சிறப்பு 638
பத்திய உபதை 613
பத்திய பலன் 449
பத்தியப் பெருமை 599, 600
பத்திய விலக்கான
பொருள்கள் 601
பரதவர் 275
பருத்தி 55, 174
பருந்து 93
பலகாரம் 215
பலா 185
பல்லிறுக 711
பல்லை தீர 718
பவள பற்றம்
செய்முறை குணம் 488
பற்பம் 242
பற்று 620, 622
பற்று விரேசனம் 556
பனி 349
பனை 154, 177
பன்றி 120
பன்றிக்கறி 89

பா

பாகல் 231, 605
பாசி 232
பாண்டு தீர 657, 658
பாண்டுமை விரேசனம் 552
பாதகர் 339
பாம்பின் பிச்சு 90
பாம்பு 287
பாம்புக் கடிக்கு 748
பாம்பு மயங்க 745
பாரிச வாயு தீர 734
பால் 207
பாற்சோறு 203
பானக்கம் 216

பி

பிணிதீர்க்கும் முறைக்கு
உவமை 744
பிண்ணாக்கு 219
பித்த குணம் நீங்க 709
பித்த சன்னிக்கு 719, 733
பித்த சுரம் நீங்க 710
பித்தநாடி குணம் 3
பித்த வாயு தீர 663
பித்தளை 303
பிரண்டை வடகம் 529
பிரமி 374
பிரம்பு 179

பு

புகை 623
புகைந்து இருமல்
சேத்தும நீர் போக 689
புடல் 171
புதியவர் 337
புலி தொடக்கி 210
புலியின் ஈரல் 63
புளி 23
புற்றுஞ்சோறு 113
புனுகு 85
புன்னை 189

பூ

பூ 305
பூதகலிங்கம் 578
பூநாகம் 372
பூபதி மாத்திரை 530, 531, 532
533, 534, 535, 536, 537 538
பூபதி மாத்திரை குணம் 440
பூமாலை 184
பூவரசு 59
பூவிழுந்த கண்ணுக்கு 494
பூனைக்காலி 31
பூனைக் காஞ்சொறி 371

பெ

பெண்ணுமை ஒட்டுத்தோல் 107

பெருங்காயம் 236, 312
பெருநோய் தீர 729
பெரும்பீர்க்கு 225

பே

பேய் நாய், நரிக்கடிக்கு 755
பேரீந்து 290

பொ

பொதி 311
பொருளாசை உள்ள மருத்துவர் 88
பொல்லம் 354
பொற்றிலேக்கையான் தகரைக் கற்பம் 479
பொன் 130, 293, 296
பொன்னுங்கண்ணி 250

போ

போர்க்களம் 267

ம

மகன் 340
மகாவில்வாதி லேகியம் செய்முறை தீரும் பிணிகள் 519, 520, 521, 522, 523, 524
மகாவில்வாதி லேகியப் பெருமை 436
மகிழ் 172
மஞ்சள் 292
மஞ்சள் வேர் 136
மணித்துவரை 302
மண் 16
மண்ணிலாக்கொட்டை கற்பம் 476
மண்டைவலி தீர 655
மதன காமேசுரம் 756
மயக்கம் 402
மயில் 86
மயில் இறகு 94, 100
மருத நிலம் 58
மருதோன்றி 326
மருத்துவர் 83
மருத்துவன் அறிய வேண்டியன 646
மருத்துவன் சொல்வழி கேட்டு நிற்றல் 616, 617
மருத்துவத்திற்கு உகந்த நாட்கள் 635
மருத்துவத்திற்கு ஏற்ற மாதங்கள் 634
மருந்துண்ணும் முறைமை 366
மருந்து நாற்கூறு எனல் 424
மருந்துப்புட்டி 396
மருந்துப்பெட்டி 397
மருந்து முறைப்பெருமை கூறல் 422
மருந்து வகைகள் 420
மரைமான் மயிர் 80
மலக்கழிவு மருந்து 142
மலடு நீங்க 573, 574
மலினம் 410
மலைநெல் 169
மலைதாங்கி 49
மலைதாங்கி கற்பம் 481
மலைவேம்பு கற்பம் 485
மழைத்தூது 412
மனோசிலை 127, 259

மா

மா (பலபொருள் ஒரு சொல்) 738
மாட்டுக்கு வரும் கோமாரி, அடைப்பு, வெக்கை தீர 726
மாதேவ பலம் 416
மாம்பிசின் 199
மாலைக்கண் தீர 490, 680
மாலைக்கண் மாவின்கண்ணுகை 492
மாவிட முட்டித்தைலம் 565
மாவிட முட்டித் தைலத்தின் உபயோகம் 566
மாருச்சளி இருமலுக்கு 688
மான்கறி 76
மான்கொம்பு 64

மி

மிளகாய் 224
மிளகு 39, 234, 235

மிளகு கற்பம் 465
மிளகு சாம்பற் குடிநீர் 703
மின்மினி 123

மீ

மீன் 413

மு

முசுட்டை இலேக்கறி 89
முட்டை 109
முட்பன்றி 119
முதலே 105
முத்துச்சிப்பி 126
முத்துபற்பம் செய்முறை குணம் 489
முயல் 65
முயலகவலி உப்புசம் போக:702
முயிற்று முட்டை 114
முருக்கு 163
முல்லே 178
முளே மூலக்குணம் 546
முள்ளம்பன்றி ஊன்கறி 89
முறம் 358
முன்னே இலேக்கறி 89

மூ

மூக்கிரட்டை இலேக்கறி 89
மூக்கு 347
மூங்கில் 162
மூதண்ட கற்பம் 465
மூத்திரக் கிரிச்சரம் தீர 658
மூலத்திற்கு வேது 547, 548
மூலம் தீர 544, 690
மூலநோய்க்குப் புகை 545

மே

மேககுட்டத்திற்கு 704
மேகநோய்க்கு 697
மேகப்புரை தீர 631
மேகவாதப்பிணிகள் போக 706
மேகவெட்டை, வாதவெட்டை
· · குட்டத்திற்கு 701

மை

மை: (ஒரு பொருள் பன்மொழி) 261

மோ

மோர் 214

யா

யானே 252
யானேக்கால் கரடு போக 691
யானேப்பல் 411
யானேப்பாகர் 335
யானேயின் நீர் 71

வ

வங்கக்கட்டு 568
வசளே 106
வட்டில் 356
வண்டின் இறகு 96
வண்டுக் கடிக்கு 750
வண்ணார் 279
வயித்தியர் மதிநுட்பம் 640
வயிறு 344
வயிற்றுவலி, வல்லே, பல்வலி தீர 660
வரையாட்டின் இரத்தம் 69
வலம்புரிக்காய் 228
வல்லாரை கற்பம் 475
வனமல்லிகை 191
வன்னிமரம் 92

வா

வாட்கோரை 166
வாதசுரத்திற்கு 685
வாதநாடி குணம் 2
வாத பித்த சேத்தும நாடிகளின் இயக்கம் 13
வாதம் பித்தம் நீங்க 670
வாத பித்த கபநோய்கள் போக 665
வாத பித்த:கபம் தன்னிலே அடைய 717
வாந்தி கபம் நீங்க 675
வாய்வன்மை புத்தி தெளிவு உண்டாக 686
வாய் விளங்கம் 37
வாழை 61, 154, 229
வாளம் 43
வாள் 353

வானம்பாடி 152

### வி

விகலை 352
விக்கல், தொண்டைப்புண், அரோசிகம் தீர 684
விடசன்னி, கபநாடி மீண்டு கட்டுப்பட 727
விடசுரம் தீர 716
விடமுட்டித் தைலம் செய்முறை தீரும் பிணிகள் 563, 564
விண்மீன் 316
விதானம் 281, 367
விநாயகக் கடவுள் வணக்கம் 1
விந்து நட்டம் தீர 466
வியாழன் 271
விரேசனம் 551
விரேசன மாத்திரை 558
வில் 269
வில்வம் 41, 180
வில்வாதி கற்ப மகிமை 486
விளா 181
விறகு 238

### வீ

வீட்டுப்புக் கற்பம் 484

### வெ

வெடியுப்பு 385
வெண்கலம் 304
வெண்குன்றி வேர் 392
வெண்ணிறப் பசுவின் பால் 14
வெண்பா நலன் 418
வெண்பாவில் கூறியவை 419
வெண்பூசுணை 223
வெண்ணெய் 212
வெண்ணெச்சி 183
வெதுப்படக்கி 407
வெம்மை, நளிர், உட்டண வாதத்திற்கு 692
வெம்மை, பித்தம் தீர 728
வெய்யில் 348
வெள்ளாட்டுப் பால் 606
வெள் ஈயம் 295
வெள் ஈய பற்பத்தின் அருமை 432
வெள் ஈய பற்பம் செய்முறை தீரும் பிணிகள் 504, 505, 506
வெள்ளி 297
வெள்ளி பற்பம் செய்முறை 496, 497
வெள்ளி பற்பத்தால் தீரும் நோய்கள் 495
வெற்றிலை 60, 289

### வே

வேங்கை 21
வேட்கோவர் 329
வேட்டுவர் 330
வேட்டுவன் 343
வேண்டா மருந்து 618
வேம்பு 34, 194

### வை

வைத்தியர்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | கடைசி | ருதல் | தருதல் |
| 12 | 11 | வலியை | வலிமையை |
| 15 | கடைசி | சண், வினைத்தொகை | சண்ணும் ஆயுதம் |
| 15 | 28 | என்னு | என்னும் |
| 26 | கடைசி | ண்பிக்க | உண்பிக்க |
| 31 | 10 | கையான்கின்ற | கையாள்கின்ற |
| 37 | 20 | உறைகல் | உரைகல் |
| 40 | 3 | புற்றூமண் | புற்றுமண் |
| 42 | 25 | முறைகட்குத்வி | முறைகட்குதவி |
| 45 | கடைசி | மங்களுக்கும் | மஞ்சளுக்கும் |
| 48 | முதல் | மிகவுதவும | மிகவுதவும் |
| 52 | கடைசி | பிதா - திருமால் | பிதா-திருமால் நாரையுமாம் |
| 70 | 5 | வராகபட்சணி | வராகம் |
| 75 | 25 | மாலவகம் | மலாவகம்-எள் பிண்ணுக்கு |
| 79 | 3 | பே | பேர் |
| 81 | 9 | வண்மை | வன்மை |
| 85 | 24. | தீருமபடி | தீரும்படி |
| 85 | 25 | வான் | வாள் |
| 87 | 8 | நேத்திர நிற்பதாம் | இத்தொடரைநீக்கிவிடவும் |
| 96 | 1 | மகரம் | மகரர் |
| 96 | 23 | பகு | பகுதிவழ |
| 99 | 9 | வலியை | வலிமையை |
| 120 | 12 | முன | முன் |
| 121 | 28 | 44 | 344 |
| 123 | 6 | குருவி | கருவி |
| 140 | 17 | பர் | பேர் |
| 144 | 17 | விட்டதைத்து | விட்டரைத்து |
| 194 | 7 | மூலளை | மூலமுளை |
| 195 | 13 | கடக ரோகணி | கடுகுரோகணி |
| 199 | 1 | 19 | 199 |
| 201 | 14 | ஏரதாலு | ஏரண்டத்தாலு |
| 203 | 13 | சிவகரத்தை | சிவகரந்தை |
| 204 | 15 | கடகரோகணி | கடுகுரோகணி |
| 210 | 12 | எலால | எல்லா |
| 216 | 1 | உடம | உடம் |
| 217 | 18 | பித்தாகிக் | பித்தாழிக் |
| 248 | 21 | காட்டு | காட்டு வயறு |
| 256 | 9 | எரிகுன்மம் | உருக்கு - இளைப்பு |



சித்த மருத்துவப் பெரியார்,

**பண்டித எஸ்.எஸ். ஆனந்தம்**



## திரு டாக்டர் தியாகராசன். எல்.ஐ.எம்.

உரையாசிரியர்—தேரையர் மகாகரிசல், வெண்பா,

பாடல்திரட்டு முதலியன,

**பொறுப்பு அலுவலர்,**

சிந்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,

சென்னை-10

**தலைவர்,**

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு,

சென்னை-29

# முன்னுரை

தமிழ் மருத்துவமாகிய சித்த வைத்தியம் மிக மிகத் தொன்மையானது: இம்முறை ஒரு காலத்தில் இந்தியா முழுமை யுமேயன்றி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் கடல் கொள்ளப்பட்டு மறைந்த நிலப்பரப்பில் வாழ்ந்த தமிழர்க ளாலும் கையாளப்பட்டு வந்திருந்ததென்பது ஆராய்ச்சியாளர் களின் துணிபு. பலவகை மொழி, கொள்கைகளால் வேறு பட்ட பிற நாட்டவர்களின் ஆட்சியாலும், மற்றும் உள்நாட்டுக் கலகங்களினலும், அரசர்களின் ஆதரவின்மையாலும் இம்முறை நாளடைவில் தன் உயர்ந்த நிலேயினின்று நிலே தளர்ந்து சிறிது வீழ்ச்சி யடைவதாயிற்று. நந்தமிழ்நாட்டின்கண் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு மாறுபாடுகட்கிடையே சித்த மருத்துவம் இன்றுவரை அழிந்தொழியாமைக்கும் தன் தளர்ந்த நிலேயிலும் தமிழகமெங்கணும் அருகிய வழக்காய் இலேமறை காய்போல் நின்று நிலேபெற்றிருத்தற்கும் காரணம் அஃது உண்மையைத் தனக்கு அடிப்படையாகக் கொண்டிருத்தலேயாம். இஞ்ஞான் றும் அதன் சிறப்புக் குறையவில்லே. எங்ஙனமெனின், இன்றும் பெரும்பான்மையான மக்கள் அம்முறையை விரும்பி ஆதரிக்கின்ற மையாலெனக.

வெள்ளேயர் அரசாட்சியில் **பானகல் அரசர்** முதலமைச்சரா யிருந்தபோது அவரும் மற்றைய அமைச்சர்களும் சித்த மருத்து வத்தின் பெருமையையும் அதனல் மக்கட்குண்டாகும் நன்மை களேயும் நன்குணர்ந்து அதனே ஏற்றவாறு ஆதரித்தனர். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னரே அரசினரால் அங்கீகரிக்கப் பெற்றிருந்தும், பதினயிரத்திற்கும் மேற்பட்ட சித்தவைத் தியர்கள் பதிவு செய்யப் பெற்றிருந்தும் இம்முறை ஓங்குவதற் குரிய சூழ்நிலேயும் ஆதரவும் வாய்ப்பதரிதாயிற்று; பல்லாண்டு களாகத் தமிழர்கள் அடிமைப்பட்டிருந்ததும், தம்பாலுள்ள சீரிய நூல்களேயும் சிறந்த அனுபவ முறைகளேயும் பிறர் கவர்ந்து கொள்வர் என்னும் அச்சமும், சித்த வைத்தியப் பட்டதாரிகள் சித்த மருத்துவ மூல நூல்களே ஆழ்ந்து கற்காததனல் ஏற் பட்ட நம்பிக்கையின்மையும், நவீன மருத்துவத்தில் கவர்ச்சி

யுற்ற மோகமும், ஊசி போட்டுக் கொள்வதனுல்தான் நோய் தீர்க்க முடியும் என்ற தவருன எண்ணமும் ஆகிய இவை போன்ற பிற மாறுபட்ட கொள்கைகளும் காரணங்களாகும். இக்குறைபாடுகளை நீக்க நல்ல சூழ்நிலைகளை இஞ்ஞான்றைத் தமிழகவரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் மாண்புமிகு **க. அன்பழகன்** அவர்கள் உருவாக்கிக் கொண்டு வருகின்ருர்கள்; அவற்றிலொன்று குறிக்கொளத் தக்கது: அஃது சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தியது. மேலும் அவ்வளர்ச்சிக் குழுவின் மூலமாகக் கிடைத்தற்கரிய சித்த மருத்துவ ஓலைச்சுவடி நூல்களை நாடெங்கணும் துருவிச் சேகரித்து, அவற்றினைப் பிழையறப் படி எடுப்பித்து வெளியிடப் பெருதனவற்றை வெளியிடல், பட்டப்படிப்பு, பட்டமேற் படிப்புகளுக்கு வேண்டிய பாடநூல்களைத் தயாரித்தல், சித்தமருத்துவத்தைப் பற்றி பிற மொழியினரும் அறிந்து மதித்தற்கு அவற்றை ஆங்கிலத்திலும் எழுதுவித்துப் பதிப்பித்தல் முதலிய பணிகளும் மாண்புமிகு, அமைச்சர் அவர்கள் ஆதரவினுலேயே மேற்குறித்த குழுவினர் செய்து வருகின்றனர்.

நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு, **க. அன்பழகன்** அவர்கள், மேற்கண்ட நூல்கள் வெளியீட்டுக்காக அரசு நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாயை ஒதுக்கியிருத்தலோடு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிதியிலிருந்து முதல் தவணையாக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கும்படி முயற்சி எடுத்திருக்கின்றனர், மேலும், காலஞ்சென்ற திருவாளர் டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்கள் போன்ற பெருமக்களைக் கொண்டு அரிய நூல்களை வெளியிடச் செய்தமையும் நம் அமைச்சர் பெருமகனுர் ஆற்றிவரும் செயற்கருஞ் செயல்களாம். நிற்க,

சித்த மருத்துவப் பெரியார் **பண்டித: எஸ்.எஸ். ஆனந்தம்** அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளும், 'தேரையர் மகாகரிசல்' நூல் வெளியீட்டு விழாவும் 17-6-74 அன்று சட்டமன்ற மேலவைத் தலைவர் **சி. பி. சிற்றரசு** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அஞ்ஞான்று மாண்புமிகு, அமைச்சர் அவர்கள் அந்நூலை வெளியிட்டு உரையாற்றிய போது சித்த வைத்திய முறை ஏற்றம் பெறுதற்கும் அது சம்பந்தமான அரிய பெரிய நூல்களாக ஓலைச்சுவடிகளில் உள்ளனவற்றை ஏற்றவாறு நூல் வடிவில் கொண்டுவருவதற்கும் இதுவே ஏற்ற காலமுமாமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அவ்விழாவிற் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கிய தமிழகப் புலவர் குழுவின்

இயக்குநர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், (காலஞ் சென்ற) திருவாசகமணி, கே. எம். பாலசுப்பிரமணியம், யோகி சுத்தானந்த பாரதியார், கீ. இராமலிங்கனுர், நாரண துரைக்கண் ணன், ந. ரா. முருகவேள் முதலான பெரியோர்களும் தேரனுல் இயற்றப் பெற்றுள்ள (வெளியிடப் பெருத) பிற நூல்களையும் உரையுடன் வெளியிட்டால் சித்த வைத்திய மறுமலர்ச்சிக்கு உதவியாயிருக்கும் என்று கூறினர்கள். அக்கருத்துரைகளை நினைவிலிருத்தி, அமைச்சர் அளித்து வரும் ஆதரவைப் பற்றுக் கோடாகக் கொண்டு, பண்டித எஸ். எஸ். ஆனந்தம் சித்த மருத் துவ ஆராய்ச்சி நிலைய இயக்குநரும், சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு உறுப்பினருமான டாக்டர் திரு. ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம். அவர்களின் ஆர்வத்தினுல் சித்தமருத்துவ இலக்கிய மறுமலர்ச்சி வரிசையில் இரண்டாவது நூலாக வெளியிடுவதற் குத் தேரையர் வெண்பா என்னுமிந்நூல் தேர்ந்தெடுக்கப் பட்டது.

*1941*-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து தொடர்ந்து நான்காண்டுகள் பேராசிரியர் டாக்டர் கோ. துரைராசன் அவர் கள் தம் பெருமுயற்சியால் 'தமிழ் மருத்துவப் பொழில்' என்னும் திங்கள் வெளியீட்டிதழை, கீழ்ப்பாக்கம் இந்திய மருத்துவக் கல் லூரி, சித்த மருத்துவ மாணவர் கழகக் காரியக் கமிட்டிக்குத் தலை வராயிருந்து வெளியிட்டார்கள். அவ்வெளியீட்டின் பல நோக்கங் களில் அச்சிடப் பெருத சித்த மருத்துவச் சுவடிகளை வேண்டு கோள் அறிக்கை விடுத்துப் பெற்று அச்சிடல் முதல் நோக்கமா யிருந்தது. அப்பொழுது விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி திரு வாளர் வெ. ரா. சுந்தரம் பிள்ளை அவர்கள் தம்மிடமிருந்த பழைய 'தேரன் வெண்பா' என்ற (பலவிடங்களில் செய்யுட்களில் ஒற் றெழுத்துகட்கு மேற்புள்ளி வைக்கப் பெருது ஓலையில் எழுதப் பெற்றிருந்த) கையேட்டுப் பிரதியை அளித்து உதவினர்கள். அப் பொழுது காரியக் கமிட்டி உறுப்பினனுகவும் பொழில் உதவி ஆசிரியனுகவும் நான் இருந்தமையின் அந்நூலை வெளியிடக் கருதிப் படியெடுத்தேன்.

"சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந் தருநாடக மந்தாதி
மிகாவண்ணம் நாண்மாலை யமக வெண்பா
விளங்கெதுகைப் பாவிவை யெல்லோரு மெச்சு
மகாமகிமைக் கரிசலெனு முறையீ ராறும்
வேதாந்த சித்தாந்த வைத்ய வாத

முகாதியினு மசையாத விரிவுள் வேத
முத்தமமா விளங்குமிது சத்தியந் தானே."

என வரும் தேரையர் செய்தருளிய நூல்களின் தொகையையும் பெயரையும் விளக்கும் செய்யுளின் மூலமாக 'வெண்பா' என்னும் இந்நூலையே அவர் முதன்முதலாக இயற்றியதாக அறியக் கிடக்கின்றது.

வைத்தியம் கற்பதற்கும் மருந்துகளின் கைம்முறைகளை அறிவதற்கும் மருத்துவ மாணவன் முதலாவதாகப் படித்தறிய வேண்டுவது கருப்பொருள்களைப் பற்றித் தானாகும். அக்கருப்பொருள்களையே தேரையர் தாம் இயற்றிய இவ்வெண்பா நூலில் முதற் பகுதியில் 416 செய்யுட்களில் கூறியிருக்கின்றார். இரண்டாம் பகுதியில் உள்ள 342 செய்யுட்களில், முற்பகுதியில் கூறப்பெற்ற கருப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்ற கற்பப் பொருள்களின் கைமுறை செய்முறைகள் இடம் பெறுகின்றன. இந்நூல் முழுதும் முதன்முறையாகக் குறிப்புரை பொழிப்புரைகளுடன் இப்பொழுதுதான் அச்சிடப் பெறுகின்றது. தமிழ் மருத்துவப் பொழிலின் கவுரவ ஆசிரியராயிருந்த தமிழ்ப் பேராசிரியரும் மருத்துவப் பேராசிரியருமான **மாங்காடு பண்டித வடிவேல் முதலியார்** அவர்களால் முன்பு 167 செய்யுட்கள் மூல மாத்திரம் மூன்று பொழில் இதழ்களில் வெளியிடப் பட்டன. வெளிவந்த செய்யுட்களிலும் 6 செய்யுட்கள் விடப்பட்டு விட்டன. சில செய்யுட்களுக்குத் தலைப்புகள் மாறுபட்டும் பதிக்கப் பெற்று விட்டன. அதற்குக் காரணம் தேரன் கூறிய கருப்பொருள்களை அறிதற்குரிய திறவுகோல் அவர்கட்குக் கிடைக்காமையேயாகும். இத்திறவுகோல் சேகரப்பாவிலும், காப்பியத்திலும் கூறப்பெற்றிருக்கின்றன. இந்நூல் அப்போது அவர்கள் கைக்குக் கிட்டவில்லை. இந்திய மருத்துவ ஓமியோபதி ஆராய்ச்சி மைய மன்றத்தின் தஞ்சை இலக்கிய ஆராய்ச்சி நிலையத்திற்கு, முன்னாள் இந்திய மருத்துவ இயக்குநர் பேராசிரியர் உயர்திரு, **டாக்டர் க. சு. உத்தமராயன்** எச்.பி.ஐ.எம். அவர்களால் வெளியிடுவதற்காக மனமுவந்து வழங்கப் பெற்றிருந்த சேகரப்பாவையும் காப்பியத்தையும் நான் பார்வையிட நேர்ந்த போது அந்நூல்களில் வந்துள்ள கருப்பொருள் நிகண்டையும், வெண்பாவையும் ஒப்பிட்டு ஆய்ந்து பார்த்ததில் இத்திறவுகோலைக் கண்டறிந்தேன். இதனாலேயே மிகுந்த பேருழைப்புடன் இந்த அளவுக்காவது இந்நூலுக்கு உரை காண முடிந்தது என்று சொல்வது மிகையாகாது.

இந்நூலில் தேரையர் 419ஆம் செய்யுளான

"முன்சொன்ன வெண்பா முறைநிகண்டும் அச்சொல்லின்
மன்னுங் கருப்பொருளு மன்னிலையும் — பின்னே
வருசந்த னுதிமுதல் வண்மைகுண மட்டும்
பருவ மறிந்ததனைப் பார்."

எனவரும் வெண்பாவில் 'வெண்பா முறைநிகண்டு' என்று கூறுவதால் இந்நூலே அவர் கூறிய பிற மருத்துவ நூல்களுள் வைத்து நிகண்டு என்னும் பெயர் கூறுதற்கேற்றதாகுமோ என்று எண்ணக் கிடக்கிறது. இக்கருத்தோடு நூலினை ஆய்ந்து நோக்குவோமெனின் மிகப்பலவான செய்யுட்களில் பரியாயப் பெயர்களுடன் இணைந்துள்ள இயற்பெயர்களை நன்குணரலாம். உதாரணமாக 'தோன்றியெனுங் காந்தள்' (46) 'காமனெனுந் திப்பிலி' (47) 'சேர்ந்தாரைக் கொல்லியெனுந் தீ' (48) 'தபனனட்பாகுமம்பு சம்' (59) என்பனவாக வரும் செய்யுட்கள் போன்றனவற்றிற் காண்க. இன்னும் இந்நூலில் வந்துள்ள பரியாயப் பெயர்களான பரிபாஷைச் சொற்களும் மிகப்பலவாம். அவற்றுட் சில வருமாறு: 'மாலெச்சில்' (16) 'மால்மனை' (40) 'தந்தி' (54) 'தறிமுதற் கிரிகை' (55) 'ஐம்முகனார் வெற்றி' (56) 'தராபதி' (59) 'உறைக் கனி' (224) 'யாமினி' (359) 'காமரூபி' (140) 'வெருகுகண்டுதி' (371) 'கடாசலகண்டி' (379) 'உடனசி' (146) 'மேகநீருணி' (152) 'பணிவைரி' (150) 'திரிபுரை' (263) 'பாதுகைப்பதம்' (328) என வரும் பலவகைச் சொற்களும் சொற்றொடர்களுமாகியவை ஏற்ற பொருள்களை விளக்கி நிற்கும் முறையை நோக்குங்கால் சித்தர்களாகிய பிற மருத்துவ ஆசிரியர்கள் ஓதியுள்ள நூல்களுள் யாண்டும் அவை ஆட்சி பெருமையால் அவற்றுள் வைத்து இந்நூலே தனிச்சிறப்புறுமென்பதற் கொருசிறிதும் ஐயமின்றாம். இந்நூலிலுள்ள பொருட் சிறப்பெல்லாம் தனித்தனி எடுத்து விளக்கப்புகின் மிக விரிந்து அஃதொரு தனித் திறனாய்வு நூலாக அமையுமாகலான் விரிவஞ்சி மேற்செல்வாம்.

இந்நூலாசிரியர் அறநூல்கள் காப்பியங்கள் புராணங்கள் இதிகாசங்கள் மறைகள் ஆகமங்கள் கணிதநூல்கள் இலக்கண நூல்கள் ஆகிய எல்லா நூல்களிலும் நன்கு பயின்று தேர்ச்சி பெற்றுள்ளாரென்பது இவர் தம் நூல்களில் அங்கங்கே கூறும் ஆட்சிகளாலும் மேற்கோள்களாலும் சொல்நயம் பொருள் நயங்களாலும் அணி வகைகளாலும் எடுத்தாளுங் கருத்துகளாலும் விளங்குவதாம். யாப்பு வகையின் பொருள் கோள்களுள் ஆற்றுநீர், நிரல் நிரை, விற்பூட்டு, கொண்டுகூட்டு, தாப்பிசை முதலியவைகளும் யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் உருவகம், பிறிதுமொழி

தல், உவமை முதலிய பொருளணிகளும் ஏற்ற பெற்றியாயமைந்துள்ளமை இவ்வாசிரியரின் புலமைத் திறனை விளக்குகின்றன.

அன்றியும், நாடிகளின் குணம், அவற்றின் நடை, சாத்திய வசாத்தியம், ஐம்பூதக் குணம், தாது தாவர சங்கமப் பொருள்களின் சிறப்புப் பண்புகள், சில நோய்களின் தன்மைகள் மக்கள் மரபுப் பண்புகள் ஆகியவைகளும் அங்கங்கே விளக்கப் பெறுகின்றன; நோயினர் அனுசரிக்கவேண்டிய பத்தியம் உபதை அனுபானம் மருந்துட்கொள்ளும் நாள் மாதம் உறைவிடம் தங்கும் நிலம் முதலியனவும், நோய்களின் சாத்திய அசாத்தியங்களும் மருந்தின் வேகம், அதற்காம் உபசாந்திகளும் இடையிடையே கூறப்பெற்றுள்ளன. இங்ஙனமே நோய் நீக்கும் மருத்துவர் இலக்கணங்களாக அவர்தம் நற்பண்பு மதிநுட்டம் நோயறி திறமை மருந்தியற்றும் வன்மை தந்நலம் கருதாமை நோய் கண்டஞ்சாமை ஆகியனவும் அவர் கையாளும் கட்டு, களங்கு, சூதகுரு, இரசகுளிகை, பூபதி மாத்திரை, தாளக மாத்திரை போன்ற பலவகை மாத்திரைகள், சந்தனாதி போன்ற தைல வகைகள், மகாவில்வாதி போன்ற இலேகிய வகைகள், காந்தம், அயம், வங்கம், தங்கம், வெள்ளீ முதலிய உலோக பற்ப செந்தூரங்களின் செய்முறைகள், இவற்றால் தீரும் நோய்கள், எண்ணெய் வகைகள், குடிநீர்கள், கிருதம், ஒற்று வேது, புட்டு, கண்மை, கற்பம், சூரணம், பற்று, நசியம், கலிக்கம், விரேசனம் ஆகியவைகளின் கைமுறைகள், அவற்றின் பயன்களுடன் கூறப்பெற்றுள்ளதோடு நஞ்சுகளுக்கு ஏற்ற முறிவுகள், கால்நடை உயிரிகளின் நோய்க்குச் சிகிச்சை எனப் பலவகை மருத்துவ நுட்பங்களும் இடம்பெறுகின்றமையின் இந்நூல் சித்த மருத்துவர்கட்கும், மருத்துவத் துறையிற் புகும் மாணவர்கட்கும், ஆராய்ச்சித் துறை மேற்படிவப் பட்டப் படிப்பினர்க்கும் முதன்மையாகக் கையாளத் தகும் திறவுகோல் போல்வதாம். இனி,

யான் இந்நூலை உரை எழுத எடுத்துக் கொண்டபோது இந்திய மருத்துவத் துறை இயக்குநரும் என் நண்பருமான உயர்திரு டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம். அவர்கள் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சி நூல் வெளியீட்டுக் குழுவிற் பணியாற்றும் புலவர் திரு வை. முரு, முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்களை உடனிருந்து உதவுமாறு அனுப்பி வைத்த செயல் பெரிதும் பாராட்டிற்குரியது.

புலவர் பண்டித வை. முரு. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்களின் ஆழ்ந்த புலமையும் முதிர்ந்த அனுபவமும் இந்நூற் செய்யுட்களின் பிழை பட்ட பாடங்களைத் திருத்தவும் நல்ல இலக்கிய நடை

யில் உரையினையமைத்து விளக்கவும் திருத்தமாகப் படியெடுக்கவும் உதவியாயிருந்தன. மேலும் அவர் தாமாகவே முன்வந்து என்பாலுள்ள அன்பும் நட்பும் ஒரு புறமும், நூலின் உயர்வும் சிறப்பும் மற்றொரு புறமுமாகக் கவர்ந்தமையாற் போலும் முறையே எனனை ஏற்ற பெற்றிக்கு மேம்படவே பாராட்டியும் மேலுமேலும் பிற நூல்கட்கு உரையியற்றும் முயற்சியினை என்பால் ஊக்குவித்தும் நூலின் உட்பொருளாகிய மருத்துவத் தோற்றப் பழமையும் தமிழக வரைப்பிடை அது வழங்குந் தொன்மையும் நூலின் சிறப்பாக அமையுமாறும் ஆசிரியப்பா வடிவில் ஒரு சிறப்புப் பாயிரமும் இயற்றி இந்நூலுள் அமையுமாறு ஆக்கியுள்ளார்; எனவே, இவர் தம் செயலும் என்பாராட்டிற்குரியதாம்.

என் அரிய நண்பரும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான வித்துவான் உயர்திரு, **அன்பு கணபதி** அவர்கள் கல்லூரிப் பணிகளுக்கிடையே தம் அயர்ச்சியையும் பொருட்படுத்தாது நூலின் பார்வைப் படிவங்களைப் பிழை திருத்தம் செய்தும் தம் புலமை நலன் தோன்ற உரைகளைத் திருத்தியமைத்தும் நல்லுதவி புரிந்தார்கள். இவர்கட்கு என் உளமொன்றிய நன்றி என்றென்றும் உரியதாகுக. மிகக் குறுகிய காலத்தில் அன்புச்செல்வி அச்சகத்தில் இந்நூலை நன்முறையில் உயர்ந்த தாளில் முழுப் பொறுப்பினையும் ஏற்று அச்சிட்டு வெளியிடுதற்கு டாக்டர் திரு **ஆ. ஆனந்தகுமார்** ஜி. சி. ஐ. எம். அவர்கள் உறுதுணையாயிருந்தார்கள். இவர் எனக்கு முன்னாட் சிறப்புரிமைத் தலைமாணாக்கரும் இந்நாள் மருத்துவத்துறைக்குரிமைத் தோழரும், கெழுதகை நண்பருமாவார். ஆதலின் இவர்க்கு என் நன்றியும் நல்வாழ்த்தும் என்றும் ஒல்லும் வகையாலுரியனவாம். "மகனறிவு தந்தையறிவு" என்னும் முதுமொழிக் கிணங்க மருத்துவ ஞாயிறு, வயித்திய பாஸ்கர, **பண்டித ஆனந்தர்** அவர்கள் ஆற்றிப்போந்த மருத்துவத் துறை அறப்பணியினை மேற்கொண்டு செம்மையாக இவர் புரிந்து வரும் தொண்டு பலரும் போற்றற்குரியதாம்.

இஃதல்லாமலும், சென்னை கீழ்ப்பாக்கம் இந்திய மருத்துவக் கல்லூரி முன்னாள் பேராசிரியரும், என் பணிவன்புக்குரிய மருத்துவத்துறை நல்லாசிரியரும், அலுவலகப் பணியில் உடனிருந்தூக்கி வழிகாட்டியாயுதவியவரும், தமிழ் மருத்துவப் பொழில் திங்கள் வெளியீட்டிதழுக்குத் தலைமை தாங்கி நடத்தியும் பல மருத்துவ நூல்களை ஆய்ந்து பதிப்பித்து வெளியிட்டும் புகழ் பெற்றவரும், ஓய்வு பெற்றுறையும் இந்நாளினும் திறம்பட நோயினர் தன்மையறிந்து நாடிநிலையினை உற்றவாறறிந்துணற்றி அறப் பணியாற்றி வருபவரும் ஆகிய திருவாளர், **டாக்டர் கோ. துரை**

ராசன் எச்.பி.ஐ.எம். அவர்கள் என்னை ஊக்குவிக்கும் ஆர்வத்தாலும் என்பால் இன்றளவும் வைத்துள்ள தம் உழுவ லன்பின் தொடர்பாலும் தம் முதுமையையும் பொருட்படுத்தாது இந்நூற்கு யான் வரைந்த உரையினை மதித்தும், தம் பரந்த அனுபவம் வழங்கு துறைதொறும் என் பெயர் நிற்கவும் உளங்கொண்டு நல்லதொரு வாழ்த்துமொழி எழுதியுதவினர்கள். இவ்வுதவி கைம்மாறு கருதாப் பெருவண்மையாவதன்றி, குறியெதிர்ப்பை குறித்த செயலன்று; எனவே, இவர்கட்கு என் மனமார்ந்த பணிவும் உளமார்ந்த நன்றியும் உரிமைமுறையால் உரியனவாகுக.

இன்னும் நந்தமிழக அரசின் துறைகளுள் வைத்து முன்னிறுத்தற் பாலதான 'மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சுரிமையை மேற்கொண்டு, சித்த மருத்துவத் துறையைக் கண்காணித்து, தம் அயரா உழைப்பையும் பெயரா உறைப்பையும் அமயம் நேர்ந்துழியெல்லாம் அமையுமாறு ஆற்றிவரும் பெருமகனர் பேராசிரியர் மாண்புமிகு **உயர்திரு க. அன்பழகன்** அவர்கட்கு யானும் என்னேடொத்த பிற மருத்துவத்துறைக் குழுவினரும் மனமார்ந்த நன்றியை நாத்தழும்பேற நவில்வதையன்றி, பிறிதொராற்ருற் கைம்மாறு செலுத்தவல்லேமல்லேம்.

வாழ்க தமிழக அரசின் துறைகள்
வளர்க மக்கள் நல்வாழ்வுத் துறைகள்
சூழ்க சித்த மருத்துவ முறைகள்
தொலைக வருத்தும் நோய் செய்குறைகள்
தேங்குக தமிழகம் சித்த மருத்துவத்
திறம்பட வெங்கணு நிரம்பிட வென்றும்
ஓங்குக மருத்துவத் துறையினர் பண்டுவம்
ஒல்குக பிணிவகை மல்குக நலமே.

(பண்டுவம் - வயித்தியம்)

சென்னை,
*14-12-74*

**டாக்டர் ஆர். தியாகராஜன்**

# வாழ்த்து மொழி

1941-ஆம் ஆண்டிலேயே 'தேரையர் வெண்பா' என்ற இந்நூலைக் கீழ்ப்பாக்கம் இந்திய மருத்துவக் கல்லூரி, சித்த வைத்திய மாணவர் மன்றத்தால் வெளியிடப் பெற்றுவந்த 'தமிழ் மருத்துவப் பொழில்' என்னும் திங்கள் வெளியீட்டில் பகுதி பகுதியாக வெளியிட முயன்றோம். அப்பொழுது ஏற்பட்ட சில இடையூறுகளால் முழுதும் வெளிவராமல் போயிற்று. ஆயினும், அப்பொழிலில் எழுதப்பெற்ற பயன் உள்ள கட்டுரைகள்தாம் பிற்காலத்தில் 'நோயில்லா நெறி' என்ற நூலும் 'குண பாடம் தாது ஜீவப் பகுதி' என்ற நூலும் உருவாவதற்கும் அரசினரால் முதலில் அச்சிடப் பெற்று, சித்த மருத்துவ மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களாக வைக்கப் பெறுவதற்கும் உரிய தகுதியைப் பெற்றன. பின் மற்றைய பாட நூல்களும் ஒவ்வொன்ருக வெளி வரத் தொடங்கின.

எம் மாணக்கரும் பின் 1937 லிருந்து நாம் ஓய்வு பெற்றவரை எம் கூடக் கல்லூரியில் துணைப் பேராசிரியராயிருந்து பணியாற்றியவரும் தமிழ் மருத்துவப் பொழிலை நடாத்திய காலத்து வெளியீட்டுத் துணையாசிரியராகப் பணிசெய்து எம்முடன் ஒத்துழைத்துப் பல கட்டுரைகளை வரைந்து கொடுத்தவருமான திரு. டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம். அவர்கள் 'தேரையர் வெண்பா' முழுவதையும் சிறந்த குறிப்புரை, பொழிப்புரைகளுடன் முதன் முறையாக அச்சேற்றினர்; இதன் மூலம் 33 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப் பெற்றிருந்தும் பூர்த்தியாக வெளிவராமல் இருந்த தொரு பொக்கிஷத்தை வெளிக்கொணர்ந்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கின்றது. இத்தகைய நூல்களுக்கு உரை கண்டிடல் மிகக் கடினமான காரியமாகும். உரை எழுதப்பெற்ருலும் முழுமையாகவும் இருப்பதில்லை. உரை எழுதுவோர் தம்மால் விளக்கம் கொடுக்க முடியாத மூலப் பகுதிகளை அச்சிடாது விட்டுவிடுவதையும் அல்லது மாற்றி அமைத்திடுவதையும் காண்கின்றோம். எடுத்துக் காட்டாகக் கார்ப்புச் சுவை கபத்தினை விருத்தி செய்யும் என்பதனை விளக்கிட முடியாக் காரணத்தினல் அக்கருத்தினைத் தரும் செய்யுளையும், குழந்தைப் பருவத்தில் சேத்துமமும் கிழப் பருவத்தில் வாதமும் விருத்தியாம்

என்பதனை விளக்கிட முடியாக் காரணத்தினால் அப்பாடல்களை எடுத்தாளாதும் அச்சிடாதும் விடுத்தமையைக் காணலாம் ஒரோ வொரு சமயம் பாடல்களுக்குத் தவறாகப் பொருள் கூறப்பெற் றிருப்பதையும் காணலாம்; உதாரணமாக,

"....தாய்புசிக்கு மன்ன சாரம்
உச்சிவழி தானிறங்கி உடல் பெருக்கும்."
—அகத்தியர் வல்லாதி.

"....தாயுண்ட அன்ன சாரம்
கபாலத்தின் வழியே சென்று..."
—யூகி சனனக் கூறு.

"....காமப்பால் விழுந்தவழி சிரசினாலே
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லும்"
—வைத்திய சாரம்.

என்னும் அடிகளின் பொருள் அன்னரசம், முதலில் தலைக்குச் சென்று அங்கு உள்ள உறுப்புகளைப் போஷித்துப் பிறகு இறங்கி உடலை ஊட்டி வளர்க்கிறது என்று வெகு தெளிவாக இருந்தும் மேற்படி அடிகளில் வரும் 'உச்சி' 'கபாலம்' 'சிரசு' என்னும் சொற்கள் மாயை அல்லது நஞ்சைக் குறிப்பிடுகின்றன என்று பொருள் கூறப்பட்டுள்ளது போலவாம். இப்பொருள் கொண்டது பெருந்தவறு என்பதனை அடிக்குறிப்பில் குறிக்கப்பெற்றிருக் கின்ற ஆங்கில மேற்கோளால் அறியலாம். * நிற்க, தமிழ் மருத்துவ நூல்களை ஆராய்ந்து உரை காணவும், கட்டுரைகளை எழுதவும் எங்களைப் பழக்கி ஆளாக்கிய காலஞ்சென்ற மாங்காடு பண்டித வடிவேல் முதலியார் அவர்களை இச்சமயத்தில் நினைவு கொள்ளாமல் இருக்க எம்மால் முடியவில்லை. எங்கள் நன்றியும் வணக்கமும் அவர்களுக்கு என்றும் உரியனவாகுக. மற்றும்,

சித்த மருந்துகள் நிதானமாகத்தான் தொழில் புரியும் என்று இன்றும் பலர் எண்ணுகின்றார்கள். அவ்வெண்ணம் தவறான தாகும். தோலில் குத்தி ஏற்றும் ஊசி மருந்துகளைப் போலவே கட்டுகள், களங்குகள், பற்பங்கள், செந்தூரங்கள், சுண்ணங்கள் போன்ற மற்ற உயர்ந்த தாதுப் பொருள்களைக் கொண்டு செய்யப் பெற்ற மருந்துகளும் உடனடியாக உடம்பில் தொழில் செய்யும். காந்த செந்தூரத்தைத் தேரையர் யமக வெண்பாவில் கூறிய முறைப்படி செய்து சர்க்கரையில் அனுபானித்துக் கொடுக்க,

பத்துப் பதினைந்து நிமிடங்களில் அதிக உழைப்பினால் உண்டாம் தலைவலியை நீக்குவதைக் காணலாம். பூரணச் சந்திரோதயம், கத்தூரிக்கருப்பு இவைகளைத் தேனில் அனுபானித்துக் கொடுக்க உடல் வெப்பம் 97 டிகிரிக்குக் குறைந்து விட்டாலும் இரு பது நிமிடங்களில் 99 டிகிரி ஆகி விடும். தேரையர் கூறிய "எட்டுத் திப்பிலி ஈரைந்து சீரகம்" என்ற பாடலின்படிச் செய்த மயிலிறகாதி சூரணத்தைத் தேனில் கலந்து கொடுக்க விக்கல் உடனே தீர்வதும் கண்கூடு, எனவே ஊசி மருந்துகளைப் போல சித்த மருந்துகளும் உடனடியாக வேலை செய்யும் என்பதனை உணரலாம்.

தேரையர் வெண்பாவில் குறிக்கப் பெற்றுள்ள சிறு கைம் முறை மருந்துகளும் உடன் தொழில்செய்து நன்மை பயக்கும் என்பது எமது அனுபவம். ஆயினும் நாடி நடை கண்டு அறிந்து நோய்க் காரணத்தையும் தெளிந்தறிந்து கொடுக்க வேண்டும்.

"நாடி அறிந்த மருத்துவரே யாமாத்தியராம்"

என்ற தேரன் வெண்பா அடிகளால் நாடியின் முக்கியத்துவத்தை நன்கு உணரலாம். நாடியைச் சரியாகக் கணித்துக் கொடுத்தால் தேரன் கூறிய எம்மருந்தும் பொய்யாகாது என்பது எமது துணிபு.

இந்நூலில் பூபதி மாத்திரை, காரம், சாரநீர் (பூநீறு) முதலிய தலைப்புகள் உள்ள வெண்பாக்களுக்குக் கூறப்பட்ட பொழிப்புரை களிலே சேகரப்பாவைக் காணும்படி சொல்லப் பெற்றிருக்கின் றது; அங்ஙனம் கூறியிருப்பதனாலே சேகரப்பா, காப்பியம் போன்ற தேரனின் பிறநூல்களும் உரையுடன் விரைவில் வெளி யிடப் பெற வேண்டுமென்று விழைகின்றோம்.

வெளிவந்துள்ள சித்த மருத்துவ நூல்களில் பெரும் பான்மை யானவை மருந்துகளையும் அவற்றின் செய்முறைகளையும் பற்றிக் கூறுவனவாகவேயிருக்கின்றன. அந்நூல்களில் இடையிடையே உடற்கூறு, தத்துவங்கள், நோய்களைக் கணிக்கும் முறைகள், நோய்க்காரணங்கள், நாடி முதலியனவும் கூறப்பெற்றிருக்கின்றன. ஆனால், மேற்கண்டவற்றைப் பற்றிய விரிவான தனி நூல்கள் காணப் பெறுகின்றில; அத்தகைய நூல்கள் இல்லாமை ஒரு பெருங்குறையேயாம்; இரண்டொன்றிருப்பினும் முறையாகவும் விளக்கங்களுடனும் அமைந்தனவாக இல்லை. ஆகையால், ஆங் காங்கு அந்நூல்களில் கூறப்பெற்றிருப்பவற்றைத் திரட்டி வகைப் படுத்தி விளக்கி, தனித்தனி நூல்களாக வெளியிடுமாறு சித்த

மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவினரை அன்போடும் ஆர்வத்தோடும் கேட்டுக் கொள்கிறோம். அவ்விதம் செய்யப் பெற்றால் சித்த மருத்துவம் தன் குறைபாடு நீங்கிச் சிறப்போடு நிலைபெற்றோங்கும். இது நிற்க,

இந்நூலுக்கு **டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.** அவர்கள் தாம் பல்லாண்டுகளாக, கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பயிற்சியாலும் மருத்துவத்துறையில் பணி செய்து முதிர்ந்த அனுபவத்தாலும் சித்த மருத்துவ நூல்களின் ஆராய்ச்சி வன்மையாலும் சிறந்ததோர் உரை கண்டுள்ளார். இவ்வுரை, நூற் செய்யுட்களில் வரும் பரியாய பரிபாஷைப் பெயர்களை நன்கு தெளிய விளக்கியும் மேற்கோள்களுடன் மற்றைய சொல் நயம் பொருள் நயங்களை எடுத்துக் காட்டியும் செல்வதாயமைந்துள்ளது. எனவே, இந்நூலைக் கற்கும் மாணவர்க்கும் மருத்துவர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் ஏற்ற திறவுகோல் போல்வதாகும் இவ்வுரை என்று எம்மனக் கருத்தைத் தெரிவிப்பதுடன், மேலும் இது போன்ற நல்ல நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டு, சித்த மருத்துவம் நீடுழி நிலைபெற்று ஓங்கும் பாங்கு பெறப் பணியாற்றுவாராகவென இவ்வுரையாசிரியரை மனமார வாழ்த்துகின்றோம்.

**டாக்டர் கோ. துரைராஜன்**
**எச் பி.ஐ.எம்.**
ஓய்வு பெற்ற பேராசிரியர்,
இந்திய மருத்துவக் கல்லூரி, சென்னை.

ஆலந்தூர்
*13-12-74*

---

* The following facts which supported by evidence provided by blood gas analysis will be inferred. 1. The placenta serves the purposes of nutrition and excretion receiving the impure blood from the Foetus and *returning it purified and charged with nutritive material*, 2-3-4. The pure blood carried from the placenta to the foetus mixed with blood from the portal vein and inferior venacava passes almost directly to the arch of the aorta and is distributed by the branches of that vessel to the head and upper limbs. 5. *The blood contained in the descending aorta chiefly derived from that which has already circulated throug h the head* and upper limbs together with a small quantity from the left ventricle *is distributed to the abdomen and lower limbs.*"

**34th Edition 1967. Grays Anatomy**
**Page 769-770**

# தேரையர் வெண்பா உரை

## சிறப்புப் பாயிரம்

திருவளர் செந்தமிழ்ப் பெருவள நாட்டில்
தொன்றுமுதிர் நாள்முத லின்றுவரை மக்கட்
பிறப்புயர் திணையா யறப்பணி யாற்றற்
கியன்ற வுறுப்பிற் பயன்றரும் யாக்கை
பெற்றுயர் சிறப்பாற் கற்றுய ரறிவுடை
மாந்தர்க் குறுபிணி யேய்ந்தன தீர்த்தற்
கியற்கையி னமைந்துள வியத்தகு மருந்துகள்
மூலிகை பலவும் வேர்வகை பலவும்
அதள்வகை பலவும் மலர்வகை பலவும்
சாறுகள் சரக்குகள் தூறுகள் பலவும்
கூறுகள் செய்தவை வீறுகொள் பிணிகட்
கனுபா னத்தா லருத்தி வருத்திய
நோய்தீர் மருத்துவ மேய்தர வாற்றும்
பேரறம் பல்கப் பேரறி வாளராய்ப்
பொய்தீ ரொழுக்கத் தெய்திய தவத்திற்
சிறந்த வாழ்க்கையிற் சிறந்த சான்றோர்
சித்தமா சகன்று முத்தரா யுயர்ந்து
சித்தரா யுறைந்து நித்தரா யுய்ந்த
பெரியோர் தமிழகத் துரியோர் பலரே
அவர்தமிற் சிறந்தோர் அகத்தியர் புலத்தியர்
மூல ரிராம தேவர் மச்சர்
ஆதியர் பதினெண்ம ரோதிய நூல்கள்
அளவில வவற்றுட் * பளகறு சிலபல

* பளகறு - குற்றமற்ற

அச்சேறி வாகடர் கைச்சேர் வுடையன
உரைத்தவிந் நூல்களி னிரைத்த பொருள்வகை
அனைத்தினு மேற்பட முனைத்திடு பல்வகை
மருத்துவ முறைகள் திருத்தம தாகவும்
சொல்நயம் பொருள்நயம் தோய்ந்து நன்னயப்
பாநயம் நாநயம் நூனய மேனைய
உருவக முவமை திருவமை புலமை
யாவையு மமைதரப் பாவகை சுவைதர
எழுமூன் றுறழ்தொகை *கெழுமூன் றுயர்மருத்
துவநூல் விழுமிய நவநூல்க ளாக
ஆக்கி யுதவிய பாக்கிய மானேன்
தேர னெனுமியற் பேரதன் மேலும்
தேரைய னெனப்புகல் காரணப் பெயரும்
மருத்துவத் துறையில் விருத்தியின் வழங்கும்
பெரியோன் பொருட்குணத் துரியன யாவும்
வகுத்துவெண் பாட்டில் தொகுத்தியாத் துதவிய
எட்டுக்கடை நிறுத்த வெழுநூற் றைம்பதாம்
செய்யுட் கோவைக்கு மெய்யுரை விளங்க
வரைந்துரைத் தச்சில் திருந்துறப் பதிப்பித்
தறிஞர் மதிப்பொடு நெறிநல் கியபுகழ்க்
குரிசி லாரெனிற் றரிசிலா வளத்துயர்
நன்செய்ப் பணைசூழ் தஞ்சைப் பரப்பின்
விருப்பூன்று திருவுயர் தருப்பூண்டிக் கூற்றத்து
நாறுசெய் கழனிகள் தோறுங் கால்வாய்
வழிவரு புதுநீர்ச் சுழிதொறு முகளும்
வராலினங் குதிகொண் டுராய்தலின் வெரீஇப்
பொள்ளென விரியும் பள்ளியர் மகிழ்நர்
ஆகந் தழுவி மோகம் விளைக்கும்
தெள்ளுநீர்த் திரைவிரி முள்ளியாற் றகன்கரை

* கெழும் ஊன்று

வளக்குடி பல்கிய விளக்குடி விளக்குபு
விழுக்குடி முதன்மையர் குழுக்குடி விளக்கெனத்
தோன்றிய தோன்றலா யான்றோர் மதிப்ப
இராச கோபால முதலியார்க் கிளைய
ஆசை மகவாய் மாசகல் நேசமார்
தியாக ராசனென் றியாவரும் வழுத்தும்
பேர்பெறு செம்மல் சீர்திகழ் மருத்துவத்
துறைதுறை போக நிறைதரக் கற்றுமுன்
சென்னை மருத்துவ மனையிலும் பின்னர்
நெல்லையில் மருத்துவக் கல்லூரி தன்னிலும்
பணிசெய் துயர்ந்த பயிற்சியின் முதிர்ச்சியால்
அரும்பி முறுக்குடைந் தலர்ந்துமணங் கமழ்நீர்
மலர்செம்ம::லாகி மறுமலர்ச்சி யுற்றென
நடுநிலை வழாஅது நடுவ ணரசினர்
சென்னையில் நிறீஇய சித்த மருத்துவ
ஆராய்ச்சி நிலையத் தமர்ந்து நடாத்தியும்
நானிலங் கெழுமிய மாநிலம் விழுமிய
மேனிலை யறத்தா ருநிலை திருந்தித்
துறைதுறை தொறுந்தொறு முறைமுறை திகழ
ஆற்றுந் தமிழக வரசினர் நோக்கத்
தின்பியல் நல்வாழ்வு மன்பதைக் காக்கி
அன்பியல் மேவர வமைச்சியற் றுறையின்
முன்பழகி யாங்கிவண் முறைசெல வாற்றி
அன்பழக ஞர்முயன் ருமுறை செலவுய்த்
தூக்கு நலத்துறை யாக்கம் பெறவமைந்
தறம்புரி மருத்துவத் திறம்பல்கு குழுவின்
தலைமை தாங்கியக் கலைவளர்ந் தோங்க
மருத்துவ மாணவர்த் திருத்துவ தாங்குண
பாடநூ லெழுதிப் பாடநூ லாக்கியும்
வரிசையிற் றிகழ்மகா கரிசல் நூலினுக்

குரைசெய்து மருத்துவத் தரைசெய்தி யிருந்த்
மருத்துவ ஞாயிறு வயித்திய பாற்கர
ஆனந்த ருதவிய ஆனந்த குமாரெனும்
நம்பிபாற் பதிப்புரிமை யன்பினு லளித்தும்
மேலு மருத்துவ நூல்பல வற்றினுக்
குரைகா ணவாநிறைந் தரைநா ழிகையும்
ஓய்வுறு திராப்பகல் ஆய்வுறு செயலிற்
கருத்துறைத் திருந்து மருத்துவத் தறம்புரி
மருத்துவக் குழுவினுக் கருத்திகொள் தலைவன்
திருத்துவ திருத்திப் பொருத்துவ பொருத்தி
மருத்துவப் பேரறம் வளர்த்துக்
கருத்துவப் புறநெடுங் காலம் வாழியவே.

அன்பன்,
**பண்டித வை. முரு. முத்துக்குமாரசாமி**
மருத்துவ நூல் வெளியீட்டுத் துறைப்பகுதி
இந்திய மருத்துவத் துறை இயக்குநர் அலுவலகம்
சென்னை-29.

# தேரையர் வெண்பா

## விநாயகக் கடவுள் வணக்கம்

1 பூதலத்தை யுண்ட புயல்வண்ணன் மாமருகன்
மீதலத்தை யாளும் விநாயகனுர் — பாதபத்ம
மாகனகத் தையுளத்தில் வைத்து முருகர்பதக்
கோகனகத் தையுளத்தில் கொள்.

(குறிப்புரை) பூதலம்-பூவுலகம்; புயல் வண்ணன்-திருமால்; மீதலம் - மேலுலகம்; பத்மம், கோகனகம் - தாமரை; கனகம் - பொன். ஏற்புடைக் கடவுள் வணக்கமும் வழிபடு கடவுள் வணக்கமுமாக, முறையே கணபதியையும் முருகப் பெருமானையும் வாழ்த்தி வணங்குகிருர் ஆசிரியர்.

## வாத நாடி குணம்

2 பொன்னு னதுலோக பூபதியா னற்போல
எந்நாளு நோய்கட் கிறையாகி—அன்னமாய்
விம்பநடை யாற்கணித வேதாந்த மாநாடி
தம்பநடை யாகும்வா தம்.

(கு - ரை) பூபதி - அரசன்; இறையாகி - அரசாகி; அதாவது முதற்காரணமாகி என்றபடி; கணித வேதாந்தம் - எண்ணியறியும் உடற்கூற்று நூல்; தம்ப நடை - அசைந்த நடை, அன்ன நடை; தம்பம், ஈண்டு அசைவு.

(கருத்துரை) பொன்னனது உலோகங்களுக்குத் தலைமையானதுபோல், வாதம் நோய்கட்குத் தலைமையாம்; வாதநாடி அன்னம் போல் நடக்கும்.

## பித்தநாடி குணம்

3 ஆமாத் தியற்கு மடங்காத மந்திரியாய்க்
கோமாற்றந் தந்திரிக்குக் கூறியவ—னேமாற்றும்
போது சிவந்து பொழுது கறுப்பிறைக்குத்
தாதுவும்மோ தும்மாபித் தம்.

(கு - ரை) ஆமாத்தியன் - மருத்துவன்; கோ-அரசன், வாதம்; மந்திரி - அமைச்சன்; தந்திரி - சேனைத் தலைவன்; அவன்ஏமாற் றும்போது - மாறுபட்டுப் பகையாகும்போது; கறுப்பு இறை-வாதநாடி.

## சேத்தும நாடி குணம்

4 குண்டலத்தா கண்டலனூர் குஞ்சரம்போ லஞ்சாமல்
மண்டலத்து மன்னனுக்கு மந்திரிக்கு - மிண்டாகி
மெய்யுள்கடை நான்கிலென மீளாப் பிணிகேளாய்ப்
பையுளுயிர் நீக்குங்க பம்.

(கு - ரை) குண்டலம் - வானுலகம்; ஆகண்டலனூர் குஞ்சரம்-இந்திரனூர்தியாகிய வெள்ளை யானை; மிண்டாகி - மீறியதாகி; பிணி கேளாய் - நோய்க்குத் துணையாகி; பையுள் - துன்பந்தரும் மெய் வருத்தம்.

## சடத்தினியல்பு

5 மன்னனுக்கு மந்திரிக்கு மன்னுபடை யாளனுக்குந்
தன்னுதென லில்லாச்சு தந்திரமா—யுன்னுயிர்ப்பி
ராணியென்பான் ஒத்திடமாய் நன்றுசெயி லொன்ற வன்னோர்
காணியக மாமேயாக் கை.

(கு - ரை) மன்னன், மந்திரி, படையாளன் - வாத பித்த சிலேட்டுமங்கள்; உன்னுயிர்ப்பிராணி - உணர்வுடைய உயிராகிய சீவன்; தன்னுதெனலில்லாச் சுதந்திரம் - தன்னிச்சை வழியில் லாத சுதந்திரம், இச்சைவழியாகாத உடம்பு என்றபடி; ஒத்திட மாய் - தங்குமிடமாய்; அன்னோர் காணி; வாத பித்த சேத்துமங் களின் உறைவிடம்; யாக்கை - எழுவகைத் தாதுக்களாற் கட்டப் பெற்ற உடம்பு.

## திரி நாடி குணமறிதல்

6 கைபார்க்க நாடிகளோர் கைபார்க்கும் வாதத்தை
யைபார்க்கும் பித்த மதைப்பார்க்கும்—மைபார்க்கும்
கண்போல் விரல்களுக்குக் கண்டிருந்துங் காணுதாம்
உண்போதத் தாலறிவா யுன்.

(கு - ரை) மருத்துவன் நோயாளியின் கைநாடியைப் பார்க்குமளவில் அந்நாடிகள் தாமும் தத்தமக்கியன்ற வகையால் நோயாளியின் உடல்நலத்தைக் குறைப்பதை அறிவான்; அவற்றின் தன்மைகளாவன: வாதத்தை ஐயமும் அவ்வையத்தைப் பித்தமும் சவட்டுதலால் உடல் நலத்தைக் கெடுத்தலாம்; மைபார்க்குங் கண் - கண்ணுக்கு மையெழுதுங்கால் எழுதுங்கோலையும் அதைப்பற்றியுள்ள விரல்களையும் நோக்காது மையையே நோக்கும் கண்; "எழுதுங் காற்கோல் காணுக் கண்ணேபோல் கொண்கன், பழி காணேன் கண்ட விடத்து" என வருந் திருக்குறளைப் பின்பற்றியது இத்தொடர்; போதத்தாலறிவாயுன் - அறிவாலறிந்து உன்னுவாயாக, உண்கண் என்று கூட்டி மையுண்ட கண் என்க.

7 காலமுதற் பத்துக் கடிகை யளவுகொள்முக்
காலமுமன் மந்த்ரிதள கர்த்தனிவர்—காலமெனக்
கொள்ளிதிலே யன்னோர் குணங்குறிநா டிப்பெயர்ச்சி
யுள்ளிதிலே வந்துமறி யும்.

(கு - ரை) காலை முதலாகப் பப்பத்து நாழிகை வீதம் வாத பித்த சிலேத்துமங்களின் காலக்கூறுகளாம், அவ்வந்நாடிகட் குரிய காலக் கூறுகளின்படி நாடியை ஆராய்ந்து மாறுபாட்டினை உணர்க. இங்ஙனமாகவே நாடிகளும் காலக்கூறுகளும் சுழற்சியாக வந்து கொண்டிருக்கும்; உள்-உளங்கொள்; பெயர்ச்சி - சுழற்சி; மறியும்- மடங்கி மடங்கி வரும்.

8 மன்னனுக்குச் செல்காலம் மந்திரிக்குத் தற்காலம்
பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை—இன்னபடி
ஆனலு நாடி யஃததுவா நாடிடிற்
ருனண்மை நோயினர்க்குத் தான்.

(கு - ரை) மன்னன், மந்திரி, பின்னன் - வாத பித்த சிலேத்துமங்கள்; செல்காலம் - இறந்த காலம்; தற்காலம் - நிகழ் காலம்; மேற் காலம் - எதிர்காலம்; பேதமில்லை - இங்ஙனம் வருதலில் மாறுதலில்லை; அஃததுவா நாடிடில் - மருத்துவன் அந்நாடிகளின் இயக்கத்தை முறையாக ஆராய்ந்து, அவ்வவற்றிற்கேற்ற மருத்துவம் செய்யின்; நோயினர்க்குத்தான் ஆண்மை - நோயாளிக்குப் பிணி நீங்கி வன்மை யுண்டாகுமென்க.

9 மந்திரிகா லத்தின்முதன் மத்திகடை யப்பானன்
கிந்தடைவிற் கன்ன விரண்டரையே—தந்திரிக்கு
மன்னனுக்கு மீதே வகுத்ததுகொண் டெஞ்சியதோர்
கன்னல்மற்ற நோய்கள்கடி கை.

(கு - ரை) பித்தவாதம், பித்தபித்தம், பித்த சேத்துமம்; வாத வாதம், வாத பித்தம், வாத சேத்துமம்; சேத்தும வாதம், சேத்தும பித்தம், சேத்தும சேத்துமம் என ஒன்பதாகப் பகுத்து இவற்றில் ஒவ்வொன்றிற்கு இரண்டரை நாழிகை வீதம் கழித்து; எஞ்சிய ஏழரை நாழிகை காலம் உடம்பைத் தாக்கும் நோய்கள் வீறு கொள்ளும் காலமா மென்றுணர்க.

10 காட்டத் தெரியும் கனல்போல் நீ கண்டுமுன்னே
காட்டத் தெரியுங் கருப்பொருள்கள்—நாட்டுகுரு
தன்மந் திரியருளைத் தாங்கு மெனக்குநிதி
யின்மந் திரிப்பொருளை யே.

(கு - ரை) காட்டத் தெரியுங்கனல் போல - விறகினிடத்தெரியும் அக்கினி போல; காட்டம் - விறகு; நீ முன்னே கண்டு காட்டத் தெரியும் - ஆசானாகிய நீ அறிந்துரைத்தலால் எனக்கு விளங்குவதாயிற்று; கருப்பொருள்கள்-மருத்துவநூலில் கூறியுள்ள நோய்க் குணங்களும், நோயறியும் நாடியியக்கங்களும், நோய் நீக்கும் மூல மருந்துப் பொருள்களுமாகியவைகள்; நாட்டுகுரு - மருத்துவ அறிவை உளங்கொள்ளுமாறுரைத்த ஆசிரியன்; தன் மந்திரி - தேரரின் ஆசிரியராகிய தன்மந்திரி முனிவர்; மந்திரிப் பொருள் - ஆசிரியர் உரைத்த மறைபொருள்.

11 ஆனாலு மென்மே லபசார நீர்பொறுத்து
மேனா ளருள்போல் விதிக்கவே—நானா
வகையான பண்டிதரே வாகடத்தி லுள்ள
மிகையான புத்திசொல்லு வீர்.

(கு - ரை) அபசாரம்-குற்றம் குறைகள்; மேனாளருள் - ஆசிரியனிடத்தில்பெற்ற அறிவுரை ; விதிக்க - நூல்களிற்கூற; வாகடம்-மருத்துவ மூலிகைகளும் மருந்து முறைகளும் கூறும் ஓர் நிகண்டு நூல் ; மிகையான - மருத்துவ வரம்பு கடந்த; பண்டிதரே - மருத்துவர்களே; புத்தி சொல்லுவீர்-என் நூலிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டி அறிவுரை கூறுமின்; இதில் தேரர் மருத்துவர்களை நோக்கி அவையடக்கம் கூறியுள்ளார்.

12 தன்மந் திரியார் தமதுமுதற் சீடனென்ப
தென்முன் பெயரா மிதற்காக—நன்மை
உலகறியக் கூறுகிறே னுண்மைநிச மாகப்
புலமைமிகு தேரனென் பேர்.

இதன் பொருள் வெளிப்படை; இதில் தேரர்தம் வரலாற்றுக் குறிப்பும் தம் பெயரும் மருத்துவ நூலறிவும் கூறியிருப்பது தெரியவரும்.

13 நாடி நிதானத்தி னன்மையறி பண்டிதரைத்
தேடி லடங்கித் தெரியார்கள்—ஓடுமதில்
மன்னமைச்சு தந்த்ரி வழிபிறழ லொன்றலறல்
பின்னிடல்முன் னுதலஞ்சு பேர்.

(கு - ரை) வாதபித்த சிலேத்துமங்களின் இயக்கம், அவைகளின் நடைமுறை தவறலும், ஒன்றிஞேடொன்று கலத்தலும், நின்று போதலும், பின்னேக்கி நடத்தலும், முன்னேறி நடத்தலுமாகிய ஐந்து வகையினவாம்; இங்ஙனமியங்கு நாடிகளின் நிதானத்தை நாடித் துடிப்பாலும் அனுபவ சூக்கும அறிவாலும் அறியவல்ல மருத்துவரைத் தேடியறிதலருமையாம்.

## தவளப் பசுவின் சுதை

14 பித்தமெனு மந்திரியைப் பேசாம லோட்டுமகா
ரத்தமுதற் காசத்தை நாட்டாது—நித்யங்
கவளத்தைச் செல்லுவித்துக் காயத்தைக் காக்குந்
தவளப் பசுவின்சு தை.

(கு - ரை) பித்தத்தை மீற வொட்டாமற் சம நிலையிலே நிறுத்தும், இரத்த காச நோயைத் தடுக்கும், உணவைப் பசி யெழுப்பி உண்பித்துச் செரிக்கப் பண்ணுவதனுல் உடம்பைப் பாதுகாக்கும்; தவளப்பசு, வெண்மை நிறமான பசு; சுதை-பால்.

## மாலலங்கல்

15 மன்னனுக்குச் சீரளித்து மற்றவரைத் தாழ்வைத்துப்
பின்ன மிலாதுடலைப் பேணியே—மன்னுநிலைப்

பேரணியப் பண்ணும் பிணிக்குப் பிணியாகும்
தாரணியின் மாலலங்கல் தான்.

(கு - ரை) வாதத்திற் குயர்வைத் தந்தும், ஏனையபித்த சிலேத்துமங்களை வாதத்திற்கிணங்க நடப்பித்தும், உடலைப் பழுது வராமற் பாதுகாத்து நெடுநாள் வாழப் பண்ணுவிக்கும்; உடற்கு வரும் நோய்கட்கு நோயாகி அந்நோய்களை நீக்கும்; மாலலங்கல்- திருத்துழாய்; மாலனந்தல் என்ற பாடத்துக்குப் பொருட் சிறப் பின்மையறிக; அன்றி, ஆலிலை என்று கொண்டு மேற்கூறிய குணங் கள் பொருந்துமேற் கொள்க.

## மாலெச்சில்

16 வெண்பொடியா கக்கடவ வேதைகளா கக்கடவ
நண்பொருட்கெ லாங்கவச நன்ருகிப்—பெண்பருவச்
சூலுக் கிசைந்து துரத்து மமைச்சனையும்
மாலெச்சில் நீயறிகு வாய்.

(கு - ரை) வெண்பொடி - பற்பங்கள்; வேதைகள் - நிறவேறு பாட்டையும் செந்தூர முதலியனவும் வாதப் போக்கு ஆகியவை யும்; நன் பொருட்கெலாம் - உயர்ந்த மூலிகைச்சாறு கலந்தரைத்து வில்லை செய்யப்பட்ட மருந்துச் சரக்குகள் எல்லாவற்றிற்கும்; கவசம் நன்ருகி - புடமிடுங்கால் மேற் பூசி மறைத்தற்காம் நல்ல கவசம் போலாகி; பெண் பருவச் சூலுக் கிசைந்து-சூல் கொள்ளும் பருவப் பெண்களின் நாதத்தில் பிருதிவி பூதமாகப் பொருந்தி; அமைச்சினையும் துரத்தும்-பித்தத்தையும் கண்டிக்கும்;மாலெச்சில்- மண், கற்பகாலத்தில் திருமாலினிடத் தொடுங்குதலால் மண் ணுலகமாகிய பூமியை மாலெச்சிலென்ருர்.

## சீவனம்

17 மாலுக் குறவாகி மன்னுயிர்க்கு மன்னுயிராய்
மேலுக் கிரண்டாகி வெண்மையாய்க்—கோலுக்குப்
பாவனமாய்ச் சேஞ பதிக்குப் பதியாகும்
சீவனமே சீவனமாந் தேர்.

(கு - ரை) சீவனம் - தண்ணீர், திருமால் அறிதுயில் கொள்ளு மிடமாகி, நிலைபெற்ற உயிர்கள் அருந்தி நிலைபெற்று வாழ்தற்

கியன்றதாய், வெண்மை - படிகம் போலும் நிறமுடையதாகத் தோன்றுதல், சேஞபதிக்குப் பதியாகி-கபம் விருத்திக்கிடமளித்து, சீவனமாம் தேர் - ஆதாரமாயிருப்பதாமென்று தேர்ந்து கொள்.

## எழு நா

18 எந்தெந்த லோக விரதபா ஷாணங்கட்
கந்தந்த வாகிருதி யாகுமே—அந்திவண
ராக முறையா யவியா சனியாகும்
நாகமென வீறுமெழு நா.

(கு - ரை) எழுநா—தீ, தீயின் சுவாலைபல வண்ணங்களாகக் காணப்படுவதால் எழு நா என்று தீக்குக் காரணப்பெயராம். அந்திவணர் - சிவபெருமான், ஆகம் - திருமேனி. சிவனுர் மேனி தீவண்ணம், அவியாசனி - வேள்வியில் தீயிற்பெய்யும் அவிப் பொருள்களை யுண்ணக்கூடியது, நாகமென வீறும் - பாம்பு படம் தூக்கியாடுவது போல் சுவாலை யெழும்.

## அனிலம்

19 மாதே யருபாய் வழங்குயிரா யீரறிவாய்
மீதே யுருமல் விளங்குமே—ஓதுமகி
பட்சணமாய் நோய்களுக்கு பாயசஞ்சீ விப்பொருளாய்
லட்சணமாய் நிற்குமனி லம்.

(கு - ரை)மாதே-பெண்ணே; மகடூ முன்னிலை.அனிலம்-காற்று. அருபாய்-அருவமாய்; அதாவது உருவமற்றதாய், வழங்குயிராய் - இயங்கும் தன்மையால் உயிர்போன்றதாய், ஈரறிவாய் - காற்றும் விண்ணுமாய் அறியப்படுதலால் இரு வகையினதாய், தான் இயங்குதலால் ஒருவர் மேலும் ஊற்றுணர்ச்சி பொருந்தப்படாமல் உளர்தலால் மீதேயுருமை காற்றுக்குப் பெரிதும் பொருந்துமாறறிக, அகிபட்சணம் - பாம்பாலுண்ணப்படுவது காற்று; உபாய சஞ்சீவி - பல மூலிகைகளின் சத்தாகிய மணத்தில் தோய்ந்து மெல்லென வீசும் இளங் காற்று, பல நோய்களைப் பரிகரித்து நலம் பயக்கு மென்க.

## குண்டலம்

20 ஒருணர்வா யெல்லா மொடுங்குவதா யாதிமுதல்
சேருவதாய் வாதபித்த சேத்துமமா - யாரோதை
கண்டவர்க்குங் காணக் கருப்பொருள்போற் காணுமந்தக்
குண்டலத்தை நீயறிந்து கொள்.

(கு - ரை) குண்டலம் - ஆகாயம்; உயிர்த் தொகைகளும், ஔடதிகளும், ஏனைய நான்கு பூதங்களும், பிற பதார்த்தங்களும் அடங்குதற்கும் ஒடுங்குதற்கும் இடந்தருவதாம் என்பது முன்னிரண்டடிகளின் கருத்தாகும்; அன்றியும் வாதபித்த சேத்துமமுமாம்; ஆரோதை - போரோசை; கருப்பொருள் - சிறப்புப் பொருள்.

## கணி

21 பக்குவமா யாறு பதத்தை வதைத்துடலில்
மிக்க பிணியை விரட்டியுப்—புக்கல்
மணியிரத லோக வகைகளைப்பந் திக்குங்
கணியிதனை நன்ருய்க் கணி.

(கு - ரை) கணி - வேங்கை; வதைத்து - அழிந்து; மிக்கபிணி- மிக முற்றிய பிணிகள்; மணி, முத்து, பவளம் முதலிய இரத்தின வகைகள். பந்திக்கும்-கட்டும். உப்பு - காரசாரம். கல்-பாடாணம், இரதம்-இரசம்; உலோகம்-செம்பு முதலிய உலோகங்கள்; நன்ருய்க் கணி - நன்கு சிந்தித்துணர்க.

## இதழி—கொன்றை

22 பாண்டரங்கர் பூணைப் பறக்கடித்து மேகத்தை
யாண்டரங்கக் கைக்குள்வச மாக்குமே - காண்டற்
குதவிசில செய்துடலை யோம்புமிது நீபார்
இதழியெனுங் கொன்றைபுவி யில்.

(கு - ரை) பாண்டரங்கர் - சிவபெருமான், பூண்-அணியுமாலை. மேகத்தைப் பறக்கடித்து - மேக நோயைப் போக்கி, இதழியெனுங்கொன்றை - ஐந்திதழ்களையுடையதாகிய கொன்றை மலர். உதவி சில செய்துடலை வளர்க்கும் கணி யென்று கூட்டி முடிக்க

## ஆம்பிரம்

23 வேந்தனுக்கே சார்பாகி மேலிருவர்க் கும்பயனும்
சேந்தனுக்குக் காணியிடஞ் செய்யுமே—சாந்தமிலாப்
பாம்பாக வாகம் பருவரலெய் தப்புரியும்
ஆம்பிரம் நோய்க்காகா வாம்.

(கு - ரை) ஆம்பிரம் - புளி; வேந்தனுக்குச் சார்பு - வாத மேறுதற்கு அனுகூலமாகும்; பித்த சேத்துமங்களைத் தீர்க்கும்; ஆகம் பருவரலெய்தும்-உடம்பிற்குத் துன்பமுண்டாக்கும்; நோய்க்காகா - எல்லா நோய்களுக்கும் அபத்தியப் பொருளாம்.

## பூதம்

24 அச்சரம் புண்கிரந்தி யாவதும்ப யந்தோட
அச்சமுற மேகமுந்தீ யாகுமே—இச்சகத்தில்
நாதனென மூவருக்கும் நற்றுணையா மாக்கைக்கும்
பூத மதிபதியைப் போல்.

(கு - ரை) பூதம் - ஆல்; அச்சரம் - வாயிலுண்டாகும் நோய்; மூவருக்கும் - வாதபித்த சேத்துமங்களாகிய மூன்றுக்கும்; ஆக்கைக்கும் அதிபதியைப்போல் நற்றுணையாம் பூதம் என்று முடிக்க. ஆக்கை - உடம்பு; அதிபதி-தலைவன்.

## அரிதகி

25 மன்னவனை மந்திரியை மாறும லாட்கொண்டு
பின்னவனை யுங்கடிது பேர்க்குமே - மன்னி
அரிதகிக்கு மாபோ லரணியத்தை மீறி
அரிதகிநோய் கட்கிகலே யாம்.

(கு - ரை) அரிதகி - கடுக்காய்; முன்னிரண்டடிகளின் பொருள் வெளிப்படை, அரணியத்தை - ஆரணியத்தை, அரி தகிக்குமா போல் - தீயானது எரிப்பதைப் போன்று, மீறி-மேலிட்டு, நோய் கட்கிகல் அரிதகி - நோய்களை எதிர்த்துக் கண்டித்து நீக்குவதாம் கடுக்காய்.

## பிண்டி

26 வாதபித்த சேத்ம வரிசைபெறு மூவருக்கும்
ஆதரவாய் மெய்யி லமையுமே—பூதலத்தில்
வீண்பிண்டி போல விடுமுடம்பை யுந்தணிக்கும்
காண்பிண்டி யாமசோ கம்.

(கு - ரை) பிண்டி - அசோகு, வாதபித்த சேத்துமங்களுக்கு ஆதரவாய் உடம்பிலமையும், பூதலம் - பூவுலகம், வீண்பிண்டி போல - மாவினல் உருட்டிய உருண்டை உதிர்ந்து போவது போல, விடுமுடம்பு - நோயினல் சீரழியுமுடம்பு, தணிக்கும் - ஆற்றல் தந்து பலப்படுத்தும். காண் - அறிவாயாக.

## அருக்கம்

27 மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி னேயகற்றி
உன்னு பிணிப்பனியை யோட்டுதலாற்—சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்க மருக்கனென லாம்.

(கு - ரை) அருக்கம் - எருக்கு, மன்னனையுங் கையெடுக்க வைத்து - வாத்தத்தை அகலச்செய்து, எயிற்றின் நோயகற்றி உன்னுபிணியை ஓட்டுதலால் - பற்களில் வரும் நோய்களையுந் தீர்த்து, பிறவாறு நினைக்கும் துன்பங்களையுந் தீர்த்தலால், பூமியினிலே விளங்கும் அருக்கம் (எருக்கு), அருக்கனெனலாம் - பனியை அருக்கனுகிய சூரியன் ஓட்டுதல்போல் நோயை நீக்குதலால் அந்தச் சூரியனைப்போல் பூமியில் எருக்கைக் கொள்ளலாம்.

## சம்பீரம்

28 மந்திரிக்கு மந்திரியாய் மன்னனுக்கு மன்னனெனத்
தந்திரிக்கு மித்திரன்போற் சாருமே—முந்தவரு
கெம்பீர மாய்ச்சரக்கின் கெண்ணியமாய் வாகடர்க்குச்
சம்பீச மாமெலுமிச் சை.

(கு - ரை) சம்பீரம் - எலுமிச்சை, மந்திரிக்கு - பித்தத்திற்கு, மந்திரியாய் நண்பனைப் போல்வதாய். மன்னனுக்கு-வாதத்துக்கு,

மன்னனென - தலைவனாய்; தந்திரிக்கு மித்திரன் - கபத்துக்கும் சினேகமாய்; முக்குற்றங்களும் நீங்குமென்றபடி, சில பல மருந்து களுடன் சேர்க்கப்படுவதால் மருந்துச் சரக்குகளுக்கும் மருந்து செய்யும் மருத்துவர்களுக்கும் கெம்பீரத்தையும் கண்ணியத்தையும் தருவதாம்.

## ஏரண்டம்

29 வாதத் தொடக்கை வரவொட்டா மற்படிக்குக்
காதத்துக் கப்பாற் கடியுமே—சூதத்தைப்
பேரண்டப் பந்திக்கும் பேதிக்கு நோய்க்காட்டை
ஏரண்ட மென்பதினி யே.

(கு - ரை) ஏரண்டம் - ஆமணக்கு; வாதத்தை மிஞ்சாமல் தடுத்து நீக்கும்; இரசத்தைக் கட்டும்; பிணிகளை மாற்றிவிடும்; இவை ஆமணக்கின் தன்மைகளாம்.

## மறியுண மூலி

30 கிரந்திகரப் பான்வெக்கை கேசநலி மாந்தை
அரந்தை வினையை யறுக்கும்—துரந்து
பிறியொணு நோய்களையும் பின்முன்பா ராமல்
மறியுண மூலியடை வாய்.

(கு - ரை) மறியுண மூலி - ஆடுதின்னாப் பாளை; கிரந்தி, கரப்பான், வெக்கை, மாந்தை முதலிய துன்பந்தரு நோய்களை நீக்கும்; நீக்க முடியாத நோய்களையும் முந்தியதென்றும், புதிய தென்றும் பாராமல் உடனுக்குடனே நீக்கும்; அறுக்கும் என்பதை ஈரிடத்தும் கூட்டிப் பொருள்காண நிற்றலால் தாப்பிசைப் பொருள்கோளாம்.

## வெருகடி

31 அரச னமைச்ச னதிகாரி சேனைக்
கரச னிவர்க்கிகலே யாகிப்—பொருவும்
மிருகமெனு நாயைமுயல் மேல்விடுதல் போல
வெருகடியை யேவுவினை மேல்.

(கு - ரை) வெருகடி-பூனைக்காலி, வாதமாகிய அரசன், பித்த மாகிய அமைச்சன், சேத்துமமாகிய அதிகாரி யென்னும் சேனைத் தலைவன், இம்மூவகைக் குற்றங்கட்கும் பகையாகப் பொருந்தும் வெருகடியாகிய பூனைக்காலியை முயல்வேட்டைக்கு நாயை

யேவுதல்போல் முக்குற்றங்களால் வரும் நோய்களாகிய வினையின் மேல் ஏவுக என்றவாறு.

### கணை

32 ஈளை யிரும விரைப்புப் புசப்பிணிகள்
மாள வொழியாமல் வாட்டுமே—யாளுமுறை
பாங்கா யறிந்து செய்வீர் பண்டிதத்தைப் பண்டிதரே
வேங்கைவாய்ப் பானகணை மெய்.

(கு - ரை) கணை - திப்பிலி; வேங்கை வாய்ப்பான கணை - வேங்கைப் புலியை ஒத்த வேகத்தையுடைய திப்பிலி என்க; ஈளை இருமல் இரைப்பு உப்புசம் என்னும் நோய்களை வேரறக் களைந்து நீக்கும், கையாளுந் திறந்தெரிந்து மருத்துவர்களே வயித்திய முறையைச் செய்வீர்களாயின்.

### அரனிம்பம்

33 குட்டஞ் சிரங்கு குறைப்புப் புசமாந்தை
கட்டப் பிணிகள் கழலுமே—திட்டம்
உரனிம்பங் காயத்துக் குண்டாகு மேலை
அரனிம்ப மென்னுமருந் தால்.

(கு - ரை) அரனிம்பம் - சிவனார்வேம்பு, குட்டமும் சிரங்கும் தொழுநோயும் உப்புசமும் உளமாந்தையும் ஆகிய துன்பந்தரும் பிணிகள் நீங்கும்; வலிமையையும் இன்பத்தையும் ஊட்டும்; இவைகள் இம்மருந்தால் வரும் திட்டமாமென்க; இன்பம் இம்பமென்ருயது எதுகை நோக்கி.

### மாறன்தார்

34 புந்தியினைத் தீட்டுவிக்கும் புன்பிணியை யோட்டுவிக்கும்
இந்தியத்தை நன்ரு யிசைவிக்கும்—சந்ததமும்
வீறுண்டாங் கற்ப மிகவுண்டா மெஞ்ஞான்று
மாறன்ரு ரையமில்லா மல்.

(கு - ரை) மாறன்தார்-வேம்பு; மாறன்-பாண்டியன்; தார்-மாலை. அறிவைத் தெளிவு படுத்தல், தீய நோய்களைப் போக்கல், வீரியத்தை விருத்தி செய்தல், உடம்பிற்கு வலியைத் தருதல், ஆயுளை நீடிக்கச் செய்தல் ஆகிய (காய கற்பம்) அரிய

குணங்களையுடையதாம். ஆகையால் எப்பொழுதும் ஐயப்படாமல் மருத்துவர் வேம்பைக் கையாள்வது சிறப்புடைத்தாம்.

## வான அம்புசம்

35 வேண்டினு லுண்டாம் வியாதியில்லாப் பேரின்பம்
பூண்ட தினகரனைப் போலவே—மீண்டுமினி
யான விரத மனைத்தும் வலுவிக்கும்
வானவம்பு சத்தைமிக வை.

(கு - ரை) வானவம்புசம் - ஆகாயத்தாமரை; வானவம்பு சத்தை மிக வேண்டினுல் வியாதியில்லாப் பேரின்பம் உண்டாம்; இனிமையான இரசத்தை வலிமை யுண்டாக்கும் நாள் செய்யும் பகலவன் உலகப் பொருள்களை விருத்தியாக்கிச் செழிப்பிப்பது போல் (ஆகாயத் தாமரையும்) மேற்கூறிய குணங்களைத் தருவ தால் மருந்துகளுள் சிறப்புடையதாக வைத்துக் கொள்க என்பதாம்.

## ஏடேக கோகனகம்

36 சுரத்தைக் கடிந்து சுவாசத்தைப் போக்கி
உரத்தை யுடலுக் குதவும்—பருத்தவுடல்
வாடா தனுதினமும் வைத்தடிக்கு மேகத்தை
ஏடேக கோகனக மே.

(கு - ரை) ஏடேக கோகனகம்-ஓரிலைத் தாமரை; சுரத்தைப் போக்கி, சுவாச நோயை நீக்கி, உடலுக்கு வலிமையைத் தரும்; வளர்ச்சியுற்ற உடல் வாட்டமுருமல் இருக்கப்பண்ணும்; நாள் தோறும் மேக நோயைக் கண்டித்துப் போக்கும்.

## வரனனை

37 வாதகுரு வரயுடம்பு வாதமறுத் தப்படியே
வேதையுலோ கங்களிலே வேண்டினுற்—பாத
விரதமுதற் கையாட வென்ரு லிசையும்
வரனனையை நீமனதில் வை.

(கு - ரை) வரனனை - வாய்விளங்கம்; வாதகுரு-இரசவாதத்திற்கு ஆதிப் பொருள்; வாதரோகத்தை நீக்கி, உலோகங்களை வேதை செய்தற்கும், இரசத்தைக் கையாடவும் உதவும்.

### விருச்சிகக் கூலம்

38 வங்கத்தி னீர்வாங்கும் வாத குருவாகும்
தங்கத்தைக் காண்பிக்குந் தப்பாது—ளங்க
மரிச்சு விடாமல் வளர்க்குமெந் நாளும்
விருச்சிகக் கூலமிது மெய்.

(கு - ரை) விருச்சிகக் கூலம் - தேள் கொடுக்குச் செடி; வங்கத்தின் நீர் வாங்கும் - ஈயத்தின் நீரை வெளிப்படுத்தும்; வாத குருவாகும்-வாதத்திற்கு குரு மருந்தாகும்; தங்கத்தைக் காண்பிக்கும் - வாத முறையில் தங்கத்தை உள்ளபடி காட்டும்; அங்கம் மரிச்சுவிடாமல் - உறுப்புக்கள் கெட்டழியாமல்; வளர்க்கும்-உடம்பைப் பாதுகாக்கும்; மெய்-இவ்வியல்பு உண்மையாம்.

### மரிசம்

39 மூவருக்கு முன்னிகலாய் முன்னுறவாய் மற்றபிணி
யாவருக்கு மேலா யிருக்குமே—தேவருக்கும்
எண்ணப்ப தார்த்த மெனமும்மூர்த் திக்கிரிகை
தண்ணப்பிர தாபமரி சம்.

(கு - ரை) மரிசம் - மிளகு; முக்குற்றங்களுக்கும் பகையு நட்புமாகும்; மற்றுமுள்ள பிணிகளை நீக்கும்; தேவர்களும் விரும்பியேற்கும் பதார்த்தமாகும்; உடலை வளர்த்தலும், காத்தலும், நோய்களை அழித்தலுமாகிய முத்தொழிலுமுடைமையால் மும்மூர்த்திக் கிரிகை என மிளகுக்குக் காரணப் பெயராயிற்று; (கிரிகை - தொழில்)

### மான்மனை

40 மருந்தெவ் விதமேனு மாரு ததற்குத்
திருந்து முபதையெல்லாஞ் செய்யும்—பொருந்துமசி
மேன்மிகுவே கங்கொடுக்கும் வெம்பிணியைச் சாடுதலால்
மான்மனையே பண்டிதர்க்கு வாள்.

(கு - ரை) மான்மனை, மால்மனை - அரிதாரம்; முல்லை நிலமுமாம்; எவ்வித மருந்துகளுக்கும் அவ்வவற்றின் குணம் மாறாமல் சிறந்த உபாயங்களைச் செய்யும், இவ்வுலகிற் பொருந்திய கொடிய நோய்களைக் கடிந்து நீக்குதலால் மருத்துவர்க்கு நோய்ப் பகையை வெல்லக் கருவியாகிய வாள் போன்றதாம்; முல்லை நிலமாகக் கொள்ளிற் பொருள் சிறக்குமேனின் அதனையும் கொள்க; உபதை உபாயம்.

## மாலூர் (மாலூரம் - வில்வம்)

41 உண்டிக் கனுகரண முற்றதுணை கொற்றவற்குத்
தண்டிக்க வல்ல சமர்த்தென்ன—வெண்டிக்கும்
மேலார் பதார்த்தமென மேதினியெல் லாந்துலங்கு
மாலூ ரளித்தபெரு மை.

(கு - ரை) மாலூர் - வில்வம். மாலூரமென்பது கடை குறைந்து நின்றது; அனுகரணம் - முதலுதவி, உற்றதுணை - ஏற்ற துணை, எண்டிக்கும்-எட்டுத் திசையிலும், மேதினி-பூவுலகம், உணவுக்குச் சீரணிப்புத் துணையாயும் பசியூட்டும் அவிழ்தமாயும், அரசன் குற்றவாளிகளை ஒறுக்குமாறுபோல் நோய்களைக் கண்டித்து உடலைக் காப்பதாயுமுள்ள வில்வம் எல்லாத் திசையினும் சிறந்த மருந்துப் பொருளாக உலகிலுள்ளார் போற்ற விளங்கும், இதன் பெருமையே பெருமையாம்.

## மயிலவனாயுதம் (வேல்)

42 பல்லுக் கடுத்த பலநோ யகற்றியதைக்
கல்லுக்கு நேராகக் காட்டுமே—மல்லுக்கு
நண்மின்வினை காளெனப்போய் நாளும் வியாதிகளைச்
சண்மயில வன்னாயு தம்.

(கு - ரை) மயிலவனாயுதம்-வேல்; (கருவேல்) உடலிலுள்ள பிணிகளை விளித்துப் போருக் கழைத்து உறைவிடந் தேடிப்போய் அவை தம்மை வேரறக்களைந்து நீக்குவதாகிய வேல் என்னு மூலிகை, சிறப்பாகப் பற்களின் நோய்கள் பலவற்றையும் நீக்குவதுடன் அப்பற்களையும் வலிமையடையச் செய்து கற்களையொப்ப உறுதிப் படுத்தும், மல்லுக்கு நண்மின் - மற்போருக்கு வாருங்கள்; சண், வினைத்தொகை; சண்ணுதல் - உண்டொழித்தல்.

## சோபி

43 எந்த வியாதி யினங்களையுஞ் சாடிமல
பந்த வினையைப் பரிகரித்து—வந்தவெப்பைப்
பாபியென மாட்டுதலால் பாடாண வெம்மையினுஞ்
சோபிமகா சோபியென்று சொல்.

(கு - ரை) சோபி - வாளம்; எவ்வகைப்பட்ட நோய்களையும் அவற்றின் கிளை (இனம்) நோய்களுடன் அழித்து நீக்கி, மலச்சிக்கலையும் கெடுத்து மேல் வராமல் தடுத்து, இடையே வந்த வெப்பு நோயையும் பாபி என விலக்கி அழித்திடலால் பாஷாணங்களின் கடுமையை விடச் சோபி யென்னும் பேருடைய வாளம் பிரகாசமுடையதாம், சாடி - அழித்து, பரிகரித்தல் - வாராமற் காத்தல், சோபி - வாளம், பிரகாசமுடையது.

## கணபதி பத்திரம்

44 போகாத தோஷவினை போகப் பிணியகன்று
தேகாதி யெல்லாஞ் செழிக்கவே—வாகாய்
அடர்தந்தை பிள்ளைக் கணியா தலினலத்
திடமாங் கணபதிபத் திரம்.

(கு - ரை) கணபதி பத்திரம்—அறுகம்புல்; நீங்காத எவ்வகைத் தோஷங்களையும் ஏற்றவகையால் அழித்து நீக்கி நோய்களையும் போக்குதலால் உடம்பின் பல பாகங்களும் வளம்படச் செய்து சிவபெருமான் திருமகனாராகிய விநாயகக் கடவுள் விரும்பியணியும் மாலையும் பூசை கொள்ளும் பச்சிலையுமாக விருத்தலால் அறுகு எல்லா மூலிகைகளினும் வலிமையும் பெருமையுமுடையதாம்.

## பிடகர்

45 மணிமந் திரவவிழ்த மார்க்கந் தெரிந்து
பிணிக ளறிந்தொதுக்கிப் பின்னும்—தணிய
உடலை வளர்த்திடலா லுத்தியின னூலால்
பிடகர் வயித்தியர்க்குப் பேர்.

(கு - ரை) பிடகர் - வைத்தியர்; மணி - இரசமணி; மந்திரம் - மந்திரம் ஓதல்; அமிழ்தம் - அவிழ்தம்; மருந்து மார்க்கம் - மருந்து செய்யும் முறையும் பிரயோக முறையு மாகிய முறைமை. இங்ஙனம் வழி முறையறிந்தும் நோய்களின் இயல்பையும் நாடியாலறிந்தும், அந்நோய்கள் வலி குறைந்து நீங்கத்தக்க மருந்தூட்டி உடம்பை வளப்படுத்தலாலும், நுண்ணறிவாலும் மருத்துவ நூல்களைக் கற்றுத் தேர்ச்சியுற்றமையாலும்பிடகர்என்பது வைத்தியர்க்குப்பேராம்; பிடகம்- வேதம். ஈண்டு மருத்துவ நூலைக் குறித்து நின்றது; (உ-ம்) "மந்திர முந் தந்திரமு மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான்" (அப்பர்தேவாரம்)

## தோன்றி

46 தேவி யுரத்தையுமா தேவ பலத்தையுமோ
ராவியெனக் கட்டியுற வாக்குமே—நோவுகளை
ஏன்று கொண்டு மாட்டுமுமை யின்மதலைக் கில்லிடத்தாந்
தோன்றியெனுங் காந்தளடித் தூள்.

(கு - ரை) தோன்றி - காந்தள்; இது கார்த்திகைத் திங்களில் சிறப்பாகப் பூத்தலால் கார்த்திகைச் செடி என்று காலவாகு பெயராக நூல்களிற் கூறப்படும்; தேவியுரம் - கந்தகம்; மாதேவபலம்- இரசம். இவ்விரண்டையும் ஒரு யிராம்படி கட்டிவிடும்; நோய்களை எதிர்த்து நீக்கும்; உமையின் மதலை - முருகன்; இல்லிடத்தாம் என்றது கார்த்திகை மகளிர்பால் முருகன் தோன்றியதைக் குறிப்பதாம்.

## காமன்

47 கட்டியெதிர் நின்று கடுநோயெல் லாம்பணியுந்
திட்டி வினையகலுந் தேகமெத்த—புட்டியாம்
மாமனுக்கு மாமனென மற்றவற்கு மற்றவனுங்
காமனெனுந் திப்பிலிக்குக் கை.

(கு-ரை) காமன் - திப்பிலி; திப்பிலியாகிய நல்ல மருந்துச்சரக்கைப் பயன்படுத்தினல் கடிய நோய்ப்பிணிகள் யாவும் கைகட்டி எதிராக வந்து நின்று வணங்கும்; மாமனுக்கு மாமனென-மாமனுகிய சிவபிரானுக்குத் தான் மாமனுகிய; காமன் - மன்மதனுகிய

காமவேளின் பேர் புனைந்த திப்பிலிக்கு என்று முடிக்க. புட்டியாம்-தேக வலிமையாம்; காமன் திருமாலின் மகனாதலின் சிவபெருமான் மாமனும்; அவனுக்குக் காமன் மாமனாவது சிவன் உமையவளை யணைதற்கு விருப்ப முண்டாக்குங் காரணத்தால் அவளையுதவிய முறையாலென்க. மற்றவர்க்கு மற்றவன் - நோய்களாகிய பிற எல்லாவற்றிற்கும் பகைவன்.

## சேர்ந்தாரைக் கொல்லி

48 அவிழ்த்த முலோகமு மாகுநோய் மெய்ம்மை
தவிசகங்கண் முன்னுறுதி தானாய்க்—கவிபிணியை
யார்ந்தவுடற் கப்புறமே யாக்கிமிகு பாக்கியமாம்
சேர்ந்தாரைக் கொல்லியெனுந் தீ.

(கு - ரை) சேர்ந்தாரைக் கொல்லி - தீ; உலோகங்கள் மருந்தாவதற்குத் தீயாயுதம்; மெய்ம்மை - உடம்பின் இயல்பு; உடலாற்றலைத் தாக்கிக் கண்ணால் நோக்குதற்கும் துன்பந் தருவதாகக் கவிந்துள்ள நோயை அப்பிணி நிறைந்த உடம்பை விட்டுப் புறம் போகச் செய்து நோயாளிக்கும் மருத்துவற்கும் ஏற்ற பாக்கியம் போலாகும்; சகம் - உலகுயிர்கள்.

## வெற்பேந்தி

49 எய்த்துநரர் போகாம லிந்தியத்தைப் பந்தித்து
மெய்த்தனுவை வெற்பாக்கு விக்குமே—பொய்த்தவர்க்கும்
கற்பாந் தரமாக வீடழிக்கு நம்பினர்க்கு
வெற்பேந்தி மெய்க்குறுதி மெய்.

(கு - ரை) வெற்பேந்தி - மலைதாங்கி; நரர் - மனிதர்கள்; மனிதர் விந்து நஷ்டத்தால் உடல்வலிகுன்றி இளைத்துப் பலவீனப் படாதவாறு, அவ்விந்திரியத்தைக் கட்டுப்படுத்தி மெய்யாகிய உடம்பை மலை போன்ற வன்மையுடையதாகச் செய்யும்; நன்முறைகளை நம்பாமை யுடையராகி மலைதாங்கி என்னும் மூலிகையை உபயோகப்படுத்தாது பொய்யான வாழ்க்கை உடையவர்க்குப் பல பிறவிகளிலும் கற்பகாலம் வரைக்கும் உடம்பை ஊடழிக்கும்; நம்பி உபயோகிக்கும் நன்னெறி மக்களுக்கு மெய்ந்குறுதியளிக்கும் நல்லகற்ப மருந்துமாகும்.

## காதணியோம்பி

50 கட்டியெதிர் சேவிக்குங் காயசித்தி யுண்டாக்கும்
வெட்டலின்றி லோகமெல்லாம் வேதிக்கும் — குட்டமறும்
ஆதரவுண் டாகுமிக வாக்கைக் கனுதினமுங்
காதணியோம் பிக்குவினை கை.

(கு - ரை) காதணியோம்பி - கிடைச்சி; (நெட்டி) காய சித்தி யுண்டாக்கும்; உலோகங்களை வெட்டையாகாமல் வேதையாக்கும்; குட்டம் தீரும்; உடம்பிற்கு ஆதாரமாக நாள்தோறும் இதம் செய்யும்; ஆகையால் கிடைச்சியாகிய நெட்டிக்கு நோய்கள் கை கட்டி எதிர் சேவிக்குமென்று முடிக்க.

## மாக்கல்வம்

51 கல்லெனும்பா ஷாணத்தைக் கட்டுவிக்கு மேகத்தைக்
கொல்லு முடலைக் குளிர்விக்கும் — உல்லாசம்
ஆக்குமுயிர் நிலையை யாதரிக்கு மெஞ்ஞான்றும்
மாக்கல்வ மூலிமகி மை.

(கு - ரை) மாக்கல்வம் - செங்கழுநீர்; பொருள்கோள் ஆற்றொழுக்கு; பாஷாணத்தைக் கட்டும்; மேகநோய்களை அழிக்கும்; உடம்பைக் குளிரப்பண்ணும்; உற்சாகத்தைத்தரும்; உயிரின் உறைவிடமாகிய உடம்பினைப் பாதுகாக்கும்; மாக்கல்வமூலியின் மகிமை இவை என்று முடிவு காண்க.

## பல்லிய மெழுப்பி

52 பித்தமுத லான பிணியைக் கருவறுக்குஞ்
சத்தையெனக் கட்டுஞ் சரக்குகளை — வித்தையல
வல்லமையே மன்னனுக்கும் வாய்த்த துணையாகும்
பல்லியமெ ழுப்பிதா பம்.

(கு - ரை) பல்லிய மெழுப்பி - கிலு கிலுப்பை; தாபம் பித்து முதலான நோய்களை வேரோடழிக்கும்; இரசம் பாஷாணம் உப்பு முதலிய சரக்குகளை அவற்றின் சத்து நீங்காமல் கட்டும்; வாதத் துக்குற்ற துணையாம்; தாபம் - எரிச்சல்; வித்தையலவல்லமையே - மாயவித்தையன்று கிலு கிலுப்பையின் ஆற்றலேயாம் என்க.

## தபனனட்பு

53 சலதோஷங் காமாலை சத்திவிக்க லான
பலதோஷங் கட்குமிடர் பண்ணுங் — கலையாக்
கபமுரியச் சாடுமிகு காயசித்தி யாகும்
தபனனட் பாகுமம்பு சம்.

(கு - ரை) தபனனன் நட்பு - தாமரை; நீர்க்கோவை காமாலை, வாந்தி, விக்கல் முதற் பல குற்றங்களுக்கும் அவை நீங்கும்படி அழித்தலைச் செய்யும்; நீங்காத கபக்கட்டை முரியச் செய்யும்; நல்ல காயகற்பமுமாகும்; அம்புசம் - தாமரை.

## தந்தி

54 வேர்ப்புறணி யாலுடற்கு மேன்மை யளித்திடலால்
தாற்பொடியாற் சுக்கிலத்தைத் தம்பித்து - வேர்த்திடமெய்
முந்திடவை யாதுரத்தை மூட்டுதலா லெஞ்ஞான்றுந்
தந்தியர சானவா தம்.

(கு - ரை) தந்தி - அத்தி; அத்தி தன்வேரின் தோலால் உடலுக்கு நல்ல ஊற்றத்தைத் தரும். அத்தியின் காயை உலர்த்திப் பொடித்து உபயோகிக்க சுக்கிலத்தைக் கட்டும். உடம்பில் வேர்வை முதலிய உஷ்ண நோய்கள் தாக்காது பாதுகாக்கும். எப்பொழுதும் வாதத்தை மீறவும் குறையவும் விடாமல் தன்னிலையில் நிறுத்தி அவ்வாதத்தினது தன்மையைத் தானேன்று கொண்டு நிற்குமென்பதாம்; தால் - அத்திக்காய்.

## தறிமுதற் கிரிகை

55 காயத்தைக் காயாது காங்கை யகற்றிடலால்
பாயச் சலிலம் பரவுதலால் - வாயிற்
சுபமா யமுதுறலாற் சோகந் தெறலாற்
கபமே தறிமுதற் கிரிகை.

(கு - ரை) 1. தறிமுதற் கிரிகை - பருத்தி; (ஆகுபெயர்) உடம்பை வெப்ப மிகாமற் சூட்டைத் தணித்தும், உமிழ்நீர் ஊறிப் பரவுமாறு வாயினிடத்து அமிழ்த ஊற்றுகப் பெருகச் செய்தும், களைப்பையும் கபத்தையும் நீங்க அழித்தும் உடலைப் பாதுகாக்கும்

என்பதாம். 2. தறிமுதற்கிரிகை - நெய்தல்; (தறியின் தன்மை யான செயல் செய்தல் தொழில்) என்று பொருள் கூறி, மேலு ரைத்தவற்றை அப்பொருளுக் கேற்பக் கொள்ளலுமாம்; நெய்தல் - நெசவுச் தொழில், நெய்தல் கொடி.

## ஐமுகனுர் வெற்றி

56 மீளாக் கபப்பிணியை மேலிட்ட சன்னிகளைத்
தூளாக்கித் தூரத் துரத்தலாற் — கேள்நசியக்
கைமுறையா னீரைக் கழற்றலாற் காய்ந்திடலால்
ஐமுகனுர் வெற்றிபித்த மாம்.

(கு - ரை) ஐம்முகனுர்வெற்றி - தும்பை; ஐம்முகன் - சிவ பெருமான்; தும்பைமலர் பித்தத்தை மிகச் செய்யும்; நசியக்கை முறைச்செய்லால் நீர்க் கோவையை நீக்கி, நீரேற்றத்தை வரளச் செய்து நீங்காத கப நோயையும் சன்னியாகிய நோய்களையும் அணுக வொட்டாமல் விலக்கும் என்பதாம்.

## சுயோதனன் மாலை

57 நேத்திர வாயுகம்மு நேத்திரப்புண் வெட்டருகல்
நேத்திரங்க பாலசன்னி நீச வினைக் — கோத்திரங்கள்
மாள நொறுக்குதலால் வாகடர்கைக் கேற்றவச்ர
வாளாஞ் சுயோதனன்மா லை.

(கு - ரை) சுயோதன்மாலை — நந்தியாவட்டப்பூ; சுயோ தனன் - துரியோதனன்; நந்தியா வர்த்த மலர்ச்சாறு கண்ணைப் பற்றிய வாயு, கம்மல், புண், புழுவெட்டு, நீரருகல், கபாலசன்னி ஆகிய நோய் வகைகளை நீக்கி நலமாக்குதலால் இது மருத்துவர்க்கு வயிர வாள்போல்வதாம்.

## இந்திரன்பார்

58 ஓயாத நோய்க்கடலை யோடி யுரிஞ்சுதலால்
வீயா தறிவை விளக்குதலால் — தீயான
மந்திரியைத் தேற்றுதலால் மன்னவனை யாற்றுதலால்
இந்திரன்பா ரென்பதெரி யே.

(கு - ரை) இந்திரன் பார் - மருதநிலம்; மருதநிலத்தில் வாழ்வதனல், முக்குற்றங்களாலுண்டாம் தீராத நோய்க் கூட்டங்களை எரிபோல் நீக்கி, அறிவைத் தெளிவடையச் செய்யும் என்பதாம்.

## தராபதி

59 சேத்துமத்தை மாட்டித் தினமு மிறையாகி
யாத்துமத்தை யோம்பி யடரலால் — நீத்த
விரேதிஸ்சப்பந் தித்திடலா லெப்படிப்பார்த் தாலும்
தராபதிசூ தாகியபித் தம்.

(கு - ரை) தராபதி - பூவரசு; சிலேட்டுமத்தின் வன்மையை அடக்கி ஒடுக்குதலால் உயிருக்குத் தலைமைதாகுகிக் காத்தலினுலும், நீத்துப்போன இந்திரியத்தையிறுகச் செய்து உடம்பை வலிமையாக்குதலாலும் பூவரசு தந்திர மிக்க மந்திரியாகிய பித்தத்தன்மையுடையதாம்; ஆத்துமம் - உயிர்; விரேதிசு - இந்திரியம்; சூது - ஈண்டு நுண்ணறிவின்மேற்று; எப்படிப் பார்த்தாலும் - எவ்வகையால் ஆராயினும்; தரை + பதி, தராபதி; தீர்க்கசந்தி; தரை-பூ; பதி - அரசு.

## வல்லி

60 மெய்யிளைப்பை மாற்றி மிகுபலத்தை நல்குதலால்
ஐயுரத்தை யுள்ளாக்கி யாளுதலால் - வையகத்தில்
நல்லரச பாஷாண ரத்னகுரு வாதலினுல்
வல்லிமருத் தாமன்ன வன்.

( கு - ரை) வல்லி - வெற்றிலை; உலகத்தில் நன்மை தரும் இரசம் பாஷாணம் இரத்தின முதலிய எல்லாவற்றிற்கும் குருவாதலினுலும், உடம்பின் மெலிவை நீக்கி மிக்கவலிமையைத் தருதலினுலும், சேத்துமத்தின் சேட்டையை யடக்கி அதனைத் தன்னிலையில் நிறுத்துதலாலும் வல்லியாகிய வெற்றிலைக் கொடி வாதத்துக் குற்றதுணையாய் அரசவியல்புடையதாம்; மருத்து - வாயு, வாதம்

## அரமகள்

61 வங்கத்தை யெல்லாம் வளைத்திடலா லுண்டவரை
அங்கத்தைப் பொன்போ லணைத்திடலாற் - றுங்கி

யுரமிகவிந் தைப்பெருக்கி யுண்மை தரலால்
அரமகளைத் தேயுவென லாம்.

(கு - ரை) அரமகள் - அரம்பை, வாழை; இருவகை வங்கத்தையும் கட்டுப் படுத்தியும், தன்னைப்பாகம் செய்து புசித்தவர் உடம்பைப் பொன் போலச் செய்தும், ஆண்மை வலிமையடையுமாறு விந்துவைப் பெருக்கி மெய்மையாகப் போகவிச்சையையளித்தும் நலம்பயத்தலால் வாழையைத் தீக்கடவுள் போற்கொள்ளத்தகும்; வாழையின் இலை, காய், கனி, தண்டு, கிழங்கு என்பன உணவுக் குபயோகமாதல் வெளிப்படை.

## காரை

62 ஆன நிலாவாரை யாதார மாக்குவது
கானநில வாவாரைக் கற்பகமே — தானதுகேள்
வேராதி யாவற்றும் வேந்த்ர மிளகுசுக்குக்
காரையிலை கற்புளியோ கம்.

(கு - ரை) காரை - காரை; நிலாவாரை காட்டு நிலாவாரையாகிய'வற்றின் வேருடன் பிரப்பங்கிழங்கு மிளகு சுக்கு காரையிலை உப்புக்கல் புளி ஆகியவற்றைக் கூட்டியரைத்துண்ணின் நல்ல கற்பமருந்தாம்.

## வல்லியம்

63 நற்கை வசமா நவலோக முஞ்சூலை
நிற்கக் கயத்தை நிராகரிக்கும் — வற்கமென்ன
சொல்லுவேன் பண்டிதர்க்குச் சூரச் சிலிமுகமாம்
வல்லியத்தி னீரல்மகி மை.

(கு - ரை) வல்லியம் - புலி; ஒன்பது என்னும் உலோகங்களும் மருந்தாக்க நன்கு கைவசமாகும்; சூலை, கயம் ஆகிய நோய்களை நீக்கும்படி விலக்கும்; இம் முறைமையால் மருத்துவர்க்குக் கூரிய அம்பு போல்வதாம்; எனவே புலியின் ஈரலின் மகிமையை எவ்வகையாலுயர்வு படுத்திச் சொல்லுவேன்; கயம் - க்ஷயம்; சிலிமுகம் - அம்பு.

## இரலைமருப்பு

64 சாடுவார் வாகடர்வெண் சாம்பராய்த் தேனுடன் கை
யாடுவார் கண்டா வவிழ்தமாய் — நாடி
அரலைமுதற் கொப்புளத்தை யாச்சியத்திற் காய்ச்சி
இரலைமருப் பாற்பிணியை யே.

(கு - ரை) இரலை மருப்பு - மான்கொம்பு; மான்கொம்பு பற்பத்தை நெய்யில் காய்ச்சி, கழலை கொப்புளம் முதலியநோய்களைத் தீர்ப்பர் மருத்துவர்; தேனுடன் கலந்து கண்டா விழ்தமாகக் கையாள்வர்; நாடி - ஆராய்ந்து.

## சசம்

65 சாரத்தைக் காண்பார் சடலத்தை யாதரிப்பார்
வீரத்தை நன்ருய் விளக்குவார்—பூர
விசையையவிப் பாராயுள் வேதியர்க ளானோர்
சசவிறைச்சி யாற்காரத் தை.

(கு - ரை) சசம் - முயல்; மருத்துவர்கள் உப்பை முடிப்பர்; உடம்பை நன்கு வளரச் செய்வர்; உடம்பின் வலிமையை விளங்கச் செய்வர்; இரச கற்பூரத்தின் வேகத்தை மாற்றுவர் முயலின் இறைச்சியைக் கொண்டு.

## மறி

66 போலத் தயிலத்தைப் பொய்யாமல் வைத்தெடுத்து
மேலிற் றடவி விதரணையாய்ப்—பாலிற்
பிறியச்செய் பேர்பல பெந்தமா முந்து
மறியெச்சத் தாலீயா மை.

(கு - ரை) மறியெச்சம்—ஆட்டுச் சாணம்; ஆட்டின் சாணத்தால் தயிலத்தை மைபோல வீண் போகாமல் காய்ச்சி யெடுத்து உடம்பிற் பூசி முறையாகப் பாலிற் கலந்து உள்ளுக்குக் கொள்ளக் கொடுத்து வலிமையை முந்துறவாக்கிக் கொள்க; பாலிற்பிறியச் செய்-பூசு மருந்தின் வேருகப் பாலிற் கலந்து உட்கொள்.

## தாசோக நீர்

67 தாசோக நீரினிற் றப்பாம லூறவைத்து
மாச வரைக்குமறு மாசத்திற்—போசனகு
டாரி மிளகோ டயத்தை யரைத்துருட்டிக்
காசமறு நீரிலுண்டக் கால்.

(கு - ரை) தாசோக நீர் - ஒட்டகத்தின் சிறுநீர்; அரப் பொடியை சீரகம் மிளகு சேர்த்து ஒட்டகத்தின் சிறு நீரில் ஒரு மாதம் வரை யூறவைத்து மறு மாதத்தில் மேற்படி நீர்விட்ட ரைத் துருட்டித் தண்ணீரோடுண்டால் காசரோகம் நீங்குமென்ப தாம்; போசனகுடாரி - சீரகம்.

## எண்கு

68 காடியி னூறக் கடிப்பகையுஞ் சேர்த்தரைத்துப்
போட ரவியிற் புடம்போல—வாடியபின்
உண்கடுநீ ரிற்புனலி லுப்புசங்கா மாலையறும்
எண்கினது பிச்சுவசை யில்.

(கு - ரை) எண்கு - கரடி; கரடியின் பித்தைக் காடியிலூற வைத்துப் பின் அதனுடன் வேம்பு சேர்த்தரைத்து வெயிலி லுலர்த்தி நன்கு சுருளக் காய்ந்தபின் கடுக்காய் நீரிலேனும் தண் ணீரிலேனும் கொள்ள உப்புசமுங் காமாலையுந் தீரும்; வசையில்- குற்றமில்லை; சுடுநீரிலுப்புசத்திற்கும், தண்ணீரிற் காமாலைக்குமாக நிரனிறையாகக் கொள்க.

## வருடை

69 பட்டையினி லூட்டிப் படிகார மிந்துப்பும்
ஒட்டிரட்டி யாகவரைத் துண்டைசெய்தி—ரட்டைப்
பிரமிரசந் தேனிற் பெரும்பாடு போகும்
வருடையுதி ரத்தைநா வல்.

(கு - ரை) வருடை - குறும்பாடு, வரையாடு; வரையாட்டின் இரத்தத்தை நாவற் பட்டையிற் சுவற ஊட்டிப் படிகாரம் ஒரு பங்கும் இந்துப்பு இரண்டு பங்குமாகச் சேர்த்து அரைத்து

உருண்டை செய்து தேன் கலந்த இரட்டைப் பிரமிச்சாற்றி லுட்கொள்ளப் பெரும்பாடு தீரும்.

## ஆமாப்பால்

70 பேயனைய நோயும் பிரமையுந்தே கத்திளைப்பும்
காயசித்தி யுண்டாகும் கண்குளிரும்—வாயசதி
போமாப் பெருமைவரும் பொல்லாங்கெல் லாமகலும்
ஆமாப்பா லாலே யறும்.

(கு - ரை) ஆமாப்பால் - காட்டுப்பசுவின் பால்; ஆமாவின் பாலினல் பேய்போ லாட்டும் பிணிகளும் பிரமையும் உடலிளைப் பும் தீரும்; காயசித்தியாகும்; கண் குளிர்ச்சியடையும்; வாயசதி போகும்; தீமைகளெல்லாமகலும்; பெருமை மிக வுண்டாம்.

## தந்தாவளம்

71 குட்டம் பதினெட்டும் குஞ்சரத்தின் ரேற்சொறியும்
கட்டம் பெரிதாங் கயநோயும்—பட்டவுடன்
செந்தீமுன் பஞ்செனவே சீந்திலுப் புடன்கல்ந்த
தந்தா வளநீர்க்குச் சாம்.

(கு - ரை) தந்தாவளம் - யானை; சீந்திலுப்புக் கலந்த யானை யின் நீரால் பதினெண் வகைக் குட்டங்களும், யானைத்தோல் சொறியும் துன்பந்தரும் இளைப்பு நோயும் தீமுன் எதிர்பட்ட பஞ்சாகும்.

## இவுளி

72 கட்டு மதையுங் கடிப்பகையை யும்பனையின்
வட்டு மரிசனமு மத்தித்து—வட்டத்
துவரை யளவுருட்டித் துய்க்கவை வாதம்போம்
இவுளிநுரை யிந்துப்பை யே.

(கு - ரை) இவுளி - குதிரை; குதிரையின் வாயூறல் நுரை இந்துப்பைக் கட்டும்; கட்டிய இந்துப்பையும் கடுகையுங் பனை வட்டும் மஞ்சளும் சேர்த்தரைத்துத் துவரையளவாக வுருட்டி யுண்பிக்க வாத நோய் நீங்கும்.

## மயிடச் சுதை

73 மிகவுண்டாங் காயத்தை மேருவெனச் செய்யும்
இகலுண்டா நோய்களுக்கெந் நாளும்—பகுதி
யையிடைச் சகியாமை யாக்குவிக்கு நாடின்
மையிடச் சுதையாலே மைந்து.

(கு-ரை) மயிடச் சுதை - எருமைப்பால்; எருமைப் பாலாலே வலிமை மிக வுண்டாகும்; உடம்பை மலைபோல் வளரச் செய்யும்; நோய்களுக் கெந்நாளும் இகலுண்டாம்; ஆராயின் வாத நோய் களினாலுண்டாம் வருத்தம் சகிக்க முடியாவகை ஆக்கும் என்க; ஐ- வாதம்.

## மற்கடம்

74 என்னசொல்வேன் முன்னே யிரதத்தைப் பந்திக்குஞ்
சொன்னமுத லானதைச் சூரணிக்கும்—தின்னவற்கு
நற்கடத்தைக் காப்பாற்று நாதாக்க ளேயறிவார்
மற்கடத்தின் விந்துமகி மை.

(கு-ரை) மற்கடம் - குரங்கு; குரங்கினது விந்துவானது இரசத்தைக் கட்டும், பொன் முதலிய உலோகங்களைப் பற்பமாக்க வுதவும், உட்கொண்டவர்க்கு நல்ல உடம்பைப் பாதுகாக்கும். ஆகவே குரங்கின் விந்தின் பெருமையை என்னென்று புகழ்வேன் யான்; சித்தர் முனிவராகிய பெரியோரே யறிவார்கள்.

## ஆ

75 ஐமுகருக் கேதெரியு மைவகையாற் செய்புனிதங்
கைமுறைமெய் வாகடர்க்குங் காணுமே—நைமுறைமெய்
மாவின்ப மெய்த வளர்த்தலதின் பாலே
யாவின் பெருமையை யா.

(கு-ரை) ஆ - பசு; நல்லாவின்பால் வலிகுன்றி யிளைப் படைந்த உடம்பு பெருமளவில் வளம் பெற்று மகிழ்வுற வளர்த்த லால் அப்பாலையுதவும் பசுவின் பெருமை ஐந்து திருமுகங்களை யுடைய சிவனுருக்கே தெரியும்; அன்றியும், ஐவகையான பால்

தயிர் நெய் சிறுநீர் சாணம் என்னும் பஞ்சகௌவியத்தால் ஏற்படும் புனிதத் தன்மையை மருத்துவ நூல் வல்ல வயித்தியரே யறிவார்கள்.

## உழை

76 மான்கறியி னலக்கினி மாந்தமறு மென்றுமுறை
நான்கரிய வேத நவிற்றுகையால்—ஊன்கொள்
விழைவுடையோ ராலாயுள் வேதியர்சொல் லாலே
யுழையாலே நன்மையடை யும்.

(கு - ரை) உழை-மான்; மானிறைச்சியால் அக்கினி மாந்தந் தீருமென்று நான்காகிய வேதங்கள் கூறுதலாலும், ஊன் விரும்பி யுண்போர் உரைக்கும் அனுபவமொழியாலும் மருத்துவர் ஆராய்ச்சியால் கண்ட அறிவுரையாலும் மேலே கூறிய மானின் இறைச்சியால் நன்மையுண்டாமென்று கடைப்பிடியாகக் கொள்ளலாம்; இதில் வேதம் கூறுகை சுருதி, ஊனுண்போர் கூற்று அனுபவம், மருத்துவர் மொழி உத்தி; ஆகவே சுருதி யுத்தி அனுபவம் மூன்றும் கூறியவாறு காண்க.

## தடி

77 திண்மையாங் கல்போற் றிடமா மிடைவலிமை
வண்மையா மிந்திரியம் வாய்க்கவே — யுண்மை
படியிற் கழறுமுறை பண்டிதர்க்குத் தோற்றுந்
தடிமெய்த் தடியாற் றடி.

(கு - ரை) தடி - உடும்பு; உடும்பினூனல் உடல் கல்லைப் போல் வலிமையுடைய தாகும், இடைக்கு வன்மையுண்டாம், இந்திரியம் வளம்பெறப் பெருகும்; இங்ஙனம் வாய்ப்பான உண்மையை உலகினர்க்கு வற்புறுத்திக் கூறும் முறை மருத்துவ நூல் வல்ல வயித்தியர்க்கே விளங்கும்; தடிமெய்த் தடியாற்றடி திண்மையாம் என்று கூட்டி உடும்பின் ஊனல் உடம்பு திண்மையாம் என்று பொருள் காண்க.

## சம்பு

78 ஆசன ரூடி யதுவே பவுத்திரமாம்
பேசு மதுபறக்கப் பேதிக்கும் - மோசமில்லை

வெம்புகைதந் தாற்றணலால் வேம்பின் புறணியுடன்
சம்பு வெனுநரியெச் சம்.

(கு - ரை) சம்பு - நரி; நரிமலத்துடன் வேப்பம்பட்டையுஞ் சேரக்கொண்டு தணலிலிட்டு வெவ்விய புகையையூட்டினுல் ஆசன ரூடி யென்னும் பவுத்திரம் வற்றிக் காயும்படி செய்யும்; இங்ஙனம் செய்யின் கெடுதியொன்றும் வாராதென்க.

## சீயம்

79 மாறி யிரணங்கள் வற்றி வலியடங்கித்
தேறிக் குணமாகுந் தேகத்தில் — ஊறிரத்தம்
பாய வெளிருட்டின் பாலா லரைத்திட்ட
சீயக் கொடியாலே சீ.

(கு - ரை) சீயம் - சீயக்கொடி; வெள்ளாட்டின் பாலிலரைத்த சீயக்கொடியால், இரணங்கள் சீமாறி, வலிநீங்கி புண்காய்ந்து உடம்பில் நல்ல இரத்தம் பெருகுவதால் தேறிக் குணமாகும்.

## மரைரோமம்

80 நன்மணிக ளுக்குறவாய் நாளுந் தொழில் காட்டும்
புன்மைகளுன் டானதெல்லாம் போக்குமே — தின்முன்
நரரா னவராவார் நாகரெனச் செய்யும்
மரை ரோம மென்னு மயிர்.

கு - ரை) மரைரோமம் - மரைமான்மயிர்; மரையின் உரோ மத்தினுலே முடிக்கப்பட்ட மருந்துகள் நாள்தோறும் நோய்நீக்கும் தொழிலைச் செய்யும், துன்பங்களையெல்லாந் தீர்க்கும்; நரரான மனிதர்களை தேவர்களைப் போல் உட்கொண்ட அளவிலே யாக்கு மென்க.

## சொல்

81 காயசித்தி யுண்டாக்கிக் கைத்தருசி யைப்போக்கி
ஆயச மெல்லா மடக்குதலா — லாயுள்விதி
வல்லவரே யாய்ந்து வகுத்தா ரெனக்குறுதி
சொல்லுடலுக் கானதென்று சொல்.

(கு - ரை) சொல் - நெல்; நெல்லானது காயசித்தியைத்தந்து கைப்புடைய அருசியைப் போக்கும்; ஆயாசத்தை யெல்லா மடக்கும்; மருத்துவ நூல்வல்ல வயித்தியர் ஆராய்ந்து எனக்குறுதி மொழியாகக் கூறினர்கள்; எனவே சொல்லாகிய நெல் உடலுக் குறுதியான தென்று சொல்லுக.

## தாசோகம்

82 சுக்கிலத்தைத் தம்பித்துச் சோரா துயிர்நிலையைப்
பொக்குவா ராமற் புரக்குமே — பக்குவமாய்
ஆசோ பிணியை யடரா தகற்றியொரு
தாசோ கக்கீரந் தான்.

(கு - ரை) தாசோகம் - ஒட்டகம்; ஒட்டகத்தின் பால் இளைப்பைத்தரும் நோய்களை வராமல் தடுத்து, இந்திரியத்தை யிறுகச் செய்து உடம்பைத் தளராமல் பக்குவமாய்ப் பாதுகாக்கும். பொக்கு - உள்ளீடில்லாதது; சீரம் - பால்; உயிர்நிலை - உடம்பு.

## ஆமாத்தியர்

83 தெய்வப் பரிகாரி செய்முறைபோற் றப்பாதே
உய்வ தறிந்து வுபாயமாய்க் — கையவிழ்தம்
நோமாத்ர மோய நுகர்வித் தறிவாரே
யாமாத்தி யர்வயித்ய ராம்.

(கு - ரை) ஆமாத்தியர்-மருத்துவர்; தேவமருத்துவர் செய்யு முறைபோல் தப்பாதவகையால் நோய் நீக்கிப்பிழைக்கும் உபாயத்தை அறிந்து கைபாகமான மருந்துகளை நோய் மட்டும் (உடம்பிற்கு ஊறு வராமல்) நீங்கும்படி உண்ணச் செய்து வயித்தியம் புரிவோரே மருத்துவராவார்.

## புல்லம்

84 மால்மனைக ளங்காகும் வல்லமையாம் பாஷாண
மேல்வருமு லோகமெல்லாம் வெண்மையாம் — நூல் வலிமை
சொல்லச்சி லாக்கியமாஞ் சோதிமய மாகும்
புல்லச் சிறுநீராற் பொன்.

(கு - ரை) புல்லம் - எருது; இடபத்தின் நீரினல் பொன்னும் தாளகமும் களங்கு ஆகும்; வீரியமுண்டாம்; பாஷாணங்களும் உலோகங்களும் பற்பமாகும்; இம்முறை கூறும் மருத்துவ நூலின் திறங் கூறின் மேன்மையுடையதாம் ஒளி மிகுதியுறுவதாம்.

## மார்ச்சாலம்

85 நாள்வளரு மெய்க்கு நலமுண்டா நாடாது
பாள்வறிய நோய்கள் பயமில்லை — யாள்வரிசை
யாற்சால மேன்மை யமைய மிகையுண்டா
மாற்சால பீசத்தால் வாழ்வு.

(கு - ரை) மாற்சாலபீசம் - புனுகு; புனுகைக் கையாள்கின்ற வரிசையால் மிகமேன்மையுண்டாம்; வாழ்நாள் வளரும்; உடம்பிற்கு நன்மையுண்டாம்; பாழான துன்பந்தரும் நோய்கள் அணுகாவாம்; ஆகவே பயமென்பதில்லையாம்.

## ஞமலி

86 கங்களங்கா மம்முறையாற் காணலா மெப்பொருளு
மிங்கிதமா யாரு மெளிதிலே — யெங்கள்
உமைத னருளா லுலகி லறிய
ஞமலி மலத்தாலே நா.

(கு - ரை) ஞமலி - மயில்; எம்மையாளும் உமையம்மைதிருவருளாலே, மயில் மலத்தினல் நாகங்களங்காகும்; அந்த முறையாலே எப்பொருளும் தமதாகவடைய எளிதாகப் பெறலாம்; உலகிலுள்ளார் யாவரு மொப்புமாறு என்க; நாகங்களங்காம் என்க; கடையுமுதலுங்கூட்டி முடிக்க.

## அலவன்

87 சுன்னமெனச் சொன்னந் துலங்கு மதினலே
மன்னு பிணிகளெலா மாறுமே — மன்னு
பலவன் மையுமடரும் பாரி லுடற்கே
அலவன் கருவாலே யாம்.

(கு - ரை) அலவன் - நண்டு; நண்டின் சினையினலே தங்கம் பற்பமாம்; அப்பற்பத்தால் நாட்பட்ட நோய்களெல்லாம்

தீரும்; பொருந்திய பலவகை வலிமைகளும் உலகினுள்ளார்க்கு உண்டாகும்; சுன்னம் - பற்பம்; கரு - சினை.

### பரிகாரி

88 வெந்த பிசிதத்தை வேகாப் பிசிதத்தில்
நுந்துதல்போ லூனை நுகர்வார்க்குச்—செந்துகள்மேற்
கண்ணோட்ட மில்லாக் கதைபோற் பொருளாசை
எண்ணுபரி காரிகளுக் கில்.

(கு - ரை) பரிகாரி - மருத்துவன்; சமைத்த வூனைத் தம் மாமிசம் பெருக்க வாய்வழி வயிற்றினுள் புக வடைப்பவர்க்குப் பிற வுயிர்ப் பிராணிகள் மேற் கண்ணோட்டம் (இரக்கம்) செல்லாத வாறுபோல், பொருள்மேல் இச்சையுடைய மருத்துவர்க்கும் மருத் துவத்திலும் பிணியாளர்பாலும் ஆர்வமும் இரக்கமுமிலவாம்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்."

என்ற பொய்யா மொழி இச்செய்யுளின் முற்பகுதிக்குக் காட் டாதலறிக.

### ஊன்

89 முக்கிரட்டை முன்னை முசுட்டை தவசியிலை
காக்கிரட்டை யெய்கோல நாகணவா—யாக்குகறி
நான்குமுத லுத்தமமா நாடிலது பத்தியமாம்
ஊன்கருதி ரண்டுமமை யும்.

(கு - ரை) தவசியிலை - தவசி முருங்கை இலை; எய் - முள்ளம் பன்றி; கோலம் - பன்றி; மூக்கிரட்டை முதல் நான்கு இலைக்கறி களும் உத்தமம், இவை பத்தியத்திற்காம். நாக்கிரட்டை முதலிய ஊன்கறி வகைகளும் பத்தியமாய் அமையும்.

### புசங்கம்

90 சேத்துமத்தை வாட்டுமது செய்வதுகே ளப்பொருளை
மாத்திரம்பூ மிக்குளிட்டு மண்ணாக்கிப்—பாத்தி
பொசுங்கு மதில்விளைந்த பூவரசின் கொட்டை
புசங்கத்தின் பிச்சுநமன் போல்.

(கு - ரை) புசங்கம் - பாம்பு; பாம்பின் பித்தை மண்ணிற் புதைத்து அது மட்கி மண்ணோடு கலந்தபின் அப்பித்தின் வெப் பத்தால் அவ்விடத்து மண்ணும் வெப்பமடைந்த விடத்து, பூவரச மரத்தை நட்டு வளரச் செய்து அம்மரத்தினின்றுண்டாம் பூவினுள் ளிருக்கும் காயைப் பக்குவம் செய்து உபயோகிப்பதனால், நமன் உயிர்களை வாட்டுதல் போல் சேத்தும நோய்களை அதுவாட்டு மென்பதாம்.

## ஆண்டலை

91 இரும்பா னதுகளங்க மென்பதி னாலாகும்
பெரும்பார் புகழும் பெருமை—திரும்பவுங்கேள்
வேண்டியதெல் லாங்கிடைக்கு மெய்யாக வோதுமுறை
ஆண்டலையண் டக்கருவா லாம்.

(கு - ரை) ஆண்டலை - கோழி; கோழி முட்டையின் கருவினால் இரும்பு களங்காகும்; அக்களங்கினால் பெரிய உலகிலுள்ளார் புகழும் பெருமையுண்டாகும்; மேலும் வேண்டிய தெல்லாம் மெய் யாக வுண்டாம்; இவை முறைமையாம்.

## வன்னி

92 உண்டாக்குங் கந்தகத்தை யுள்ள படிதயிலம்
பண்டாம் பிணியைப் பரிகரிக்கும்—கண்டமுறை
சொன்னார் வயித்தியர்கள் தோற்றமிம் மாத்திரமே
வன்னியிற் கென்னமகி மை.

(கு - ரை) வன்னி - நெருப்பு; தீயினுதவி கொண்டு செய்த கந்தகத்தின் தயிலம் பழைய நோய்களை யெல்லாம் போக்கும்; மெய்யாகக் கண்ட கை முறையை மருத்துவர் கூறியுள்ளனர், இம்முறையின் உற்பத்தி இங்ஙனமானால் இதன் காரணமாகிய வன்னியின் பெருமைதானென்னே என்பதாம்; ஈண்டு வன்னி என வரும் சொற்பொருள் இலிங்கம், வன்னிமரம் என வேறு பொருள்களையும் தருமாதலால் அவற்றிற்கு இம்முறை ஒவ்வுமேல் ஏற்றவாறு கொள்க.

## பாறு

93 சேத்துமத்தின் பங்காகிச் செய்யுமிகல் வாதத்தை
மாத்திரங் கொல்ல மருட்டுமே—மூத்திரத்தில்

ஊறு வசலீவிரை யுண்டையிள நீர்கொண்டு
பாறென்று சொல்லும் பருந்து.

(கு - ரை) பாறு - பருந்து; பாறு என்னும் பருந்தின் மூத்திரத்திலூறிய வசலீ விரையை அரைத்துருட்டிய உருண்டையை இளநீரிற் கொள்ள, சேத்துமத்துடன் சேர்ந்து நோய்த் துன்பம் செய்யும் வாத நோயை மாத்திரம் அழித்தொழிக்கும் என்பதாம்.

## போத்து

94 இல்லாமற் றேவியுர மென்ப துலகத்தில்
உல்லாச மாகி யுலவுமே—சொல்லாண்மைச்
சாத்திரிகள் கைவரிசை தப்பாம லெப்பொழுதும்
போத்தின் சிறையாற் புகை.

(கு - ரை) போத்து - மயில்; மயிலிறகினல் கந்தகம் கட்டி நெருப்புக்கு நிற்கும் புகையாது; சொல்வன்மையுடைய மருத்துவரின் கைமுறை வன்மை தப்பாமலெப்பொழுதும் மேன்மையுடன் திகழும்.

## காரண்டம்

95 கண்ணெருவை யுண்ட கரிசலாங் கண்ணிவிரை
வ்ண்ணம காத்தயிலம் வைத்திறக்கிப் — பண்ணுமுறை
ஏரண்ட மூசை யுருகையிற்பெய் நீர்வாங்கும்
காரண்டத் தால்வெள்வங் கம்.

(கு - ரை) காரண்டம் - அண்டங்காக்கை.

## ஞிமிறு

96 கொப்பரைத் தேங்காய்நெய் கொளுமுதற்குக் கால்வாசி
ஒப்ப வருடி யுபாயமாய் — வைப்பக்
கமைகொள் பொடிதூவக் கட்டு மிரதம்
ஞிமிறி னிறகுடனே நீ.

(கு - ரை) ஞிமிறு - வண்டு; கொப்பரைத் தேங்காய்-மரத்திலேயே முற்றி நீர் வற்றிய தேங்காய்; இதன் எண்ணெயே இம்முறைக் கேற்றதாமென்க; வருடி - தடவி; உபாயம் - சூட்சி.

## கொடி

97 சூதத்தைச் சூதாகத் தோழமைபோற் பந்திக்க
வீதத்தை நன்றாய் விளம்புவேன் — சூதத்
தொடிக்குப் பதின்மடங்கு தும்பியத ளுண்ட
கொடிமா ரெலும்புநிணங் கொண்டு.

(கு - ரை) கொடி - காக்கை; தும்பி என்னும் வண்டின் மேற்றோலைச் சிறகுடனே காக்கையை உண்ணச்செய்து அவ்வா றுண்ட காக்கையின் மாரெலும்புடன் நிணத்தை, ஒருபலம் இரசத் திற்குப் பத்துப்பலமாகக் கொண்டுகைமுறைசெய்ய இரசம்கட்டும்.

## ஓதி

98 தப்பாமற் கட்டவிர தத்தை யொருநொடியில்
இப்பா ரறிய வியம்புவேன் — உப்புவளர்
மேதினியின் பூவுடனே மேவு கருவான
ஓதி முதுகிலமை யும்.

(கு - ரை) ஓதி - ஓந்தி; உப்புவளர் மேதினியின்பூ-பூநீறு; கரு வான ஓதி - சூல்கொண்ட பச்சோந்தி; ஓதிமுதுகு-ஓந்தியின்முதுகி லுள்ள சிறுமுள்போன்ற பிசிர்.

## பூவை

99 வங்கமெனு மீயத்தில் மல்கியநீர் பாறவெண்
தங்க மெனவே தயங்குமே — சங்கிலேயில்
மேவுரச முந்துடியும் விட்டரைத்து மத்தித்த
பூவைமுட்டை யின்கருவாற் போம்.

(கு - ரை) பூவை - நாகணவாய்ப்புள்; ஏலமும் சங்கிலேச் சாறும் விட்டரைத்த நாகணவாய் முட்டைக் கருவால் வெள்ளீயத் தின் நீர் வாங்கும்; வாங்கவே வெள்ளீயம் சுத்தவெள்ளியைப் போல் ஒளிவிட்டுத் துலங்கும்.

## பிணிவதனம்

100 நீர்வாங்கி வெள்ளை நிறத்தைக் கறுப்பாக்கி
ஏர்வாங்கின் வெண்பொனு மீயமே — சாரங்

தணிவிம்பக் காயுடனுஞ் சாம்பலாய் வந்த
பிணிவதனத் தின்சிறகாற் பின்.

(கு - ரை) பிணிவதனம் - மயில்; விம்பக்காய் - கோவைக் காய்.

## கோகிலம்

101 ஆமிரதஞ் சுன்ன மயமா மரிதாரம்
ஆமலகச் சாற்றி லரைத்தூட்டித்—தாமுமதில்
ஆகியபி னேய மதிலெடுத்து மேற்றெறிக்கக்
கோகிலப்பிச் சாலே குரு.

(கு - ரை) கோகிலம் - குயில்; அரிதாரம் - தாளகம், இரதம்-இரசம், சுன்னம்-சுண்ணம்; ஆமலகம்-நெல்லி; நேயம்-தைலம், கோகிலப்பிச்சு - குயிலின் பித்து, குருஆம் இரதம் என்று கூட்டுக.

## சில்லை

102 பொன்னு மிரும்புக்கெப் போது மதிகாரம்
பின்னு முறைமை பிறழாமல்—சொன்னேன்கேள்
வல்லமையா மந்த மருந்தா லுடற்றிரமாஞ்
சில்லையா லுண்டாகுஞ் சீர்.

(கு - ரை) சில்லை-சிவல்; இரும்பை மருந்தாக்க உதவும், அம் மருந்தாலுடலுர முண்டாகும். முறைதவருமல் செய்தால். நல்ல ஆற்றல் பெற்ற அம்மருந்தால் உடல்வன்மை யுண்டாம்.

## ஊர்

103 அப்பொருளா லாக்கை யழியாது நீடிக்கும்
திப்பிய மாகச் செழிக்குமே—ஒப்பிலாப்
பேரினுற் றிண்மை பெருகும் பெருங்கான
ஊரினுற் காந்தமமை யும்.

(கு-ரை) - ஊர் - சங்கு; கடற்கானலில் உள்ள சங்கினுல் காந்த மானது பக்குவப்படும், அக்காந்தத்தினுல் உடம்பு வலிவு பெற்று

நீடிக்கும். திப்பியம்-திவ்வியம், செழிக்கும்-வளப்படும், திண்மை பெருகும்-வலிமை மிகும்.

### சிதலை

104 பன்னு முலோகமெலாம் பற்பமா கத்திறமை
மன்னுங் கருப்ப மடவார்க்குத்—தன்னில்
உதவு மவிழ்த முறையிடமு மாகச்
சிதலையெனப் பேர்புனைந்த செல்.

(கு - ரை) சிதலை - செல்; உலோகங்களைப் பற்பமாக்க உதவும்; அவிழ்த முறையில் கர்ப்பமுற்ற மங்கையர்க்கு ஏற்ற மருந்தாகும்; பலமருந்து முறைகள் செய்தற்கு உறைவிடம் போலாகவும் ஆகும்.

### வன்மீன்

105 கொண்டுவங்க நீரைக் குறுக்கலா மெப்படியு
மண்டலத்தம் மைசெயும் மாறுகேள்—தொண்டையிலை
யின்மா ரசம்விட் டிழைத்துக் கரியாக்க
வன்மீன் புறவோட்டு மை.

(கு - ரை) வன்மீன் - முதலை; முதலையின் புறவோட்டினின்றுண்டாம் மையைக்கொண்டு வங்கத்தின் நீரை வாங்கலாம்; அம்மையைச் செய்யுமுறையாவது: ஆதொண்டையிலையின் சாற்றைவிட்டு முதலையின் புறவோட்டைக் கருக்கி உறைகல்லிலிழைக்க மையாகும். வங்கம் - ஈயம்.

### நையல்

106 கண்டுகொண்டேன் பொல்லாநீர்க் கட்டு முதற்பிணியை
விண்டுவிட்ச் சாடுமகா மேனியெல்லாம் — உண்டவர்க்குப்
பைய வுளங்குளிரப் பண்ணு மருந்தான
நையல் வசலையென்று நான்.

(கு - ரை) நையல் - வசலை; மருந்தான வசலையை முறையாக உண்டவர்க்கு, பொல்லாத நீர்க்கட்டு முதலிய பிணிகளை நீங்கும்படி அழித்து உடம்பினையும் உள்ளத்தினையும் குளிரச் செய்யும்.

## துளி

107 ஆனைச் சிரங்குமுத லான ரணநோயை
ஊனிற் படாம லொதுக்குமே — மானப்
பிளிறின் குரல்காட்டும் பெண்ணுமை யான
துளியின் புறவோட்டுத் தோல்.

(கு - ரை) துளி - பெண்ணுமை; பெண்ணுமையின் புறவோட்டுத் தோலாலாக்கிய மேற் பூச்சு மருந்தானது, ஆனைச்சிரங்கு:முதலான விரணம் பொருந்திய சரும நோய்களையெல்லாம் உடம்பின் தசையில் படராமல் சருமத்தில் நின்றபடியே நீக்கி விலக்கிவிடும்; பிளிறின்குரல் - யானையின் பிளிற்றொலி; யானை சிறு குரலாற் பிளிறுமாறு போ.ல் ஆமை குரல்விடு மென்க.

## மயிலை

108 வெண்குட்டஞ் செங்குட்ட மேனித் திரையிவைகள்
கண்கெட்டு நீளக் கழலுமே — உண்க
முயலு மறிவினர்க்கு முட்பலவி னூடே
மயிலை யுறவான மண்.

(கு - ரை) மயிலை-இருவாட்சி; வெண்குட்டமும் செங்குட்டமுமாகியவற்றுடன் உடலின் மூப்பாலடையுந் திரையும் நீங்கும்; முட்பலா மரத்தினடியில் முளைத்து அப்பலா மரத்தின் சத்தைக் கவர்ந்து வளர்ந்த மயிலையாகிய இருவாட்சியின் அடிமண்ணுலான சத்தை வடித்துண்ண வல்லார்க்கு.

## சினை

109 பெற்றுக் கருக்கருவாய்ப் பேதமிலா நற்பொருளாய்
உற்ற மருந்துக் குறவாகிப் — பற்று
மினமா யவிழ்த விருப்பா யிருக்குஞ்
சினைமுட்டை யண்டமெனுஞ் சீர்.

(கு - ரை) சினை - முட்டை; முட்டை கருவுக்குக் கருவாயும், மருந்துக்குப் பேதமிலாத உறவாயும், பொருந்திய இனமாயும் அவிழ்தத்தின் இருப்பிடமாயும் சீர்பெற வமைந்திருக்கும்.

## அதள்

110 உரிபோர்வை மீக்கோ ளுடனே புறணி
தரியூன்பை பச்சைவடந் தட்டை - உரிய
செதிள்தொக்கு மேற்சருமஞ் செட்டை யுடனே
அதளென்ப துந்தோலுக் காம்.

(கு - ரை) உரியும் போர்வையும் மீக்கோளும் புறணியும் தரியும் ஊன்பையும் பச்சையும் வடமும் தட்டையும் செதிளும் தொக்கும் சருமமும் செட்டையும் அதளும் என்று சொல்லப் படுவனவெல்லாம் தோலின் பரியாயப் பெயர்களாம்.

## அத்தி

111 அங்க முடலாணி யாதார வாதாரி
கங்காள மென்பு கறைகட்டு — மங்காத
புத்தியுள நூலோர் புகலு முறைப்படியே
அத்தி யெலும்பென் றறை.

(கு - ரை) அங்கம் உடலாணி ஆதாரம் ஆதாரி கங்காளம் என்பு கறை கட்டு அத்தி என்பன எலும்பின் பெயர்களாகக் கூறுவர் அறிவுடையோர்.

## எருவை

112 செம்பால் கறையுதிரஞ் செந்நீர் குருதிரத்தம்
நெம்பான நெய்த்தோர்புண் ணீர்சோரி — பம்பு
முரவையடர் சோணிதத்தி னோடு சுடுவன்
எருவை யிரத்த மிவை.

(கு - ரை) செம்பால் கறை உதிரம் செந்நீர் குருதி நெய்த்தோர் புண்ணீர் சோரி உரவை சோணிதம் சுடுவன் எருவை என்பன இரத்தத்தின் மறுபெயர்களாம்.

## கிருமி மனை

113 சொல்லி முடியாது துத்தநா கம்பொடியாய்
வெல்லத் துரத்தும் வியாதிகளை - நல்ல

உரனுடைமை யுண்டாக்கு முண்டவரை யென்றும்
கிருமிமனை மண்மகிமை கேள்.

(கு - ரை) கிருமி மனை - புற்று; மண் புற்றுஞ்சோறு; புற்றுஞ் சோறு துத்தநாகத்தைப் பற்பமாக்கும்; அப்பற்பத்தை யுண்ண நோய்களைத் தீர்த்து நல்ல உடல்வலிமை யுண்டாக்கும்; இதன் மகிமை அளவிட முடியாதென்பதாம்.

## பிபிலிகை

114 ஆகியநோய் திண்மை யணுகுநிலை யாவாரைச்
சாகரச மிப்பிமுத்து தக்கோலம்—வாகாய்
உபதை யுறவமைத்தங் குண்ட வுடனே
பிபிலிகையெச் சத்திலறும் பெய்.

(கு - ரை) பிபிலிகை - முயிறு; எறும்பிலொரு வகை; எச்சம் - முயிற்று முட்டை; முயிற்றின் முட்டையில் தயில மிறக்கி உபாய மாய் நிலையாவரைச் சாற்றுடனும் இப்பிமுத்தின் பற்பமும் தக்கோலமுங் கூட்டி மருந்தாக்கியுட்கொள்ள, பேய் போலாட்டும் நோய் தீர்ந்து வலிமை உடலுக்குண்டாம்.

## மசகம்

115 மெத்தவுண்டா மெய்யிலுள்ள வேதனையெல் லாமகலும்
சுத்த பவுத்திரமாய்த் தோன்றுமே — பத்தி
அசமதா கஞ்சுக் கதிமதுரங் கூட்டு
மசகத்தே னாலே மதி.

(கு - ரை) மசகத்தேன்-கொசுத்தேன்; கொசுவின் தேனுடன் ஓமம் சுக்கு அதிமதுரம் ஆகியவை முறையாய்க் கூட்டியுட் கொள்ள உடம்பிலுள்ள துன்பந்தரு நோய்கள் யாவுமகலும்; உடம்பு மிகத்தூய்மையுறும்; அறிவு கூர்மையடையும்.

## பூநாகம்

116 சுன்னமா கப்படி சோதியா கப்பரிதி
வன்னமா கப்பொருளாய் வாய்க்கவே — பின்னுமுறை
யோனா கமுமஃதே யெய்த வெளிதாகப்
பூநாக முண்டாக்கும் பொன்.

(கு - ை[illegible]கம் - நாக்குப்பூச்சி ; (நாங்கூழ்). பொன்னைச் சுண்ணமா[illegible]கின் ஒளியாகவும் சூரிய காந்தியாகவும் தோன்று[illegible]பாகச் செய்யும், நாகமாகிய உலோகத்தையும் அவ[illegible] சுண்ணமாகவும் ஒளியுடையதாகவும் செய்யும் பூநாகமாகிய[illegible]கூழ் என்பதாம்.

## தெறுபதம்

117 தன்னுகத் தாலேதுத் தந்நாகம் பந்திக்கும்
மன்னுக வாதத்தை மாட்டுமே — பின்னும்
பெறுபதஞ்சே னுபதிக்குப் பிந்தாம லீயும்
தெறுப்தமா கும்பெரிய தேள்.

(கு - ரை) தெறுபதம் - பெருந்தேள்; நண்டுத் தெறுக்கால்; தன் உடம்பின்[illegible]சத்தால் துத்த நாகத்தைக் கட்டும்படி செய்யும்; வாதத்தைத்தான் தலைமையாக நின்று வாட்டித் தன்னிலையிலே நிறுத்தும்; சேத்துமத்திற்கு அதன் நன்னிலையைத் தந்து அதினின்றுந் தாழாவகையை யுதவும்.

## கமடம்

118 காயத்தி லேபிறந்த காயத்தைப் போக்கிமிக
மாயத்தைப் போலே மயக்குதலால் — ஓயா
அமுதவல்லி யுப்புடனே யாக்கியமை யான
கமடமெனு மாமையதி கம்.

(கு - ரை) கமடம் - ஆமை; அமுதவல்லியினின் றெடுக்கப்படும் உப்புடன் சேர ஆமையின் தசையாலாக்கியமைந்த கறியையுண்பதால் உடம்பில் உண்டான விரணங்களின் புண்ணையாற்றி மாயவித்தை போல் உடம்பை முந்திய நன்னிலைமையாக்குதலால் ஆமை மேன்மையுடையதாகும்; அமுத வல்லியுப்பு - சீந்தில் சர்க்கரை.

## எய்

119 வாளியைப்போ லாருநோய் மாவினத்தின் மேலேநீ
நாளு மதனு னயமுண்டாம்—கேளிதனை

மெய்நடுங்கப் பண்ணுநரர் மெய்யிற் ... க்கும்
எய்நிணத்தை நெய்யாக்கி யெய்.

(கு - ரை) எய் - முட்பன்றி; கண்டார் மெ... ங்கச்செய்யும் முட்களமைந்த உடம்பினையுடைய முள்ள... ன்றியின் நிண நெய்யை ஆருத விரண நோய்களை நீக்குதற்கு அம்பை விலங்குகளின்மேல் எய்யுமாறுபோல் பிரயோகம் செய்க; அதனல் நன்மை யுண்டாம்; நார் - முள்.

## கோலம்

120 தேனிலுரைத் திட்டாற் றினவடங்கும் புண்ணகலும்
ஊனி லுதிர முரக்குமே—கானுறுமங்
கோலக் கனிரசத்திற் கூடமதி யூறவைத்த
கோலத்தின் கானகத்தைக் கொண்டு.

(கு - ரை) கோலம் - பன்றி; பன்றியின் கால் நகத்தைக் காட்டிலுள்ள அழிஞ்சிலின் கனிச்சாற்றில் ஒரு திங்கள் வரை ஊற வைத்துப் பின் அந்நகத்தை தேனிலுரைத்துத் தடவிவர உடலிலுள்ள சொறி நீங்கும்; அதனலேற்படும் புண்ணும் ஆறி விடும்; சொறிப்புண்ணலேற்பட்ட தசைகளின் இரத்தக் கேடும் தீர்ந்து நல்லதன்மை யடையும். அங்கோலம் - அழிஞ்சில்.

## நாகம்

121 என்னவென்று சொல்வே னெதிரானல் வைகறையில்
மன்னவர்கண் டங்கே மகிழ்வார்கள்—பின்னுமகா
வல்லமையுண் டாக வழங்குமே வாகடர்க்கும்
நல்லநா கப்பெருமை நான்.

(கு - ரை) நாகம் - நல்ல பாம்பு; நாகமென்னும் நல்ல பாம்பானது மருத்துவர்க்கு நல்ல மருந்து முறைகட்குதவியாகவிருப்பதால் அவர்களுக்கு நல்ல வல்லமையை அளிப்பதாம்; அரசரும் நித்திரை நீங்கிய வைகறைப் போதில் விழிப்புக்கு இலக்காக நாகம் எதிர்ப்படுமானல் அதன் விளைபயனை எண்ணி மிக மகிழ்ச்சி யடைவார்கள்; ஆகவே, நாகத்தின் பெருமையை எங்ஙனம் சொல்லிப் புகழ்வேன் என்பதாம்.

## பையுள்

122 காணுமுன்னே விட்டுக் கதலுமெய்யைக் காணையால்
ஆணவமாய்ப் பின்னு மதிகமாம்—ஊணுறவு
செய்யும் புளியைச் சினேகிக்கு மெள்ளேநள்ளும்
பையுளெனு நோய்மருந்துப் பை.

(கு - ரை) பையுள் - நோய்; மருந்துப் பையைக் கண்டால் நோயால் நடுங்கும் மெய்யைக் காணமல், நல்ல உடம்பினைக் காணலாம்; நோயுற்ற பிணியாளன் புளியையும் எள்ளேயும் மிக விரும்புவான் என்பதாம், மருந்துப்பை-மருந்துகளடங்கிய பை. கதலுதல்-அசைதல், விட்டு நீங்கல்.

## கச்சோதம்

123 வற்கமெல்லாங் கட்ட வலிமை யுடைத்தாகும்
பொற்கடம்போல் தேகத்தைப் போஷிக்கும்—தற்கமெனப்
பிச்சோதம் போலும் பிணிகளேயெல் லாமறுக்கும்
கச்சோதம் பாஷாணக் கல்.

(கு - ரை) கச்சோதம்-மின்மினி; பாஷாண வகைகளே எல்லாம் கட்ட வன்மையுடையதாகும். பொன்னின் குடம்போல் உடம்பைப் பதனமாகப் பாதுகாக்கும். பேய் போன்ற பிணிகளே எல்லாம் நீக்கும்.

## கற்கடகம்

124 தன்னேப் பொடிசெய்து சாரணேச்சாற் ருலரைத்துப்
புன்னேச் செதிள்பொடியும் போட்டரைத்துப்—பின்னுருட்டி
நற்கலிக்க மாக்கியிட நாடாது சன்னிபிணி
கற்கடக மானநண்டின் கல்.

(கு - ரை) கற்கடகம் - நண்டு; நண்டுக் கல்லேப் பொடியாகச் செய்து புன்னே மேற்பட்டைத் தூளும் சேர்த்துச் சாரணேச் சாற்ருலரைத்து உருட்டிக் கலிக்கமாக்கி உபயோகிக்க, சன்னியும் அதற்கினமான பிறநோய்களும் அணுகா தகலும்.

## நந்து

125 மெய்யாள ராக மெலிவிக்குங் காசமறும்
மெய்யா யதனை விளம்புவேன் — பொய்யாது
தந்தி யிலைரசத்தாற் ருவளமாந் தேனிலுணில்
நந்துடைய பற்பத்தால் நை.

(கு - ரை) நந்து - சங்கு; ருதந்தி இலைரசத்தால் வெண்மையான சங்கு பற்பத்தைத் தேனிற்கலந்து கொள்ள உடம்பை மெலியச் செய்யும் காச நோய் நீங்கும்; தாவளம் - தவளம், வெண்மை; தந்தி - நேர்வாளத்தின்; அத்தி இலையெனலுமாம்.

## இப்பி

126 நீரிலுண வாதமறும் நெய்யிலுண வெம்மையறும்
மோரிலுணப் பித்த முறியுமே — சாரணைவேர்
குப்பிநடு வைத்துக் குறியாக வட்டமுறை
இப்பிமுத்துச் சுண்ணத்தை யே.

(கு - ரை) இப்பிமுத்து-சிப்பிமுத்து; சத்திச்சாரணைவேரினால் மூசை செய்து, அதினிடையிலிட்டுப் புடம் செய்தெடுத்த இப்பி முத்துச் சுண்ணத்தை நீரில் அனுபானமாகவுண்ண வாதம் நீங்கும்; நெய்யிலுண்ண வெம்மை நீங்கும்; மோரிலுண்ணப் பித்தந் தீரும்.

## வில்

127 அடலையாய் மாத்திரையா யாக்கியவம் பாலே
விடலைநிகர் பண்டிதர்கள் வெல்ல — வுடல்வனத்திற்
கொல்வதுபோ லாயுள்மறை கூறுகின்ற பாஷாண
வில்சுரப்பு ளெய்வதற்கு வில்.

(கு - ரை) பாஷாணவில் - மனோசிலை; அம்பு - திப்பிலி; திப்பிலிரசத்தைக்கொண்டு மனோசிலையைப் பற்பமாகவோ மாத்திரையாகவோ செய்து உடலில் உள்ள சுர நோயை நீக்குதற்கு மருத்துவர் கையாள்வர் என்பதாம். இதில் உடம்பை வனமாகவும், சுர நோயைப் பறவையாகவும் மருத்துவரை வில் வீரராகவும், திப்பிலியை அம்பாகவும், மனோசிலையை வில்லாகவும் உருவகஞ் செய்துள்ள நயம் காண்க.

## காமவல்லி

128 மாரு மருந்தீடு மாறும் பயித்தியம்போம்
ஆரு ரணங்களெல்லா மாறுமே — நீருகத்
தாமரைநீர் போலுடலிற் றட்டாது நோய்களெல்லாங்
காமவல்லி யென்றுரைத்தக் கால்.

(கு - ரை) காமவல்லி - நன்னாரி; நன்னாரியினால் மருந்தீடு தீரும், பித்தம்போம், நாட்பட்ட விரணநோய்கள் மாறும், தாமரையிலை நீர் போல் நோய்கள் பற்றற நீங்குமென்பதாம்.

## காந்திமெய்

129 தீயாகி யெங்குந் திரியுமதை யாவற்றும்
ஓயாம லெப்படியு முண்டக்காற் - பாயாது
போந்திமிர்வா தங்கிரந்தி புண்ணீரு மண்ணவர்க்குக்
காந்திமெய்வா தச்சலுப்பைக் காய்.

(கு - ரை) காந்திமெய் - சூரிய காந்தி; சூரியவெப்பத்தால் சூடுடையதாகி, சூரியன் போந்திசையில் திரும்புமியல்புடையதாகிய சூரிய காந்தியை எப்பொருளோ டாயினும் கூட்டியுண்ணின் திமிர்வாதம் பாய்ச்சலின்றி யடங்கிவிடும், கிரந்தி, புண்ணீர் முதலிய சருமநோய்களும் தீரும். எனவே சூரிய காந்தி மண்ணுலகத்தார்க்கு வாதச் சலுப்பைக் காய் தீயாகும் என்பதாம்.

## ஏமினி

130 பற்றறுத்துப் பின்னுமெட்டிப் பாராமற் பாதிக்குங்
குற்ற மிராமற் குறுக்குமே — வெற்றறலி
ஞமிடரா லூறி யடர்பிணிக்குங் கூற்றுவனும்
ஏமினிசன் னிப்பிணியை யே.

(கு - ரை) ஏமினி - பொன்; பொன்னைப் பற்பமாக்கி உபயோகிக்குமுறையால் சன்னிநோய் நீர்த்தோஷக்கட்டு முதலிய பல நோய்கள் நீங்கும்; வெற்றறல் - சுத்தமான தண்ணீர்; ஊறி யடர்பிணி - நீர்க்கோவையாலுண்டாம் நோய். ஏமினி - மஞ்சள் மஞ்களுக்கும் மேற்கண்ட நோய்களை நீக்கும் குணம் உண்டு.

## ஈந்து

131 கொன்று விடமனதாய்க் கோபஞ் செயுமுடலே
மென்று விடுமதிக மிஞ்சிறைல் — என்றைக்கும்
காந்தி தனைப்பெருக்குங் காட்டாது மேகத்தை
யீந்துபிர தானிதனை யே.

(கு - ரை) ஈந்து - கற்சூரம்; பிரதானி - சேத்துமம்; சேத்துமம் மிஞ்சினல் உடலை மென்றுவிடும்; கொன்றுவிடலாமென்றும் மனம்கொள்ளும்; ஈந்து அதற்கு மாருக உடலில் காந்தியை மிகுவிக்கும் மேகத்தை மறைய அழிக்கும்; கபத்தையும் போக்கும்.

## நரைதிரையில்லான்

132 பங்குக் கரைவாசி பாலிட் டதிலவித்துச்
சங்கம் பழக்கனிநீர் சார்பாகப் — பொங்கி
வருமுனெண்ணெ யட்டாடில் வாரா நரையென்றும்
நரைதிரையில் லான்சினையை நால்.

(கு - ரை) நரைதிரையில்லான் - காக்கை; காக்கையின் சினை நாலுபங்காக, பால் அதற்கரைப் பங்காகச் சேர்த்து அவித்து சங்கம்பழச்சாறும் பொருந்துமளவு கூட்டி, பொங்கிவரும் முன் அதனுடன் எள்ளெண்ணெயிட்டுக் காய்ச்சி முழுகிவரின் நரை என்றைக்கும் வராதென்க.

## நேரடி

133 வார்த்தெரித்தா லெண்ணெய் வருமதனில் வால்மிளகை
ஆர்த்த பொடிசெய் ததிற்றூவிப் — பார்த்தெரித்து
நேரா மதிமுழுக நீங்கும் நரைதிரைகள்
நேரடியா நாவல்வித்தை நீர்.

(கு - ரை) நேரடி - நாவல் வித்து; நாவற்பழக்கொட்டையை நீர் சேர்த்தெரிக்க எண்ணெய்வரும்; அதில் வால்மிளகைப் பொடி செய்து தூவி மீண்டும் எரித்துப் பதமாயிறக்கி ஒரு மாதம் நேர்மையாக முழுகிவரின் நரைதிரைகள் நீங்கும்.

## அங்கோலவித்து

134 இல்லாமல் மத்தித் திரட்டிப்பு நீர்விட்டு
நல்லா யெரிக்கவெண்ணெய் நாடுமே — பல்லசதி
யுங்கா லசதியும்போ முண்ணவதை மாவில்
அங்கோல வித்தையை யம்.

(கு - ரை) அங்கோலவித்து - அழிஞ்சில் விதை; அழிஞ்சில் விதையை இருமடங்கு நீர் விட்டெரிக்க எண்ணெய் வரும்; அதனுடன் அரிசிமாவையுங் கூட்டியுண்ணின், பல்லசதியும், கால் அசதியும் போம்; சந்தேகமில்லை என்பதாம்.

## குசைவேர்

135 கைகா லெரிவு கசிவுவெயர் வெப்போதும்
வைகா லசிய மடிவாதம் — மைகா
சசதியிவை நீங்கி யாகவென்று லின்பம்
குசைவேர்க் குடிநீர் குடி.

(கு - ரை) குசைவேர் -'தர்ப்பைப் புல்லின் வேர்; தர்ப்பைப் புல்வேர்க் கஷாயத்தால் கை காலெரிவு, வெயர்வைக் கசிவு, உடல் வெப்பம், உடம்பசதி, முடக்குவாதம் முதலிய நோய்கள் தீருமென்பதாம்.

## காஞ்சனி

136 உண்டவெறிப் பித்த முயர்ந்ததனுற் றோஷசன்னி
கண்டு மனது கலங்கியே — மண்டையிலும்
பாஞ்சதுமீ ளுங்காண் பருகினு லக்கணமே
காஞ்சனிவேர் காய்குடிநீர் கள்.

(கு - ரை) மஞ்சள் வேரைக் காய்ச்சிய குடிநீர் பருகினுல் கள்ளுண்ட வெறியினலதிகப்பட்ட பித்த முயர்ந்ததனுலேற்படும் தோஷசன்னிகண்டு மனக்கலங்கி மூளையில் ஏறியபித்தமுடன் மீளும் என்பதாம்.

## காளகண்டம்

137 ஆகியபா ஷாண மனைத்தும் வசமாகித்
தேகஞ் சுரத்தணலாற் றீஞ்சவர்க்கு—வாகாக

நாளுமிகப் போஷிக்கு நன்மை மிகவுதவும
காளகண்ட முட்டையினுற் கல்.

(கு - ரை) காளகண்டம்-குயில்; கல்லுருவமாகிய பாஷாணங்கள் யாவும் கட்டவுதவும்; சுரமாகிய வெப்பத்தால் உடல் கருகிப் பலவீனப்பட்டவர்களுக்கு அவ்வேதனை தீர்ந்து நாளும் உடலை வளர்க்கும், அத்துடன் மிக நன்மையுந்தரும் குயில் முட்டைப் பாகம் என்பதாம்.

## மா

138 பாக்கிய மாக்கும் பலமாக்குங் கெட்டதையும்
யோக்கிய மாக்கு முயர்ப்பிக்கும்—ஆக்கமென்றுந்
தேவென்று நன்மைத் திறமென்றுஞ் சீரென்றும்
மாவென்று வந்தபெரு மை.

(கு - ரை) மா - பெருமை; (பலபொருளொரு சொல்) பாக்கியமும், வலிமையும், கெட்டதையும் நன்னிலையாக் குதலும் உயர்த்தலும், ஆக்கந்தருதலும், தெய்வத் தன்மையுந் தருதலும் நன்மை யாவும் மிகுதலும், புகழ் வளர்த்தலும் ஆகியவெல்லாம் பெருமையினுலானவாம்; ஆக்கமென்றும் தேவென்றும் நன்மைத் திறமென்றும் சீரென்றும் மாவென்றும் வந்த பெருமை பாக்கியமாக்கும், உயர்ப்பிக்குமென வுரைத்து முடிவு காண்க.

## நாணுவான்

139 தன்னைப் பெருக்கச் சவீரத்தைக் காண்பிக்கும்
பொன்னைப்போற் றேகத்தைப் போஷிக்கும்—வன்னமிகக்
காணு முறைமைகளைக் காண்பிக்குந் தப்பாது
நாணுவான் முட்டைவா ணுள்.

(கு - ரை) நாணுவான்முட்டை - நாகணவாய்ப் புள்ளின் முட்டை; வாழ்நாள் வளரும்படி செய்யும் சவ்வீரத்தை மருந்தாக்க வுதவும்; உடம்பைப்பொன் போல்வளர்க்கும்; காணுகின்ற பல வகைக் கைமுறைகளையுந் தப்பாது காண்பிக்கும்.

## காமரூபி

140 போகு மொருத்தலைநோய் போகுந் தலையிடிப்புப்
போகுங் கபாலவலி போகுமே - நாகவல்லி

ஓம மிளகரைத்த வுண்டையெண்ணெ யட்டாடிற்

காமரு பிக்குரோ கம்.

(கு - ரை) காமரூபி - கத்தூரி; வெற்றிலை ஓமம் மிளகு ஆகிய வற்றை அரைத்து எண்ணெயிட்டுக் காய்ச்சிப் பதமான பின் இறக்கி வடிக்குங்கால் கத்தூரியை வடிகலத்துள்ளிட்டு எண்ணெயுடன் கலந்துபின் தேய்த்து முழுக ஒரு தலைவலி, தலையிடிப்பு, கபாலவலி ஆகிய ரோகங்கள் தீரும் என்பதாம்; காமரூபி, கத்தூரிக்கு இடவாகுபெயர். நேபாளத்து வாளமும், காஷ்மீரத்து குங்குமப்பூவும் (காஷ்மீரியும்) போல, கத்தூரி காமரூபாவழியாக வருவதால் அப்பெயர் பெற்றிருக்கலாமெனக் கொள்ளப்பட்டது.

## அரோகி

141 கறிகாமன் சுக்குடனே காய்ச்சிக் குடிக்கப்

பிறிவான நோய்கள் பிணிகள்—அறுமேல்

வராது வலிமை வருந்தண்மை யுண்டாம்

அரோகிமுத லாஞ்செம்மை யாம்.

(கு - ரை) அரோகிமுதல் - கடுக்காய் வேர்; அரோகிணி கடைக் குறையாக அரோகி என்றாயிற்று; கடுக்காய் வேரை மிளகு திப்பிலி சுக்குடன் சேரக் காய்ச்சிக் குடிக்க நோய்ப்பிணிகளானவை தீரும், மேல் வராமலும் நீக்கும், வலிமையும் உண்டாம், உடம்பு குளிரும், இம்முறை செம்மையுடைத்தாம், பிறிவு - பிறிது; வேறு.

## கீழ்நோக்கி

142 நோய்களெல்லா மப்பா னுகரப் பசியுண்டாம்

சேய்களென்னச் செல்வஞ் செருக்குமே—காய்கிழங்கு

மூணுக்குங் கல்லு மொருநாழி கைக்குளறுங்

கீழ்நோக்கி யாலாகுங் கீழ்.

(கு - ரை) கீழ்நோக்கி - கீழ் நோக்கியால் நோய்களெல்லாம் கீழாகும் (தணிந்து விடும்) அப்பால் நன்குணவு கொள்ளப் பசியெடுக்கும்; உடலின்பமாகிய செல்வம், செல்வச்சிறார்கள் களிப்படையுமாறுபோல மகிழ்ச்சிமிகும்; காய் கிழங்கு முதலிய உணவு வகைகளையும் உட்கொள்ள உடம்பு ஏற்றுக் கொள்ளும், கல்லும்

சீரணிக்கும்படி பசித்தீ மிகும் என்பதாம்; கீழ்நோக்கி என்பது கீனோக்கி என்றாயிற்று, வாழ்நாள் வாணாளென வருதல்போல கீழ் நோக்கி மலக்கழிவு செய்யும் மருந்து.

## நளு

143 தேகத்தி லுண்டாந் திமிர்கடிநோய் வாதமெல்லாம்
போகக் குருதியுண்டு போக்குதலாற்—றேகஞ்
சுளுவு பெறவினிது தோற்றுவித்த லாலே
நளுவாலுண் டாகும் நயம்.

(கு - ரை) நளு - கிளிஞ்சில்; உடம்பிலுண்டாம் திமிர் நோய் கடிநோய் வாதநோய் ஆகிய பிணிகளின் இரத்தத்தை யுறிஞ்சி, அவற்றினை நீக்குதலாலும், உடம்பு சுலபமாக இனிமை பெறத் தோற்றுவிக்குமதனாலும், நளுவாகிய கிளிஞ்சிலின் உபயோகம் நயமுடைத்தாம்.

## கரமூத்திரம்

144 மாதர் பொறையுயிர்ப்பால் வந்த நலிசன்னி
யாது மகலு மனுதினமுஞ்—சீதை
பிரமி யிலைரசத்திற் பெந்தமாய்ச் சேர்ந்த
கரமூத்தி ரப்புட்டை கள்.

(கு - ரை) கரம் - கழுதை; பொன்னாங்கண்ணி பிரமி இலைகளின் சாறுடன் கலந்த கழுதை நீரும் சாணப்பாலுமாகிய கைமுறையாலாகிய அவிழ்தம், பெண்கள் பிரசவ சன்னி யாவும் எப்பொழுதும் தீர்க்கும் என்பதாம். மூத்திரம் - நீர்; புட்டை - விட்டை.

## வற்சம்

145 பட்டை ரசத்திற் பகலெல்லா மூறவைத்துப்
புட்டுப்போல் நன்றாய்ப் பொடிசெய்து—சட்டியெரி
யிற்செய் தயில மிறக்கியுண வுப்புசம்போம்
வற்சப் புழுக்கைநா வல்.

(கு - ரை) வற்சம் - இளங்கன்று; நாவற்பட்டைச் சாற்றில் கன்றின் புழுக்கையைப் பகலெல்லா மூறவைத்து, புட்டுப்போல நன்கு பொடி செய்து, சட்டியிலிட்டெரித்துத் தயில மிறக்கியுட் கொள்ள உப்புசம் போகும்.

## உடனசி

146 குங்குமப் பூவையுந்தக் கோலத்தை யும்மரைத்துச்
சங்கிலைநீர் விட்டுருட்டித் தண்ணீரில்—நுங்க
முடமாறுந் தேனிலுண மூத்திரநோய் தீரும்
உடனசிவா லின்றோலை யும்.

(கு - ரை) உடனசி - தேவாங்கு; உடல்நசியின் வாலின் தோலையும், குங்குமப்பூவையும் தக்கோலத்தையும் சங்கிலைச்சாற்றி லரைத்துருட்டி, தண்ணீரில் உட்கொள்ள முடம் நீங்கும், தேனில் கொள்ள மூத்திர நோய் தீரும் என்பதாம்.

## வெளில்

147 தன்னி லருதபிணி தானறுமெய் நன்றாகும்
வன்னி யெனப்பசித்தீ வாய்க்குமே—புன்னைத்
தளிர்கறியால் மத்தித்த தண்ணீரா லுண்டால்
வெளிலெச்சத் தாலகலு மெய்.

(கு - ரை) வெளில்எச்சம் - அணிலெச்சம்; புன்னைத்தளிரும் மிளகும் மத்தித்த தண்ணீருடன் அணிலெச்சத்தைக் கூட்டியுட் கொள்ளஉடம்பிலுள்ள தீராத நோய்கள் நீங்கும், உடம்பு நல்ல வளமடையும், நல்ல பசியுமுண்டாகும்.

## பாலை

148 வெய்யில் பனிகாற்று மேவாம லோவாது
செய்ய வரிசை சிறத்தலாற்—கையுணர்வாய்
மேலு முறையுளன மேவுதலால் வாய்சிறுத்த
பாலையிலை யேயவிழ்தம் பண்.

(கு - ரை) பாலை - ஊசிப்பாலையின் இலை; பாலையிலையா லாகியஅவிழ்தத்தைக்கொள்ள,வெயில் பனிகாற்றுகளினல் உடல்

பாதிக்கப்படாமல் சிறந்த முறையில் உடம்பினைப் பேணிப் பாது காப்பான இடம்போல் உதவும் என்பதாம். வாய்சிறுத்த பாலை என்றதனால் ஊசிப்பாலை எனக் கொள்ளலாயிற்று.

## முனி

149 ஓர்வரிசை நாண்முழுது மூறவைத்த பின்முசுட்டை
நீர்வழியு மப்படியே நீங்கியபின் — மோர்சேர்
கனிவாகி யுப்பஞ்சுங் கட்டவென்றூற் சொன்னேன்
முனிவா யுமிழ்நீரில் முன்.

(கு - ரை) முனிவாயுமிழ் நீர் - தேன்;முன்னுகத் தேனில் ஒரு நாள்முழுதும் ஊறவைத்தும், பின் பொன் முசுட்டைச்சாற்றில் அவ் விதமே ஒருநாள் ஊறவைத்தும், மோரில் ஒருநாள் ஊறவைத்தும் முறையாகப் பஞ்சலவணத்தையும் கட்டலாம் கனிவாக என்பதாம்.

## பணிவயிரி

150 மூலத்தை யுங்கடுகு மூன்றையுமொக் கப்பொடித்துப்
பாலிட் டரைத்துப் பயறுபோல் — ஏலு
மணிபாம்பு தேள்விடங்கள் மாறவுண் மேற்பூசு
பணிவயிரி யின்பெருமை பார்.

(கு - ரை பணிவயிரி - கருடன்; ஆகாசகருடன் கிழங்குடன் திரிகடுகையுஞ் சேர்த்துப் பொடித்து, பால் விட்டரைத்து, பொருந் திய பயறு அளவு மாத்திரை செய்து உள்ளுக்குக் கொடுத்துக் கடி வாய் மேலும்பூச, பாம்பு தேள்களின் விடங்கள் தீரும்.

## பிதா

151 கற்பமா னுலுடலைக் காத்திடலாற் காவானல்
நற்பெருமை யாவருக்கு நல்குதலால் — கல்பம்
விதாதா வெனவிருக்க மேற்செயலா னீர்வாழ்
பிதாவே யுயிர்க்குப் பிதா.

(கு - ரை) பிதா-தந்தை; கல்ப்பம் - காயகற்பம்- கற்பகாலம் விதாதா - பிரமன்; பிதா - கடவுள்; நீர் வாழ்பிதா - திருமால்.

## விண்மேகநீருணி

152 மீதுவளர் கேசத்தால் வெண்பொடியா னூற்குளிகை
யாதுந் தனதுவச மெய்துமே — யீதுமன்றி
உண்மேக நோயுடல்விட் டோடுமே நாடோறும்
விண்மேக நீருணியின் மெய்.

(கு - ரை) மேகநீருணி - வானம்பாடி; நாள்தோறும் மேக நீருணியின் உடலின்மீது வளரும் உரோமத்தால் இரசம் பற்ப மானால் இரசகுளிகை தன்வசமாகும்; இஃதன்றியும் அதன் உப யோகத்தால் உடலிலுள்ள மேக நோய்கள் விட்டு நீங்கும் என்ப தாம்.

## விண்ணிறைவெகுளி

153 கொண்டுவந்து வெள்ளாட்டுக் கோமயத்தி லூறவைத்தி
ரண்டு தரமரைத்து நேர்த்தியாய் — உண்டைசெய்து
கோவை யிலைரசத்தாற் கொள்செம்பூ ரக்கடிபோம்
மாவிண்ணிறை வெகுளி மண்.

(கு - ரை) மாவிண்ணிறைவெகுளி - இந்திர கோபம்; விண் இறை - மேலுலகத்தரசனாகிய இந்திரன்; இந்திரகோபம் - மூதா என்னும் ஒருபூச்சி; ஈண்டு அந்நிறத்தால் ஒத்ததாகிய காவிமண் என்று பொருள் கொள்ளப்பட்டது; காவிமண்ணை வெள்ளாட்டின் நீரிலூறவைத்து இரண்டுமுறையாக அரைத்து உண்டை செய்து கோவையிலைச் சாற்றிற் கொள்ள, செம்பூரான் கடிவிஷம் போம்.

## வாரணை

154 தன்னி லதரத் தடிப்பு மிரணமும்போம்
தென்னைபனை யீந்தில்முதற் சேத்துமம்போம் — பின்ன தனிற்
காரகம்போம் வாதமறும் காசமறும் பின்னதனில்
வாரணையால் மேகமறும் வாய்.

(கு - ரை) வாரணை - வாழை; வாழையின் கைமுறையால் வாயினிதழ்த்தடிப்பும் விரணமும் போம்; தென்னையால் சேத்து

மமும், பனியினால் காரகமும், ஈந்தினால் காசமும் வாதமும் அறும்.

## நகுலம்

155 தெத்த விடறல் திடற லொடுகுளறல்
அத்தனையும் போமே யதிமதுரந் — துத்தம்
தகரைரசத் தாலரைத்துத் தானதைத்தே னிற்கொள்
நகுலத்தி னெச்சத்தால் நா.

(கு - ரை) நகுலத்தினெச்சம் - கீரிமலம்; நகுலத்தினெச்சத் தோடு பால்துத்தமும் தகரைச் சாற்றாலரைத்துத் தேனி லருந்த நாக்கிலுண்டாம் தெத்துதல் இடறல் குளறல் முதலிய தடுமாற்றங்கள் தீரும் என்பதாம்.

## ஆர்க்குவதம்

156 மேகமெங்கே வெட்டையெங்கே வெள்ளை கருமையெங்கே
போகுமோ தாமரைநூல் பூநீறு — பாகமெனச்
சேர்க்குமுத லக்காரந் தின்னப் புளியைவிட்டே
யார்க்குவ தப்பிசினி யால்.

(கு - ரை) ஆர்க்குவதப்பிசின் - கொன்றைப்பிசின்; கொன் றைப்பிசினோடு தாமரை நாளத்தின் நுண்ணூலும் பூநீறும்சேர்த்துப் பாகம் செய்து கருப்புக் கட்டியுடன் சேர்த்துட் கொண்டு புளி நீக்கிப் பத்தியமும் காத்தால், மேகம் வெட்டை வெள்ளை கருமை யாகிய நோய்கள் இருந்தவிடந் தெரியாமல் நீங்குமென்பதாம்.

## விம்பம்

157 சத்துருக்க ளைக்கொண்டு சாடாமற் சாடவென்றால்
நித்தியமுந் தின்று நிலைமையாய் — மித்திரனார்
விம்பத்தைப் போலே விளங்கலாங் காய்முதலாம்
விம்பத்தி னற்பிணியை வெல்.

(கு - ரை) விம்பம் - கோவை; நோய்களாகிய பகைவர்களை நேர் நின்று கொல்லாமல் மறைமுகமாக வெல்ல வேண்டுமானால்

கோவையின் காய் முதலாகிய சமூலத்தையுட் கொள்ள மேனி விம்பம் போல் பிரகாசமடையும்; விம்பம் - உருவொளி.

## வீவிம்பம்

158 ஆகப் பழகிவந்தா லாகத்து வீக்கமெல்லாம்
போகப் பிரிவு புரியுமே — தேகத்தை
மேவி வளர்நோயும் விட்டோடுங் கட்டோடே
வீவிம்ப பன்னகத்தை மெய்.

(கு-ரை) வீவிம்ப பன்னகம் - கொல்லன் கோவையிலை; கொல்லன் கோவை யிலையை உபயோகித்தலை முறையாகவும் மெய்யாகவும் கையாண்டு வந்தால் உடம்பிலுண்டாம் வீக்கமெல்லாம் நீங்கச் செய்து பின்னும் உடலைச் சார்ந்த பிறநோய்களும் வேரற நீங்கும் என்பதாம்; கோவையிலையுங் கொள்ளப் பொருந்துவதாம்.

## கரவீரம்

159 தன்னை யிமைபோலே தற்காத்துக் கொள்வதுமே
யென்னி லதுவே யிசமானும் — பின்னு
முரைசெய்வ தென்னவதே யுயர்நேத்ர மூலி
கரவீர மத்தனையுங் கண்.

(கு-ரை) கரவீரம் - அலரி; கண்ணினை இமைகாப்பது போல், கண்ணோய்களைத் தீர்த்துக் காப்பதாகையால் அலரிப்பூவே கண்களுக்கு எசமானாகும்; இன்னுமதன் பெருமையை உரைப்பதேன்? அவ்வலரிமலரே நேத்திர மூலியென்னும் பெயருடையதாதலால் அப்பெயரே சான்றாகும் என்பதாம்.

## பாகு

160 காயத்தைப் போஷித்துக் கற்பாந் தரமாக்கி
நேயத்தை நாளு நிறுத்துமே — நோயெய்த்தே
ஏகு முறைமெய் யிளைப்பை யகற்றுதலாற்
பாகு செயுஞ்சமர்த்துப் பார்.

(கு-ரை) பாகு - கற்கண்டு; கற்கண்டு உடலைப் பாதுகாத்துக் கற்பகாலம் வரை நீடிக்கச் செய்யும்; வாழ்க்கையில் இன்பத்

தையும் நாடோறும் நிலைக்கப்பண்ணும்; நோய்கள் மெலிந்து நீங்கும்; இந்தப் பாகாகிய கற்கண்டின் வன்மையை உற்றுணர்ந்து பார் என்பதாம்.

## கேதகை

161 பஞ்ச லவணங்கள் பந்திக்கத் தான்முதலாய்
எஞ்ச வுடனே யினையடக்கி—மிஞ்சுமண
மாதலினு னஞ்சையுடை யாரையுமுள் ளாக்குதலாற்
கேதகையின் பாக்கியத்தைக் கேள்.

(கு - ரை) கேதகை - தாழை; தாழையின் பூவால் பஞ்ச லவணங்களையும் கட்டலாகும்; அம்முறையால் உடல் நோய்களையும் இரிந்தோடப் பண்ணலாகும், மிகவும் சிறந்த வாசனையை யுடையதுமாகும், தாழையின் உயர்வை மருத்துவர் சொல்லக் கேள்; நஞ்சையுடையாரை உள்ளடக்குதல் - பூநாகம் என்னும் ஒரு வகைப் பாம்பு மணமிகுதியால் அதனிடத்துறையும்.

## கிளை

162 தாணுவாய்த் தாணுவுக்குத் தாயாய்மா லைக்கடிந்து
காணுமுன்னுப் பத்தனையுங் கட்டியே—ஊணுய்
வளரு முயிர்நிலைக்கு வாய்த்த துணையாங்
கிளையென்று வந்தமூங் கில்.

(கு - ரை) கிளை - மூங்கில்; வாழ்கின்ற உயிர்களின் உடலுக்கேற்ற துணையாகவும், உண்ணுமுணவாகவும் தோன்றியுள்ள மூங்கில், தாணுவுமாய், சிவபிரானுக்குப் பிறப்பிடமுமாய், உப்புகளையெல்லாம் குற்றம் நீக்கிக் கட்டவல்லதுமாகும்; தாணு - பல பொருளொரு சொல்; ஈண்டு ஆதாரமாய் என்று கொள்க.

## கவிர்

163 தன்னைப் புனிதமெனத் தானுக்கும் பீசத்தாற்
பின்னப் படுத்தாது பேய்ப்புடலும்—பொன்னும்
உவள்வித்து மாங்குடிநீ ரோதுமுத லோடு
கவிர்கிருமி போக்கியாக் கை.

(கு - ரை) கவிர் - முருக்கு; (பலாசு) முருக்கின் விதையுடன் பேய்ப்புடலும் பங்கம்பாளை வித்தும் சேர்த்துக் காய்ச்சிய குடிநீரை யருந்தினல் உடம்பிலுள்ள நச்சுக்கிருமிகளைப் போக்கி உடம்பைப் புனிதமாக்கும்.

## கிசலை

164 போலே யிருந்து புடத்துக் கிடமாகி
மேலே நறுமலர்க்கு வீடாத—லாலே
அசதிதரு தாக மடங்கத் தணிக்குங்
கிசலையங்கற் பங்களுங் கேள்.

(கு - ரை) கிசலை - தளிர்; நறுமணமுள்ள மலர்களைக் கீழிருந்து பதனழியாமல் காத்து, தங்கும், வீட்டைப்போல் இடமளித்து நிற்கும்; உடலுக்கசதியைத் தரும் நீர் வேட்கையை அடங்கும்படி தணிக்கும்; எல்லா வகையான புடங்களின் அரைப்புக்குச் சாருக வுதவுதலால் முதற்காரணமாகும்; ஆகவே மூலிகைத் தளிர்கள் கற்பங்களின் கேளாகும்; கேள்-உறவு.

## தாதகி

165 எப்படியு மேலே யிருடிகள்சித் தாதிகள்சொல்
ஒப்பின் மறைமுறைமை யுண்மையே—தப்பலமெய்
மேதினிமே லேயாயுள் வேதியரா லோதுகிற
தாதகியாற் கட்டுமிர தம்.

(கு - ரை) தாதகி - ஆத்தி, ஆத்தி உபயோகத்தால் இரதம் கட்டும், உலகில் மருத்துவ நூலறிவினர் கூறுவதாகிய இம்முறை தவறல்ல; உண்மையேயாம். இம்மருத்துவர் கூறுமிது இருடிகளும் சித்தர்களும் ஓதிவைத்த மறையின் மெய்மை வாக்கியமா மாதலாலென்க.

## சாய்

166 கையசந்து மேல்மூச்சுக் காலுப் புசவாதப்
பையுளெலாந் தூரப் பறக்குமே—ஐயமிலை
வேயினடி வேரை விட்டரைத்து மோருடனுண்
சாயி னிரதத்தாற் ருன்.

(கு - ரை) சாய் - வாட்கோரை; மூங்கிலின் அடிவேருக்கு வாட்கோரையின் சாறுவிட்டரைத்து மோருடன் கலந்துட்கொள்ள, சந்தேகமின்றியே கைகாலசதி, மேல்மூச்சு, வாயுவால் உண்டாகும் உப்புசம், வாதப்பிணிகள் யாவும் நீங்கும்.

## மாதவி

167 தேவி யுரமிளகு திப்பிலியிந் துப்புநிறை
மேவ வரைத்ததற்கு மேலுருட்டி — ஆவினெய்நீர்
ஈதிலுண வெம்மைகப மேகு மடாதுபுளி
மாதவியின் போதிரதம் வார்.

(கு - ரை) மாதவி - குருக்கத்தி; கெந்தகம் மிளகு திப்பிலி இந்துப்பு ஆகியவற்றைச் சமன்கொண்டு மாதவியின் பூச்சாறு விட்டரைத்து உருட்டி மாத்திரையாக்கி, பசுவின் நெய்யிலேனும் தண்ணீரிலேனும் உண்ண, வெப்பமும் கபப்பிணியும் நீங்கும்; புளி நீக்கல் பத்தியமாகும்.

## வேழம்

168 கண்ணுகங் கைகால் கனலப் பயித்தியத்தாற்
புண்ணுக வெம்பிப் புலம்புவீர் — தண்ணுகி
வாழவுயிர் வேண்டுதிரேல் வால்மிளகே லங்கலந்த
வேழ ரசமருந்து வீர்.

(கு - ரை) வேழம் - கரும்பு; வால்மிளகும் ஏலமும் பொடித்த தூள்கலந்த கரும்பின் சாற்றையுட்கொண்டால், கண் உடம்பு கை கால் முதலியவைகளின் எரிச்சலால் வரும் பித்த நோயால் உடம்பு புண்ணுகி வெம்பிப் புலம்பல் நீங்கி, உடல் குளிர்ந்து நீண்டநாள் உயிர் வாழலாம்.

## ஐவனம்

169 நோயா லசந்து நுடங்கித் திரிவாருக்
காயாச நீங்கி யழகாகி — ஓயாமல்
நைவனமா காதுடல நாளு மிருக்கவென்ருல்
ஐவனமா நேர்த்தியை யா.

(கு - ரை) ஐவனம் - மலைநெல்; பிணியினால் வருந்தி உடல் குன்றி உய்யும் வழியறியாது துன்புற்று உழல்வாருக்கு, அவர்தம் நோய்த் துன்பத்தால் நேர்ந்த மெலிவு தீர்ந்து உடலழகுண்டாகி மீண்டும் அம்மெலிவு ஏற்படாமல் நீடித்துயிர் வாழ வேண்டுமாயின் ஐவனமாகிய மலைநெல்லை முறைப்படி சமைத்துணவாகக்கொள்ளு தலே நேர்த்தியுடைத்தாம்.

## பூகம்

170 வாய்த்த வுடற்குளத்தில் மன்னுங் கொடிகளற
நோய்த்தா மரையை நொறுக்குமே—தேய்த்த வுண்டை
ஆகமிள குப்புடனெய் யாலரைத்து நீரிலுணப்
பூக மதகரியைப் போல்.

(கு - ரை) பூகம் - கமுகு; கமுகின்காயாகிய பாக்கை மிளகும் உப்பும் கூடச்சேர்த்து ஆவின் நெய் விட்டரைத்து உருட்டிநீருடன் உண்ண, உடலாகிய தடாகத்தில் தோன்றிய நோய்களாகிய தாமரைக் கொடிகளை மூலத்தூருடன் மதயானை யழித்தொழிப்பது போல் அழிக்கும்; உருவக அணி.

## பூசம்

171 செய்து துரத்துந் தினமு முடற்கழகு
பெய்து நலத்தைப் பெருக்குமே — நெய்கறியை
வீசும் படிகருணை வீதமா யுண்டுவரப்
பூசம் பிணிகளுடன் போர்.

(கு - ரை) பூசம் - புடல், புடலங்காயை கரணையாக அரிந்து நெய்சேர்த்துச் சமைத்தருந்திவர, நோய்களுடன் போர் செய்து அப்பிணிகளை நீக்கும்; நாளுநாளும் உடலுக்குப் புத்தழகு தரும்; உடல் நலத்தையும் பெருக்கும்; கருணை - கரணை, வட்டவடிவான சிறுதுண்டு.

## கேசரம்

172 நேரிட்ட வர்க்கிளைப்பை நீக்கிப் பிணியிபத்தை
வீரிட் டலற விரட்டுமே — சீரிட்ட

வாச மலரின் மணத்தாற் குணத்தோடே
கேசரமென் ருேதியம கிழ்.

(கு - ரை) கேசரம்-மகிழ்; மகிழமலரானது இனியமணத்தை நுகர்ந்து தன்னை உபயோகிக்கும் வாய்ப்பு நேர்ந்தவர்களின் உடலிளைப்பைப் போக்கி, நோய்களாகிய யானைகளைக் குரல்விட் டலறியோடும்படி சிங்கத்தைப் போல் துரத்தியழிக்கும். கேசரம் - சிங்கம்; இபம் - யானை; சீரிட்டவாச மலரின் மணத்தாற் குணத்தோடே நேரிட்டவர்க்கு என மாறிக் கூட்டிப் பொருள் காண்க.

## காகதுண்டம்

173 வாதபித்த சேத்தும மாதங்கம் பங்கமுற
மோதி யடித்து முனியுமே—சாதகமாம்
வேதமிக வேயாயுள் வேதியர்க ளாலனுப்புங்
காகதுண்ட மாகியசிங் கம்.

(கு - ரை) காகதுண்டம் - அகில்; நோயினர்க்குச் சாதகமாக மருத்துவ நூலோரால் தரப்படும் காகதுண்டம் என்னும் பெயருடைய அகிலாகிய சிங்கமானது வாதபித்த சேத்தும நோய்களாகிய யானைகள் கெட்டோடும்படி தாக்கிச் சினந்தழிக்கும் என்பதாம்; மாதங்கம் - யானை; ஆதங்கம் எனக்கொண்டு நோய் எனலுமாம்.

## கார்ப்பாசம்

174 எல்லாந் தணியு மெழிலுண்டாந் தாகமறு
நல்லாய் பசிமே னடக்குமே—சல்லாப
மேற்பாயு மொண்மை விழிக்குண்டா மெந்நாளுங்
கார்ப்பாசத் தாலேநோய் கள்.

(கு - ரை) கார்ப்பாசம் - பருத்தி; பருத்தியினாலே நோய்களெல்லாந் தீரும்; அழகுண்டாம், நீர் வேட்கை தீரும், மேலாகப் பசியை யுண்டாக்கும், விழிகளுக்கு ஒளியுண்டாம். நல்லாய்-மகடூஉ முன்னிலை.

## பூரணி

175 தேருத நோய்களெனுஞ் சிங்கக் குழாமெல்லா
நீருகக் கொல்லு நிசமாக - வீருன

தாரணியிற் பண்டிதவே தண்ட வனத்தில்வளர்
பூரணியா குஞ்சரபப் புள்.

(கு - ரை) பூரணி - இலவு; தீராத நோய்களாகிய சிங்கக் கூட்டம் அழிந்தொழியுமாறு வெல்லும், உண்மையாக, மேன்மை மிக்க உலகில் மருத்துவ நூன்முறையாகிய மலைசூழ்ந்த காட்டில் வளரும் இலவாகிய எண்காற்புள். சரபம்-சிங்கத்தை வெல்லும் எண்காற் பறவை, சிம்புளென்றும் வழங்கும்.

## பிருந்தம்

177 போலாட்டி வித்துதிரப் புண்பீ னிசப்பிணியை
மேலாட்டி வித்து விளங்குமே—சால
வருந்து முடற்குவெப்பு வாராம லோட்டும்
பிருந்தமைப்ப யித்தியத்தைப் பேய்.

(கு - ரை) பிருந்தம் - துளசி; துழாயானது கபத்தையும் பித்தத்தையும் பேய் போலாட்டி நீக்கியும் இரத்தப்புண் பீனிசப் பிணியைத் தீர்த்தும் நற்பயன் செய்து விளங்கும், மிகவருந்தும் உடலில் வெப்பநோய் வாராமலுந் தடுக்கும் என்பதாம்.

## பெண்ணை

177 மேகவெட்டை சோகை வெறிமுதலா யுள்ளதெல்லாம்
போகவட்டை நல்கிப் புரக்குமே—வாகடர்கள்
உண்ணவரு புற்ருளி யோடே வருபோந்தை
பெண்ணை பனைதாலம் பேர்.

(கு - ரை) பெண்ணை - பனை, புல், தாளி போந்தை பெண்ணை தாலம் என்று பெயர் பெறும் பனை, தன் பாளையினூறலால் காய்ச்சி ஆக்கும் வட்டை யுதவி, மேக வெட்டை சோகை வெறி முதலாகிய நோய்கள் தீரப் பாதுகாக்கும்; வைத்திய நூலுடையார் உண்மருந்தாகத் தரும் பனைவட்டு என்று முடிக்க.

## தளவம்

178 போனே யிபமீறிப் போகாம லேயடக்கித்
தீனமிலாமற் செழிக்குமே—தேனில்

அளவு பெறவே ரரைத்துருட்டி யுண்ணத்
தளவமத மாவங்கு சம்.

(கு - ரை) தளவம் - முல்லை; முல்லையின் வேரை அளவாக அரைத்துத் தேனிலுண்ண, நோய்களாகிய யானைகள் மீறிப் போகாதவாறு அடக்கி உடற்குத் தீங்கு வராமற் செழிக்கும்படி யுதவும். இத்தன்மையால் தளவமாகிய முல்லை யானைத்தோட்டி போல்வதாம்.

## வேத்திரம்

179 வாங்காப் பிடிப்புமுதல் வாயுவையெல் லாமடித்துப்
பாங்கா யருளுவது பார்த்திருந்தும் — நீங்காத
சாத்திரத்தைக் கண்டிருந்துஞ் சாரமுள வேரான
வேத்திரத்தை நம்பாமை வீண்.

(கு - ரை) வேத்திரம் - பிரம்பு; சத்துள்ள பிரப்பங்கிழங்கு நீங்காத வாதப்பிடிப்பு முதலிய வாயுவையெல்லாம் அழித்து, பாங்குடன் உதவுவதைக் கண்டிருந்தும், இங்ஙனம் முறை கூறும் மருத்துவ நூலின் பாகத்தை தெரிந்து வைத்தும் இப்படிப் பக்குவம் செய்து நலமடையாதிருப்பது அறிவீனம் என்பதாம்.

## கூவிளம்

180 கொண்டமைச்சு தந்திரிகொ ணர்ந்தகொடுங் கோலைக்
கண்டித்து மெய்யுறுதி காட்டுவார் — பண்டிதர்கள்
பூவுலகி லாயுள்விதி பொய்யா முறையாக்கக்
கூவிளத்தின் செங்கோலைக் கொண்டு.

(கு - ரை) கூவிளம் - வில்வம்; பித்தம் சேத்துமங்களாலாகிய நோய்களைக் கண்டித்து நீக்கி உடம்பிற்குறுதி யளிப்பார்கள் மருத்துவர், வில்வமாகிய செவ்விய செங்கோல் போலும் அவிழ்தத்தைக் கொண்டு என்பதாம்.

## கபித்தம்

181 மன்னன்முத லாமூவர் மாறுபா டில்லாமல்
உன்ன நினைத்த துதவுதலால் — பன்னிச்

செபித்த வுடலாண்மை சேர்வித் திடலாற்
கபித்தமவிழ் தக்கற்ப கம்.

(கு - ரை) கபித்தம் - விளா; வாதமுதலிய முக்குற்றங்களும் மாறுபாடில்லாமல் நினைத்தவாறு நடக்கும்படி உடலைப்பாது காத்துதவுதலாலும், பன்னுள் யோக நிலையிலிருந்து மந்திரமோதி யடையும் காயசித்தியைத் தருதலாலும் கபித்தமாகிய விளா வானது அவிழ்தங்களிற் சிறந்த கற்பகவிருட்சம் போல்வதாகும்.

## நீபம்

182 தொந்தித் தகலாத தோஷச் சுரமகன்று
சிந்தைக் கனுகூலஞ் சேரவென்ருல் — வந்தித்துத்
தாப சுரமுமறச் சஞ்சலமி லாதருந்து
நீபப் புறணிகுடி நீர்.

(கு - ரை) நீபம் - கடம்பு; தொந்தப்பட்ட தோஷசுரம் நீங்கி மனத்திற்குகந்த நன்மையையளித்து, தாபசுரமும் நீங்க வேண்டி னல், கடப்பம்பட்டைக் குடிநீரை யருந்துக என்பதாம்.

## சிந்துவாரம்

183 நோயார் கலியை நொடிக்கு ளருந்தவெம்மை
ஓயாம ஞளு முயர்த்துதலுக் — காயநேர்
வந்தமுதல் நண்பாகி வாதத்தை யேயுறலாற்
சிந்துவா ரங்கனலுந் தீ.

(கு - ரை) சிந்துவாரம் - வெண்ணொச்சி; நோயாகிய கடலை இமைப்பொழுதி லுண்டு வெப்பத்தை நாளும் வேண்டுமளவுக்குக் குறைவிலாதாக்குதற்கும் உடலுக்கு ஏற்றதாக வந்த நட்பும் ஆகி வாதத்தையும் தணியச் செய்தற்கும் சிந்துவாரமென்னுந் தீ யொத்த நொச்சியைக் கையாள்க.

## தார்

184 வாசத்தி ஞலுடலில் வாசஞ்செய் தேயுயிர்க்கு
நேசத்தை நாளு நிகழ்த்தலாற் — பூசித்த
பேரா தரவு பிறக்க வுஞற்றுதலால்
தாரா யுளைவளர்க்குந் தாய்.

(கு - ரை) தார் - பூமாலே; நறுமணத்தை வீசி உடலுக்குள் வாசம் செய்யும் உயிருக்கு நட்பை நாளும் நிகழ்வித்தலாலும், தொழத்தக்க பெரிய ஆதரவைப் பிறப்பித்தலாலும் தாராகிய நல்ல நறுமணமாலேகள் உயிர்க்குத் தாயை யொக்கும் என்பதாம்.

## பனசம்

185 மந்திரியை யாதரித்து மற்றவனே யுங்கலந்து
வந்தபொழு தும்மமைச்சை மன்ருமல் — முந்தி
யனசனமா கத்தானே யாக்கைக் கிடலாற்
பனசந் தருமிறைக்குப் பார்.

(கு - ரை) பனசம் - பலா; பித்தத்துக்குத் துணேயாயும், சேத்துமத்துக்கும் நட்பாயும் அமையுமெனினும் பித்தத்தை அணுகாமலும் அமைதலால் வாதத்துக்காக்கும் அதன் இறைமையைய; ஆகவே பலாவின் கனியைத் துணேயுணவாகக்கொள்வதன்றி முழுமுதலுணவாகக் கொள்ளலாகாதென்க; அனசனம் - முதன்மையானவுணவு; அசனம் - உணவு: இதன் மறுதலே அனசனம்.

## சரவணம்

186 சீறி யடங்காத சேனு பதியமரில்
ஏறிய போதி லெதிராளி—வேறே
கரவடத்தா லேயவனேக் கட்டி யடக்கச்
சரவணமே நாகபா சம்..

(கு - ரை) சரவணம்-நாணல்; சினந்து போர்க்கு அடங்காத சேத்துமமாகிய பகைவனே அவன் கைம்மிஞ்சியபோது அவன் எதிரியானவன் பிறிதொரு சூழ்ச்சியால் அவனே கைகால் முடங்கக் கட்டியடக்குதற்கு நாணலின் உபயோகம் சிறந்த நாகபாசம் போல்வதாம்; இப் பொருள்கோள் பிறிது மொழிதலென்னும் அணி பொருந்த நின்றவாறுணர்க.

## குடசம்

187 காய்ச்சாவெள் ளாட்டுப்பால் கட்டிகட்டி யாகமுன்னே
தோய்ச்சதுபோ லுண்டாற் சுகமுண்டாம்—வாய்ச்சு

விடநற்றே கத்து மெலிவையெல்லாம் போக்குங்
குடசப்பா லான்முறித்துக் கொள்.

(கு - ரை) குடசப்பால் - குடசப்பாலை; காய்ச்சாத வெள்ளாட்டின் பாலுடன் குடசப்பாலைச்சாறு கூட்டக் கட்டித் தயிராக முறிந்துபோம்; அதனையுட்கொள்ள நல்ல உடல் நலமுண்டாம்; தேகத்தின் மெலிவையும் போக்குமென்பதாம்.

## சந்திரமைத்திரி

188 மூலிகளிற் செய்யு முறைமைகளி லேயதிகம்
ஏலுகையாற் ருக மிலாமையால் — வாலறிவு
முந்துகையாற் றண்மை முதிருகையான் மற்றதினுஞ்
சந்திர மைத்திரிநீ சம்.

(கு - ரை) சந்திரமைத்திரி - அல்லி; தாகத்தைத் தணித்தலினாலும், நல்லதாய் அறிவை மேம்படச் செய்தலினாலும், குளிர்ச்சியைத் தருதலாலும் நீரினிடத்துண்டாம் ஏனைய மூலிகைகளைக் காட்டிலும் அல்லி அதிகம் பயனுடையதாம். நீசம் - நீரிற்பிறப்பது; நீ - நீரின் கடைக்குறை; சம் - பிறப்பது.

## நாகம்

189 மானிடர்க்கு மண்ணில் வளருநவ லோகத்திற்
பானு வெனச்சிலது பந்திக்கத்—தானுறுதி
ஆகுதலா னன்மை யணுகலுடற் காக்குதலால்
நாகமது வேவாழு நாள்.

(கு - ரை) நாகம் - புன்னை; நவலோகங்களிற் சிலவற்றைச் சூரியவொளிபோல் கட்டும் முறைக்கு உபயோகமாதலாலும், உடலுக்கு நன்மை பொருந்தச் செய்தலாலும், மனிதர்க்கு மண்ணுலகில் வாழ்நாள் வளரச் செய்யும் நாகமாகிய புன்னையாம்.

## ஆமலகம்

190 அமைச்சனெனு மந்திரியை யாளாக்கிக் கொண்டு
கமைப்பை யுயிர்நிலைக்குக் காட்டி - அமைப்புடைமை

நேம மிகமெய் நிறுத்திவைகு மெஞ்ஞான்றும்
ஆமலக நெல்லியை யா.

(கு - ரை) ஆமலகம் - நெல்லி; பித்தத்தை அடிமை போலக் கீழ்ப்படுத்தி, உடம்புக்கு நோயைத் தாங்கும் வலிமையைத் தந்து, உடம்பின் அமைப்பையும் முறை தவருத தாக்கி எப்பொழுதும் செய்வித்து நிற்கும் ஆமலகமாகிய நெல்லிக்கனி யென்க.

## குளவி

191 பாரி னெடுநாள் பழகித் திரியவென்ருல்
காரிகையா ரின்பநலங் காணவென்ருல் - நேரே
உளவுறுதி மேலுமிக வுண்டாக வென்ருல்
குளவி தனைநிசமாய்க் கொள்.

(கு - ரை) குளவி - வனமல்லிகை; உலகில் நெடுநாள் வாழ வேண்டுமாயினும், மங்கையர் இன்பநலம் நுகர வேண்டுமாயினும், நேர்மையான மனத்திடம் பெற வேண்டுமாயினும் குளவியாகிய வனமல்லிகையைக் கையாள்க; கைமுறையாக உட்கொள்க வென்பதாம். குளவி - மலைப்பச்சை எனவும் வழங்குமாதலால் அப்பொருள் பொருந்துமேனும் கொள்க.

## இறுங்கு

192 மன்னவனெந் நாளு மகிழ வரசுரிமை
என்னி லிசைவா யிசைக்கின்றேன் - வன்மை
உறுங்கன மாக்கைக் குறுதியா மெய்மை
இறுங்குமா வேயுரமா யெண்.

(கு - ரை) இறுங்கு - சோளம்; வாதத்தை எப்பொழுதும் தன்னிலையிலே நிற்கச் செய்து, உடம்புக்கும் வலிமையைத் தர வல்லது சோளத்தின் மாவே என உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

## செல்

193 எல்லா உயிர்களுக்கு மின்பமிக வுண்டாக
வல்லாண்மை பைங்கூழ்க்கு வாய்க்கவே — இல்லாமை

செல்ல மகிழ்ந்து சௌனங்கள் சுகமெய்தச்
செல்லுலகி லேயருளுஞ் சீர்.

(கு - ரை) செல் - மேகம்; மேகமானது பயிர்களுக்கு வளந் தரும் மழையை யுதவியும் உலகில் வறுமை மிகாமல் வளம் மிகும் படிச் செய்து மக்களும் பிறவுயிர்களும் இன்பமாக வாழச் செய்வ தாகும்; எனவே மேகம் உதவும் பயன் இவ்வகையான சீர்மை யாம்.

## நிம்பம்

194 கைத்தாலும் பின்னுலக் காரம்போ லேருசித்துப்
பித்தா கியவிடத்தைப் பின்னிட்டு — வைத்த மகா
விம்ப மருவினவர் மேனிக் களித்திடலால்
நிம்ப முயிர்நிலைக்கு நேர்.

(கு - ரை) நிம்பம் - வேம்பு; முதலில் சுவைக்கக் கைப் புடையதாயினும், பின் பயன் தருமுறையில் சர்க்கரையைப் போல் சுவையுடைத்தாய், பித்தத்தைத் தணித்து உடலுக்கு மிக்க ஒளியும் அழகும் அளித்திடலால் வேம்பு உடல் நலத்துக்கு ஏற்ற தாகும்.

## குலுத்தம்

195 என்றுரைக்கும் பேர்புனையு மேந்தலுக்கு நண்பாகும்
ஒன்ருன தந்திரி யையோட்டும் — வென்றி
பலுக்கு முயிர்நிலையைப் பாராட்டுங் காணங்
குலுத்தம் பரியசனங் கொள்.

(கு - ரை) குலுத்தம் - காணம்; காணம் குலுத்தம் பரியசனம் கொள் எனப் பல பெயர்களையுடையதாகும்; வாதத்தைத் தன் னிலைப் படுத்தும், கபத்தை நீக்கும்; உடல் நோய்களையகற்றி வெற்றி பெறும்; உடம்பைப் பாதுகாக்கும்; பரியசனம் - குதிரை யின் உணவு.

## ஆடகி

196 என்ன வுலகி லிருக்கும் பிடகரெல்லாம்
பன்ன முதலரசின் பாலாகிப் — புன்னலியை

ஓட விரட்டி யுயருநெடு மால்பதியாம்
ஆடகியின் பேர்துவரை யாம்.

(கு - ரை) ஆடகி - துவரை; உலகிலுள்ள மருத்துவ ரெல்லாம் பேர் கூறுங்கால் துவரை என்று; (திருமாலின் தோற்ற மாகிய கண்ணனது அரசியலூராகிய துவாரகையின் பேரால்) கூறும் ஆடகியானது வாதத்துக்குச் சார்பாகி சிறிய துன்ப நோய்களை நீக்குந் தன்மையால் உயர்வுடையதாகும்.

## சூரம்

197 வேந்துமுதல் மூவருக்கும் வித்த தொடர்பாகிச்
சாந்தமுமாய் வெப்பமுமாய்ச் சட்டகத்தை — ஏந்திவரு
வீரம் புலியுடனும் மேலிட் டதைவென்ற
சூரங் கடலையென்று சொல்.

(கு - ரை) சூரம் - கடலை; முக்குற்றங்களுக்கும் தொடர் புடையதாய், சாந்தத்தையும் வெப்பத்தையும் உடலுக்காக்கி புலி யின் வலிமையைக் காட்டிலும் வீரத்தைத் தரவல்லது சூரமென் னும் பேர் கொண்ட கடலை.

## வழை

198 தேக நலியத் தினமு நலிவுண்டாய்
ஆக நலியு மறிவில்லாய் — நீகேள்
குழையை வசம்பிந்திற் கூட்டி யயில
வழையை யனுசரித்து வாழ்.

(கு - ரை) வழை - சுரபுன்னை; உடலை நலியச் செய்யும் நோய்களால் துன்புற்று அதனல் உடம்பு மெலிந்து சோர்வடைந்து அறிவையுமிழந்த பிணியாளனே கேள்; சுரபுன்னையின் தளிரை வசம்பும் இந்துப்பும் சேர்த்துக் கூட்டியுண்ணின் மேற்கண்ட குறைகள் நீங்கும்.

## சூதம்

199 மலடரிவ ரென்று வையகத்தா ரேசார்
பலரு முமையினிது பார்ப்பார் குலவுபிசின்

மாதப் புருவெச்சம் வால்மிளகோ டுண்டுவரச்
சூதத்தர் லுண்டாகுஞ் சூல்.

(கு - ரை) சூதம் - மா; மாம்பிசினுடன் மாதப்புருவி னெச்சமும் வால்மிளகும் சேர்த்துண்ணின், மலட்டுத் தன்மை நீங்கி மகப்பேறுண்டாம். மாதப்புரு - நீர்ப்புள்.

## கோரகை

200 நிட்டை யுடையார் நிகழ்த்தியசொற் கேட்டுமிகு
சட்டை யகத்தியநெஞ் சத்திற்கு — வட்டமுறை
ஆர வமுதா யயிலவரு கற்பமெனக்
கோரகையி னலடங்குங் கூன்.

(கு - ரை) கோரகை - கஞ்சா; யோகப் பயிற்சியுடையார் சொல்லு முறைப்படி கற்பமாக்கியருந்தினல் கூன் நிமிரும்; ஏனைய வெளிப்படை.

## குமுதம்

201 தாகமெனும் வெய்ய தபன பயித்தியமா
ரோகமுதல் குங்குமகோ ரோசனைகள் — பாகம்
அமையப் பொடித்தபொடி யப்பியதை மோந்தாற்
குமுதமல ராலொதுங் கும்.

(கு - ரை) குமுதம் - ஆம்பல்; குமுதத்தின் மலரோடு குங்குமப்பூவும் கோரோசனையும் சேர்த்துப் பக்குவமாகப் பாகம் செய்து பொடித்த தூளை மேலேயும் பூசி மணத்தையும் நுகர்ந்து உள்ளுக்கும் கொள்ளின், நீர் வேட்கையும் வெப்பமும் உஷ்ணத்தாலதிகரித்த பித்தமும் தீரும்.

## வராகபட்சணி

202 பசித்தீ பனமிகுந்து பண்ணியமெப் போதும்
பொசித்தா தாமதிக போகம் — வசித்துமலை
நேராக வேணுமென்ரு னீகே ளுணவாக
வாராக பட்சணியை வை.

(கு - ரை) வராகபட்சணி - கோரைக் கிழங்கு; பசித்தீபனம் மிகுதியாகவும், மங்கையர் போகம் நுகர இந்திரிய பலமதிகரிக்க வும் வேண்டுமாயின், கோரைக் கிழங்கைப் பக்குவமாக்கி, பிட்டு முதலிய பணியாரங்களாகச் சமைத்துஉண்ணின், மேற்கண்டவாறு நன்மையுண்டாம்; வராக பட்சணி என்பது முதல் நீண்டது.

## பாளிதம்

203 விட்டகலுந் திண்மை விளங்குமது மேகம்
கட்டகலுங் கட்டங் கழலுமே—சட்டகமு
நீடு நரையாது நீடூழி வாழ்ந்திருப்பாய்
பாளிதத்தாற் பித்தசோ பை.

(கு - ரை) பாளிதம் - பாற்சோறு; பாற்சோற்றை நாளு முண்ண பித்தசோபை விட்டு நீங்கும்; திண்மையான வலிமையுண் டாம்; மதுமேகம் விலகும், துன்பம் நீங்கும், உடம்பும் நரையில் லாது நீண்டநாள் நிலைபெறும், ஆயுளும் நீடிக்கும். பாளிதம் கற் பூரம், சந்தனம் ஆகிய பொருள்களின் பேருமாம். கட்டம்-மலம், மலபந்தம் நீங்குமென்றுமாம்.

## திலம்

204 திட்டாந் தரமனிதர் தேக வுதிரமுண்ணப்
பட்டசிந்தா மூடுமெண்ணெய் பட்டாவி—விட்டு
நிலமீ திறத்தலறி நீயதைத்தொ டாதே
திலநன்மைக் காட்டுக்குத் தீ.

(கு - ரை) திலம் - எள்; மனிதரின் இரத்தத்தை உறிஞ்சும் செந்துவாகிய மூடு என்னும் மூட்டைப்பூச்சி எள்ளின் சத்தாகிய எண்ணெய் பட்டால் இறந்தழிவதை (திருட்டாந்தமாக) நேர்முக மாகக் கண்டுவைத்தும் எள்ளானது உடல் நலமாகிய காட்டுக்குத் தீப்போல்வ தாகையால் நீ அதனைத் தீண்டாதொழிக வென்பதாம்.

## மாடம்

205 ஓஞ்ச நடையினரா யுள்ளாவி யற்றிடல்போற்
சாஞ்ச வுடனேய்ச் சனரெல்லாம்—காஞ்சநெய்யிற்

கூடத் தனையட்டுக் கொள்ளப் பதமான
மாடத்தாற் றிண்மையா வார்.

(கு-ரை) மாடம்-உளுந்து; நடையோய்ந்து உயிரிலா உடம் பிணையொத்தவராய்த் திரியும் மக்களெல்லாரும் காய்ச்சிய ஆவின் நெய்யிற் சேர்த்துச் சமைத்த உளுந்து மாவாலாகிய பாகத்தைப் பதமான உணவாய்க் கொள்ள மேற்கண்ட உடம்பின் மெலிவு தீர்ந்து வலிமையுடையராவார்.

## அக்காரம்

206 உடலுக் கதிக முணர்வுக்கு மெய்மை
வடிவுக்குக் காந்தி வரிசை—படியாகி
எக்காலுஞ் சூர மிழுது மருவநுகர்
அக்காரத் தால்வலிமை யாம்.

(கு-ரை) அக்காரம் - கரும்புச் சர்க்கரை; உடலுக்கு வலிமையும் உணர்வுக்கு நன்மையும், மேனிக்கு ஒளியும் முறையாக அளிக்கும், எப்பொழுதும் கடலையும் நெய்யும் கூட்டி கரும்புச் சர்க் கரையிலட்ட பாகத்தை உண்டால் என்பதாம்.

## சுதை

207 காயும் பயித்தியவாங் காரத்தை முன்னடக்கி
ஓயு முடலை யொடுங்காமற்—காய
விதையை யகற்றிநல மீட்டுதலா லாவின்
சுதையாலுண் டாகுஞ் சுகம்.

(கு-ரை) சுதை-பால்; பித்தமேலீட்டை முன்னதாக அடக்கி மெலிந்த உடலை மேலும் நலியவிடாமல், நோய்களின் மூலகாரணங் களை நீக்கி உடல் வளம் செய்தலினால் நல்ல பசுவின் பாலால் உடம் புக்கு இன்பமுண்டாம்.

## அளை

208 மேனேக்கிச் சீரணத்தை மேவா தடக்கிமெலி
ஊனுக்கி யாவி யொடுக்கவந்த—வீன

இளைபித்த சேட்டை யென்னுநோ யெல்லாம்
அளையினற் றீருமை யல்.

(கு - ரை) அளை - தயிர்; மயக்கம் மேலிட்டு எழச் செய்து சீரணவன்மையைக் குறைத்து மெலிந்த உடம்பாக்கி உயிரை வலி யழிக்க வந்த ஈனமாகிய இளைப்புடன் பித்த சேட்டைகளாம் நோயெல்லாம் தயிருணவால் தீரும் என்பதாம்.

## இழுது

209 கற்பம் பொசித்து மகா காயசித்தி பண்ணவருஞ்
சொற்பமெங்க ளாக்கையென்று தோத்தரிப்பார் — பற்ப
முழுதுமத லாதுகறி மோதகமே தேனும்
இழுது பொசித்தவரை யே.

(கு - ரை) இழுது - நெய்; மகாகற்பங்களையுண்டு காயசித்தி யடைந்த யோகியரும் எங்கள் யாக்கை நீடித்ததன்று என்று மிளகுடன் ஓமமும் பொடித்து நெய்யும் தேனும் கூட்டி யுண்டு அதனல் வாழ்நாளும் உடல் வலியும் பெற்று வாழ்வாரை, துதிப் பார்கள் என்பதாம். பற்பம் - கோடாகோடி.

## புலி

210 காமனெனத் தேகத்தைக் காமே சுரமாக
நோமெலிவை யெல்லா நொறுக்கியே — தீமை
அலுக்கக் கருவாகி யாதார மாகும்
புலிச்சளிநோ யோடுசெயும் போர்.

(கு - ரை) புலி - புலிதொடக்கி; நோயால் வரும் மெலிவை யெல்லாம் நீக்கி, உடம்பை மன்மதன் போலழகு பொலியப் பண்ணுவித்து, காமலீலைகளுறையுமிடமாக வீரிய விருத்தியையுந் தந்து, தீமைகள் அலுத்து வலி குன்றுமாறு, வனப்பின் கருவாக வும் ஆதாரமாகவும் உதவும்; கபநோயையும் நீக்கும் புலிதொடக்கி யென்னு மூலிகை என்பதாம். இண்டு, ஈண்டு, ஈயக்கொடி யென்பனவும் புலிதொடக்கியின் பெயர்களாம்.

## அயினி

211 ஆதார மாகி யறிவுக் கறிவாகிச்
சேதார மில்லாமற் றேகத்தைப் — போதை

செயினு மமுதாகத் தேற்றுதலா லாவி
அயினிவடி வேபுவனே யாம்.

(கு-ரை) அயினி - நீராகாரம்; அறிவு விளக்கத்திற் காதாரமாகவும் உடம்பிற்கு வலி குறையாதவாறு வளம் பெறச் செய்தும், சிறிது மயக்கம் தருமாயினும் பின்விளைவிலமுதம் போல் உயிர் போலச் சிறந்த நீராகாரவுணவு புவனேசுவரியாகிய சத்தியின் வடிவேயாம்.

## நவநீதம்

212 கொல்லாமற் கொல்லவந்த குன்மகய பித்தமெனும்
பொல்லா வியாதிப் புலிக்கெல்லாம் — நல்ல
சுவையா யழியாத துப்பினில் வேருன
நவநீத மென்பதுசெந் நாய்.

(கு-ரை) நவநீதம் - வெண்ணெய்; நறு நெய்க்கு வேருன (முதற்பொருளான) வெண்ணெய் ஆனது, மரணத்தைத் தர வந்த குன்மம் க்ஷயம் என்னும் புலிக்கூட்டத்திற்குச் செந்நாய் போன்றதாகும்.

## அபூபம்

213 எப்போது நன்மை யினங்கட் கிடமாகி
அப்போது தண்மை யளித்தலால் — வெப்பைத்
தபாது துரந்துயிரைத் தாங்கு தலினல்
அபூப மூர்ப்பரவை யால்.

(கு-ரை) அபூபம் - அப்பம்; உடல் நலத்தைத் தரும் நல்லியல்புகட் கெல்லா மிடமாக நின்று, நீருக்கோதிய குளிர்ச்சியை யளித்தலாலும், தவிராது சூட்டை நீங்கத் தணித்தும் உயிரை வளர்த்தலால் நல்ல பக்குவமாகச் செய்த அப்பவருக்கம் ஊரைச் சார்ந்துள்ள கடலின் தன்மையை ஒப்பதாம். கடலின் தன்மை கோடையிற்றண்மையும் வாடையில் வெப்பமும், உவர்த் தன்மையால் உடல் நலமும், பல நதிகளின் நீர் வரவால் மலை மூலிகைகளின் சத்து முடைத்தாதல்.

## தக்கிரம்

214 எந்தவித மானலு மெய்துவித்துப் போசனத்தைச்
சிந்தை மகிழச் செரிப்பித்து — முந்துடலைப்
பக்குவமாய்க் காத்துப் பசியை மிகுவித்துத்
தக்கிரம்போக் கும்பித்தத் தை.

(கு - ரை) தக்கிரம் - மோர்; எவ்வகையி லுபயோகித் தாலும் உணவை உண்பித்தும், உண்டவுணவை மனமகிழும்படி செரிக்கச் செய்தும், உடம்பினைப் பழுது நேராமற் பாதுகாத்தும், பசியைக் காலந்தவறும லுண்டாக்கியும், பித்தத்தை மிகாமல் நீக்கியும் பல விதமான நன்மையைப் பயத்தலால் மோர் மிக மேன்மை தரும் உணவாகும்.

## பண்ணியம்

215 பசிப்புக் கிடமாகப் பண்ணியபோ தெல்லாம்
பொசிப்புக் கிடமாகப் போற்றி—முசிப்பகலத்
திண்ணியவாய் நாளுஞ் செழிக்க முறைதரலாற்
பண்ணியமே தேககற் பம்.

(கு - ரை) பண்ணியம் - பலகாரம்; (சிற்றுண்டி) இளம்பசி யுணவாக அட்டுண்ட பொழுதெல்லாம், சத்துணவாக உடலுக்குப் பொருந்துவதாகி, உடம்பின் மெலிவு தீரத் தீரத்தை நாளும் செய்து செழிப்புக்கு ஏற்ற முறையை உதவுதலால் பண்ணியங்க ளாகிய சிற்றுண்டி வகைகள் காயகற்பம் போல்வனவாம்.

## பானகம்

216 புன்பிணியா கும்பகையைப் போராடி வென்றல்யா
வென்ப தொழிய விளைப்பாறித்—தன்பவன
மானவுடலி லனுதினமு மாந்துருசிப்
பானகநன்மைக் கிருக்கப் பாய்.

(கு - ரை) பானகம் - பானக்கம்; புன்பிணிகளை வென்று நீக்கும்; இனி வெல்லுதற்குரிய நோய்கள் யாவுள்ளனவென்று இளைப்பாறி நன்மைக் கிருப்பிடமாக அமைந்துதவும், சுவையாக

அருந்தும் தன்மையால் பானகமானது நன்மைக்குப் பள்ளி கொள்ளும் பாய் போன்றதாம்.

## கருணை

217 போசனத்தின் பூணுகிப் போசனித்த பேர்க்குமகா
ராச வுபசார நல்குதலாற்—பேசு
தரணிமிசைப் பண்டிதர்கள் தாமறியச் சொன்னேன்
கருணை சவுக்கியத்தின் கண்.

(கு - ரை) கருணை - கருணைக்கிழங்கு; கருணைக்கிழங்கு உணவுக்கு அணிகலம் போல்வது, உண்டவர்க்கு உணவில் விருப்ப மூட்டுவது; உலக மருத்துவர் சான்ருக உடல் நன்மைக்குரிய கண் போல்வதாகும்.

## உணவு

218 ஆணே ருடலுக் கனுதினமு மன்பாக
வூணே பெரிதென் றுரைத்திடலாற்—காணு
யணவு முயிருக் கனுகரண மான
வுணவுர ளுகவமை யும்.

(கு - ரை) உணவு - உண்டி; ஆண்மை யழகைப் பெருக்கி, உடலுக்கனுதினமும் உணவே முக்கியமானதென்று யாவரும் ஒப்ப உரை செய்திடலால், உடலிற் பொருந்திய உயிருக்குற்ற துணையாக வலிமை தருவது உணவேயாம்.

## மலாவகம்

219 திலத்தினது சம்பந்தத் தீதே யெனினுஞ்
சலத்தினது துர்க்குணத்தைச் சாடி—நலத்தை
உலாவ வுயிர்நிலைக்கே யுண்டாக் குதலால்
மலாவகமா தாரவலி மை.

(கு - ரை) மாலவகம் - பிண்ணுக்கு; எள்ளின் சம்பந்தத்தால் நன்மை பயவாதாயினும், நீர்ப்பிணியின் துர்க்குணத்தை மாற்றி உடலுக்கு நலத்தை உண்டாக்குவதாம்; ஆகவே, பிண்ணுக்கு உடல் நலத்துக்கு ஒருவகையில் ஆதாரமுடையதாகும்.

## உணுமரி

220 தீதான பித்தத்தைச் சேர்ந்தபொரு ளென்பதனை
ஆதார மாக வறிந்திருந்தும்—ஆதே
நணுமுறைமை யெல்லார்க்கு நண்ணுதலி னாலே
உணுமரிபா ரோர்க்குமுறை யூழ்.

(கு - ரை) உணுமரி-கள்; தீமை தருவதாகிய பித்தத்தைச் சார்ந்த பொருளாக உறுதியாகவறிந்து வைத்தும், அக்கள்ளுண்டலையே பொருந்திய முறைமை யாவர்க்கும் பொருந்துமாறு அமைதலால் கள்ளுண்ணும் பழக்கம் உலகினர்க்குப் பயிற்சியால் விடாது தொடர்ந்துவரும் பழக்கமாம். ஆதே-அதே யென்பதன் நீட்டல் விகாரம். ஊழ்-பழமையாகிய பயிற்சி.

## பிரசம்

221 அனுபான மாய்ப்பி னவிழ்தமுமாய்த் தோன்றிக்
கனமான தேகநிலை காட்டிப் — பினுமே
அரசன்முத லோரையு மாட்டுவித்த லாலே
பிரசத்தி னாற்போம் பிணி.

(கு - ரை) பிரசம் - தேன்; மருந்துமாகி, மருந்துக்கனுபானமுமாகியும், உடல் நிலையைப் பெருமையுடையதாக்கியும், பின்னும் முக்குற்றங்களையும் நீக்குந் தன்மையுடைமையால் தேனின் உபயோகத்தால் பிணிகள் தீரும்.

## சாதி

222 ஈன்றவர்க்கு மொவ்வா விழிவென்று முன்னூலிற்
சான்றவரே கூறுதலாற் றப்பாம — லூன்றணிய
நீதியமு தானாலு நீசப் படிவருணச்
சாதிநல மாகாது தள்.

(கு - ரை) சாதி - குலம்; பெற்றோர்க்கும் இழிவைத் தரும் சாதி வேறுபாடானது, அறநூல் நீதிநூல்களோதிய சான்றோராகிய பேரறிவுடையோரும் தம் நூல்களிற் கூறியிருத்தலால், அம்மொழி தவறு வகையாக, ஊன்றியறியு மறிவுக்கு எளிதாக நீதியாயமுதம் நேராயினும் நீசத்தன்மையென ஓதுக்கும் சாதி

யுயர்வு தகாது அக்கொள்கையை விட்டு விடுக என்பதாம், "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா,செய்தொழில் வேற்றுமை யான்" என்னும் வாயுரை வாழ்த்தும் மேலதற்குச் சான்றாம்.

## கூழ்ப்பாண்டம்

223 தின்னுரிசை யாலே சிலராசை வைத்துழல்வார்
பின்னமுற நோயைப் பெரிதாக்குந் — தின்னுடலைத்
தீழ்ப்பாக்கு நன்மருந்தைத் தீதாக்கு மாதலினற்
கூழ்ப்பாண்ட மேதவிட்டுக் கூழ்.

(கு - ரை) கூழ்ப்பாண்டம் - வெண்பூசுணை; தின்பதற்கு உருசியாயிருப்பதால் ஒரு சிலர் நாச்சுவையை நச்சி பூசுணைக் காயைத் தின்ன ஆசை கொண்டுழல்வர்; அதன் இயல்பு நோய் களைப் பேதப் படுத்தி விருத்தி செய்யும்; உடலையும் கெடுக்கும்; நோய் தீர வுட்கொள்ளு மருந்தையுங் கெடுத்து விடும்; ஆகவே பூசுணைக்காய் உணவுக் குற்றத்தின் பாற்படுவதாம். தவிட்டுக் கூழ் - உமிச்சுணை கலந்த தவிட்டை யட்ட கூழ்; உருசி - உரிசை வழக்குப் போலி.

## உறைக்கனி

224 போன வியாதிகளைப் போற்றி யழைப்பிக்கும்
ஊனை வளர்க்கு முபாதிக்கே — யான
திறத்தா லுனக்குரிசை தின்னமுதா னாலும்
உறைக்கனியின் பண்புதனை யோர்.

(கு - ரை) உறைக்கனி - மிளகாய்; உறைப்பு உறை என நின்றது; செய்யுள் விகாரம்; மிளகாயின் உபயோகத்தால் மருத்து வத்தால் தீர்ந்த நோய்களும் மீளக்கிளைக்கும்; தன் கூட்டுச் சுவை யால் விரும்பியுண்பார் உடம்பை நோய்பொதி கூடாக வளர்க் கும்; ஆகவே மேற்கூறிய வகையால் உணவுச் சுவைக் கேற்றதாக விருப்பினும் மிளகாயின் கார்ப்புச் சுவை உடல் நலத்துக் கேற்ற தன்றென்பதை யோர்ந்துணர்க என்பதாம்.

## படலிகை

225 பத்தியத்துக் கானதொரு பண்டமா யுண்டவர்க்கு
நித்தியத்தைத் தானே நிறுத்தலாற் — சித்தி

வடிவுறலா வின்பம் வருதலினற் சொன்னேன்
படலிகையா விக்குநிதிப் பை.

(கு - ரை) படலிகை - பெரும்பீர்க்கு; பெரும்பீர்க்கு, பத்தியத்துக்காகும்; உண்டவர்க்கு நீண்ட ஆயுளைத் தரும்; ஆகவே, சேமவைப்பெனத் தகும். நிதிப்பை - செல்வத்தின் பொதி.

## வங்கம்

226 வாதபித்த சேத்துமத்தின் வர்க்கமாய் நற்கறியாய்
ஆதரவாய் மெய்யை யடைதலால் — ஆதார
தங்கமென வாயுள்வே தத்தரெல்லா ரும்புகன்ருர்
வங்கமுயிர்க் காடகக்கு வை.

(கு - ரை) வங்கம் - கத்தரி; முக்குற்ற நோய்களுக்கினமாயினும், உணவுறவாகக் கறியாகும் ஆதரவாக உடம்பினுட்சேர்க்கப் படுதலால், மருத்துவ நூலோரும் ஆதாரமாகும் என்று கூறுவர்; ஆகவே வங்கமாகிய கத்தரியின் உணவு உயிர் நின்ற உடலுக்குப் பொன்னின் குவியலை யொக்கும்.

## உடை

227 தந்த வலியசைவு சன்னி யெயிறுகட்டல்
எந்த வலியு மிரியவே—சொந்த
முடைய மருத்துவரே யோதினர் நீதி
உடையின் பெருமையைநீ யுன்.

(கு - ரை) உடை-உடைவேல்; பல்வலி பல்லசைவு பல் வலியாலுண்டாம் சன்னி எயிறு வீக்கம் முதலான பல்லைப்பற்றி வரும் நோய்கள் நீங்க, உடைவேல் தக்கதாமென மருத்துவத்தைத் தமக்குரிமையாகக் கொண்டுள்ள வயித்தியர்களே கூறியுள்ளனர், ஆதலால் உடைவேலின் பெருமையை நன்கு மதித்திடுக என்பதாம்.

## வலம்புரி

228 கேட்ட வுடனேயின் கேளோ டகன்ருேடும்
தாட்டீக மெல்லாந் தவிடாகி—மீட்டு

நலம்புரிமெய் யாமிடத்தை நண்ணுதலில் லாமல்
வலம்புரியென் றோதிரநா மம்.

(கு - ரை) வலம்புரி - வலம்புரிக்காய்; வலம்புரிக்காயின் பே சொல்லக் கேட்டவுடனே நோய்கள் தம்மினத்துடன் அழிந்தொழியும்; நோயின் வல்லமையெல்லாந் துகளாகி மீண்டு நல்ல தன்மை யடைந்த உடம்பினை வந்து சாராவாம்.

## கதலி

229 சன்னிமுத லைக்கலிக்கச் சாரத்தா லேயகற்றிப்
பின்னு மெரியைப் பிரித்தோட்டி—வன்னி
முதலெனமெய்க் கேவலிமை முன்னுக் குதலாற்
கதலிநவிப் புள்ளினுக்குக் கல்.

(கு - ரை) கதலி-வாழை; வாழையின் சாரமாகிய உப்பை உபயோகிக்க கபசன்னியை வேரோடு களைந்து நீக்கியும், மேலும் வெப்பமில்லாமல் தீர்த்தும், தீயின் காரணமாகிய நீரைப்போல் உடலுக்கு வன்மை செய்தும், உதவுதலால் வாழை நோய்களாகிய பறவைகளை யோட்டுதற்கு வீசும் கல் போல்வதாம்.

## நனை

230 தெய்வீக மாகமணஞ் சேர வருபொழுதில்
உய்வீத மாக வுறுதியாம்—செய்கை
தனையின்பப் பாற்படுத்திச் சந்ததமுங் காட்ட
நனையின்பப் பூத்தொடுக்கு நார்.

(கு - ரை) நனை - நார்; ஈண்டுவாழையின் நார் கொள்க; திருமணக் காலத்தில் மணமக்கட்கு தாம்பத்திய உறவு பொருந்த முன்னதாக அணிந்து கொள்ளும் மணமாலையைத் தொடுப்பதற்கும் அத்தொடர்பால் அவர்கட்கின்பம் சேர ஆக்குதற்கும், எக்காலத்தும் யாவர்க்கும் உதவியாக விருப்பதால் வாழையின் நார் இன்பமாகிய மலரைத் தொடுக்கும் கருவியாகத் தொன்று தொட்டு வருவதாம்.

## பாவிரி

231 கொற்றவனை மாட்டிக் குணத்தைப் பிறிதாக்கி
மற்றவனையும் பழித்து மற்றதனைத் — தற்றுணையாய்

மேவிவரச் செய்திடலால் மேதினியி லேயுரிய
பாவிரியி லேயறிநுட் பம்.

(கு - ரை) பாவிரி - பாகல்; வாதத்தைப் போக்கி, பித்த நோயைத் தணித்து, கப நோய்க்குத் துணையாக மேற்பட்டபோது தணித்தும் குறைபட்டபோது சரிப்படுத்தித் தன்னிலையில் நிறுத்தவும் உதவியாகும்.

## சைவலம்

232 கொள்ளும் பலநோயுங் கொண்டு குணங்களெல்லாம்
விள்ளுமறிவை வெளியாக்கும் — கொள்ளுமின்பங்
கைவசமா கப்பரிவு காட்டு மகாமூலி
சைவலமென் றேதுமுனச் சம்.

(கு - ரை) சைவலம் - பாசி; பாசியின் பேரை உரைத்தவளவில் பலவகை நோய்களும் அச்சங்கொண்டு நீங்கும்; உடலுக்கு நற்குணங்களுண்டாம்; அறிவை மேம்படச் செய்யும்; இன்பங்கொள்ள உதவியாகும்; ஆகவே சைவலம் மகாமூலி என்றுரைக்கப்பட்டது.

## உற்பலம்

233 நோயி லலைந்தபின்பு நொந்த வுடல்தேற
நேய வவிழ்தம் நிலவுதல்போல் — ஆயாசத்
துர்ப்பலத்தைச் சேருடற்குத் துர்ப்பலமெ லாமாறி
உற்பலத்தா லின்பநிறை யும்.

(கு - ரை) உற்பலம் - கருநெய்தல்; நோயில் வருந்திய உடல் தேறவும் நல்ல அவிழ்தம் போல் உடலுக்கேற்படும் துர்ப்பலத்தையும் ஆயாசத்தையும் போக்கி மனமகிழ்ச்சியைத் தரும் கருநெய்தலாகிய உற்பலமென்பதாம்.

## மரிசம்

234 திரிமூர்த் திகளிற் றிடமாக முன்னே
அரிமூர்த்தி போலுவமை யாக — முறைமை
தருமுற் றிரிகடுகிற் றுனேமுன் னகும்
மரிசந் தனேயாக மம்.

(கு - ரை) மரிசம் - மிளகு; முத்தொழிற் கடவுடளரில் காப்புடைக் கடவுளாகிய நடுநின்ற திருமாலைச் சிறப்பித்துக் கூறுமாறு போல, திரிகடுகு என்பவற்றுள் நடுவண்நின்ற மிளகைச் சிறப்பித்துக் கூறுதல் மரபாயிற்று; முன்னையது ஆகம புராணங்கட்கும், பின்னையது மருத்துவ நூல்கட்குமுரிய மரபாம் என்க.

## அழற்காய்

235 வாதத்தை யும்மதனல் வந்தமைந்த வெம்மையையுஞ்
சீதத்தை யும்முறிவு செய்திடலால் — ஓது
வழக்கா யுலகிலெரி:வண்மை யெனினும்
அழற்காயை விட்டவரி யார்.

(கு - ரை) அழற்காய் - மிளகு; வாதத்தையும் கபத்தையும் நீக்கும்; உலகில் அழல்தன்மையுடைய பொருளாயினும் மிளகினை உபயோகிக்காமல் விட்டவரில்லை; விட்டவர் யார் என்பது விட்டவரியார் என வந்தது செய்யுள் விகாரம்.

## இங்கு

236 முன்னுரைக்குஞ் சன்னி முரணடங்கச் சாடிமடி
தன்னை யடிக்கத் தணலாகிப் — பன்னுகறி
தங்கு மணமாகிச் சாதகமா யாளுமென்று
இங்கு மகிமைமுறை யில்.

(கு - ரை) இங்கு - பெருங்காயம்; பெருங்காயம் மருத்துவ முறையில் சன்னி நோயை நீக்கும்; சோம்பலை வெப்பத்தை மிகுவித்துத்தடுக்கும்; உணவுடன் கூட்டும் கறிவகைகளில் நல்ல மணத்தைத் தந்து உருசியை மிகுவிக்கும்; இங்ஙனம் பலவகையில் அனுகூலமாகியிருத்தலால் இதன் பெருமை முறைமைக்கு மிஞ்சியதாம்.

## கந்தம்

237 நோய்மூலக் கோடை நொறுங்க வுடனிலத்திற்
பாயு நலமாம் பயிர்தழைக்கத் — தோயகுணந்
தந்து வளமை தழைக்க நலம்பெய்யுங்
கந்தமென வந்ததொரு கார்.

(கு - ரை) கந்தம் - பல பொருள் ஒரு சொல்; கார் - மேகம்; மேகம் கோடையை முறியடித்து நிலத்திலுண்டாம் பயிர்கள் செழிக்க மழைநீரைத் தந்து அப்பயிர்களை வளமுறச் செய்வது போல் கந்தம், நோயின் முதற்காரணத்தைத் தீர்த்து உடலிடத்து நலம் பெருக வளத்தைத் தரும், குளிர்ச்சியை யுதவி நன்மையைச் செய்யும் என்பதாம்; சிலேடைப் பொருளாகிய உருவக யணியாம்; கந்தம், கருணை, மணம், சந்தனம், கிழங்கு எனப் பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்; கருணைக்கிழங்கைக் கொண்டால் மூலக் கோடை - மூலநோயாகிய கோடை என்று கொள்க.

## இந்தனம்

238 எக்கியத்தி லும்புதிய யாகத் திலுமகஞ்செய்
முக்கியத்தி லும்மணஞ்செய் முன்றிலிலுந்—தொக்கவிழ்தம்
உந்திடத்தும் லோக முருகிடத்து மூளுதலால்
இந்தனந்தென் கீழிறைமெய் யில்.

(கு - ரை) இந்தனம் - விறகு; எக்கியம், யாகம், மகம் என்று பலதிறமாக இயற்றப்படும் ஓமங்களிலும், திருமணச் சடங்கியற்றும் மணவறை மண்டபத்தில் இயற்றும் வேள்வியிலும் சமிதையாகவும் பாஷாண வகைகளும், உலோக வகைகளும் தைலம் இரசாயன மாகியவை பாகஞ் செய்தற்கும் புடத்திற்கும் எரிப்பிற்கும் விறகாகவும் உபயோகப் பட்டு, தீ மூளுதற்கிடமாகி நிற்றலால் தென்கீழ்த்திசைக் கடவுளாகிய தீக்கடவுளுக்கு உறைவிடம் போன்றதாம் விறகு என்க. விறகின்றித் தீப்பயன் கொள்ள முடியாதென்பதாம்.

## சிவை

239 பீடமா மாடப் பெருமையாம் பின்னுமகா
கூடமாங் கூடக் கொலுவுமாம் — நாடு
பவனமா மாடரங்காம் பள்ளியறை யாகுஞ்
சிவையவிழ்த லோகமிவை சேர்.

(கு - ரை) சிவை - பல பொருள் தரும் ஒரு சொல்; பீடம் - ஆசனம், மாடம் - மாளிகை, கூடம் - (கூடுமிடம்) சபை, கொலு - சபையிற் கூடிய கூட்டம், பவனம் - வீடு, ஆடரங்கு - கூத்தியற்றுமிடம், பள்ளியறை - படுக்கையறை, அவிழ்தம் -

மருந்து, உலோகம் - பொன் முதலிய நவலோகங்கள், சிவையின் பொருளாகியவற்றைக் கூட்டி முடித்து ஏற்றவாறு பொருள் கொள்க.

## மோழை

240 அங்கியாம் பித்த வனலை யவிப்பதற்குக்
கங்கையாம் பின்னுங் கதவாகும் — பங்கமுறச்
சூழுமொரு வாயுச் சுழலுக் கனுதினமு
மோழைவினைத் தூறுக்கு மூள்.

(கு - ரை) மோழை - கஞ்சி; எப்பொழுதும் நோய்களாகிய செடிகளடர்ந்த காட்டையழிக்குந்தீயாகும்; பித்தமாகிய வெப்பத்தைத் தணிக்கும் கங்கை நீராகும்; கேடு தரும்படி மூண்டெழும் வாயுரோகத்தினை வரவொட்டாமல் அடைப்பதற்குக் கதவு போலாகும்.

## காமரம்

241 எக்கா லமுமவிய யின்று மதனைவென்று
புக்காரை நல்ல பொருளாக்கி — மிக்குணவும்
ஆமுறையா னுளு மடுக்களைப்பாங் காதலினுற்
காமரமா டேறிநுதற் கண்.

(கு - ரை) காமரம் - அடுப்பு; அவியுணவையுட் கொண்டும் காமனைவென்றும் அடைந்தோரைத் தன்னைப் போல் நல்ல பொருளாகச் செய்தும் ஏற்றமுறையால் சமையலறையினுள்ளிருத்தலால் காமரமாகிய அடுப்பில் மூட்டுந்தீ இடபவாகனராகிய சிவபெருமான் நெற்றிக்கண்ணை ஒப்பதாம்; காமவெழுச்சியின்போது வெப்பமாக நின்று அக்காமவுணர்ச்சி தீர்தற்கு வழிசெய்தலால் காமனை வெல்லுதல் தீக்கும் பொருந்துமாறு கொள்க.

## அடலை

242 நீரைரவச மாக்குதலால் நின்மலமாய்த் தோன்றுதலால்
ஆரு மதுகடைசி யாதலினுல் — வீரம்
உடைமையான் மெய்மையா மொண்மேன்மை யாலே
யடலை யரனுருவே யாம்.

(கு - ரை) அடலை - நீறு; (பற்பம்) நீரைத்தன்னுள் இழுத்துக் கொள்ளுதலாலும், சாணகமாகிய மலத்தன்மை மாறித் தோன்றுதலாலும், வலிமையுண்டாதலாலும், உண்மையாக மேன்மையை உடையதாதலாலும் நீறே சிவன்வடிவமாகும்; ஆருமது கடைசியாதலினால் என்பதற்கு உயிர்நீத்த யாவரும் எல்லாப் பொருளும் கடைசியாக நீறுவது எனவும், எல்லாவுயிரும் கடைசியில் அடைவது சிவனுருவெனவும் கொள்க; அடலை நீறுகும் யாவற்றிற்கும் பொதுவாகிய பெயர்; மருந்துகளில் பற்பத்துக்கே முழுவன்மையுண்டென இவ்வாசிரியரே "வீரத்தின் மிக்கது பற்பங்களே" என்று தரு எனும் நூலிற் கூறுதலால் வீரம் அடலைக்கும் பொருந்துமாறறிக.

## வீ

243 சஞ்சலமில் லாதறிவு தன்வசமுண் டாகுதலால்
நெஞ்ச மிலக்கி நிலைத்திடலால் — அஞ்சமனு
நீத வொருமை நிகழலால் நீக்கமென்னும்
வீதவத்துக் கானதுணை மெய்.

(கு - ரை) வீ - தன்னுணர்வு நீக்கம்; உடம்பு சலனப்படாமல் அறிவு தோன்றுதற்கிடமாம் மனத்தை விளக்கமுறச் செய்யும் தன்மையால்,சேட்டைகள் அஞ்சுமாறு உயிரியல்பு ஒருமைப்பாடுறச் செய்தலால், தன்னுணர்வற்றிருத்தலே தவத்தோர்க்கான துணையாம்; (உ - ம்) "என்னை மறந்திருந்தே னிறந்தே விட்டதிவ் வுடம்பே" எனவும், "செறிவற்றுலகோடுரை சிந்தையுமற்று, அறிவற்று அறியாமையும் அற்றதுவே" எனவும் வரும் அனுபூதிமாலைகிய அருணகிரியார் கூற்றும் மேலதற்குச் சான்றும்.

## இருந்தை

244 ஆகு முலோக மவிழ்தங் குடிநீர்தூள்
பாக முதலாகப் பண்டிதர்க்கு — வாகாய்ப்
பொருந்துவிப்ப தானநெருப் புக்கமைதி யாலே
இருந்தை யெரிவா யிரை.

(கு - ரை) இருந்தை - கரி; மருத்துவர்களுக்கு பற்பம் செந்தூரம் கட்டு களங்கு முதலிய உலோக சம்பந்தமான மருந்துகள், குடிநீர்,சூரணமாகியமருந்துகள், லேகியம், தைலம், கிருதம் முதலிய

மருந்துகள் ஆகிய எல்லாவற்றுக்கும் நல்ல முறையாகப் பாகம் செய்யவுதவுவதாகிய நெருப்புக்கு அமைந்ததாதலால் கரியே தீயினுக்கு உணவாகும்; கரியையிடமாகக் கொண்டு தீ மூண்டு மேற்கண்ட பாகங்கட்குதவியாகும் என்பதாம்.

## புலிங்கம்

245 தழைத்து வளர்ந்ததிக சாகைகளுண் டாகிச்
செழித்தபிற குண்டாகுஞ் சீரால் — கொழுத்துத்
துலங்கு மெழுநாவிற் றோன்று முருவப்
புலிங்க மதுமுளரிப் பூ.

(உ - ரை) புலிங்கம் - தீச்சுடர்; தழைப்புடன் வளர்ந்து மிக்க சுவாலைகளுடையதாகிச் செழித்தோங்கும் தீப்பிழம்பின் சீர்மையால் கொழுமை தோன்ற விளங்கும் அத்தீயினிடத்துத் தோன்றும் உருவுடைய தீப்பொறி தடாகத்திலுண்டாம் தாமரை பூத்த செங்கமல மலர் போல்வதாம்; மருத்துவ முறை முத்தீயினுள் கமலாக்கினியியல்பின் சிறப்பைக் கூறியவாறு.

## கழல்

246 கோசஞ் சுருங்கக் குடிலமிகு மன்னவனல்
வீசஞ் சுருங்காது மேலிட்ட—மோசம்
ஒழிய மருந்தாகி யொத்தாசை செய்யுங்
கழலா கியகழற்சிக் காய்.

(கு - ரை) கழல் - கழற்சிக்காய்; விண்வெளியிலுலவும் வாயுவாகிய வாதத்தின் அதிகரிப்பால் விந்து கெடாமலே, பருத்த அண்டத்தைச் சுருங்குமாறு செய்யும்; உடலுக்கேற்பட்ட மோசம் தீரும்படி மருந்தாகி உதவி செய்யும் கழற்சிக்காய் என்பதாம்.

## வான்

247 போலறுத்து நாட்டப் புலனுக் கிசைவாகி
ஞால மதிக்க நடத்துமே—மேலுளபுத்
தேள்வலிமை யென்று தெரிவித்துத் தெய்வீக
வாள்கம் மிருளையரி வாள்.

(கு - ரை) வாள் - ஒளி; ஒளியானது மேலுலகத்துள்ள தெய்வீக வலிமையாமென்னுமாறு தோன்றி, கட்புலனை விளங்கச் செய்யு மியைபுடையதாகி, உலகத்துயிர்கட்கு அவ்வுலகியற் பொருள்களை யறிவித்து நிகழா நிற்கும்; செறிந்த இருளை யரிவாள் போல் அறுத்து நீக்கி யாவற்றையும் தெரியக் காட்டுதலால் என்பதாம்.

## குழை

248 வன்மையென்றெல் லாரு மயங்காம லீரமுண்டு
மென்மையென்று நன்மை விளம்பவே—தன்மை
தழைய வுறுகமலந் தாபரித்த லாலே
குழையா லினிதுபெரு கும்.

(கு - ரை) குழை - சேறு; நீரினுள் இருக்கும் சேறுனது அழுத்தமானது என்று யாரும் தளராமல், மென்மையுடையதாமென்று கூறும்படியாகி, இயற்கை மணந்தழைய வளருந் தாமரைக் கொடியை ஆதாரமாகத் தாங்குதலால் தாமரை யினிதாக வளரா நிற்கும் என்பதாம், பங்கஜம் என்னும் தாமரையின் காரணப் பெயர் தெரிய விளக்கியவாறு, பங்கம்-சேறு; சம்-பிறப்பது .

## சுந்தரி

249 அத்தூளி னலே யகலும் பிணிகளெலாம்
பத்தியங்க ளொன்ருலும் பாழின்றி—நித்தியமு
மந்திரிபோற் றேனில் வனத்தினுண் மண்டலத்தில்
சுந்தரியா லாமீயந் தூள்.

(கு - ரை) சுந்தரி-சிறு செருப்படை; சிறு செருப்படையால் கார்ஈயம் பற்பமாம்; அப்பற்பத்தினல் எவ்வித பத்தியங்களாலும் கேடுபடாமல் நோய்களெல்லாந்தீரும்; தேனிலாவது துளசியிலாவது அனுபானித்துக் கொள்ளின் ஒரு மண்டலத்தில் உடல் நலமாகும் என்பதாம். வனம்-நீருமாம், சுந்தரி என்று மூஞ்சூறுக்கும் பெயராகும்.

## சீதை

250 காசத்தைப் போக்கிக் கபத்தை வழிப்படுத்தி
ராசற்குத் தன்னரசு நல்குதலால்—மாசற்ற

போது மதனைப் புறப்படுத்தித் தானுறலால்
சீதையொளி வேநேத் திரம்.

(கு - ரை) சீதை - பொன்னாங்கண்ணி; பொன்னாங்கண்ணி நேத்திரத்திற்கு ஒளியைத் தந்து நேத்திர காசத்தைப் போக்கியும், கபத்தையும் வாதத்தையும் தன்னிலைப்படுத்த உதவியும், மேற்கண்ட நோய்க் குற்றங்கள் நீங்கி நலப்பட்டபோது காமவின்பத்திற்கேதுவாகிய வீரிய பலத்தை அளித்துத் தான் மேன்மையடைதலால் நேத்திரம் போல்வதாம்; நேத்திரம் ஊசற்பொருள் கோளாக நிற்பதாம்.

## காயல்

251 வாருதிக்குப் பூஷணமாய் மன்னவனுக் காதரவாய்ச்
சாருகினு மன்னனுக்கே சத்துருவாஞ்—சேரவரு
சாயல்வகை யைந்தாகிச் சத்துவத்தை யேகாட்டும்
காய லிலவணச்சா கை.

(கு - ரை) காயல் - உப்பளம்; கடற்சார்பாமிடமாதலால் கடலுக்கணிகலம் போல்வதாயும், வாதத்துக்கு நட்பாயும் பகையாயும், ஐந்துவகைத் தோற்ற முடையதாகியும், சுவையால் சத்துவ குணத்தையே மிகுவிப்பதாகும். ஐந்துவகை-ஐந்துவகை உப்பு; காயல்-கடற்கானல், கடற்கானலில் உப்பளம் செயற்கையாக அமையும்.

## தோல்

252 காவா யுலவுபரி காரிகளுக் காதரவாம்
நாவா யுரையை நடத்தவே - பாவகமா
நூல்வா யவிழ்த்த நுகர்வார்க் கினிதுகட்டும்
தோல்வாய்நீ ராலுப்பஞ் சும்.

(கு - ரை) தோல் - யானை; நோய் தீர்த்துக் காத்தலையே தொழிலாக உலவும் வைத்தியர்களுக்காதரவாகி அவர் தம் வாயுரையால் மருத்துவத்தைப் பரவச் செய்தற்கியன்ற பா வடிவில் அமைந்த மருத்துவ நூலின் முறைகளாகவுள்ள அவிழ்தங்களை நுகர்வார்க்கு அவ் அவிழ்தங்களை ஆக்கவல்ல உப்பைந்தையும் யானையின் வாய் நீர்கட்டும் என்பதாம்.

## புணரி

253 உண்டா லுடல்வலிமை யுண்டா முறுதாது
முண்டா மறிவு முடுக்காகும் — பண்டு
பணுமுறைமை கையறிந்த பண்டிதர்க ளாலே
புணரியற லானீரும் பொன்.

(கு - ரை) புணரி - கடல்; பழமையாகிய கைமுறைச் செய்கை தேர்ந்த மருத்துவர்கள் முறையாகச் செய்தலால் கடல் நீரால் பொன் பற்பமாகும்; அப்பற்பத்தை உண்டால் உடல் வலிமையுண்டாம்; ஏற்றவாறு வீரிய விருத்தி வலுவடையும்; அறிவு மிகவும் மிடுக்குடையதாகத் துலங்கும் என்பதாம்.

## மங்கலர்

254 கேசத்தைக் கண்டித்துக் கிட்டச் சுகமியற்றி
மோசவமைச்சை முடுக்கியே — நேசத்தைத்
தங்க வுயிர்நிலைக்குத் தாபித் திடலாலே
மங்கலரோ திக்கிகலா வார்.

(கு - ரை) மங்கலர் - நாவிதர்; நாவிதராவார் கேசத்திற்குப் பகையாவார்; எவ்வாறெனில், கேசத்தை நீக்கியும், அதனால் உடலுக்குச் சுகம் பெற வாக்கியும் மயிர்கழிவினையால் பித்தம் மீதூரும்படிச் செய்தும், நட்பை வளர உடம்புக்கு நிலைபெறுத்தலால் என்பதாம்.

## வால்

255 கள்ள மடையார் கருத்தைப்போ லீசன்னி
உள்ள படிபோ லுனுமவிழ்த — வள்ளலெனப்
பால்வெள்ளை சுவேதமுதல் பாரதிமெய் சுக்கிலமெய்
வால்தவளம் பாண்டுவெண் மை.

(கு - ரை) வால் - தூய்மை. கள்ளச் சிந்தனையிலாதார் நெஞ்சம், சன்னிநீங்குமாறு உட்கொள்ளும் பற்பம், பால், வெள்ளை, சுவேதம், கலைமகளுருவம், இந்திரியத்தின் நிறம், வால், தவளம், பாண்டு, வெண்மை என்பன தூயவெள்ளையின் பரியாயப் பெயர்களாம்.

### மது

256 தன்னை யெவரறிவார் சற்பனைசெய் யுஞ்சலநோய்
சன்னிமுதல் நாசிவழிச் சாடியே — பின்னு
முதுநோயை யுஞ்சலமாய் மூக்காற் கழற்றும்
மதுபீசத் தூளினுண் மை.

(கு - ரை) மது - இருப்பை; மதுபீசத்தூள் - இருப்பைப் பிண்ணாக்குத்தூள், சதி செய்யும் நீர்ப்பிணிகளுடன் சன்னி நோயையும் ஆக்கிராண உபயோகத்தின் வழியால் மூக்குத் துளையின் வழியாக நீக்கும்.

### அங்கி

257 ஆகி யிருந்து மவற்கே பகையாகி
வேகமிகு தந்திரியை வேருக்கி — ஓகைமிகப்
பொங்க வமைச்சனுக்குப் புந்திமகி ழத்துணைசெய்
அங்கியர சற்குநே யம்.

(கு - ரை) அங்கி - தீ; (வெப்பம்) வெம்மையானது வாதத் திற்கு நட்பாகவும் அவ்வாதம் மீறிய காலத்துப் பகையுமாய் அடக்கியும் கடுமை காட்டும் பித்தத்தை வேறுபடுத்தி நீக்கியும் அப்பித்தம் மீறிய விடத்துத் துணையுமாகி நிற்கும்.

### இல்லம்

258 வேற்றுமைகள் செய்திடல்போல் வேந்துமுதல் மூவரையுந்
தேற்று மிதுநிசம்பார் திட்டாந்தம் — போற்றுணிமை
சொல்லு மருத்துவர்கள் சோதனைநூ லாதிமுறை
இல்லமண்ம யக்கமுறை யில்.

(கு - ரை) இல்லம் - தேற்றான்விதை; தேற்றும் வித்து மண் கலந்த நீரைத் தெளிவிக்குமாறு போல முக்குற்றங்களையும் வேருக நீக்கி உடம்பைத் தெளிவடையச் செய்யும் என்பதாம். இதற்குத் திருட்டாந்தம் நூல்வழியாராய்ச்சி மிக்க மருத்துவர் செய்தும் உரைத்தும் வரும் துணிவுடைமையேயாம்.

## வில்

259 மாத்திரையாய் நோயினத்தை மாட்டி யுயிர்நிலைக்குப்
பாத்திரமா யாதரிக்கும் பண்டிதரே — நேர்த்தியதைச்
சொல்தேரன் வேறே சுருதி முறையிடுமே
வில்வலியை நீரறிகு வீர்.

(கு - ரை) வில் - மனோசிலை; மாத்திரை வடிவில் நோய்க் கணங்களை அழித்து நீக்கி உயிர்க்குறைவிடமாக உடம்பினைப் பாதுகாக்கும். இம்முறையை மருத்துவ நூல்களே கூறுவதுமன்றி, தேரனாகிய யானும் சொல்வேன்; ஆகவே பண்டிதர்களே மனோ சிலையின் வன்மையை உறுதியாக அறிமின் என்பதாம்.

## மல்லி

260 சேனாப தியமைச்சர் சேவிக்க நன்முறைமை
ஆனா திடலா லனுதினமும் — ஊனிலையை
நல்ல வலியுடைத்தாய் நாட்டுதலால் நாட்டில்வளர்
மல்லி யரசனுடை மை.

(கு - ) மல்லி - கொத்தமல்லி; சேத்துமமும் பித்தமும் பணிந்து தணியும்படி நல்ல முறைமையை நீங்காது செய்து வருதலாலும், உடம்பினை நல்ல வன்மையுடையதாக நிலைபெறுத் துதலாலும், நம் நாட்டில் பயிரிடப் பட்டு வளரும் கொத்தமல்லி வாதத்துக்குரியதாகச் சிறந்த பொருளாம் என்க.

## மை

261 ஆதிபரை காளி யரிவண்ண மிப்படியென்
றோதி யுலகிற் குணர்த்துதல்போல் — நீதிமுறை
யைநீ ணிலமியம்ப லாகியகா ளிங்கமணி
மைநீல்க றுப்புகரு மை.

(கு - ரை) மை - ஒருபொருட் பன்மொழி; முதல்வியாகிய பராசத்தி, காளி, திருமால் ஆகிய இவர்கள் உருவண்ணம் இங்ஙனமாமென்று உலகினர் அறிய உண்மையாகக் காட்டுவன போலும்; காளிங்கம், மணி, மை, நீல், கறுப்பு, கருமை என்பன

வாக வரும் பெயர்களுடைய நிறப்பண்பு குறித்த சொற்கள் என்பதாம். நீலம் - நீல் எனக் கடைகுறைந்து நின்றது.

### அசமதாகம்

262 நாய்முயலைப் பற்றுதல்போ னுடுமுன்னே சேத்துமத்தைப்
போய்மடிக்கு நோயைப் பொடியாக்குங் — காய
நிசமதா கப்படிமேல் நீடித்து நிற்க
அசமதா கங்குளிர்மை யை.

(கு - ரை) அசமதாகம் - ஓமம்; வேட்டைநாய் முயலைப்பற்றுவது போல், ஓமம் உடம்பிலுள்ள சீதளத்தை அழித்து நீக்கிஅதன் காரியமான சேத்தும நோயையும் நீக்கும். உடம்பினை நிலையுடையதாக உலகில் நீடித்து நிற்கச் செய்யும்.

### திரிபுரை

263 ஏரண்ட நெய்ததி விட்டெரித்துண் டாலுமன்றி
வேருண்டை யாக்கி விழுங்கிடினும் — நேரே
அரசு மமைச்சு மடிபற்றி நிற்கத்
திரிபுரைசேட் பப்பிணிக்குத் தீ.

(கு - ரை) திரிபுரை-சத்திச்சாரணை; ஆமணக்கெண்ணெயுடன் தயிர் சேர்த்து, சத்திச்சாரணையுங் கூட்டி எரித்துப் பக்குவமாக்கியுண்ணினும், அல்லது வேரை அரைத்து கற்கமாக உட்கொண்டு விழுங்கினும் வாதமும் பித்தமும் தணிந்து நிற்கும்படிச் செய்து சேத்துமத்தை நெருப்பைப்போல் அழித்து நீக்கும் என்பதாம்.

### காஞ்சிரம்

264 பிடிப்பு விடவாதப் பேய்நலிவு செய்யும்
மடிப்பு வினையெவையு மாட்டி—உடற்கதிக
மாஞ்சிலது சித்திகளும் வாய்க்கப் பரவுதலாற்
காஞ்சிரமா காசகுளி கை.

(கு - ரை) காஞ்சிரம்-எட்டி; கையாள்பவருக்குச் சிலபல சித்திகளுண்டாகுமாறு பயன் செய்வதால் காஞ்சிரமாகிய எட்டியைக் ககன குளிகை (ஒப்பு) ஆகவே கொள்ளத் தகும்; அவ்வித

மான காஞ்சிரம் பேய் போல் நலிவு செய்யும் வாதப் பிடிப்பு முடக்கு ஆகிய நோய்களை யகற்றி விடநோயைத் தீர்த்து உடலுக் கதிக நன்மையைக் கொடுக்கும் என்பதாம்.

## கணக்கு

265 பண்டிதர் நோயா விளைப்பார்க் கவர்க்கிசையப்
பண்டிதங்க ளோதப் பரிகார--வுண்டி
இணக்கத் துடனுரைக்க வேலு முறையாற்
கணக்க றிவசமதி கம்.

(கு - ரை) கணக்கு-எண்ணியறியு முறை; நோயினல் வருந் தும் பிணியாளர்க்கு இசையுமாறு வயித்திய முறைகளை எடுத்துக் கூறவும்; மருத்துவம் செய்யவும், பத்தியவுணவு வகைகளைக் கிரமந் தப்பாமல் கூறவும் அமைவதாகிய முறைமை யுடையதாகையால் மேற்கண்ட பண்டிதர்க்கு மேற்கூறிய முறைகளை அறிந்து கணக் காகக் கூறுமியல்பு வசமாதல் மேன்மையுடையதாம்.

## பகண்டை

266 பாரில்நவ நீதத்தைப் பற்பமாக் கிப்பினுப
காரியென மேவுபரி காரிகட்கு—வீரம்
உகந்தபடி காட்டி யோட்டுதலால் நோயைப்
பகண்டைநவ நீததீ பம்.

(கு - ரை) பகண்டை - இலந்தை; பகண்டை உலகில் மருத்து வர்களுக்கு உபகாரமுடையதாகி, மருந்தின் வலிமையை விளங்கச் செய்து, வெண்ணெயை உருகாமல் இறுகிப் பற்பமாம்படிக் கட்டி நீருக்கி அம்மருந்தால் பல நோய்களையும் போக்குதலால், இப் பகண்டை புதியதோர் நெய்விளக்குப் போல்வதாம்; நவநீதம்- வெண்ணெய், புதுமை; பகண்டை - பகன்றை எனவும் வழங்கும்.

## ஆகவம்

267 அஞ்சு நிலத்தினிலே யஞ்சு நிலமாகி
வெஞ்சமரை நாளும் விளைத்திட்டுக்—கொஞ்சுதையைப்
போகவடி வாளர்கள் பூசிக்க நீடுதலால்
ஆகவம்விந் தைக்கிருக்கை யாம்.

(கு - ரை) ஆகவம்-போர்க்களம்; முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து நிலங்களில் அச்சந்தரு நிலமாகிய நடுநின்ற பாலை நிலமானது போர் புரிவார்க்கியன்ற சமர்க்களமாகி அன்புதவும் அருள்நீங்கும் இயல்புடைய ராகிய போர்வீரர் வழிபாடாற்றுமிடமாதலால் வீரமகளின் உறைவிடமாம்.

## ஆவம்

268 புற்றிலே நாளும் புயங்க மிருப்பதுபோல்
வெற்றிகொளுங் கோலிருக்க விட்டதனுற்—பற்றலரை
மேவ வுருதவ்கை வீரத்தை நாட்டவிசை
ஆவமம்ப ருத்தூணி யாம்.

(கு - ரை) ஆவம் - அம்பருத்தூணி; பாம்புகளுறைவதற்கிடமாகிய புற்றினைப்போல, பகைவரை வெற்றிகொள்ளும் பாணங்கள் சேர்ந்த கூடாகி, பகைவெல்லும் வீரர்களுக்கு வீரத்தை நிலைநிறுத்திப் புகழைத்தரும் சிறப்புடையதாம் அம்பருத்தூணியாகிய ஆவநாழிகை என்பதாம்.

## தவர்

269 பன்னிரண்டி லொன்ருகிப் பார்த்திபர்கை மேலாகிக்
கன்னியர்க்கு மன்றனிலை காட்டியே—பின்னும்
உவமான மிப்புவிமே லோதவென்ருல் மாதே
தவர்மனிதர் மெய்வடிவு தான்.

(கு - ரை) தவர் - வில்; இராசிகள் பன்னிரண்டில் (தனுசு) ஒன்ருகவும், உலகாளும் வேந்தர்தம் வன்மை தோன்றக் கையின் கண் எப்பொழுதும் வைத்திருப்பதுமாகி, (வில்) எண்வகை மணங்களுள் அசுரமணமாகிய, பன்றி, மீன் முதலிய பொறிகளை எய்து வீரர்கள் மணம்புரிய, கன்னிமாடத்துறையும் மங்கையர்க்குத் திருமணம் முடிக்கும் கருவியாகி, பின்னரும் தனக்கு உவமை கூற வேறு ஒன்றுமிலதாக மக்கள் உடம்பே அப்பெயர் பெறுதலால் உவமையாகும்படியான வில்லெனும் தனுவே சிறப்புடையதாம். தனு-தவர்; தனு-உடம்பு; தனுசு-ஓர் இலக்கினம்.

## மந்தன்

270 சென்மப் பகையான சேரலரு நல்விருந்தாய்
நன்மைத் திரராக நல்குதலாற் — புன்மருந்துஞ்
சொந்த முறத்தரலாற் றுய்த்தவருக் கப்பொழுதே
மந்தனுள் வாரமகி மை.

(கு - ரை) மந்தன் - சனிக்கோள்; பிறவிப் பகையான பகைவரும் விருந்தினராகி நட்புடையராகும்படிச் செய்தலாலும் பக்குவமுறை தவறிய மருந்தாயினும் நோய்க்கேற்புடையதாகச் செய்து நோயைத் தீர்த்தலாலும், மருந்தை அருந்தியவர்க்கு அப்பொழுதே நன்மை பயத்தலாலும் சனிக்கிழமை மருந்துட்கொள்வதற்கும், விருந்தினரை உபசரித்தற்கும் பிற நல்ல செயல்களுக்கும் சிறப்புடையதாகும், எனவே மகிமையுடையதாம்.

## மகிபாலன்

271 அற்பங் கினஞ்சவா மாகாமற் போய்விடினும்
பற்பங் குளிகை பருகவே—நற்பேர்
மிகுதலா னேயை விரட்டலாற் சொன்னேன்
மகிபாலன் நாளுமுரி மை.

(கு - ரை) மகிபாலன் - அரசன்; தேவகுருவாகிய வியாழனது வாரம் ஆகிய கிழமையும் மேற்கண்ட சனிநாள் போல், பற்பம், குளிகை, கஷாயம் ஆகிய அவிழ்தங்கள் உட்கொள்ள நல்ல பெருமை தருதலாலும், நோயை நீக்குதலாலும் சனி நாளிற் குறைந்த தன்றெனத் துணிந்து கூறுவேன் என்பதாம்.

## அந்தணன்

272 தன்மந் திரிபோற் றலைமைவிபு தர்களிலப்
பன்மந் திரிப்பேர் படைத்தலாற்—பொன்போல
வுந்தலைமை யாய்ச்சீவ னுத்தமன்வேந் தன்பரவும்
அந்தணனு சான்குருவை யன்.

(கு - ரை) அந்தணன் - மறையோதுவோன்; தேவமருத்துவனாகிய தன்மந்திரியைப்போல் உலகில் உள்ள அந்தணர் மரபினருள், அரசவை அமைச்சுரிமை பெறுவோரும், உலோகங்களில்

தலைமையாகிய பொன்னைப்போல் மறையோதுதலின் ஏனையோரிற் சிறப்புடையோரும் ஆகி அழகிய தண்மை பூண்டு உயிர்களிடத் தன்புடையராகிய அந்தணர் வேந்தனும் வணங்கும் தன்மையால் ஆசான், குரு, ஐயன் என்று பெயர் பெறுவர் என்பதாம்.

## அயம்

273 கருமை யொழிந்துசெம்மை காணவெண்மை யாகி
அருமை மகிமைபடைத் தாக்கைக் — கிருமைப்
பயனுகி யெல்லாம் பயக்கு முரிமை
அயமெய்க் குறுதியை யா.

(கு - ரை) அயம் - இரும்பு; புடமிடுங்கால் தன் இயல்பாகிய கருமை நிறம் நீங்கித் தீயின் நிறமாகிய செந்நிறம் பெற்றுத் தோன்றிப்பின் பற்பமாயபோது வெண்ணிறமுடையதாய், அரிய மகிமை தோன்ற உடம்புக்கு வலிமையும் அழகுமாகிய இருவகைப் பயனுமுதவி எல்லா நன்மைகளுக்கும் ஏதுவாகப் பொருந்திய இரும்பே உடற்குறுதி தருவதாகும் என்பதாம்.

## மழைக்கிறை

274 முன்னை வார முறையாற் பிடகருக்குப்
பின்னுண்மை யெல்லாம் பெருக்குதலால்—உன்னும்
வழக்கை யணுகுதலால் வாழவிழ்தத் தாலே
மழைக்கிறையா லுண்டுபெரு மை.

(கு - ரை) மழைக்கிறை - சூரியன்; சூரியவெப்பத்தால் கடல் நீர் ஆவியாகிப்பின் மழையாகப் பெய்தலால் பகலவன் மழைக் கிறைவனும், கிழமைகளில் முதல் நாளாகிய முறைமையுடைமை யாலும், மருத்துவர்களுக்கு மருத்துவ முறை செய்யப் பலவகை யில் உதவி செய்தலாலும், நாள்தோறும் காலையில் பலரும் போற்றி வழிபடும் வழக்கத்தைப் பொருந்துதலாலும், அவிழ்தங்கள் பலவற் றிற்கும் உற்பத்தி நிலையமாதலாலும் ஞாயிருகிய சூரியனுல் உல கிற்குப் பெருமை மிக உண்டாம். மழைக்கிறை - இந்திரனுமென்று கொண்டு அதற்கேற்பப் பொருள் கூறுமாறு பொருத்தமாகத் தோன்றவில்லை. பொருந்துமேல் அப்பொருளுங் கொள்க.

## மகரம்

275 நெய்த னிலத்தி னெடிது வருணனுக்குச்
செய்து கனிவாய்ச் சிலபண்பு — நெய்தல்
மகர மணிமயிலை வாணிபஞ்செய் மேன்மை
மகர ரெனும்பரத வர்.

(கு - ரை) மகரர் - பரதவர்; நெய்தனில மாக்களாகிய பரதவர் அந்நிலத்துக் கடவுளாகிய வருணனுக்குப் பலவகை வழிபாடுகள் அன்பு கனியப்பண்புடனுற்றியும் மகரம் மயிலை யென்னும் மீன்வகைகளையும் முத்து, பவளம், சங்கு முதலிய கடல்படு திரவியங்களையும் வாணிகம் செய்யும் சிறப்புடையார் என்பதாம்.

## குயர்

276 இந்தனமா கும்விறகை யெந்நாளுங் கொண்டுவந்து
செந்தனலுக் குண்ணச் செலுத்தலாற் — செந்தீ
உயர்வதுநா டோறுஞ்செய் யுஞ்செயலி னாலே
குயர்கனலிக் குண்டியரா கும்.

(கு - ரை) குயர் - குயவர்; வேட்கோவர் விறகினை நாள் தோறும் கொண்டு வந்து சேர்த்து, மட்பாண்டம் செங்கல் முதலியவை சுடும் சுள்ளை காளவாய்களில் தீ மூட்டித் தீக்குணவாக இடுதலாலும், செந்நிறமான தீயை நாளும் வளரச்செய்கையினாலும் குயவர் -தீக்கடவுளுக்கு உணவிடும் பண்பினராவர்.

## குழுக்கள்

277 ஆண்பெண் சிறார்குழுமி யாகுமிகு பான்மையென்று
மாண்பெண் பகுதி வழக்கத்தாற் — காண்போர்
தழைக்கப் பரவுதிறற் றன்மைநனி யாலே
குழுக்கள் சனமிகையா கும்.

(கு - ரை) குழுக்கள் - மக்கட்கூட்டம்; ஆடவர் மகளிர் சிறுமகார் ஆகியோரின் தொகை பெருகி நிறையுறுவதென்று குறித்த காலங்களில் மக்கள்தொகையை எண்ணிக் கணக்கிடும் தொகைமென்மேற் பெருகி வளர்ந்து வரும் வழக்கத்தால், அவ்வப்போது

அத்தொகைக் கணக்கை உணர்வோர் பலராக மிகுமாறும் பெருகி நிறைவது மக்கட் பரப்பின் இயல்பாம்.

## நந்தியர்

278 வசனஞ் சகுனம் வயித்திய மிப்பேர்
இசையுங் கருமங்கட் கெல்லாம் — வசையாகு
முந்தியெதி ராகின் மூட்டுதில காதகராம்
நந்தியரா காதுவரு நல்.

(கு - ரை) நந்தியர் - தைலவாணிகர்; நல்லுரை, நன்னிமித்தம், புதிதாகவியற்றும் மருத்துவம் ஆகிய இத்தன்மையுடைய நற்காரியங்கட் கெல்லாம் எதிர்ப்படினும் குற்றமாகும்படி பழமைக் காலந்தொட்டு மதிக்கப் படுபவராகிய, எள்ளினின்று தைலமிறக்குந் தொழிலையுடையோராம் வாணிகர் விலக்கப்பட்டோராகக் கருதப்படுவர்.

## காழியர்

279 ஓரிசைவா யாகுமென வோதுமுறை வாகடங்கள்
ஆர்கலிசூ ழம்புவியி லாண்மையாய் — ஓவுபெறு
தாழியொடு சிற்றகலுந் தாம்பாண்ட மாதலெனக்
காழியரும் பண்டிதரா கல்.

(கு - ரை) காழியர் - வண்ணர்; வண்ணர் மருத்துவராதற் குரியராகார் என வாகட நூல்களோது முறைமையுண்டேனும், கடல் சூழ்ந்தவுலகில் தாழியாகிய பெருமிடாவினைப் போல் சிறிய அகலும் பாண்டம் என்னும் பெயர் பெறுமாறு போல் அவர் மருத்துவராகவும் காணப்படுவர், ஆயினும் அவர் செயும் மருத்துவம் சீவியத்தின் பொருட்டேயாம், பாண்டித்திய முடையதாகா தென்பதாம்.

## தொறுவர்

280 கோவலர்கோ பாலரண்டர் கோவிந்த ரான்வல்லோர்
ஆவ்வரர் முல்லையாளர் வற்சர — மேவு
கறவர் குடவர் கபிலரரி நேயர்
தொறுவர் பொதுவரமு தோர்.

(கு - ரை) தொறுவர் - இடையர்; கோவலர், கோபாலர், அண்டர், கோவிந்தர், ஆன்வல்லோர், ஆவுவரர், முல்லையாளர், வற்சரமேவுகறவர், குடவர், கபிலர், அரிநேயர், தொறுவர், பொதுவர், அமுதோர் என வருவன இடையர் பெயர்களாம். ஆவுவரர் - ஆக்களைவரமாக வுடையர்; வற்சரமேவுகறவர் - ஆவினின்று சுரக்கும் பாலைக் கறப்பவர்; அரிநேயர் - திருமாலிடத் தன்புடையோர்; அமுதர் - பாலுடையவர்; அமுது-பால்; கபிலர்- பசுக்களையுடையோர்; கபிலை - ஓர் வகை நிறமுடைய பசு.

## பந்தல்

281 வீக்க லசைத்தல் விகுசிமிழ்த்தல் பந்தித்தல்
ஆக்க லிவைக ளனைத்துமே — யாக்கமிகப்
பெந்த முளதாகப் பேரா தரவாகப்
பந்த லுரனுறுதிட் பம்.

(கு - ரை) பந்தல் - விதானம்; (மேற்கட்டி) பந்தலுக்குத் திட்பமாவன, வீக்கல் - வரிதல், அசைத்தல் - கட்டுதல், விகுசிமிழ்த்தல் - இறுக்கி வலித்தல், பந்தித்தல் - ஒன்றோடொன்றைப் பிணைத்துச் சேர்த்தல், ஆக்கல் - இத்தொழில்களால் ஆக்கிய அமைப்பு; ஆகிய இவ்வகைகளால் உறுதியாக, நிலைபேறுடையதாக, பெரிய ஆதரவுடையதாக வமைக்கப் பெறுவது பந்தலாகிய விதானமாம்.

## வேலிப்பருத்தி

282 சாறு பிழிந்ததிலே சாம்பிராணி சுக்கரைத்தட்டு
ஆறு திடுபற் றுமைநோய்—நீருக்கும்
ஏலத்தி னோடிடு நீரேற்றச் சேட்பமற
வேலிப் பருத்தியிலை வேர்.

(கு - ரை) வேலிப் பருத்தி - உத்தாமணி; உத்தாமணியின் இலையையும், வேரையும் நருக்கிச் சாறு பிழிந்து அதனோடு சாம்பிராணி சுக்கு இரண்டையும் அரைத்துச் சுடவைத்து, சூடாறுமுன் பற்றுப்போட சன்னி நோயை நீருக்கும்; ஏலத்தோடு கூட்டியரைத்துக் காய்ச்சியிட நீர்க்கோவையையும் கபத்தையும் நீக்கும் என்பதாம்.

## நேயம்

283 ஆச்சியங் துப்புமுத லான பெயர்களுடன்
வாச்ச துணையாய் வளர்த்துடம்பை—ஆச்சரிய
மேய்வுர மாகியே யென்று முரமாக்கும்
நேயமவி யாகார நெய்.

(கு - ரை) நேயம் - ஆவின் நெய்; தேவருணவாக ஓமத்திற் சொரியும் ஆச்சியம், துப்பு முதலான பெயர்களுடையதான நெய், ஏற்ற துணையாக உடம்பை வளர்த்து, ஆச்சரியப்படத் தக்கதாக உடல்வலியைத் தந்து என்றும் உடம்புக்கு வளமைதருமுணவாக விருக்கும்.

## நலநெல்லி

284 மெய்யழிவு போக்கி வினையை யகற்றுவிக்குந்
தையலர்க்கு வேளாண்மை தாபிக்கச்—செய்விக்கும்
பலமா னதுவளரப் பண்ணுங் கிடைத்தால்
நலநெல்லி கன்றிநொச்சி நண்.

(கு - ரை) நல நெல்லி - நல்ல நெல்லி; உடம்பின் மெலிவை நீக்கி நோயைப் போக்குவிக்கும்; மங்கையர்க்கு காம நுகர்ச்சியை மிகுதிப்படுத்தும் உடல் வன்மை வளரப் பண்ணும்; (அதியமானஞ்சி ஔவைக்களித்ததும் (புற-நா) மணிமேகலையில் காயசண்டிகை (வித்தியாதர மங்கை) காலால் சிதைத்துச் சாபமேற்றதும், திரௌபதிக்காக அர்ச்சுனன் அம்பெய்து வீழ்த்திப் பின் கண்ணன் அதனை மரத்திற் பொருந்தும்படி செய்ததும் இங்குக் கூறிய நலநெல்லிக் கனியேயாகும். நல நெல்லி கிடைத்தால் மேற்சொல்லிய நன்மைகள் யாவும் கைகூடும் எனவுரைப்பதும் காண்க.)

## சேறு

285 ஆறு சுவையி லதிகமிகை யானாலும்
வீறுகின்ற தந்திரிக்கே வீறளித்து—மீறுதலாற்
கூறு சலமே குதித்து மருவவளர்
சேறு கபப்பயிர்க்குச் செய்.

(கு - ரை) சேறு - ஐங்கூட்டமுது; (பஞ்சாமிர்த பான அறுசுவை மிக்கதாய் நாவிற்கு இனிப்புச் சுவ

படத் தருமாயினும், மேம்படுகின்ற கபப்பிணிக்கே மேலும் மேம்பாடளித்துக் குளிர்ச்சியை மிகுவித்து நிறைவுறச் செய்யும் பஞ்சாமிர்தம் கபப் பிணியாகிய பயிருக்கு விளைநிலம் போல்வதாம்.

## திணை

286 அஞ்சுவகை யாயத துக்கிறைவே ரூக
விஞ்சு மெனினும் விபரமாய்க்—கொஞ்சு
வணமாகி மூவருக்கும் வாய்த்ததல மாகுந்
திணையேற்று வாகனர்க்குத் தேர்.

(கு - ரை) திணை - நிலம்; நிலமானது முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல், மருதம் என்னும் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே முறையே திருமால், முருகன், காடுகிழாள், வருணன், இந்திரன் ஆகியோரைத் தலைவர்களாகப் பெற்றிருப்பினும், மூவராகிய வாத பித்த சேத்துமங்கட் குறைவிடமாகும். நெய்தலில் வாதம், முல்லையில் பித்தம், குறிஞ்சியில் சேத்துமம் விருத்தியாகும், மருதத்தில் முக்குற்றமும் அடங்கும், பாலையில் அம்மூன்றும் விருத்தியடையும். அத்துடன் காளையூர்தி யாகிய சிவபெருமானுக்குத் தேருமாம்; சிவபெருமான் முப்புரமெரிக்கச் சென்ற காலை நிலவுலகைத் தேராக நியமித்துச் சென்றார் என்பது புராணவரலாறு.

## கந்தி

287 கோலமெனப் பேர்புனைந்து கோபித்துத் தன்குணமா
யால மிகவே யணுகுமே—ஞாலமிசை
முந்துகப வாதபித்த மூன்றிற்கு மூன்ருகிக்
கந்தியென வோதுபுசங் கம்.

(கு - ரை) கந்தியென்று மருத்துவர் கூறும் புசங்கம் கோலமெனவும் பேர் கொண்டு உடம்பினிடத்து அநாதியாகவேதோன்றி ஆதரித்தும் நோய்ப்படுத்தியும் அழித்தும் வருகின்ற முக்குற்றங்களாகிய வாத பித்த சேத்துமங்கள் நிலை பிசகுங்கால் முறையே அம்மூன்றினுக்கும் மூன்ருகி அவற்றின் மிகை குறைகளை நீக்கிச் சமப்படுத்தி உடம்பைக் காக்குமென்பதாம். கந்தி-கமுகு; கோலம்-இலந்தை; புசங்கம்-பாம்பு; இவை முறையே கமுகு வாதத்திற்கும், இலந்தை பித்தத்திற்கும், பாம்பு சேத்துமத்திற்குமாகக் கொள்க.

பாம்பின் நஞ்சு கலந்து செய்யப்பட்ட அவிழ்தங்களே சேத்தும மேலிட்ட சன்னி முதலிய மரணத்தை விளேக்கும் நோய்கட்கு ஊட்டுவதென்பதாம்.

## அல்லம்

288 விட்டுப் பிரிவார் வெறிகொண்டா ராஞலும்
கெட்டுப் படாதகி லேசத்தால் — துட்டனெனும்
பொல்லாத சேட்பப் புலேயனது புன்மையடும்
அல்லரச நல்லமுதை யார்.

(கு - ரை) அல்லம் - இஞ்சி; கட்டுப்படாத கிலேசமனத்தால் பித்துக் கொண்டவராயினும் விட்டுப் பிரிவார் யார்? துட்டனுகிய பொல்லாத சேத்தும மென்னும் புலேயனது தீமையை யகற்றுவதாகிய இஞ்சிரச மென்னும் நல்ல அமுதை யொத்த நல் மருந்தை என்பதாம். மேற்கூறிய மனக்கிலேசம் பைத்தியம் வெறி கபப் பிணிகளாகியவற்றிற்குத் தீர்க்கு மருந்தாகப் பயன் படுமென்பதாம். அல்லரசம் - இஞ்சிச்சாறு.

## நாகவல்லி

289 ஓடிப் பிடித்தங் கொறுத்து நொறுக்குதலாற்
றேடி யதனேத் தினமுமே — கோடுமஞ்ஞர்
போகவல்லி யன்னவர்தம் போகவலி போல்விளங்கும்
நாகவல்லி சேத்துமநோய் :நாய்.

(கு ரை) நாகவல்லி - வெற்றிலே; வெற்றிலே கபத்தைப் போக்கிப் போக சத்தியை மிகுவிக்கும், எனவே மைந்துடைய ஆடவர் தேடியதனே நாள் தோறும் உபயோகிப்பார்கள், மஞ்ஞர்- மைந்தர்; போகவல்லி யன்னவர் - இன்பந் தழைக்கும் கொடி போன்ற மங்கையர்.

## கச்சூரம்

290 ஐவாத பித்த மனேய மறிகடலே
நைவாக நாளு நசித்திடலாற் — கைவர்க்கு
அச்சமுறத் திட்டாந்த்ர மச்சுவத்துக் கேடிலாற்
கச்சூர மேபாவ கன்.

(கு - ரை) கச்சூரம் - பேரீந்து; மறிந்த கடல் போலும் முக்குற்ற நோய்களை, கைமுறையாகப் பேரீந்தைப் பக்குவம் செய்துபயோகித்தால் வடவைத்தீ கடற்பெருக்கை யடக்குமாறு போல நீக்குமென்பதாம்; கைவாசி - கைமுறை; அச்சுவம் - குதிரை; பாவகன் - வடவைத்தீ; வடவைத்தீ பெண்குதிரை வடிவாகக் கடல் நடுவிலிருந்து கடல் வெள்ளம் பெருகியெழாமல் தீ வேகத்தால் சுருங்கச் செய்யும் என்பது புராண வரலாறு.

## துடி

291 மேலிட்ட பித்த வெறிக்குங் குரங்கினெதிர்
கோலிட் டதுபோற் குறுக்கலாற் — சாலப்
பொடியாக்கித் தேனுடனே போட்டுச் சமைத்த
துடியா லறும்பித்தச் சூர்.

(கு - ரை) துடி - ஏலம்; ஏலத்தைப் பொடியாக்கித் தேனுடன் கூட்டி அருந்த, பித்தவெறி குரங்கினெதிர் கோல் காட்டினாற் போல் அடங்கும், பித்த நோயும் தீரும் என்பதாம்.

## அரிசனம்

292 வாதத் தையுமையா மலபிணியை யுஞ்சாடி
வீதத்தை யீயும் வெடியோமஞ்—சீதை
கரிசலாங் கண்ணியெண்ணெய்க் கண்கலந்த தாடில்
அரிசனம்பித் தப்பிணியை யண்.

(கு - ரை) அரிசனம் - மஞ்சள்; வெடியுப்பு, ஓமம், பொன்னுங்கண்ணி, கரிசலாங்கண்ணி யாகியவற்றுடன் மஞ்சளையுங் கூட்டி எண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பதமாக வடித்து, தலை முழுகி வரின் வாதத்தையும் சேத்துமத்தையும் சார்ந்த பிணிகளை நீக்கி, பித்த நோயையும் கண்டித்து நீக்கும் என்பதாம். மலம்-குற்றம்.

## பொன்

293 போலத் திடமாகிப் போகப் பிணிகளும்போய்ச்
சாலப் பிணிமுளுஞ் சாதகமாய்க்—காலத்தில்
மன்னுத வன்போல் மதிபோ லியற்றியுணப்
பொன்னு லுடம்பாகும் பொன்.

(கு - ரை) பொன் - உலோகங்களுள் தலைமையானது; பொன்னைக் கைமுறையாய்ப் புடமிட்டுப் பற்பமாகக் கொள்ளின் மாதர் சம்போகத்தால் ஏற்பட்ட பல நோய்களும் நீங்கும், பிற வகையால் மிகுதியாக மூளும் பிணிகள் தோன்றுங் காலத்தில் சூரியனை யொப்பவும் சந்திரனையொப்பவும் ஆக்கிய அப்பற்பம் பிற நோய்களைத் தீர்த்து உடம்பை, தன் (பொன்) போலாக்கித் திட மான வலியையும் கொடுக்கும் என்பதாம்.

## சீருணி

294 வாணி புகழ்கயிலை வண்ணமெனி னும்பரசு
பாணி யணிவதெனப் பார்க்குமுன்னே — நாணியயல்
சோரு மதன்பெருமை சொல்லி முடியாது
சீருணியாக் கைக்குறுதி தின்.

(கு - ரை) தன்னிறத்தினும் மிகு வெண்மை பெற்றிருத்தலால் வெண்படிக நிறம் பெற்ற கலைமகளும் புகழ்கின்ற வெள்ளி மலையாகிய கயிலாயத்தின் வண்ணம் பெற்றமுற்றிய வெண்மேகமும் பாண்டுரோகமுமாயினும், பரசுராமன் கைக் கொண்டுள்ளதாகிய மழுவாயுதமாமென்று நாணிப் புறஞ்சோர்ந்து நீங்கும்; சீருணியாகிய தாம்பிரத்திலான பற்பத்தின் பெருமை சொல்லி முடிவதால் அடங்காது விரியும், சுருங்கச் சொல்லின் உடம்பிற்கு நல்ல வளமும், வெண்மேகம் பாண்டு நோய்களுக்குக் கோடரியுமாகும், ஆகவே, அதனை உண்டு நலம் பெறுக வென்பதாம், "செம்பினடலை சிவாத்திரமாகுமே" (திருமூலர் திருமந்திரம் கன்ம காண்டம் 1000) குணபாடம் பக்கம்-86.

## வங்கம்

295 ஆகத்தி லுண்டான வத்திசுரம் பித்தசுரம்
போகப் பசிமூளப் பூதலத்தில் — வாகைபெறுஞ்
சங்கத்தை நேராகச் சாற்றுமுறை பண்டிதர்கள்
வங்கத்தை நீறுக்கு வார்.

(கு - ரை) வங்கம் - வெள்ளீயம்; உடம்பிலுண்டான அத்தி சுரம், பித்தசுரம் ஆகியவைகளைப் போக்கும் மருந்தாகவும், பசியை யெழுப்பி உலகத்தில் நோயை வெற்றி கொள்ளுமாறும், மருத்துவ சங்கத்தினர் அறுதியிட்ட முறை தவறாமல் மருத்துவர்கள்

அம்முறைப்படியே வெள்ளீயத்தையும் நீருக்கி நோயினர்க் குதவு வார் என்பதாம்.

## ஆடகம்

296 வெல்லுவா ருண்டோ மெலியாம லாதரத்தைப்
புல்ல வுடற்குப் பொருத்துமே — நல்லபசி
நாடகத்தை மேவ நடக்குமதை நீருக்கி
ஆடகத்தை யுண்பவரை யார்.

(கு - ரை) ஆடகம் - பொன்; நலிவு ஏற்படாமல் உடம்பை ஆதரவளித்துப் பொருந்தும் வகையால் நலம் புரியும், நல்ல நாடகம் போல வேகமுடையதாகப் பசியை எழுப்பி உடம்பை நடத்துவிக்கும் பொன்னைப் பற்பமாகச் செய்துண்ணுமவரை வன்மையால் வெல்வார் யாரேனும் உண்டோ? இல்லை என்பதாம்.

## இரசிதம்

297 நில்லா வுடலை நிலைத்துத் திடமாகும்
வல்லாண்மை மெத்த வருவிக்கும் — பொல்லா
அசதி யிளைப்பை யகற்றுமே நீரும்
ரசிதத்தி னூழி நாள்.

(கு - ரை) இரசிதம் - வெள்ளி; நீருக்கிய வெள்ளியின் பற்பத்தை ஏற்ற அனுபான வகையாகக் கொள்ளின், நிலையிலா உடம்பை நிலையுடையதாக்கி வலிமையுடையதாகச் செய்து திண்ணிய உடற்கட்டையும் வருவிக்கும், உடலிலுள்ள அசதி இளைப்பு ஆகியவற்றையும் நீக்கும்.

## சீருள்

298 சொன்னமுறை தப்பாமற் சோதகமாய்ச் சாதகமாய்த்
தின்ன வுடனே திடமாக — நன்னரர்க்குப்
பாருள் வரிசைப் படியே மருத்துவர்செய்
சீருள்வழங் கும்பெரிய சீர்.

(கு - ரை) சீருள் - கருவங்கம்; மருத்துவர்களால் கைமுறையில் பற்பமாக்கி யளிக்கப்படும் காரீய பற்பம் அவர்கள் சொன்ன

முறை பிசகாமல் சோதனையாகவும் தன்னலம் கருதியும் உட்கொள்ளின், உறுதியாக மனிதர்களுக்கு உலகில் அமைய வேண்டிய முறைப்படியே பெரிய நன்மையை விளைவிக்கும்.

## கணை

299 சூரணித்து நன்னாரித் தோலுடனே சர்க்கரையும்
பாரணிக்கு முன்னே பறக்குமே — சீராய்ப்
புணரி யெனவெகுவாய்ப் போகம் பெருக்கும்
கணையா லதிகநோய் கள்.

(கு - ரை) கணை - திப்பிலி; திப்பிலியை நன்னாரித் தோலுடன் சேரப் பொடி யாக்கி, சர்க்கரையுங் கூட்டி யுட்கொள்ளு முன்னே வெகுவாய் உடலிடத்துள்ள பல நோய்களும் இருந்தவிடந் தெரியாமல் நீங்கும். சீர்மை மிக்க கடலனைய போக வெள்ளம் மிகப் பெருகா நிற்கும்.

## கைசா

300 வாணிபத்தி லேவழங்கும் வாணிகரெல் லாருநிறை
ஆணி யெனவே யறியவே — பாணியெனுங்
கைசால்பு பெற்றிருக்கக் காட்டுமுறை யெந்நாளும்
கைசா வொருதொடிக்குக் கால்.

(கு - ரை) கைசா - கால்பலம்; (கஃசு). தொடி - ஒருபலம்; வணிக முறையில் வாணிபம் செய்வோர் யாரும் நிறையாணியாக அறியுமாறு கையில் எடுத்த வளவிலே காட்டுகின்ற முறைமையுடையதாதலால் கைசாவென்று வழங்குமதன் அளவு ஒரு பலத்தின் காற் பங்காகும்.

## சோபி

301 கந்தியிவை மூன்றுமொரு காலிரட்டி முக்காலாய்
நிந்தையறு மேரண்ட நேயத்தில் — ஐந்தழக்கில்
ஞாபகமா யட்டுணத்தீ நாடாது மேகமறுஞ்
சோபி யரிதகிமேற் றேல்.

(கு - ரை) சோபி - நேர்வாளம்; நேர்வாளம், கடுக்காய்த் தோல், கந்தகம் ஆகிய மூன்றையும் முறையே கால்பங்கு, அரைப் பங்கு, முக்கால் பங்காக அளவு செய்து ஐந்து ஆழாக்கு ஆமணக் கெண்ணெயில் கவனமாக விட்டுக் காய்ச்சிப் பதமாக இறக்கி உட் கொள்ள உஷ்ணம் அணுகாதாகி விலகும், மேக நோய் தீரும் என்பதாம்.

## மணியாடகி

302 கெட்டு முறியுங் கிலேசத் துடனுயிற்
பட்டை யறுகு பலநேராய் — இட்டுத்
தணியப் பொடியாக்கிச் சர்க்கரையா லுண்ண
மணியா டகியாற்குன் மம்.

(கு - ரை) மணியாடகி - மணித்துவரை; மணித்துவரை ஆயில் பட்டை அறுகு ஆகிய மூன்றும் வகைக்கொரு பலமாக எடுத்துப் பொடித்துச் சர்க்கரை கூட்டி யுண்ணக் குன்ம நோய் நீங்கும்; கிலேசமும் போம்.

## மாயாபுரி

303 தேகத்தி னேயாட்டைச் சேதிக்க வேணுமென்ருல்
ஆகக் களங்கா மதிற்செய்து — வேகத்தை
ஓயா வுபரசத்தை யுள்ளாக்கிக் கொள்ளவந்த
மாயா புரிபெரிய வாள்.

(கு - ரை) மாயாபுரி - பித்தளை; உடம்பிலுள்ள நோய் களாகிய ஆட்டை (வெட்டி) அழிக்க வேண்டின், உபரசங்களின் வன்மையைத் தன் வசப்படுத்திக் கொள்வதாகிய பித்தளையைக் களங்காக ஆக்கிக் கொள்ளின் கை வாள் போல் அழித்தொழிக் கும் என்பதாம்.

## கஞ்சம்

304 மாலையாய்ப் பூணு மணிமுடியா யாயுள்நிலை
நூலை யறிய நுவலுமே — வேலைநிகர்
வெஞ்ச முறுபிணிகள் மேவா வகையடக்கும்
கஞ்சம் மருத்துவர்வா கை.

(கு - ரை) கஞ்சம் - வெண்கலம்; வெண்கலம் மருத்துவ நூலினுண்மையை உறுதியாக விளக்கும் சிறப்புடையதாகும்; எவ்வாறெனில், கடல் போல் பெருகிய கொடிய நோய்களை யடக்குவதாதலின், மருத்துவர்க்கு வெற்றி மாலையாகவும் மணிமுடியாகவும் கொள்ளவமையும் என்பதாம்.

## பூ

305 பண்டிதரை நாளும் பரிந்துகுரு தெய்வமெனக்
கொண்டவர்கள் சொன்னபடி கோடாமல் — பண்டிதமாய்
நோவிருந்த பேருகந்து நோக்கு மினிதான
பூவிருந்தால் நோயகன்று போம்.

(கு - ரை) பூ - நறுமணமலர்; நோயினுல் வருந்தும் பிணியாளர்; மருத்துவரை நாள்தோறும் அன்புடன் குருவாகவும் தெய்வமாகவும் கருதி அவர்கள் சொன்ன முறைப்படி மாறுபடாமல் நல்லறிவுடன் தம்மருகே கொண்டு பார்க்கவும் முகரவும் இனிமையும் நறுமணமும் தருவதாகிய உயர்வுடைய, (செந்தாமரை, செங்கழுநீர், கருங்குவளை) நல்ல மலர்களை வைத்திருப்பராயின் முன்புள்ள நோய்கள் நீங்கி நன்மையுண்டாம் என்பதாம். முற்காலத்தில் உயர்குடி மக்கள் நறுமலர்களைத் தம் கைக்கொண்டிருத்தல் இலக்கியங்களில் கூறப்படுவனவாம்.

## தொடி

306 நடுவு நிலையுடைய நல்லார்போ லுண்மை
உடைய தறிவித் துறையும்—வடிவப்
படியாய் விராகனெடை பத்தாத னேரால்
தொடியே நிறைக்குரிய சொல்.

(கு - ரை) தொடி-ஒரு பலம்; நடுநிலைமை தவருத சான்ருேர் போல் உண்மையான நிறையை அறியச் செய்து நிலவும் உருவுடைய நிறைகல்லாகி, பத்துவிராகனெடை கொண்டதாய் வழங்கும் தொடி யென்னும் பலமே நிறைக்கு முன்னிற்பதாகிய சொல்லாம்.

## இலவணம்

307 மண்ணவர் தேகத்தை வளர்த்துதவு சோணிதமாய்
எண்ண விரவி யிருத்தலாற்—பண்ணும்

பலவணமா யுண்டி பகர்கறியா முண்மை
இலவணமி லாதசுவை யில்.

(கு - ரை) இலவணம்-சோற்றுப்பு; பூவுலகில் வாழ்வார் உடம்பை வளர்த்து உதவும் இரத்த விருத்திப் பொருளாக எண்ணி மதிக்கும்படி உலகனைத்தும் பரவிய அனுபவப் பொருளாய் இருத்தலால், பாகம் செய்யும் பலவிதமான கறிவகைகளில் சுவை விளைக்கும் இலவணமாகிய உப்பில்லாத சுவையுணவு இல்லை என்பதாம்.

## சிந்து

308 பொடிசெய் திழைத்தருந்தப் போம்பழைய வாதம்
அடியான பித்தசுர மன்றே—கொடிதான
பந்தமல முள்ளதெல்லாம் பாறுமடி யோடே
சிந்து துடிமிளகு தேன்.

(கு - ரை) சிந்து - இந்துப்பு; இந்துப்புடன் ஏலமும் மிளகும் சேர்த்துப் பொடி செய்து தேனிற் குழைத்துண்ண, பழமையான வாதம், அடிப்பட்ட பித்தசுரம்; கொடிய மல பந்தம் ஆகிய எல்லா நோய்களும் அடியோடழியும் என்பதாம். சிந்து-சிந்துவாரம் என்பதன் கடைக்குறையாகக் கொண்டு நொச்சி யென்று பொருள் காணலாமாயினும் இக் கை முறைக்குப் பொருந்தாதாகும், பொருந்துமேற் கொள்க.

## பிசிதம்

309 தீவினையுண் டோவறுமை தீண்டுமோ தோஷமது
மேவுமோ நன்மை விளங்குமே—தேவ
வசியமிக வுண்டாகும் வாழ்வுண்டா மேலைப்
பிசித மறுத்தவர்க்குப் பின்.

(கு - ரை) பிசிதம்-இறைச்சி; ஊனுணவை நீக்கியவர்களுக்கு தீவினையால் வரும் துன்பமில்லை, வறுமை அணுகாதகலும், தோஷமான குற்றங்கள் மேவாவாம்; நன்மை யாவும் உண்டாம், தேவ வசிய மிகவுண்டாகும், நல்வாழ்வு உண்டாம், ஆகவே தொன்று தொட்ட பழக்கமாகி வரும் ஊனுண்டலை நீக்குக வென்பதாம்.

### ஏலம்

310 சாதியொரு நாலில்முதற் சாதியென வோதுமண்
மீதில் விரவநறை வீசியே—மாதர்தங்கள்
கோலஞ் செயமாகக் கொண்மூ வெனமிகவே
ஏலஞ் செயுமயிரை யேர்.

(கு - ரை) ஏலம் - பஞ்சவாசத்தில் ஒன்ருகிய ஏலம்; ஏலம் மயிர்ச்சாந்துடன் சேர்க்கப்படுவதாதலின் அதனை உபயோகப் படுத்து மங்கையர் கூந்தலை ஐந்து வகையாகக் கோலஞ் செய்தற் கேற்றவாறு மேக வொழுங்குபோல் கருமை தோன்ற அழகுற வளரச் செய்யும் என்பதாம். சாதி நான்காவன—பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என வகைப்படுத்த நான்குமாம்.

### பொதி

311 பாரி லுயிர்க்கெல்லாம் பற்றரு மற்செரிக்க
நீரிற் குமிழி யெல்லா நேர்மலஞ்—சேரக்
கதியொருநா லாகவுருக் காட்டு முறைமைப்
பொதியின லுண்டாகும் பூ.

(கு - ரை) பொதி - முகிழ்ப்பு; நீர்ப்பூக்களானவை உலகுயிர்கட்கு நீங்காத விருப்பத்தை நிறுத்தித் தாம் வாடலுற்று அழிவனவாம்; நீரிடைத்தோன்றுங் குமிழிகளோடுள்ள சேற்றினை அழுக்காகப் புறத்தே தங்குமாறு புறவிதழ்களானவை பொருந்தி நின்று முகிழ்த்தலும் அரும்புதலும் முறுக்கவிழ்தலும் மலர்தலுமாகிய நான்கு செயல்களால் நான்கு வித உருவத்தினையுங் காட்டு முறைமையுடைய அப்புறவிதழின் முகிழ்ப்பிடையே நீர்ப்பூக்களெல்லாம் தோன்றுவனவாம்.

### மெய்

312 ஆணி மகமேரு வம்புவிக்குண் டானதுபோல்
ஊணி லதிக வுறுதியாய்க்—காணுநறை
நெய்காயத் துக்கதிக நேரா யதிற்கலந்த
மெய்காயத் துக்காண மெய்.

(கு - ரை) மெய் - பெருங்காயம்; மகாமேருமலை பூவுலகிற்கு ஆணியாக வமைந்திருத்தல் போல், உடம்பினகத்து உறுதி தரவல்லதாகத் தோன்றுவதும் நறுவிய நெய்யிற் பொரித்து உபயோகிப்பின் வாயுவை யகற்றி உடம்பிற் குறுதி தருவதுமாகிய பெருங்காயம் உடம்பிற்கு ஆண்மை அளிப்பதாமென்பது மெய்மையேயாம்; காயம் இரண்டினுள் முன்னது பெருங்காயம், பின்னது உடம்பு.

## மீ

313 நிகண்டுமுத லன்னூ னிலைமையெல் லாமே
புகன்றதுமுன் னலைவைகள் பொய்யோ — திகழ்ந்தமறை
யேயென்னு மும்ப ரிமையவர்க்கு மப்பொருளே
மீயென் னுரைப்பதுவே மேல்.

(கு - ரை) மீ - மேல்; இன்னசொல்லுக்கு இன்னது பொருளென்று அறிவுடையோர் வழங்கியபடி முறையாக ஆக்கியுள்ள நிகண்டு முதலிய சொற்பொருள் அகராதி நூல்களும் அச்சொற்களை அப்பொருள்பட ஆக்கிய பிற இலக்கிய நூல்களும் கூறுவன பொய்யாமோ? விளங்கும் மறைமொழியோ டொப்பக் கொள்ளத் தகுவனவாம்; ஆகவே மேலுலகத்துள்ளாராகிய இமையவர்க்கும் அவ்வாறே அவர்க்கு மேலாமிடத்தைச் சுட்டிக் கூறவும் அமைவதாம்; இங்ஙனமாக மீ என்னும் சொல் மேல்இடத்தைக் குறிப்பதாக வழங்குவதாயிற்று.

## போசனகுடாரி

314 பித்தமெனு மந்திரியைப் பின்னப் படுத்தியவன்
சத்துருவை யுந்துரந்து சாதித்து — மத்தனெனும்
ராசனையு மீவென்று நண்பைப் பலப்படுத்திப்
போசனகு டாரிசெயும் போர்.

(கு - ரை) போசனகுடாரி - சீரகம்; பித்தத்தை வன்மை குலைய வென்றடக்கி, அதன் விரோதியாகிய சேத்துமத்தையும் நீக்கி, வாதத்தையும் வென்று மேன்மையான நட்பை வாத பித்த சேத்துமங்களிடையே வலிமை பெற வாக்கி நன்னிலைப் படுத்தும், சீரகத்தின் உபயோகம், சீரகம் முக்குற்றங்களுடன் போராடி அவற்றின் மாறுபாட்டை நீக்கி நன்னிலைப் படுத்துமென்பதாம்.

சீரகம் - சீர் + அகம்; உள்ளே சீர் செய்வது என அன்மொழித் தொகைப் பொருள் கொள்ளலுமாம்.

## அங்கணம்

315 காய மெனுமனைக்குக் கன்ம மலங்கழிய
வாயில் சிலமுன்னே வாய்த்ததுபோல்—ஓயாமற்
பங்க முறக்கழுநீர் பாறச் சிறுமைசெறி
அங்கணமில் லுக்குரிமை யாம்.

(கு - ரை) அங்கணம் - சலதாரை; உடம்பாகிய வீட்டுக்கு உணவு முதலியவை சீரணித்த மலமூத்திரங்களும் சளி, பீளை, உமிழ்நீர், குறும்பி முதலியவைகளுமான அழுக்குகள் நீங்கும் வாயில்களாக அவ்வுடம்பினிடத்தமைந்துள்ள கண், காது, வாய், நாசி நீர்த்தாரை, குதம் என ஒன்பது வாயில்கள் போல், மக்கள் உறைவதற்கிடமான மனையகத்தும் கழிபொருள்கள் வெளியேறு மாறு அங்கணமாகிய கழிநீர்க் கால்வாய் அமையுமாறு செய்வித் தல் உரிய முறைமையாம்.

## மீசுரம்

316 வானத்தி லேமதியை வாழ வளைவதுபோல்
தானத்தி லேயமருந் தாரகைக்குத் — தானேராய்ப்
பேசுகின்ற மாநிலத்திற் பேரொன்றே யாயிடினும்
மீசுரமா காதுசிறு மீன்.

(கு - ரை) மீசுரம் - விண்மீன்; வானுலகத்துள்ள மதி மண் டிலத்தை வளைந்துள்ள தாரகைகளாகிய விண் மீன் கணத்துக்கு நேராக வுரைக்கப்படினும் உலகோர் மீன் என்னும் பெயரால் இரு வகையையும் கூறுவராயினும் நீர்வாழ் சிற்றுயிரிகளாகிய சிறு மீன்கள் மேலுலகத்துள்ள விண்மீன் கணத்தை ஒப்பாகாவென்ப தாம். எனவே, விண்மீனே டொப்பக் கருதியுயர்வுடையதாகிய வுணவாகக் கொள்ளுதல் அறிவுடைமையாகாதென்க.

## குடினை

317 வந்து மருவுதலால் வாங்காம லேயுறலால்
அந்தி பகலா யணையுதலால் — சந்தி

உடைமையா லாரு முலகி லறியக்
குடிஞைகடற் பெண்டிரா கும்.

(கு - ரை) குடிஞை - ஆறு; ஆற்றுவெள்ளம் நாடு காடுகளின் வழியோடி யிறுதியில் கடலகத்தே வந்து சேர்தலாலும், நீர்ப் பெருக்கினைக் கடல் கைநீட்டி வாங்காதாகவும் அப்பெருக்கு, கடலிலேயே நிறைதலாலும், இவ்வழக்கம் அந்தி பகல் எந்த நேர மும் நடைபெறலாலும், இவ்வியைபுக்குத் தகுதியாக வழிகளும் அமையப் பெற்றிருத்தலாலும், கடலாகிய நாயகனுக்குற்ற மனைப் பெண்டிராகும் குடிஞையாகிய ஆறுகள் என்பதாம்.

## அமுதவல்லி

318 மேகமெனு மாதபத்தால் வெந்த வுயிர்ப்பயிரைத்
தாக மடங்கத் தணித்தலால்—ஆகம்
அமர ரெனவிருக்க வாதரித்த லாலே
அமுதவல்லி சஞ்சீவி யாம்.

(கு - ரை) அமுதவல்லி - சீந்திற்கொடி; மேக நோயாகிய சூரிய வெப்பத்தால் வாடி மெலிந்த உயிர் வாழுடம்பாகிய பயிரை அவ்வெப்பந் தீரத் தணித்தலாலும், உடம்பு தேவருடம்பை ஒப்ப இருக்கும்படி ஆதரவளித்தலாலும், அமுதவல்லியாகிய சீந்திற் கொடி உயிருதவும் சஞ்சீவியாம். சீந்திற் கொடியின் பெயர்களுள் சஞ்சீவியென ஒரு பெயர் வருவதும் இதனை வலியுறுத்தும்.

## பூட்கைவித்து

319 வாதப் பிடிப்பா மதகரியெல் லாமடிய
மோதிக் கடுகி முடுக்கலாற் — பூதலத்தில்
வாட்கை தருமருத்து வாகடரெல் லாமறிவார்
பூட்கைவித்துக் கோளரியைப் போல்.

(கு - ரை) பூட்கைவித்து - ஆளிவித்து; வாதப்பிடிப்பாகிய மதயானைகளெல்லாம் மாயும்படி விரைந்து சாடியழித்தலால் ஆளி வித்து சிங்கத்தை யொப்பதாமென்பதைப் பூவுலகின் வாழ்வை, நோய் நீக்கி மக்கட்குதவும் மருத்துவ நூல் வாகடமறிந்த பண்டித ரெல்லாம், நன்கறிவார்கள்.

## வல்லி

320 சீருதவு நல்விதிமை செய்வதர சாட்சியென்று
பாரிலறி வாரெவரும் பண்டிதரே—பேரான
நல்லறிவுண் டானமதி நல்லவர்க்கு முண்டாகும்
வல்வியிழி வானவிதி மை.

(கு - ரை) வல்லி - ஊழ்; சீர்த்தியைத் தரும் நல்லூழே உலகியலை நன்னெறிப்பாற்படுத்தி அரசியலையும் நடத்தவல்லதாமென மருத்துவ நூலறிவுடையோரெவரும் அறிந்திருப்பர், அங்ஙனமாகவும், நல்லறிவுடைய மதிநுட்பத் திட்பமுடைய மேன்மக்கட்கும் இழிநிலையினதாகிய இழவூழால் வாழ்வு வளங் கெடுதலாகிய கீழ்மையுளதாம்.

## இட்டிகை

321 மாட மடங்கேணி மண்டப மாடரங்கு
பீட மகழி பிரகாரம் — மேடைமுதல்
கட்டிடுமு பாயமிது காசினியிற் கம்மியர்செய்
இட்டிகையா லாகுமனை யில்.

(கு - ரை) இட்டிகை - செங்கல்; மாடம் மடம் கேணிமண்டபம் ஆடரங்கு பீடம் அகழி பிரகாரம் மேடை ஆகிய அனைத்தும் அமைத்தற்கு உலகில் சிற்பத் தொழில் வல்லோர் தம் உபாயத்தால் செங்கல்லையாக்கி அதனை முதற் கருவியாகக் கொண்டமைப்பாராதலின் மனைகள் இல்லங்கள் யாவும் செங்கற்களாலமைவனவாம்.

## கட்டளை

322 பொன்முதலா மெந்தப் பொருளுமனு மானமறக்
கன்மசமில் லாதெடுத்துக் காட்டுதற்கு — நன்முறைமை
இட்டதுபோற் சீரை யிடையி லிருக்கும்
கட்டளையி னும்நிறை கல்.

(கு - ரை) கட்டளை - நிறையறிகருவி; பொன்முதலாகிய நிறை செய்தறியு மெல்லாப் பொருள்களையும் ஐயமில்லாமல் தூக்கியறி

வதற்குக் கருவியாக முறைப்படுத்தியமைத்தாற் போல, சீரையா லாகிய சிறு பையினுள் இட்டு வைத்துபயோகிக்கும் கட்டளை யாகிய கருவியே நிறைகல்லாம்.

## கோள்

323 ஒருவன் பொருளை யொருவன் கவரப்
பருவ மிகவெதிர்ந்து பார்த்தல் — வருமுறைமை
கேளென்ப தென்ன கெருவமின்றி யுன்மதியாற்
கோளென்ப தையறிந்து கொள்.

(கு - ரை) கோள் - கொள்ளுகை; ஒருவனுக்குரிமையான பொருளை மற்றொருவன் கைப்பற்றும் வகையால் ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருத்தலையே வழி வழியாக வருகின்ற முறைமைக்கு உறவும் நட்பும் இல்லையா மென்பதனை உன் மனச்செருக்கடக்கி மெய்யுணர்வால் சிந்தித் தறிந்துகொள்கவென்பதாம்; வாது, சூது, பணயம் முதலியவற்றாற் கெலிக்கும் பொருள்கோடலையும் ஈண்டு அமைத்துக் கொள்க.]

## புல்லாமலி

324 தன்னைப் பசுவின் தயிரி லரைத்துநிதந்
தின்னப் பறக்குந் திரிதோஷம் — இன்னமென்ன
சொல்லுவேன் காமாலை சோபை யிருமலறும்
புல்லா மலியினது பூ.

(கு - ரை) புல்லாமலி - கீழ்க்காய்நெல்லி; கீழ்க்காய் நெல்லி யின் பூவைப் பசுவின் தயிரில் அரைத்து நாள்தோறும் அருந்த முக்குற்றம், காமாலை, சோபை, இருமல் ஆகிய நோய்கள் நீங்கும்.

## சுகாங்கி

325 தோய்த்த பிறகுலர்த்தித் தூளாக்கி யத்தூளை
வாய்த்த விளநீரில் மண்டலமுண் — மேய்த்த
புகையிரும லுப்புசமும் போய்நலமுண் டாகும்
சுகாங்கி தனைமதுவில் தோய்.

(கு - ரை) சுகாங்கி - இஞ்சி; இஞ்சியை (மது) தேனில் ஊற வைத்துலர்த்தித் தூளாக்கி இளநீரில் ஒரு மண்டல மருந்த, புகையிருமல், உப்புசம் ஆகிய நோய் நீங்கி உடல்நலம் உண்டாம்.

## புனமயிலை

326 வேரைக் கொடுவந்து வெள்ளாட்டுக் கோமயத்திற்
சேரப் படுத்தியொரு திங்கள்விட்டு — வேரைத்
தினமதுவின் மேலுக்குந் தேகத்திற் பூசப்
புனமயிலை யாற்சிரங்கு போம்.

(கு - ரை) புனமயிலை - மருதோன்றி; மருதோன்றி வேரை வெள்ளாட்டுக் கோமயத்திலொருமாதம் ஊறவைத்து அரைத்துத் தேனில் குழைத்துத் தேகத்திற் பூச, சரும நோய்களாகிய சிரங்குகள் போம்.

## ஆனைவணங்கி

327 மேகச் சொறிபோமுன் வெட்டையறும் வெள்ளையறும்
ஆக மகமேரு வாகுமே — நீகருதித்
தேனி லரைத்துருட்டித் தின்ன வொருமாதம்
ஆனை வணங்கியிலை யால்.

(கு - ரை) ஆனைவணங்கி - நெருஞ்சில்; நெருஞ்சிலின் இலையைக் கவனத்துடன் தேனிலரைத்துருட்டி ஒரு மாத முட்கொள்ளப் போம் மேகச்சொறி; பழைய வெட்டை தீரும்; வெள்ளையொழுக்கு நீங்கும்; உடல் மகாமேருவைப் போல் வன்மையுடையதாகும்.

## பாதுகைப்பதம்

328 கூண்டோடே யற்றுவிழுங் குற்றிருமல் காணுது
மீண்டு மணுகாது மேகங்கள் — பாண்டியன்தார்
சீதை யிவைரசத்தைத் தேனைப் பிரியாத
பாதுகைப்ப தத்தாற்க பம்.

(கு - ரை) பாதுகைப்பதம் - செருப்படி; வேம்பு, பொன்னுங் கண்ணியிவைகளின் சாற்றுடன் தேனையும் சேர்த்து, செருப்படிச் சாற்றுடனுட்கொள்ள, சிணுக்கிருமல் காணுதகலும், மேகநோய்கள்

அணுக மாட்டா, கபம் கூண்டோடே அழிந்தொழியும்; செருப்படி, செருப்படை எனலுமாம்; செருப்பின் சுவட்டையொத்த வடிவுடைய இலையாதலால் காரணப்பெயர்.

## கோவர்

329 பகாரரிவ ருஞ்சிறிது பண்டிதர்க ளாவார்
மகாரி நிலைப்படுத்தி வைப்பார் — விகாரமில
ராவர் மருத்துவத்தி லாதோ ரணர்தமிலுங்
கோவர் நிலப்பகையா கும்.

(கு - ரை) கோவர் - வேட்கோவர்; பூமியினுள் குழியகழ்ந்து களிமண்ணையெடுத்துத் தம் தொழிலை விளைத்தலால் நிலத்தின் பகைவராகிய பகாரரெனும் குயவரும் சிறு மகார்கட்கு வரும் அக்கி முதலிய சரும நோய்கட்குச் செங்காவிக் கோலமெழுதித் தீர்ப்பவராவார்; ஆகவே ஆதோரணராகிய யானைப்பாகர் போல் இவர்களும் மருத்துவத்திற்குக் குற்றமிலராய் ஆற்றுவர் என்பதாம்.

## வில்லியர்

330 தம்படித்து நுட்பஞ் சகலமுநன் ருயறிந்து
பம்பு மவிழ்தமெலாம் பண்ணுவார் — அம்புவியில்
வல்லமை யுள்ள வயித்தியரா வார்கொடிய
வில்லியரு நல்லாயுள் வே.

(கு - ரை) வில்லியர் - வேட்டுவர்; வேட்டுவர் வில்வேகத்தைக் கற்கும்போதே மருத்துவ நூல்களையும் கற்று, மருத்துவ நுட்பங்களை நன்கறிந்து பல மூலிகைகள் சேரும் அவிழ்தங்கள் பலவற்றைச் செய்வார்கள்; அம்முறையாலவர்களும் மருத்துவர்களாவார்; வேட்டுவர் மருத்துவம் கற்பது தம் வேட்டைத் தொழிலால் தமக்கு நேரும் ஊறுகளைப் போக்கிக் கொள்ளவும், பசி, தாகம் முதலியவைகளையடக்குதலால் ஏற்படும் உடல்நோய்களை நீக்கிக் கொள்ளவும் விஷ சந்துக்களால் ஏற்படும் நஞ்சு முதலியவைகளைப் போக்கிக் கொள்ளவுமாம்.

## பறையர்

331 உள்ளத்தை வேருக்கி யுட்பகையை வீருக்கிக்
கள்ளத்தா னெஞ்சைக் கலக்கலாற் — றெள்ளிப்

பழகினவ ராஞலும் பண்டிதர்க்குச் சொன்னேன்
பழையருற வாகாது பாழ்.

(கு - ரை) பழையர் - கள் விற்போர்; மனத்தை வேறுபடுத்தி உட்பகையை வலிமைபெறச் செய்து கவடமாக மனம் நோவக் கலங்கச் செய்தலால், ஆராய்ந்து நட்புக் கொண்டு பழகியவராயினும் மருத்துவர்களுக்குப் பழையராகிய கள் விற்போருடன் உறவு கொள்ளல் தகாது; இதனை அறிவுரையாகக் கூறினேன் என்பதாம்.

## சூனர்

332 வைக்க மிகநன்று மண்டலத்திற் பண்டிதரே
பிக்கி லுயிரைப் பிரித்துடலைத் — துக்கவிலை
யான வினையா லவரினிய ராஞலுஞ்
சூனர்முகம் பாராமற் சூள்.

(கு - ரை) சூனர் - ஊன் விற்போர்; உடலினின்று உயிரைப் பிரித்து, பின் அவ்வுடலாகிய ஊனை, துக்க விலையாக விற்கும் தொழிலராகிய சூனர்தம் முகத்தையும் பாராமல் சபதம் செய்துறுதி கொள்ளல் மிகவும் நன்ரும்.

## காருகர்

333 இழைநக்கி நெய்துமதி யேழைமைய ராகி
யிழுதைப் படுவ ரெனினும் — பழகுமுறை
தேரு மதிசிறிது தேர்ந்துணரு நுட்பத்தாற்
காருகரு மாவர்பணிக் கர்.

(கு - ரை) காருகர் - கைக்கோளர்; நூலிழையை நாவால் நக்கி ஊசித்துளையினுழைவித்து நெசவுத்தொழில் செய்து பழகியதால் பிறவற்றில் அனுபவ அறிவு பெருத அறிவுக் குறைபாடுடையராயினும், தாம் நெய்தற்றொழிலாலாக்கிய ஆடை முதலியவற்றை விற்கும் வகையிற் பழகித் தேர்ந்த அறிவுடையராதலின் அந்நுட்பவறிவால் காருகராகிய கைக்கோளரும் மருத்துவத் தொழிற்குரியராவர்; பணிக்கர் - மருத்துவர்.

## காவிதியர்

334 வல்லாள ரானலு மனமமதை யாலறிவு
செல்லாம னூலிற் சிதறுவார் — புல்லாண்மை
மேவி வயித்தியத்தில் விற்பனரா காருலகிற்
காவிரிய ரானகணக் கர்.

(கு - ரை) காவிதியர் - கருணீகர்; கணக்கர்; காவிதி - எட்டி காவிதி ஏனாதி முதலிய அரசவையிற் பெற்ற சிறப்புப் பெயர்களுள் ஒன்று. காவிதியர் தாம் பெற்ற சிறப்புப் பெயரால் மனச்செருக்குடையராய் நூலாராய்ச்சியிற் செல்லாது சிதறுண்ட அறிவுடையராதலின் புன்மையான் அதிகாரத் தொழிலையே மேவி நிற்பர்; ஆகவே வயித்தியத் தொழிற்குற்ற அறிவுடையராகார்; காவிரியர் என்று செய்யுளில் பாடம் காணப்படுகின்றது; காவிதி என்றே பாடமாதல் வேண்டும், அப்பாடமே பொருள் சிறப்பதாகும்.

## ஆதோரணர்

335 ஆவார் பழகி யறிகுறிதந் தாவளத்தி
னோவாறு பிண்டிதத்தி னேன்மையால் — ஓவாத
போது மருந்து புகட்டு மடையாளர்
ஆதோ ரணருமுறை யால்.

(கு - ரை) ஆதோரணர் - யானைப்பாகர்; யானைப்பாகர் தாமும் பாகலம் மதம் முதலிய யானை நோய்களைக் குறியாலறிந்து அவற்றிற்கேற்ப அவிழ்தம் புகட்டல் முதலிய நோய்தணி வினையிற் பழகிய அனுபவ அறிவின் வன்மையால் மருத்துவ பாண்டித்தித்திற் குரியவராவார்.

## வலவர்

336 எந்தவித மானலு மேறிரத மாகடத்துஞ்
சிந்தை யறிந்து திடமாகி—அந்தப்
புலமை யுணர்வதுபோற் போக்கறித லாலே
வலவரே பண்டிதரா வார்.

(கு - ரை) வலவர் - தேர்ப்பாகர்; எவ்விதமாகவேனும் தேரிலேறி, தேர்க்குதிரைகளின் கதியறிந்து அவற்றின் மன நிலையையு

மறிந்து நடத்தும் புலமையை யறிந்திருப்பவராதலின் வலவரும் மருத்துவ பண்டிதத்திற்குரியவ ராம்.

### விருந்தர்

337 முன்னறியார் பின்னறியார் மூசு பிணிவலுமை
என்னறியார் நோயி னினமறியார்—அன்ன
மருந்து குணமறிய மாட்டார்மை யாலே
விருந்தர்பரி காரமெல்லாம் வீண்.

(கு - ரை) விருந்தர் - புதியவர்; மருத்துவத் துறையில் முன்னதும் பின்னதும் அறியமாட்டாதவரும், மொய்த்தெழுந்த நோயின் வன்மையை அளந்தறிய மாட்டாதவரும், நோயின் பாகுபாடுணராதவரும், பிறிதாகிய ஏதொன்றையுமறிய வன்மையில் லாதவருமாகிய புதியவர் மருந்தின் குணமறிந்து நோய்க்கேற்ப உபயோகிக்கத் தெரியாராதலின் அவர் பரிகாரம் யாவும் மருத்துவ மாகாமையால் வீணேயாம்; பயனுடையனவாகா என்பதாம்.

### சாகம்

338 மெய்த்தவத்தின் மார்க்கத்தை மேற்கொண் டுலகியற்கை
மித்தையென்று காயத்தை வெற்பாக்கி—அத்தமிகை
ஆக வயித்தியரு மாதரிக்கு மூலியெனுஞ்
சாக முனிவரருந் தல்.

(கு - ரை) சாகம் - பச்சிலைமூலி; உடம்பினை மலைபோல் வன்மையுறச் செய்தலால் மேன்மையான பொருளாமென்று வயித்தியரும் தம் மருத்துவத்திற் காதாரமாக மேற்கொள்ளும் பச்சிலை மூலிகைகளாகும் கற்பங்களே, உலகியற்கை மிக மிக மென்மை (இலேசானது) யுடையதாமென்று நீங்கி மெய்ம்மையான தவநெறியை மேற்கொண்டு, யோகநிலையில் நிற்கும் முனிவராகிய சித்தர்களுணவாகும்; சாக முனிவரருந்தல் - கற்ப மூலிகளே சித்தர்களுணவாம், என முடிக்க. சாகம்-சருகென்று கொள்ளினும் பொருந்தும்.

### பதிதர்

339 ஒன்றுந் தெரியாம னுற்பனமு மில்லாமல்
நின்று தயங்கு நெறியராய்—என்றும்

மதிமருள லாலே மனத்தெளிவி லாத
பதிதர் வயித்தியமும் பாழ்.

(கு - ரை) பதிதர் - பாதகர்; ஒன்றுமறியாராயும் ஒருவித குறிக்கோளுமிலாராகியும், சலனமடைந்த மனமுடையராய் மேற் செல்லு நெறியறியாராயும், எந்நாளும் தம் பாதகச் செயலால் மன மய்க்க முடையராகிய தீயோர் மருத்துவத் தொழிலேற்பாராயின் பாழாம் என்பதாம்.

## முளை

340 தந்தை வயித்யந் தனயனுக்கா காதெனவே
இந்த வுலக மிசைப்பது மெய்—சிந்தை
தளர வுறவின்முறை சார்ந்தவரைப் பார்க்க
முளைமே லருள்பிறக்கு முன.

(கு - ரை) முளை - (கான்முளை) மகன்; தந்தையானவன் மக னுக்கு மருத்துவம் செய்தலாகாதென இவ்வுலகோருரைப்பது உண்மையேயாம்; அங்ஙனம் செய்வானாயின், மனந்தளர்ந்து ஏனை யுறவினரைக் காட்டிலும் தன் மகன் நோய்த் துன்பத்துக்கிரங்கி அவன்மேல் அருள் பிறத்தலால் மருத்துவமுறையை நெகிழ விடுவானவன்.

## தவை

341 தம்பி தமக்கை தமைய னனையெனவே
நம்பு முறையா னலிவந்து — வெம்பு
துவமான வேளையினிற் றோன்று தெவையுந்
தவையாசை யும்பெரிது தான்.

(கு - ரை) தவை - தாய்; தம்பி, தமக்கை, தமையன், அன்னை என்னும் நம்பிக்கையான முறையுறவால், துன்பமேலிட்டு மனம் வெம்பும் இரண்டு பட்ட (ஒருமைப் பாடற்ற) காலத்தில் மேற்கண்ட முறைமை எவையும் தோன்றுவாம்; தாய்ப்பாசமும் பெரிதாம்; ஆயினும் மேலதனேடொப்பதாம்.

## அனுசன்

342 தம்பியுடை யான்படைக்கஞ் சானென் றுலகினிலி
யம்புமது மெய்மை யதனாலே — நம்பி

மனது கலக்க வருமுறைமை யாலே
அனுச னுயிர்க்குதவி யாம்.

(கு - ரை) அனுசன் - தம்பி; "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்னும் வழக்கு உண்மையேயாம்; அதனுல் நம்பிக்கையுடன் மனமொன்றிய பிறப்புரிமை முறைமையால் தம்பியாயுள்ளான் உயிர்க்குதவியாவான் என்பதாம்; "தம்பியுடையான் படைக்கஞ்சானென்னு மாற்றந்தந்தனையால்" என இராமன் இலக்குவனைப் பாராட்டிக் கூறியதாக வரும் கம்பராமாயணத் தொடர் இவ்வெண்பாவில் ஆசிரிய வசனமாக எடுத்தாளப் பட்டிருத்தல் காணலாம்.

## வேட்டுவன்

343 பதிக்குச் சதியே பரிவென் றுலகம்
மதிக்க வுளதா மனுநூல் — விதித்திடலாற்
கேட்டு வயித்தியத்தைக் கேள்வ னியற்றிடலால்
வேட்டுவனண் பில்லுடைமை மேல்.

(கு - ரை) வேட்டுவன் - உலகோர்க்கு வாழ்க்கை நெறி வகுத்துரைக்கு மாண்பினதாகிய அறநூல்களும் நீதிநூல்களுமாகியவை, மக்கள் மதித்துப் போற்றுமாறு கற்பித்தலால் அவ்விதிப்படி கேட்டறிந்த மருத்துவத்தை மனைவியின் விருப்பின் வழியே கணவன் செய்யுமாறுளதாயின் வேட்டுவனென்னுங் குளவி சாதிப்புழுவைத் தன் கூட்டிடை வைத்தூதித் தன் இனமாக்குவது போல் மருத்துவனும் நோயினரைத் தன் கருத்தின்படி நலமாக்க வல்லனுவன் என்பதாம்; இம்முறையால் தலைவனுக்கு மனைவியே (பரிவு) அன்புடையாளென்பது உண்மையாகும்; "குளவி புழுவைக் கொணர்ந்து தன் போலாக்கும் வளமெனவே," என இவ்வாசிரியர் பிறிதோரிடத்துக் கூறுமாறுமறிக.

## அகடு

44 தேகப் பிணிகளெல்லாஞ் சேர வுணுமுணவால்
ஆகப் புவிக்கு ளரசன்போல் — வாகை
மிகுதி பெறவாயுள் வேதியர்சொல் லாலே
அகடு வளர்ப்பதுமெய் யை.

(கு - ரை) அகடு - வயிறு; உடம்பில் பொருந்துமுணவு, பொருந்தாவுணவு என்னும் இருவகை உண்டியையும் உட்கொள்ள லால் பல பிணிகளையும் வருவிக்குமாயினும், உடம்பாகிய பூமி ஏனைய உறுப்புகளை வளர்த்துக் காத்தலால் அரசனை ஒக்கும்; பொருந்தாவுணவால் நேரும் பிணிகளை நீக்கி உதவியளிக்கும் மருத் வர்கள் கூறுமுறையால் வயிறே உடம்பினை வளர்ப்பதாக உணர் தல் வேண்டும்,

## கம்பு

345 பாஞ்சசன்ய மாதி பகரு மகிமைகொண்டு
வாஞ்சநீ ராகவத்தின் வைப்பாகி — வாஞ்சையுடன்
நம்புபற்ப மாகவரு நாகு பணிலம்வளை
கம்பு வலம்புரிசங் கம்.

(கு - ரை) கம்பு - சங்கு; பாஞ்சசன்னியமென்னும் திருமால் கையகத்துள்ள மகிமை மிக்க சங்கை முதன்மையாகக் கொண்டு வாய்ந்த நீர் நிறைந்த கடலைப் பிறப்பிடமாக உடையதாகி, மருத் துவ முறைக்கு விருப்புடனும் நம்பிக்கையுடனும் ஆக்கிக் கொள் ளும் பற்ப மருந்தாகவும் பயன்படும் சங்கானது நாகு, பணிலம், வளை, கம்பு, வலப்புரி, சங்கம் எனப்பல பெயருடையதாம்.

## அனு

346 பார்க்குமுறை நாடியிடம் பத்தென் பதுமுறைமை
ஏற்கு மதனி லிசைவாகி — யார்க்கும்
மனுவு முரைப்பதுபோல் வாகடரே கேளும்
அனுவு மொருநாடி யாம்.

(கு - ரை) அனு - கதுப்பு; நாடி பாக்குமிடமாமென மருத் துவ நூல்கள் கூறும் பத்திடங்களில் ஒன்றாக ஏற்குமாறு பொருந்துமுறைமையுடையதாகிய, கதுப்பினைத்தொட்டுச் சோதித் தலும் ஒரு நாடி முறையாகக் கொள்ளப்படும்; ஆதலின் மருத்துவர் களே மேலவற்றோடு இதனையும் அறிந்து கொண்மின் என்பதாம்.

## கோணம்

347 மேற்சொற் படியாயுள் வேதியர்கொண் டாடமனு
நூற்சொற் படியதி நுட்பமாய்ப் — பாற்செறிய

வூண்வ ரிசையு முபாய மிகவுரைக்குங்
கோணமுந்நா டிக்கிடமா கும்.

(கு - ரை) கோணம் - மூக்கு; மருத்துவ நூலிற் கூறுமுரையின் படியே பண்டிதர்கள் பாராட்டுமாறு மிக நுணுக்கமாக வகை பொருந்தும்படி உணவுகளின் தன்மையை மணத்தாலறிந்துரைக்குங் குருவியாகிய மூக்கே இடகலை பிங்கலை சுழிமுனையாகிய மூன்று நாடிகளின் இடமாகும்.

### எல்

348 வாராமற் காக்குமது வந்தாலு மோர்வேளை
யாரா வுரத்தை யடக்குமே—தீராத
வல்வினையைத் தீர்க்க மருந்தாகி யேபரவும்
எல்பிணிக ளைத்துரத்தி யே.

(கு - ரை) எல் - வெய்யில்; வெய்யிலாகிய பகலவனின் கதிரொளி உடலிலுள்ள நோய்களைப் போக்கி மேலும் வராமற் காக்கும், ஒருவேளை மீறி வந்தாலும் அந்நோய்களின் வலியை யடக்குவிக்கும், தீராத வல்வினையால் வந்தபிணிகளை நீக்க மருந்தாகவும் வியாபிக்கும் என்பதாம்.

### இமம்

349 கூடி வயற்குள்நீ ரைக்கட்டு தல்போலத்
தேடிக் கபத்தைச் செறிவிக்கும்—வாடு
மமதை தனையே வளர்த்தினிதை யோட்டும்
இமம்நோய் வளர்வினை யில்.

(கு - ரை) இமம் - பனி; வயலினுள் நீரை நிரப்பிப் புறம் போகாமல் தடுத்தல்போல், கபத்தைச் சேர்த்து நிறையப் பண்ணும் இயல்பையுடையதாதலாலும் நல்லறிவு வாடுதற்கேதுவாக அகங்காரத்தை வளர்த்து உடல்நலத்தைக் கெடுக்குந் தன்மையதாதலாலும், பனியானது நோய்கள் வளரும் செயல்கள் கூடியுறையும் வீடுபோல்வதாகும்.

### கன்னல்

350 எண்ணஞ்சு நாலஞ்சு மேர்படுத்த வோர்நாளை
வண்ணஞ் செறிபிறிவாய் வாய்க்குமே—எண்ணுமதை

உன்ன வறிவா லுடைய வறிவினர்க்குக்
கன்ன லொருநாழி கை.

(கு - ரை) கன்னல் - நாழிகை; நாற்பதும் இருபதும் கூடிய தொகையாக இயலும் ஒரு நாளாகிய காலத்தைக் கூறுபாடு செய்யும் வகையாக வாய்க்கும். இக்கூறுபாட்டின் வகையை அறியலுறுவார்க்கு அஃதொரு நாளின் அறுபதிலொரு கூருகிய நாழிகையாகவமையும். எண்ணஞ்சு - நாற்பது, நாலஞ்சு - இருபது, இவற்றின் கூட்டல் தொகை அறுபது; நாழிகை - நாளின் அறுபதிலொரு கூருகிய காலம்.

## யாமினி

351 ஒட்டிரட்டி யாக வுயரப் பலவிதமாய்
நட்ட முறவுடம்பை நைக்குமே—கட்டமிகப்
போமிழிவி யாதியையும் போகாம லேயிருத்தி
யாமினிவி யாதிகளை யே.

(கு - ரை) யாமினி - இரவு; மருத்துவத்தால் விலகுவதாகிய நோய்களையும் நீங்காமற் செய்து, ஒன்றிரண்டாகப் பெருகுமாறு பலவகையில் உடல்நலத்தை யிழப்பித்து நலியச் செய்து பல நோய்களையும் விருத்தியாக்கும் இரவுப் பொழுதாகிய யாமினி யென்பதாம். யாமம் - இரவு; யாமினி இரவாகிய பெண்.

## விகலை

352 பண்டிதர்கள் சொன்ன பரிகார பத்தியங்கள்
கண்டிதங்க ளாகக் கருதியே—உண்டு
சகல விதமுமெனத் தான்கொள்ள வின்றி
விகலை விடினுமது வீண்.

(கு - ரை) விகலை-விநாடியின் எட்டிலொரு கூறு; மருத்துவர்கள் கூறிய நோய்ப் பரிகாரமாகிய பத்தியங்களை கண்டித (உறுதி) மொழிகளாக எண்ணி, அவர் கூறியவாறு சகல நன்மைகளும் உண்டென நம்பிக்கை வைத்துக் கடைப்பிடியாகக் கொள்வதை ஒரு விகலை நேரமாயினும் சோர்வு மறதிகளால் நழுவவிடுவாராயின் மருத்துவர் கூறிய மேற்சொன்ன நன்மைகளெல்லாம்

வீணுகி யொழியும். இமை எட்டு-தற்பரை; தற்பரை; எட்டு-விகலை விகலை எட்டு-விநாடி; விநாடி அறுபது-நாழிகை.

## ஏதி

353 வெட்டேற மாட்டாது விரிசம் பழரசத்தை
யட்ட சுதையி லரிதாரம்—இட்டுடனே
கோதி மதித்த குழம்பைத் திமிர்மெய்யில்
ஏதி தனதுமுனை யில்.

(கு - ரை) ஏதி - வாள்; எலுமிச்சம்பழத்தை அறுத்துப் பிழிந்த சாற்றை, சுண்ணத்துடன் அரிதாரத்தையும் சேர்த்துக் குழப்பிய குழம்பை வாளின் வாயினும் வெட்டுண்ணும் பொருளின் மேலும் தடவிப் பின் வாளோச்சி வெட்டினல் வெட்டு ஏருதாகி விடும் என்பதாம்.

## பொல்லம்

354 பாலை யெனுங்குவியாய் பாண்டங் களைமூஞ்ச
போல வுருகிப் புகையாமல்—மூலைகளிற்
கெல்லத் துருவு கிளறு வதுபோலே
பொல்லத்தி னுற்செய் புழை.

(பொ - ரை) பொல்லம்-தைக்குங் கருவி; ஊசி. பாலை-வாலைக் கருவி; வாலைக் கருவியின் மூலைகளிற் புகைமேலெழாமல் துளையிடு கருவியால் துருவித் துளை செய்ய வேண்டும் என்பதாம்.

## வளம்

355 கொதிப்பை யருத குடிநீரைக் காய்ச்சி
வெதுப்பு விரல்பொறுமை மேவ — மதிப்பு
முளதாக மாந்துதலுக் கூதும் பதத்தில்
வளமான கிண்ணத்தில் வார்.

(கு - ரை) வளம் - கிண்ணம்; (வள்ளம்) குடிநீர் காய்ச்சும் போது சூட்டை நீங்காமல் காய்ச்சி அதன் வெப்பம் விரல் பொறுக் கும் சூட்டை யுடையதாக மதிக்குமாறு, உட்கொள்ளுதற்கு ஊதும் பதமுடையதாக, சுத்தமான கிண்ணத்தில் ஊற்றி மேற்கூறிய முறையாலருந்துக என்பதாம்,

## கோரம்

356 காய்ந்தகுடி நீரைக் கலக்கத்தை யானத்தை
வாய்ந்த பருவம் வரநாடித் — தோய்ந்தபொடி
யாரத் தினிமை யனுகூல மாகவொரு
கோரத்தி லேயிறுத்துக் கொள்.

(கு - ரை) கோரம் - வட்டில்; மேற்செய்யுளில் கூறிய முறைப் படி காய்ச்சிய குடிநீரை, கலக்கமாகவும் குழம்பாகவும் வாய்க்கும் பதத்தை அடையும் படியை நாடி அந்நீரிற் கொட்டிக் கலந்த சூரணத்தின் பதம் அனுகூலமாமாறு மேல்நின்ற மிகையான நீர்த் தெளிவைச் சிறு வட்டிலில் இறுத்துக் கொள்க என்பதாம்.

## பாசு

357 பச்சையரி சாமளமாம் பண்பு முமையவள்பேர்
இச்சை மரகதமா தென்னவே—மெச்சுகின்ற
தேசு வளரத் தினமு மினமான
பாசு பசுமைநிறம் பார்.

(கு - ரை) பாசு - பச்சை; உமையம்மையின் நிறப்பண்புப் பெயர் மரகதவல்லி யென்று வழங்குவதனைப் புகழ்கின்ற புகழ்ச்சி தினமும் வளர்ச்சியுற அப்பண்பிற் கினமாகக் காட்சியிற்றோன்றுவ தாகிய, பச்சை, அரி, சாமளம், பாசு என்பன பசுமையாகிய நிறப் பண்பு குறித்துவரும் ஒருபொருட் பெயர்களாம்.

## சூற்பம்

358 கைசா வொருதொடிபோற் காண வுலர்ந்தபின்பு
வைசால்பு மெத்த வருமதிலே—நைசாதி
தோற்பத்துக் கப்படியே தோதகமா கத்தோன்றும்
சூற்பத்தி லேபுடைத்த தூள்.

(கு - ரை) சூற்பம் - முறம்; முறம்சரக்குகளை முறைப்படி கலந்து இடித்து முறத்தினல் புடைத்துத் தூசு நீக்கிய பொடியை காற் பலம் ஒரு பலமாகப் பொலிவுபெற்றுக் காணுமாறுலர்ந்த பின்பு ஏற்ற பக்குவ முறையாக மருந்து செய்யும் சால்புடைய தாகும்படி

வைத்திடுக, மற்றும் பல கைம்முறைப் பாகங்களும் கலந்து கொள்ளுதற்குதவும் என்பதாம்.

## நறவு

359 போக்கடிக்கு மையைப் பொருது மிகுவலிமை
ஆக்கு மதன்வே ரதிமதுரம்—பாக்கு
வன்வே ரடுகுடிநீர் மாந்து புளிவிட்டே
இன்னறமார் பிற்சளியை யே

(கு - ரை) நறவு - அனிச்சம்; இனிய மணமுடைய அனிச்சத்தின் வேர் அதிமதுரம் கமுகின்வேர் மூன்றையும் கைம்முறையாய்க் காய்ச்சிய குடிநீரைப் புளி பத்தியமாக நீக்கியருந்த, மார்பிற் சளியை, சேத்துமத்தை அடக்கி நீக்கும் என்பதாம்.

## மாலாகம்

360 கண்ணுக் கிடலாங் கபநோய்க் கடங்காத
பெண்ணுக் கிடலாம் பிளவுடனே — வெண்ணெயொடு
ஏல மரிசனமா லேடேக கோகனகம்
மாலாகத் தாலிழைத்த மை.

(கு - ரை) மாலாகம் - செந்தாமரை; ஏலமும் மஞ்சளும் ஓரிலைத் தாமரையும் வெண்ணெயோடு சேரக் கல்வத்திட்டு, செந்தாமரை மலரையுங் கைக்கொண்டு உரைத்து இழைத்த மையினை, கபநோய்க்குக் கண்ணுக்குக் கலிக்கமாகப் போடக்குணமாகும்; தாம்பூலத்துடன் மேற்கண்ட மையை உபயோகித்துப் பெண்களை வசப்படுத்தலாம் என்பதாம்; திருமாலின் உறுப்புகளெல்லாவற்றிற்கும் தாமரையை உவமையாக இலக்கிய நூல்வல்ல புலவர்கள் கூறுதலால் மாலாகம் செந்தாமரை என்று கொள்ளப்பட்டது.

## எழினி

361 உண்ட வவிழ்த முடலிற்கொள் பத்தியத்தை
உண்ட வளவு மொருநிலையாய்—அண்டி
அழிவெயிலிற் காலி லடரா திருக்க
எழினி கவித்தமனை யில்.

(கு - ரை) எழினி - திரைச்சீலே; உட்கொண்ட மருந்தை உடம்பினிடத்தேற்பிக்கும் பத்தியவுணவினை யுண்ட அளவும் ஒரு நிலேயாக அடங்கி மேற்கண்ட மருந்தும் பத்தியமும் பயன்படுமளவும் அவை வீணுகாமற்பொருட்டு வெயிலிலும் காற்றிலும் படாமல் உறைவதற்கு, திரையிட்டு மறைத்த மனையகத்திலிருக்க வேண்டுமென்பதாம்.

## கறை

362 மீட்டு மழையில் வெயிலி லிமத்திலுறக்
காட்டாம லேயினிது காப்பாற்றிப் — பூட்டும்
அறையிலொரு பாண்டத்தி லாருமல் வைக்க
கறையில் மசிந்தசரக் கை.

(கு - ரை) கறை - உரல்; உரலில் இடித்துத் தூள் செய்த மருந்துச் சரக்குகளை, மீண்டும் மழை வெய்யில் பனியாகியவற்றில் வைப்பதால் அத்தூளின் சத்துக் கெடுமாதலின் அங்ஙனம் செய்யாமல் இனிதே காத்து, காற்றுட்புகாதபடி கபாடம் மறைப்புடைய அறையினுள் ஒரு புதிய பாண்டத்தில் வைத்தல் வேண்டும், உரலில் இடித்த பதம் கெடாதிருக்கும் பொருட்டாகவென்பதாம்.

## சிராவணம்

363 பதமாக நல்லாத பத்தி லுலர்த்தி
இதமா கியசரக்கை யெல்லாஞ் — சதையு
வராம லதைக்கறையின் வாயிலே பெய்து
சிராவணத்தி னுல்மதனஞ் செய்.

(கு - ரை) சிராவணம் - குழவி; அரைக்கும் பக்குவம் வரும் வரை நல்ல வெயிலில் உலர்த்திப் பதமாக எடுத்த சரக்குகளையெல்லாம் மீண்டும் நமர் கொள்ளுமுன் கல்வத்திலிட்டு கல்வக் குழவியால் மத்தித்திடுக என்பதாம்.

## குடம்

364 ஈண்டு சனங்க ளிடமும் மலக்காங்கை
தீண்டுவெம்மை யானேய் செழிக்குமே — கூண்டு

வுடலாகத் துற்பல்மா முற்றபிணி யோர்க்குக்
குடவாச மாகாது கொள்.

(கு - ரை) குடம் - ஊர்ப்பொதுவிடம்; பொதுமக்கள் கூடிப் பொழுது கழிக்கும் ஊர்ப்பொதுவிடம், பலவகையான உடலியல் புடையார் மும்மலமாகிய வெயர்வை, சிறுநீர், மலம் ஆகியவற்றின் வெம்மையாகிய குற்றமுடையதாதலின் அவர்களின் பரிசத்தால் நோய் வளர ஏதுவாகும். நோய் கொண்டு மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் பிணியாளர்களுக்கும் தணிந்துவரும் நோய் மீளவும் கிளைத்து வளராமைப் பொருட்டு அவர்கள் ஊர்ப் பொதுவிடங்களில் சென்று தங்குதலை நீக்க வேண்டியவர்களாவார்.

## குடாவடி

365 மூன்று மொருநிறையாய் முக்காவே ளைச்சாற்றில்
ஊன்ற வரைத்ததனை யுண்டைசெய்து—தேனில்
விடாமலொரு மண்டலமுண் வெண்குட்ட மாறும்
குடாவடியெச் சங்கடுகு கொள்.

(கு - ரை) குடாவடியெச்சம் - கரடி மலம்; கரடிமலம், கடுகு, கொள் (காணம்) ஆகிய மூன்றையும் ஒரு சம நிறையாகக் கொண்டு முக்காவேளைச் சாற்றில் நன்கு குழையவரைத்துப் பின் உண்டை செய்துலர்த்தி, இடைவிடாமல் நாளொன்றுக்கு இருவேளையாக ஒரு மண்டலம் கொள்ள வெண்குட்டமாறும் என்பதாம்.

## சீரை

366 சூரணம்பற் பங்கிருதம் தூளெண்ணெய் லேகமுதற்
பேர ணவிழ்தவெகு பேதங்கள்—நேரறிந்து
பாரி லினியவனு பானங் களினுநிதஞ்
சீரை தனிலறிந்து தின்.

(கு - ரை) சீரை - மருந்துண்ணு முறைமை; சூரணம் பற்பம் கிருதம் தூள் எண்ணெய் இலேகியம் முதலிய பேர்களாலாக்கும் அவிழ்த வகைகளை அவ்வவற்றின் தன்மைக் கேற்ப இனிய அனுபானங்களோடு கூட்டியும் அந்தந்த நாளிலும் மருத்துவர் குறித்த கால நியதியையுமறிந்துட் கொள்க வென்பதாம்.

## விதானம்

367 மச்சிட்ட மேற்கட்டு மாளிகையே யானலும்]
உச்சிட்ட மாயிருக்கு முல்லாபர்—மெச்சு
வதான பரியங்கம் வைகவழ காக
விதானத்தைக் கட்டுவது மேல்.

(கு - ரை) விதானம் - மேற்கட்டி; மச்சுப்பாவிய மேற் கட்டியையுடைய மாடி வீடாயினும், வீட்டில் பல்லி, சிலந்தி முதலிய சிற்றுயிரிகள் உலவுவதால் அவற்றின் எச்சங்கள் சிந்துதற்கேது வாகாமல், நல்வாழ்வை விரும்புபவர் மெச்சிப் புகழ்வதான பள்ளிக் கட்டிலின்மேல் உறைவதற்கழகாகவும் மேற்சொன்ன குற்றங்களேற்படாமலும் அக்கட்டிலின் மேலாக விதானத்தை யமையக் கட்டி வைப்பது மேன்மையுடையதாம்.

## தாமாலம்

368 தகிவே ரிவைமூன்றுந் தாஞேர் நிறையாய்
மகிழிலைச் ராலரைத்து மாத்ரை—மிகவுருட்டித்
தேமோ ரறவிலுணச் சேட்பபித்த வாதமறும்
தாமாலங் கத்தூரி தா.

(கு - ரை) தாமாலம் - கதிர்பச்சை; தமாலகங்கத்தூரி ஆத்தி இவைகளின் வேர்களைச் சம எடை கொண்டு மகிழின் இலைச் சாற்ருலரைத்துருட்டிய மாத்திரையை, தேனிலுண்ணச் சேத்து மமும், மோரிலுண்ணப் பித்தமும் நீரிலுண்ண வாதமும் நீங்கு மென்பதாம்.

## குமரி

369 விளவே ரரிதகித்தோல் வேலம் பிசினி
யளவோர் நிறையரைத்த வுண்டை—குளநெய்
அமரியிலுண் வாதபித்த மையிவைபோ மெய்யே
குமரி யிரதத்திற் கூ.

(கு - ரை) குமரி - கற்ருழை; வில்வவேர் கடுக்காய்த் தோல் வேலம்பிசின் மூன்றையும் ஒரே நிறையாக அளவுடன் நிறுத்து,

கற்றுழைச் சாற்றிலரைத்து உருண்டை செய்து உலரவைத்து, வெல்லத்திலுண்ண வாதமும், நெய்யிலுண்ணப் பித்தமும் அமரி யாகிய சிறுநீரிலுண்ணச் சேத்துமமும் நீங்குமென்பதாம்.

## கோசிகம்

370 கொஞ்சிக் கனிரசத்திற் கூசாம லூறவைத்தே
அஞ்சுநா ளாகிய பின்பிளநீ—ரிஞ்சியிதிற்
காச மிருமல் சயநோ யகலவென்றூற்
கோசிகமூ லத்தையுணுங் கொள்.

(கு - ரை) கோசிகம் - தென்னை; தென்னையின் வேரைக் கொழுஞ்சி நாரத்தைக் கனியின் சாற்றில் நன்கு நனைய ஐந்து நாள் ஊறவைத்து, பிறகு இளநீர் இஞ்சி ரசம் ஆகியவற்றில் ஏற்றவா றுட்கொள்ள, காசம் இருமல் க்ஷயநோய் ஆகியவை தீரும் என்ப தாம், கோசிகம்-மல்லிகை வேரெனவும் கொள்ளலாம்.

## வெருகுகண்டூதி

371 நிறைக்கு நிறைமிளகு நேர்வாளங் கொட்டை
யுறைக்கனிநீ ராலரைத்த வுண்டை—யறற்குள்
பருக வுளைப்பறுநீர்ப் பாடறுமுண் பாலால்
வெருகுகண் டூதியது வேர்.

(கு - ரை) வெருகுகண்டூதி - பூனைக்காஞ்சொறி; பூனைக்காஞ் சொறி வேரோடு மிளகும் சுத்தி செய்த நேர்வாளப் பருப்பும் சமநிறையாய்க் கூட்டி மிளகாய்ச்சாற்றி லரைத்துருட்டிய மாத் திரையை நன்னீரிற் சேர்த்தருந்த உளைப்பு நோய் நீங்கும். பாலி லுண்ண நீர்ப்பாடு தீரும்.

## வேள்மனை

372 தன்னையவித் தக்காரஞ் சாதிக்காய் சாபத்ரி
துன்னக் கலந்துருட்டித் துய்க்கவே — யென்னபல
முள்வதுகா மேசுரமா முன்சுக்லத் தம்பனமாம்
வேள்மனை முதுபூமி வேர்.

(கு - ரை) வேள்மனை - பூநாகம்; நாக்குப் பூச்சியை அவித்து கரும்புச்சர்க்கரை சாதிக்காய் சாபத்திரி இவைகளைக்கலந்துருட்டி யுட்கொள்ளின், உடல் நலமும் வலிமையுமுள்வது தான் என்னே! (அதிசயமாம்) சுக்கிலத்தம்பனமுமாம், காமேசுரமுமாம்; ஆகவே நாக்குப் பூச்சியே காமவெழுச்சி சுக்கிலத் தம்பனங்களுக்கு உறை விடமாம்.

## பட்டம்

373 தூளைத் திலநெய்யுஞ் சூழ நெருப்பாற்சுட்
டாளப் படும்புண்க ளாறவே — நீளத்தி
லிட்டதன்மே லப்பி யிடுமுன் குணமாகும்
பட்டதின் பட்டையிறுற் பண்,

(கு - ரை) பட்டம் - படுமரம்; படுமரப்பட்டைத்தூளை எள் ளின் எண்ணெயிற் சேர்த்துத் தீயிற் காய்ச்சிய தைலத்தை ஆழ மாகப் பதிந்த புண்களுக்கு நீண்டதிரிகளிலூட்டியுட் செலுத்தியும் மேலாகத் தடவியும் பண்டுவம் செய்முறையாகச் செய்தால் புண் ணறிக் குணமாகும் என்பதாம்; ஆசிரியர் இச்செய்யுளில் பட்டை யென்று பெயர் குறியாமற் பொதுவகையாற் கூறியிருத்தலால் துவர்ப்பு சத்து, கார்ப்பு, உவர்ப்பு சத்துகளுடைய மரப்பட்டை யாமென உய்த்துணரவைப்பெனு முத்தியாற் கொள்க; பட்டதின் பட்டை - பட்டவதின் பட்டை.

## அயன்மனை

374 பந்தத்தை நீக்கிப் பழமலத்தைப் போக்குதலாற்
கந்திப் பருப்புங் கடுக்காயும் — வெந்த
பயநிதமு மாருமற் பானிக்க வாரம்
அயன்மனையாற் காயசித்தி யாம்.

(கு - ரை) அயன்மனை - பிரமி; (வல்லாரை) மலச்சிக்கலைத் தீர்த்துக் குடலில் தங்கிக் கிடந்த பழைய மலக்கட்டை நீக்குமாத லால், வல்லாரையைத் துவரம்பருப்பும் கடுக்காயும் சேர்த்துத்தண் ணீரில், வேகவைத்துக் காய்ந்த நீருடன் ஒரு வாரம் (ஏழு நாள்) அருந்திவர மேற்கண்ட நோய் தீர்வதுடன் காயசித்தியுமாம்,

## கடிப்பகை

375 சேர்வாயு மாதருக்குத் தீர்ந்து வலிமைமிகும்
பார்மீ தருக்கப் பழுப்புநீர் — ஆரத்

தடிப்புறவூ றிப்புலர்ந்து சார்புகறிக் கான
கடிப்பகையொன் ருற்சூத கம்.

(கு - ரை) கடிப்பகை - கடுகு; நிலத்திலுள்ள எருக்கின் பழுப் பிலையின் சாற்றில் நன்கு ஊறவைத்து அதில் ஊறியதினல் பருத் துலர்ந்த கடிப்பகையாகிய கறியிற் கூட்டும் கடுகை மருந்தாக உப யோகித்தலால் மாதர்களுக்குச் சூதகத்தாலேற்பட்ட வாயு தீர்ந்து நல்ல உடல் வலிமையுண்டாகும்.

## அச்சம்

376 தன்னை யெழுப்பிடுபித் தப்பிணிக ளைத்தீர்க்கும்
பின்னும் பசியைப் பெருக்குமே — பன்னமுதல்
நிச்சயமா கப்புளிபுன் னேர்கறியா ணத்தருந்தும்
அச்சமச்ச மாகியப யம்.

(கு - ரை) அச்சம் - அகத்தி; அச்சந்தரும் பித்தப் பிணிகளைத் தீர்க்கும், நல்ல பசியை உண்டாக்கும்; புளியுடன் அகத்தியின் இலையாகிய கீரையைச் சேர்த்துக் குழம்பாக்கியுண்ண நிச்சயமாக மேற்கண்ட நன்மையுண்டாம் என்பதாம்; பன்னம் - இலை; கீரை.

## வெறிப்பகை

377 மூன்று மொருநிறைமேல் முக்கடுகு முக்கழஞ்சும்
ஆன்ற னறலா லரைத்துருட்டி — ஊன்றன்
கறுப்புக்கும் வெண்மைக்கும் காடிவெண்ணெ யுண்போம்
வெறிப்பகைநிம் பந்தகரை வேர்.

(கு - ரை) வெறிப்பகை - கடுகு; கடுகு, வேம்பு, தகரை இம் மூன்றின் வேரை ஒரு நிறையாகக் கொண்டு மேலும் முக்கடுகு வகைக்குக் கழஞ்சாக முக்கழஞ்சு கூட்டி, பசுவின் கோமய நீரா லரைத்துருட்டி உடம்பிலுண்டான கரும்புள்ளிக்குக் காடியிலும் வெண்குட்டத்திற்கு வெண்ணெயிலும் உண்ணப்போம்.

## அதவு

378 எய்த்த வுடல்பருக்க வெப்போதும் பாலுதவி
மெய்த்தனுவி லேமுதுமை மேவாம — லுய்த்தல்

உதவுதலாற் சுக்கிலத்தை யோம்புதலி ஞலே
அதவு மனிதருக்கே யாய்.

(கு-ரை) அதவு-அத்தி; அத்தியானது இளைத்த உடம்பு தழைக்க எப்போதும் பாலைத் தந்து உடம்பினகத்து மூப்புவராம லிளமையோடிருக்குமாறு உதவி செய்து வீரிய விருத்தியளித்துக் காத்தலினுல் உலகத்தில் மக்களாகப் பிறந்தோர்க்குத் தாயை யொப்பதாகும்.

## கடாசலகண்டி

379 வாயுபோம் பேச்சு வதறல்போம் துன்மேகத்
தேயுபோங் காயத் திமிரும்போம் — ஓய
விடாதறலி னூடந்த வேரைமதித் துண்ணக்
கடாசலகண் டிக்கிழுத்த கை.

(கு-ரை) கடாசலகண்டி-நெருஞ்சில்; கடாசலகண்டியின் வேரை இடைவிடாமல் நல்ல நீரிலரைத்து உட்கொண்டுவரின் கையை இழுத்து முடக்கிய வாதம் தீரும்; அதன் காரணமாகத் தடுமாறிய பேச்சுத் தடுமாற்றமும் போம்; மேகத்தால் நேரும் உஷ்ணமும் உடம்பிலுண்டான திமிர்ப்பும் போமென்பதாம்.

## கொடிவேலி

380 வாள்போ லறுக்குமந்த வாதத்தோ டைகலந்தாற்
றேள்போற் கடுக்குந் திமிராகு — மீள
உடலை யதனுலிந் துப்புடனே யுண்டாற்
கொடிவேலி வாதத்தைக் கூர்.

(கு-ரை) கொடிவேலி-சித்திரமூலம்; வாதத்தோடு சேத்துமமும் கலந்து தொந்தித்ததானுல் உடம்பெல்லாங்கடுத்து வலியுடன் திமிர்ப்புமுண்டாகும்; ஆகையால் அந்நோய் மீளும் வகையாக, சித்திரமூலத்துடன் இந்துப்பையும் கூட்டியுண்டால் வாதத்துடன் தொந்தித்த சேத்துமத்தை வாள் போல் அறுத்துத் தீர்க்குமென்பதாம்.

## காஞ்சுகம்

381 கிளர்ந்த வயித்தியர்சொற் கேட்டுடலிற் காமம்
வளர்ந்தமட வார்முயக்க மாற்றி — உளந்திற

லாஞ்சுவ ரச்செலவ கற்றி யிருப்பார்மெய்
காஞ்சுகமா மோடுநலி கள்.

(கு - ரை) காஞ்சுகம் - காடி; வயித்தியர் சொற்கேட்டுக் காம நுகர்ச்சியை நீக்கி உள்ளத்திடமுடையராயும் அலேச்சல் நடையை யகற்றியவராயும் இருந்து காடியை உட்கொள்ளின் நோய்கள் நீங்கும்; இஃதுண்மை.

## காளகண்டம்

382 ஆமயிலே யிற்பாய்ச்சி யாட்டி யதிற்கடுகும்
ஓமமு மத்தித் துருட்டியே — சீமிகுமெய்
நீளிரண குட்டமெல்லா நெய்யிலிட மேலாறும்
காளகண்ட முட்டைகலி கை.

(கு - ரை) காளகண்டம் - குயில்; குயில் முட்டையின் கருவை இருவாட்சியிலேயில் தோய்த்து அரைத்து அதனுடன் கடுகும் ஓமமுங் கூட்டி மத்தித்துருட்டி, நெய்யில் குழைத்துப் பூச இரணம் குட்டம் முதலிய சரும நோய்களாறும்.

## சூர்

383 சட்டகத்தை வச்சிரவே தண்டமாக் கும்பனசக்
கொட்டையைநெய் யிற்பொரித்துக் கொண்டதிலே— யட்டகறி
நேர்கணேகோத் துண்பிணியை நீக்குநெய்பா லாமறுபெண்
சூர்பிணிவி யாதிநலி சூழ்.

(கு - ரை) சூர் - அணங்கு; தன் உடல்வளத்துக்குப் பொருந்து மாறு அறிவுடையோர் வயது, நாள், இராசி, கணம், யோனி முதலிய பல பொருத்தங்களேத் தேர்ந்து கூட்டுவித்த தன் மனே வியை விடுத்து, பிற மங்கையருடன் கூடினுற் பேயுடன் புணர்ந்த சேர்க்கையையொத்து உடலுக்குத் தீமை நேர்வதாகிய நோயை யுடையோர், அந்நோய் தீர்ந்து நலமடைய வேண்டுவராயின், பலாவின் விதையை நெய்யிற் பொரித்து அதனேடு அவித்த மிள கும் திப்பிலியும் கலந்து பொடிசெய்துண்க. பத்தியம் நெய்யும் பாலும் வேண்டுமளவு சேர்த்துக் கொள்ளலாம்; பிறவற்றை

நீக்குக என்பதாம்; "ஆயுமறிவினர் அல்லார்க்கணங்கென்ப, மாய மகளிர் முயக்கு" என வள்ளுவரும் ஓதுதல் காண்க.

### சசி

384 பட்டையொரு நாலும் பலமோர் வகைக்காகி
இட்டுமேரண் டத்தயில மேற்றியே—யட்டு
நசியமிடப் பீனிசம்போ நாட்டவலி நீங்கும்
சசியோமம் மஞ்சள்பிருந் தம்.

(கு - ரை) சசி - பச்சைக்கற்பூரம்; பச்சைக் கற்பூரம், ஓமம், மஞ்சள் துளசிப் பட்டையாகிய இந்நான்கும் வகைக்கொரு பலமாக எடுத்து, பச்சைக்கற்பூர மொழிந்தமற்றைய சரக்குகளை அரைத்துக் கல்க்கமாக்கி ஆமணக்கெண்ணெய் நான்கு பலத்திலிட்டுப் பதத்திற் காய்ச்சி வடிகலத்தில் மேற்கண்ட பச்சைக் கற்பூரத்தையிட்டு வடித்து மருந்தைப் புட்டியிலடைத்து வைத்து நசியமாக விட, பீனிசம் கண்வலி நீங்கும்.

### வெடி

385 தன்னரி நாலுஞ் சமமாக வெட்பாலே
பன்னரசத் தாலரைத்துப் பண்ணுருண்டை—தின்ன
முடமகலு நீருடனே மோருடன்போம் பித்தம்
வெடியரக்கு குங்குமப்பூ வேய்.

(கு - ரை) வெடி-வெடியுப்பு; வெடியுப்பு அரக்கு குங்குமப்பூ, மூங்கிலரிசி யாகிய நான்கும் சமமாக எடுத்து வெட்பாலையிலைச் சாற்றாலரைத்துருட்டிய உருண்டையை நீருடன் கொள்ள முடந் தீரும், மோருடன் கொள்ளப் பித்தம் போம். வேய்தன்னரி-மூங்கிலரிசி.

### தவசி

386 காய்க்கறியாய்ப் பூவின் கறியா யிலைக்கறியாய்
வாய்க்கு மதன்புறண்வேர் வாய்க்குமே—நோய்க்கு
விவரமிக வாதலினால் மேதினிமேற் சொன்னேன்
தவசி மனிதருக்குத் தாய்.

(கு - ரை) தவசி - தவசி முருங்கை; தவசி முருங்கையின் இலை பூ, காய் என்னும் மூன்றும் உணவோடு கூட்டியுண்ணுதற்குக் கறியாகவுதவும், அத்தகைய முருங்கையின் வேர்ப்புறணி நோய் தீர்க்கு மருந்தாவதற்குதவும், இங்ஙனம் உணவும் மருந்துமாம் தன்மையால் உலக மக்கட்குத் தாய்போல்வதாம் என்று யானும் மருத்துவ நெறியாலும் உலகியலனுபவ நெறியாலும் உண்மை யாகக் கூறுகிறேனென்பதாம்.

## தூசனை

387 மாருத வெய்ய வலுநோயி னுக்குவெண்ணெய்
நீருக மூலிகையாம் நேரிட்டு—வீறுகின்ற
வாசனையி லிந்த மகிதலத்தி லேயதிகந்
தூசனைகா லிற்பொடித்த தூள்.

(கு - ரை) தூசணக்கால் - கொக்கின்கால், கொக்கின் காலின் தோலை முறையாகப் பக்குவப்படுத்திப் பொடி செய்த தூள், மாருத கொடிய வலிய நோய்க்கு வெண்ணெயைக் கட்டிப் பற்ப மாக்கு மூலிகையாக வமைந்ததனாலும் தன் தொன்று தொட்ட பயிற்சியாலும் இவ்வுலகில் நிலவும் பல மருந்துகளினு மதிகமாம்; வாசனை - அடிப்பட்ட பயிற்சி. தூசனை - குப்பைமேனியெனலும் பொருந்தும்.

## அக்கு

388 தேனிலுணப் பாண்டுவருந் தீருமிள நீரிலுண
ஊனி லிடக்கடிக ளுள்ளதெல்லாந்—தானறுமே
விக்கலெலு மிச்சிலுண வெப்பமறும் நீரிலுண
அக்கு மணியடலை யால்.

(கு - ரை) அக்கு - உருத்திராட்சம்; மேற்சொன்ன அக்கு மணியை நீருக்கிய பொடியைத் தேனிலுண்ணில் பாண்டு நோய் உண்டாம், ஆதலின் அம்முறையை விடுத்து, நீரிலுண்ணின் முந்திய பாண்டுநோய் தீரும், மாமிச வகையிற் சேர்த்துண்ணின் நச்சுயிரி களின் கடியாலாகிய விடநோய்கள் தீரும்; எலுமிச்சம்பழச் சாற்றி லுண்ணின் விக்கலும் நீரிலுண்ணின் வெப்பு நோயும் நீங்கும்.

## வச்சிரம்

389 தப்பிணியெல் லாமொடுங்குஞ் சன்னிமுத லானதும்போம்
உப்புசமு நீங்கு முபாயமாய்—அப்புலா

வைச்சசம தாக மருவ வமைத்துண்ண
வச்சிரமூ லிக்கரிய வா.

(கு - ரை) வச்சிரமூலி - சதுரக்கள்ளி ; சதுரக்கள்ளியுடன் ஓமம் ஏற்றவாறு பொருந்தக் கூட்டிப்பாகஞ் செய்துண்ணின் நீங்குதற்கரிய வாத நோய்களும் சன்னி முதலானவைகளும் உப்பு சமும் நீங்கும்; இம்முறையை உபாயமறிந்து செய்க வென்பதாம்.

## சோணிதாகருடணீ

390 தன்னிலொழி யாத தடிப்புடலி லாந்திமிர்க
ளுன்ன தொழிய வுதிரத்தைத் — தின்னுதலாற்
பேசுமதை மாருப் பிணிப்பிணியென் றேயறிதி
நீசோணி தாகருட ணீ.

(கு - ரை) சோணிதாகருடணீ - இரத்தங்கொல்லி; தானுக வும் பிற மருந்துகளாலும் நீங்காதாகிய, இரத்த அழுத்தத்தாலாம் உடல் திமிர்ப்பு முதலிய நோய்கள் இரத்தத்தைக் கெடுத்து உடல் நலத்தையும் அழிக்குமாதலால், அந்நோய்க்கு நோய் செய்து நீக்குவதாகிய இரத்தங் கொல்லியென்னும் ஆரைக்கீரையை உப யோகித்து மேற்கண்ட நோயைத் தீர்த்துக் கொள்க என்பதாம். ஆரைக் கீரை மதுமேக முதலிய பிற நோய்களையும் நீக்கும் தன்மை யுடைய மூலிகையுமாம்.

## கொண்டை

391 பழத்தால் வடகத்தால் பட்டையால் வேரால்
இழைத்த வவிழ்தவகை யெல்லாம் — வழக்கமா
உண்ட மனித ருடலைத் திடஞ்செய்நமன்
கொண்டை யமைச்சனுக்குக் கொல்.

(கு - ரை) கொண்டை - இலந்தை; இலந்தையின் பழம் வடகம், பட்டையும் வேரும் கொண்டு செய்யப்பட்ட அவிழ்தங்கள் ஆகியவைகளை வழக்கமாக உட்கொண்டு வரும் மனித உடலைத் திடகாத்திரமாக்கும்; பித்த நோயைக் கடிந்து நீக்கும் எமனு மாகும்.

## வெண்குஞ்சம்

392 குற்றமி லாமனிதங் கொள்ளளவு கொண்டுவர
வற்றலென வேரை மதுநீர்நெய் — யிற்றேளுக்

குஞ்சறப்பத் துக்குங் கொடும்பேய் நரிக்கும்வெண்

குஞ்சம் விடமனைத்திற் கும்.

(கு - ரை) வெண்குஞ்சம் - வெண்குன்றிவேர்; வெண்குன்றியின் வேரை (ஆட்டு மூத்திரத்தில் ஊறவைத்து) வற்றலாகக் காய வைத்துப் பொடித்து நாள்தோறும் தேன், நீர், நெய் ஆகியவற்றில் கொள்ளளவு கொண்டுவரின், தேள் விடம், பாம்புவிடம், நரிக்கடி விடம் ஆகிய நச்சு நோய்களுக்கும் பிறவிடங்களுக்கும் மருந்தாக அவற்றை நீக்குமென்பதாம்.

## சில்லி

393 பாயு மிர்ணக்க பாலக் கிரந்திமுதல்

நோயு மகலு நொடிக்குமுன்னே — நேயத்தில்

வல்லி கறிசீரம் வார்த்தட் டுடன்முழுகுஞ்

சில்லி யிலைரசத்தாற் சீ.

(கு - ரை) சில்லி - சிறுகீரை; சீந்தில் கொடிமிளகு ஆகியவற்றுடன் பாலும் சிறுகீரைச்சாறும் கூட்டி எண்ணெயிற் கலந்து காய்ச்சி அவ்வப்போது முழுகிவரின், சீயொழுகும் இரணம், கபாலக்கிரந்தி முதலிய நோய்கள் உடனுக்குடன் தீருமென்பதாம்.

## ஆசினி

4 நீக்கு மறிவை நிலைக்கச் செயுமுரத்தை

ஆக்கு நிதமு மனிதர்தந் — தேக்கநனி

போசனசுக் கேலமிகப் போட்டமுத வல்லியுடன்

ஆசினிபித் தக்கடுமை யை.

(கு - ரை) ஆசினி - ஈரப்பலா; ஒருவகைப் பலா; சீந்திலாகிய அமுதவல்லியும் ஈரப்பலாவுமாகிய இரண்டையும் சுக்கும் ஏலமும் சேர்த்துப் பக்குவம் கைமுறையாகச் செய்து தெவிட்டும்படி நிறையுணவாக நாள் தோறும் உட்கொள்ளின், பித்தத்தின் கடுமையைப் போக்கி, கலங்கிய அறிவை நிலைக்கச் செய்யும்; உடல் வலிமையை உண்டாக்கும் என்பதாம்.

## உழிஞை

395 மாருத குன்ம வயிற்றுவலி தீரவென்றால்

சீரு வதிமதுரந் திப்பிலியோர் — கூறும்

விழுதி யிலையுடனே வெள்ளுள்ளி கூட்டி
உழிஞை யிலையயரை யுண்.

(கு - ரை) உழிஞை - சிறுபீளை; மாருத வயிற்று வலியுடன் கூடிய குன்மநோய் தீர வேண்டின், அதிமதுரமும், திப்பிலியும் ஒரு கூருகவும், விழுதியிலையுடன் வெள்ளுள்ளியும் மறு கூருகவும் அளவு செய்து கூட்டி உழிஞையிலையுடன் சேரவரைத்துண்ணத் தீருமென்பதாம்.

## காருடகம்

396 சொல்லுமுன்னே நோய்கனலுந் தோற்றத்தா லுஞ்சுகந்த
வல்லமையி னுலு மருட்டாலும்—நல்லகுண
மாருத பண்டிதர்கை வைக்கு மவிழ்தமுறை
காருட கத்தையொருக் கால்.

(கு - ரை) காருடகம் - மருந்துப்புட்டி; தோற்றத்தாலும், சுகந்த மணந்தரும் வன்மையாலும், மருந்து சத்துக்களின் ஈர்ப்புக் குணங்களாலும், நல்ல பண்புடைய மருத்துவர் கைதொட்டுச் செய்த மருந்துகளை வைத்தெடுக்கும் காருடகமாகிய மருந்துப் புட்டியின் பர் சொன்ன வளவிலே நோய்கள் வெதும்பி நீங்கும் என்பதாம்.

## காண்டிகை

397 அண்டத்துக் குள்ளகில மத்தனையும் வைகுதல்போல்
குண்டத்துக் குள்ளே குழுக்கள்போல் — உண்டாகப்
பூண்டிருக்கு முண்மைப் பொருளா மவிழ்தமெல்லாம்
காண்டிகையிற் பேழைவருக் கம்.

(கு - ரை) காண்டிகை - மருந்துப் பெட்டி; பேரண்டத்தினுள் சிற்றண்டங்கள் தங்கியுலவுதல் போலவும், வளை புற்று முதலிய கீழறைகளிலுள்ள சிற்றுயிர்த் தொகுதி போலவும், காண்டிகையினுள் அவிழ்த வகைகளைச் சிறு சிறு கண்ணுடிப் புட்டிகளும் செப்புகளு மாகியவற்றிலடைத்து வைக்கப்படுமென்பதாம்; இட்டிகை, வட்டிகை என்பன போல், காண்டிகை என்பதும் ஒரு சொன்னீர்மைத் தாய்மருந்துப் பெட்டிக்குப் பேராயிற்று; மேலைச் செய்யுளோடியை புடையதிச் செய்யுள்.

## சுளகு

398 பண்டிதர்கள் செய்மருந்துப் பண்ட வகைவகைகள்
உண்டான தெல்லா முலரவே — மிண்டாய்
உளதா யிடமகன்ற வுத்தமத்தி னாலே
சுளகு பெரியமுறச் சொல்.

(கு - ரை) சுளகு - இடமகன்ற பெரியமுறம்; மருத்துவர்கள் பாகம் செய்யும் மருந்துச் சரக்குகளையெல்லாம் வெயில், காற்று முதலியவற்றில் உலர வைத்தற்கேற்றவாறாய் வாயகன்று விரிவுடைத்தாய்ச் செய்யப்பட்டுள்ளதாகையால் மருத்துவ உபயோக உபகரணங்களில் ஒன்றாகப் பெரிய முறமாகிய சுளகைக் கொள்ளலாம்.

## பையுள்

399 பாரிற் பரிகாரம் பண்ணச் சமர்த்திருந்தால்
நேரிட்ட நோயி னில்லைமையறிந் — தார்நாடிக்
கையு ளூறுமுறைமை கண்டுகொண்டு போராடு
பையு ளறமருந்து பண்.

(கு - ரை) பையுள் - நோய்; உலகில் நோயினர்க்குப் பிணி தீர்க்கும் மருத்துவம் புரிய விருப்பமுண்டாயின், அவர்க்கு நேர்ந்துள்ள நோயின் தன்மையை நாடி குறி முதலியவற்றாலறிந்து பொருந்திய நாடியின் நடையை நன்கறிந்து நோயுடன் போராடும் முறையாக அந்நோய்கள் நீங்கும் மருந்துகளைச் செய்க என்பதாம்.

## கம்பம்

400 நீங்கி யுடல நிசர்மதிக் கச்சுகந்
தேங்கி நிதமுஞ் செழிக்குமே — பாங்கான
உம்பருண வாமவிழ்த முண்டுபத்ய மாறுட்டாற்
கம்ப மசைவுநடுக் கம்,

(கு - ரை) கம்பம் - நடுக்கம்; பாங்கு பெறவமைந்த தேவாமிர்தம் போன்ற அவிழ்தத்தை உடல் நலம் வளம் பெறுமாறுண்டு ஏற்ற பத்தியமும் மாறா வகையால் காத்து வந்தால் உடலிடத்து முன்னரேயுள்ள நடுங்கல், தள்ளாடல், அசைதல் முதலிய

பலவீனங்கள் நீங்கி நல்ல உடல் நலத்தை மெய்யாகவுடையவரும் மதிக்குமாறு வளமுடையதாகி உடல் நலம் செழிப்படையும் என்பதாம்.

### உறுப்படக்கி

401 முறைக்காய்ச்ச லாலே முசியு முடலைச்
சுறுக்கிலே தேற்றவென்றாற் சொன்னேன் — பொறுப்
பாய்க்கொள்
வெறிப்பகையி லைச்சாற்றில் வெள்ளுளியோ டூறும்
உறுப்படக்கி யெச்சமமை யும்.

(கு - ரை) உறுப்படக்கி - ஆமை; நாளிடையிட்டு வரும் முறைக் காய்ச்சலால் மெலியும் உடலை விரைவில் நலப்பட்டுத் தேறவென்றால் ஒரு கைமுறை வயித்தியம் சொல்வேன் நம்பிக்கையுடன் கேட்பாயாக; வேப்பிலையின் சாற்றில் ஆமையின் எச்சத்தையும் வெள்ளுள்ளியையும் ஊற வைத்துட் கொள்ளுவாயாயின் மேற்கண்ட நோய்க்கு ஏற்ற மருந்தாகும்.

### மசா

402 தணியாத நோயுந் தணியப் புரியும்
மணிமந் திரவவிழ்த மார்க்கப்—பணியை
உசாவி யியற்றுமறி வுள்ளவரைக் கண்டால்
மசாவும் பயப்படுமம் மா.

(கு - ரை) மசா - மயக்கம்; தணித்தற்கரிய அசாத்திய நோய்களையும் தணியுமாறுக்கவல்ல மணிமந்திர வவிழ்த மார்க்கங்களையாக்கும் செயலை ஆராய்ந்தறிந்து தவறாமற் செயல்புரியுமறிவு உடையாரை எதிர்ப்படின், நாடிநிலைக்கடங்காமல் புறம்பாக நின்றுணர்வினைத் தாக்கும் பேயும் அஞ்சி விலகும் என்பதாம்; அம்மா-வியப்பிடைச் சொல்; மசா - மயர்வு தரும் பேய்க்கு ஆகு பெயர்; மயர்வு-மயக்கம், அயர்வு-அசா என வருதல்போல, மயர்வு மசா என வந்தது, என்று கொண்டு பொருளுரைத்தாம்.

### காதரம்

403 வாகடரே வேடர் வாகடநூ லேவலைகள்
பாக முறுமருந்தே பாணங்கள் — ஆகியநோய்

ஆதார மேவிருக்க மாவினிலே யேகுடம்பை
காதர மெலாம்பறவை கள்.

(கு - ரை) காதரம் - நோய்; வயித்தியரே வேடராக மருத்துவ நூலேவலைகளாக, பக்குவம் செய்த மருந்துகளே அம்புகளாக, தொந்தமுற்ற நோய்களே விலங்குகளாக உயிர் நின்ற உடலே கூடாக நோய்த்துன்பங்களே பறவைகளாக நடக்கும் மருத்துவமாகிய வேட்டைத் தொழில் என்பதாம்.

## இன்னல்

404 பன்னு பலமருந்தேன் பண்டிதமேன் பத்தியமேன்
சொன்னமுதல் தப்பாமல் சோராமல் — தன்னூலின்
வன்ன நெறியே வைத்தியர்கை நேர்வாசி
இன்னலறு நல்லமுறை யில்.

(கு - ரை) இன்னல் - நோய்த்துன்பம்; சொல்லப்பட்ட பல வகை மருந்துகளும், மருத்துவ முறைகளும், பத்திய வகைகளும் துணைப்பரிகாரங்களானதால் அவ்வளவு முக்கியமானவையல்ல; நல்ல மருத்துவ நூலிற் சொல்லியுள்ள முதன்மையான நெறி தவருமலும், அவற்றின் உறுதி தளராமலும் வைத்தியர் கைமுறை செய்வாராயின் அவர் தம் கைவாசியே நல்ல முறையில் பயன் பட்டு நோய் தீர்க்க வல்லதாம்.

## இலாங்கலி

405 வெள்ளையுடன் மாறுநீர் மேகம்போந் தேகமிசை
உள்ள பலபிணியு மோடுமே — உள்ள
பொலாங்ககலு நீர்முள்ளிப் பூமகரத் தோடே
இலாங்கலியின் வட்டஇலை யில்.

(கு - ரை) இலாங்கலி - பனை; நீர்முள்ளியின் மகரந்தத்தோடு கூடியபூவும், பனைவட்டும் சேர்ந்த கைமுறையால் வெள்ளை யொழுக்குடன் கூடிய மாறுத நீர் மேகமும் உடலில் உள்ள வேறு பல பிணிகளும் தம் பொல்லாங்ககலத்தாமும் நீங்கு மென்பதாம், வட்டவில்லை என்பது வட்டவிலை என வந்தது.

## துரோணம்

406 நசியம் பிழிந்து நளிர்சுரத்தில் மூக்கிற்
பொசியும் பலபிணியும் போக்க — விசைசேர்
புராரியென வீரியமெப் போது மிருக்கும்
துரோணமல லொன்றுபோ தும்.

(கு - ரை) துரோணமலர் - தும்பைமலர்; தும்பையின் மலரைப் பிழிந்த சாற்றை நசியமாகவிடின், நளிர்சுரம், தலைவலி, குளிர் நடுக்கல் முதலிய பல நோய்களையும் போக்கும்; சிவனையொப்ப வீரியபலத்தைத் தரும். புராரி - திரிபுரமெரித்த சிவன்.

## வெதுப்படக்கி

407 சுக்கு மொருநிறையில் தூக்கியதை விட்டரைத்துப்
பக்குவமா மாகப் பயறுபோல் — ஒக்கும்
அதைப்புனலிற் றேனிலுண வைபோஞ் சுரம்போம்
வெதுப்படக்கிச் சாறுகறி வில்.

(கு - ரை) வெதுப்படக்கியும் மிளகும் சுத்திசெய்த மனோசிலையும் சுக்குமாகிய இவைகளைச்-சமமாக நிறுத்துக் கொண்டு வெதுப்படக்கியின் சாறு விட்டரைத்துப் பக்குவமாகப் பயறு போல் உருட்டியுலர்த்தி நீரிலுண்ணின் சேத்துமம் நீங்கும்; தேனிலுண்ணின் சுரம் போமென்பதாம்; ஒக்கும் என்றதற்குச் சுத்தி செய்த மனோசிலை என்று கொள்க.

## பாண்டுமை

408 கால்பித்த மைமூன்றுங் காணும லேயதிகம்
மேல்வர்க்க நோய்கள் விரவாமற் — சால்புக்கு
வேண்டு மளவு விளங்க வுயிர்நிலைக்குப்
பாண்டுமைசர் வாங்கமுமாம் பண்.

(கு - ரை) பாண்டுமை - சிறுபீளை; வாத பித்த சிலேத்துமங்களை ஒன்றின் மேலொன்று மிகாமற் சமன் செய்யவும், அம்முக்குற்றங்களின் விளைவாய் மேற்கிளர்ந்த நோய் வகைகள் பரவாமற் செய்யவும், உயிர் நிலைப்பதான உடலின் நல்லாரோக்கியத்திற்கு

ஏற்றவாறு உதவவும், சிறு பிளேயின் சமூலத்தை மருந்தாகக் கைமுறை செய்து கொள்க என்பதாம்.

### வல்லெரு

409 ஆயுள்மறை சொல்லு மத்தம் பிசகாமற்
காயு மிரவிபுடங் கைமுறையாய்த்—தேயவரைத்
தெல்லை யறிந்துருட்டி யீர மதுபுலர
வல்லெருவி லேபுடத்தை வை.

(கு - ரை) வல்லெரு - நாட்டெரு; மருத்துவ நூல்கள் கூறும் பொருளமைதி தவருமல், வெப்பந்தரு சூரிய வெயிலில் முதலாவதாகக் கைமுறைப் புடமாக உலர வைத்துப் பின், நன்கு நையவரைத்து அளவாக உருட்டி, ஈரம் புலருமாறு, நல்ல இயற்கை வகையான நாட்டெருவில் புடமாக வைத்தெடுத்துக் கொள்ளுக என்பதாம்; உலராத சாணத்தைக் கைமுறையாகத் தூசு, உமி முதலியவைகளைக் கலந்து தட்டி உலர்த்திய வறட்டி செயற்கை எருவாதலால் புகை சூழ்ந்து மருந்தைக் கெடுத்துவிடுமென்பதால் வல்லெரு என்று இயற்கை எருவை எடுத்தோதினர்.

### மலினம்

410 போலே மகிமை பொருந்தி யிருக்குமதி
னூலே சுகங்க ளதிகமா — மேலே
குலவுமுறை சொன்னமுறை கொண்டு நடந்தால்
மலின மிலாதபுடை வை.

(கு - ரை) மலினம் - அழுக்கு; மேலாகக் கூறும் மருத்துவ நூல்கள் கூறியுள்ள சுகாதார விதிவிலக்குகளைக் கைக்கொண்டு நடந்து வந்தால், அத்தகையோர் வாழ்வு, அழுக்கேருத பட்டு பருத்தி நூல்களானியன்ற தூய ஆடையையொப்ப மகிமை பொருந்தியதாயிருக்கும்; அதனல் இன்ப சுகங்கள் மிகுதியாகும் என்பதாம்.

### படாமுகி

411 போமென்று சொன்னதுமெய் பொய்யாது வாகடர்கள்
ஆமென்ளுர் காம னதிமதுரம் — ஓமம்

விடாததற்கு நேரரைத்து வில்லைசெய் யப்பட்ட
படாமுகியெ யிற்றுல்வெப் பம்.

(கு - ரை) படாமுகி - யானை; திப்பிலி, அதிமதுரம், ஓமம் ஆகிய மூன்றையும் ஓரளவாகக் கொண்டு அம்மூன்றினளவுக்கு யானையின் பல்லையும் நிறுத்தெடுத்து அரைத்து வில்லை செய்து உபயோகிப்பதனுல் உஷ்ணம் தீரும் என்று மருத்துவ நூல் கூறுவது மெய்யேயாவதன்றிப் பொய்யன்று என வாகட நூலாரும் தம் அனுபவ முறையால் சான்று கூறுவார்கள் என்பதாம்; படாம் - முகபடாம்; முகி - முகத்தையுடைய யானை.

## மழைத்தூது

412 நோயெதுவோ வங்நோய் நுவலு மவகுணங்கள்
தேய வவிழ்தஞ் செருப்படைவேர் — காயம்
இழைத்து மதுவினுக ரெப்போதுங் காணு
மழைத்தூது போலுநடை வாய்.

(கு - ரை) மழைத்தூது - மேகம்; மழையின் வருகையை யறிவிக்கு மேகக்குழாங்கள் விண்ணிற் பலவிடங்களிலிருந்தும் ஊர்ந்து வந்தொருங்கு குழுமிக் கம்மி மழையைப் பெய்விக்குமாறு போல உடம்பிற் பலவிடங்களிலுமுள்ள நோயணுக்கள் ஒரு சேரக் குழுமி நோய்த்துன்பத்தை யாக்குதலாலுண்டான எவ்வித நோய்க்கும் முதற் பிரயோகமாகவும் நோயின் மாறுபட்ட குணங்கள் தேய்ந்து மடங்கவும் செருப்படை வேரும், பெருங்காயமுமாகிய இரண்டையும் தேனிலிழைத் துட்கொள்ளின் எப்பொழுதும் அவை தலைதூக்க மாட்டாவாம்.

## சலசரம்

413 போல வுணவருந்து போகநுகர் மானிடர்பின்
சால வினையிற் றளருவார் — மேலே
அலமர முன்னுடி யணுகாரே னன்று
சலசரமீ னுகியமச் சம்.

(கு - ரை) சலசரம் - மீன்; மீனுண்ணுமாறு போல் பெருமளவாகவுண்டு இன்ப நுகர்ச்சி கொள்ளும் மனிதர்கள் பின்னர் நோய் மிகுந்த துன்பத்தினுல் வருந்தித் தளர்வார்; அத்துன்பத்தை முன்

னறிந்து அவ்விதம் அனுசாராகில் மிக நன்மை பெறுவர் என்பதாம்.

## பாதாளம்

414 காட்டு மருந்துங் கடைமருந்து மம்மியிலே
கூட்டி யரைத்துக் குடியாமற் — போட்டிதனை
ஓதாம னல்ல வுபாயமா யுண்பதுவாய்ப்
பாதாளத் தாலறிந்து பண்.

(கு - ரை) பாதாளம் - நெருஞ்சில்; வனமூலிகைகளையும் கடைச்சரக்குகளையும் மனம் போனவாறு கூட்டிச் சேர்த்து அம்மியிலரைத்துக் குடியாமல், நல்ல உபாய முறையாகவமைத் துண்ணுமாறு பாதாள மூலியாகிய நெருஞ்சிலைச் சேர்த்துப் பக்குவம் செய்துண்ணு முறையை அறிந்து செய்க வென்பதாம்.

## தேவியுரம்

415 மாதர் மகவை வளர்ப்பதுபோ லேயுடம்பை
ஆதரவா கத்தேற்றி யாக்கையினல் — மீதாக
மேவி யடர்நோயின் வெப்பத்தை மாற்றுதலாற்
றேவியுர மென்பதுடல் தேர்.

(கு - ரை) தேவியுரம் - கந்தகம்; மகவீன்ற மங்கையர் தம் குழந்தையை வளர்க்குமாறு போல, பலவகையில் ஆதரவளித்து உடம்பை மெலிவு நீக்கி வளமாக்குதலாலும், செயற்கையால் வந்து பொருந்தி நலிவு செய்யும் பிணிகளின் கடுமையை மாற்றுதலாலும் கந்தகமாகிய தேவியுரமே உடல்நலமாக்குவதென் றறிவாயாக வென்பதாம்; உடம்பொடு புணர்த்தல் என்னுமுத்தியால் "தேவியுரமென்பதுடல் தேர்" என்பதற்கு தேவியுரமே உடலாமென்று தெளி எனவும் பொருள் கொள்ளலாம்.

## மாதேவபலம்

416 வாதமுத லானபிணி வாயை யடக்கிமிகு
வாத முதலாய் வழங்குதலால் — வேதியர்கள்
ஆர்க்கும் முனிவர்குழா மார்க்குமகா சித்தகண
மார்க்குமா தேவபல மாம்.

(கு - ரை) மாதேவபலம் - இரசம்; வாத முதலிய பிணிகளின் ஆர்ப்பாட்டத்தையடக்கி மிகவும் இரசவாதத்தையும் வழங்குதலினல், அந்தணர் யாவர்க்கும் முனிவர் கூட்டத்தார்க்கும் சித்தர் குழாத்தனைவர்க்கும் மாதேவபலமே தெய்வபலமாம்.

# கற்பங்கள்

417 கற்பங்க ளாதி கழறு மருந்துமுறை
விற்பனங்க ளாக விளங்குதற்கு — முற்பங்கு
மூலிக் கருப்பொருளின் மூலப் பொருள்வகைகள்
வேலிக்கு நேராகு மே.

(கு - ரை) கற்பங்களை முதலாக வைத்துக் கூறும் ஏனைய மருந்து முறைகளும் மருத்துவ வறிவுக்கு ஏற்றவாறு விளங்கு வதற்கு முன்னதாகச் சொல்லப்படும் மூலிகைகளின் முதற் பொருள்கள் பாதுகாப்புடைய வேலிக்கு ஒப்பாகுமென்பதாம்.

418 நான்சொன்ன வெண்பா நலன்றெரிந்து கொண்டாடி
வான்சொன்ன தூய்மை வருக்கமே — தேன்சொலுரை
வண்டுக்கு மேலே வரும்பிரசத் துக்குமென
ரெண்டுக்கு மானதென நேர்.

(கு - ரை) யானுரைத்த வெண்பாவினாலாகிய விந்நூல் நலத்தை அறிந்து அம்முறைகளைப் பாராட்டி மேலோர் கூறியுள்ள தூய்மையான வகைகளை, பூவினின்றுண்டாம் இரதமும் அதனை யுண்டு தேன் போலினிதாக இசை பாடும் வண்டும் இயைபுடைமை யானாற்போல, இயைபுடைமையாகக் கொண்டு நேர்க என்பதாம்.

419 முன்சொன்ன வெண்பா முறைநிகண்டு மச்சொல்லின்
மன்னுங் கருப்பொருளு மன்னிலையும் — பின்னே
வருசந்த ஞதிமுதல் வண்மைகுண மட்டும்
பருவ மறிந்ததனைப் பார்.

(பொ - ரை) முற்பகுதியில் கூறிய நிகண்டு முறை வெண்பா விற் பொருந்திய மூலப்பொருள்களும் அவற்றின் நிலைபேறுகளும், பின்வரும் சந்தனாதி முதலிய கற்பவகைகளின் குணங்களை மட்டும் என்று இருவகைகளின் பருவமறிந்து மருத்துவ முறையைப் பார் என்பதாம்.

420 எண்ணெய் தயில மிலேகியம்பற் பங்குடிநீர்
வெண்ணெய் -கிருதமொற்று வேதுபுட்டு — கண்ணுமைகற்
பஞ்சூர்ண மாத்திரை பாகுசுட்டி கைபற்று
கஞ்சிநசி யங்கொய்கலிக் கம்.

(கு - ரை) எண்ணெய் தயிலம் இலேகியம் பற்பம் குடிநீர் வெண்ணெய் கிருதம் ஒற்றடம் வேது புட்டு கண்மை கற்பம் சூரணம் மாத்திரை பாகு சுட்டிகை பற்று கஞ்சி நசியம் கலிக்கம் எனுமிவையனைத்தும் பலவகையாக வேறுபட்டு வரும் மருந்துகளின் பெயர்களாம்.

421 தோத்திரமாய்ச் சொல்லவில்லை தொல்லாயுள் வேதியர்க்கு
நேத்திரமா மென்றன்முறை நிச்சயமே — சாத்திரத்தின்
வன்மந் திரியர் வயித்தியமா மென்மார்க்கந்
தன்மந் திரியாணை தான்.

(கு - ரை) முகஸ்துதியாகச் சொல்கின்றேனில்லை; பழைய மருத்துவ நூலுணர்ந்த பண்டிதர்க்குக் கண் போன்றதாகும் என் முறைகள் உண்மையாகும்; மருத்துவ சாத்திரங்களில் வல்ல மந்திரியர் போலுமறிவுடையோர் ஒப்பும் வயித்திய முறையாகும் என் மார்க்கம் தன்மந்திரி முனிவர் மார்க்கமாம்; அவர் ஆணையாற் கூறுமுறைகளாம்.

422 வந்தபிணி யஞ்ச வராத பிணிவெருவ
என்த னவிழ்த மியற்றுமே — விந்தையல
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் தப்பிதமுண் டானலென்
பொத்தகத்தைப் பூறிப் புதை.

(கு - ரை) வந்த நோய் பயந்தோடவும் மேலும் வரும் சமயம் பார்த்திருக்கும் நோய்கள் வருதற்கஞ்சிப் பின்னிடவும் என் மருந்து முறைகள் இயற்றுவிக்கும்; ஆச்சரியமாகவல்ல உண்மையாய்க் கூறுகிறேன்; யான் கூறியவைகளின் முறை தவறினல் என் மருத்துவ நூல்முறை வரைந்த சுவடிக் கற்றையைக் கிழித்துப் புதைத்து விடுங்கள் என்பதாம்; பொத்தகம் - பொத்து அகம்; உள்ளாகப் பொதிந்து மூடி வைக்கப்படும் அறிவு விளக்கச் சொற்பொருள்களடங்கிய ஏடு, தாள்களாலாகிய கற்றை என விரிந்து

பொருள் படுதலால் உருபும் பொருளுந் தொக்க தொகைப் புறத் தன்மொழியாம்.

423 அன்பான தேவ ரவிழ்தப் பரிகாரி
தன்பான்மை போலுமிது தப்பினுல் — வன்பான
வித்தகத்தைக் காண விளம்புமென்பேர் தேரனன்று
பொத்தகத்தைப் பூறிப் புதை.

(கு - ரை) உடல் நோயிலராய தேவர்களுக்கு அவிழ்தமளித்து மனநோய் தீர்க்கும் தேவ மருத்துவரான (தன்மந்திரி) முனிவரின் முறையான என் முறைகள் தவருகுமெனின், வன்முறையாக மருத்துவ பண்டிதத்தை ஒப்புமாறு விளம்புகின்ற என் பெயர் தேரனென்பதன்று; இம்முறை யமைந்த புத்தகத்தைக் கிழித்துப் புதைத்து விடுங்கள் என்பதாம்.

424 நோயாளி பண்டிதனங் நோய்க்கு மருந்திடைய
னேயான நால்வ ரிடமாகும் — தூயமருந்
தின்குணமென் ருதி யியம்பின ராகமத்தின்
நன்குணமா யோதுகிறேன் நான்.

(கு - ரை) நோயாளியும், நோய் நீக்கும் மருத்துவனும், அவன் பிரயோகிக்கும் மருந்தும், மருத்துவனுக்கும் நோயாளனுக்குமிடையில் நின்று பக்குவம், உபசாரம், பிரயோகம் முதலியவற்றைச் செய்யும் உழைச்செல்வானுமாகிய நான்கு கூறுகளாக நடைபெறும் மருத்துவ முறையென்று மருத்துவாகமத்தில் முன்னோர் கூறியுள்ளனராதலின் யான் அதனை நல்ல எண்ணத்துடன் நுமக்குக் கூறுகிறேன் என்பதாம்; இவ்வெண்பா திருக்குறளின்கண் " உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று, அப்பால் நாற் கூற்றே மருந்து " எனவரும் பாவின் பொழிப்பாமாறுணர்க.

## சந்தனாதித் தைலம்

425 மன்னனெனும் வாதமுதல் மாறுபா டில்லாமல்
துன்னி யுடலிற் சுகிக்குமே—பன்னுமகா
சந்தன தித்தயிலச் சற்குணத்தி னலென்று
தந்து புகலுநிசந் தான்.

(கு - ரை) அரசனுகிய வாத முதலாகிய முக்குற்றங்களும் தம்முள் மாறுபாடுருமல் உடல்நலத்துக் கேற்பப் பொருந்திச்

சுகமளிக்கும், மகாசந்தனாதியென்றுயர்த்திக்கூறும் தைலத்தின் மேலான குணத்தினைலென்று மருத்துவ வாகடமாகிய நூல்கள் உறுதி கூறும் என்பதாம். தந்து-நூல்.

## இதுவுமது-லகுசந்தனாதி

426 தருசந்த னாதித் தயிலத்தி ரண்டாந்
தரமா லகுசந்த னாதிப்—பெருமை
விபரம் பலபிணியும் வீப்பிக்கும் பண்டம்
அபர மெனலறிய லாம்.

(கு - ரை) மேற்சொல்லிய சந்தனாதித் தைலத்தின் வேறு பாகமாகவமைந்த லகுசந்தனாதியின் பெருமை பல பிணியையும் அழிக்கும் விவரமுடைய பண்டமாகும்; ஆகவே இதனை அதன் அபர பாகமாகக் கொள்ளலாம். பரம் - உள்; அபரம் - புறம்.

## கற்பத்தருமை

427 ஆதிமுறை கற்பத் தருமை விபரமெல்லாம்
ஓது முறைமை யுரைக்குமே—வாது
புரியும் பலபிணியும் போகுமே மேற்றோல்
சரியு முடலிறுகித் தான்.

(கு - ரை) ஆதியாக வமைந்த மருத்துவ நூல்கள் கற்பங்களின் அருமையின் விவரங்களை ஏற்ற முறைப்படி கூறும்; உடலில் மாறுபாட்டுடன் நலியும் பல பிணிகளும் நீங்கும்; உடம்பின் மேலுள்ள தோலாகிய சருமமும் சட்டை கழன்று, உடலுறுதி கொள்ளும்.

## நவநீத பற்பம்

428 நவநீத பற்ப நயமிகுதி யெல்லாம்
விபரஞ் சொலுமாயுள் வேதஞ்—சவரணையாய்
இப்பாரி லாண்மை யிசைய வதுநிலைமை
ஒப்பா ருரைக்கவமை யும்.

(கு - ரை) வெண்ணெயை யுருகாமற் கட்டிப்புடமிட்டுச் செய்த பற்பத்தின் மிகுதியான நன்மையை எல்லாம் மருத்துவ

நூல் விபரமாகக் கூறும். இவ்வுலகிலுள்ளார்க்கு ஆண்மை பொருந்த உடலைப் போஷிப்பதாய அதன் தன்மைக்கு ஒப்பாகும் வேறொன்றைக் கூறவல்லார் யாருளர் என்பதாம்.

## இரசித பற்பம்

429 இரசித பற்பவண்ண நவில வெளிதாமோ
உசித மெனுமஃதே யுண்மை—வசியம்
பெருகும் பசிவளரும் பேதமிலை நோய்மை
அருகு முடலுறுதி யாம்.

(கு - ரை) வெள்ளி பற்பத்தின் உயர்வை யுரைக்கவென்றால் எளிதாகுமோ? ஏற்ற கற்பமாமென்பதே உண்மையாம். பிறரை வசமாக்குந் தன்மைமிகும், பசி வளரும், கேடொன்றுமிலவாம், நோய்க் குணங்கள் சுருங்கி உடல் வலிமை உண்டாகுமென்பதாம். இரசிதம் - வெள்ளி.

## தாம்பிரபற்பம்

430 தாம்பிர பற்பந் தனது பெருமையெல்லாஞ்
சாம்பசிவ னாறிவார் சத்தியமே—தேம்பி
வெதும்பு முடறணிந்து வெற்புநிக ராகும்
பெதும்பையொரு பாகரெனப் பின்.

(கு - ரை) தாம்பிர பற்பத்தின் பெருமையை, சாம்பசிவனாகிய சிவபெருமானேயறிவார், இஃதுண்மை, அப்பற்பத்தை யுட்கொள்ளின் வெப்பத்தால் இளைத்து மெலிவுறும் உடல் வெப்ப நோய் நீங்கி மலையை யொத்த திண்மையுடையதாகி எல்லா வுலகுயிர்களுக்குந் தாயாகியும் தனது பெதும்பைப் பருவம் நீங்காதவளாய் என்றுங் குமரியாகவே யிருக்கும் உமையை ஒரு பாகத்திலுடைய சிவபிரானைப் போல இளமையும் வன்மையு முடையவராவர் என்பதாம்.

## அப்பிரக பற்பம்

431 அப்பிரக பற்பத் தருமை யரனறிவார்
செப்புமுனே நீர்க்கட்டுத் தீருமே—யப்பெருமை

மேலே தெரியும் வெளிப்படையா யெல்லார்க்கும்
ஆலோ சனையில்லை யாம்.

(கு - ரை) அப்பிரகபற்பத்தின் உயர்வையும் மேற்கூறிய சிவபெருமானே அறியவல்லாராவார்; அதன் பேரைக் கூறு முன்னே நீர்க்கட்டு நீங்கும்; பர்பத்தை உபயோகித்த அனைவர்கும் நீர்க்கட்டுத் தீர்ந்ததன் பெருமை உடம்பினகத்தே வெளிப் படையாகத் தோன்றும் ஆகையால் மேலே சிந்திக்க வேண்டிய தொன்றுமில்லை என்பதாம்.

## வெள்ளீய பற்பம்

432 வெள்ளீயச் சோதி விளம்பி முடியாது
விள்ளுமொரு கண்கட்டு வித்தையல்ல—வள்ளல்
தனது சுரூபமெனச் சாத்திரத்தி லோதும்
வினவிலதை மேற்சொல்லு வேன்.

(கு - ரை) வெள்ளீய பற்பத்தின் பிரகாசம் உரையால் கூறி முடிக்க முடியாதது; பிறரை ஏமாற்றி ஒன்றை ஒன்ருகக் காட்டும் கண்கட்டு வித்தையை ஒப்பதொரு செயலன்று; அதனை உபயோ கிப்பார் உடம்பு வள்ளலாகிய சிவனரின் தெய்வ ஒளியுருவையே ஒப்பதாமென மருத்துவ சாத்திரங்கள் கூறும்; ஐயமற அதனைக் கேட்பீராயின் இந்நூலின் நேர்ந்துழிக் கூறுகிறேன் என்பதாம்.

## காரீயபற்பம்

433 காரீயத் தின்னருமை கடவு ளறிந்ததன்றி
யாரறிவார் மேலே யகிலத்தி — லாரும்
பெருமையா கக்கொண்டு பீடிக்கு நோயின்
மருமந் தனையறிகு வார்.

(கு - ரை) காரீயபற்பத்தின் அரிய பெரும் பயனைக் கடவுள் ஆகிய சிவபெருமானறிந்துள்ளா ரேயல்லாமல் இப்பூவுலகின் கண் யாரே அறிந்தவராவார்; மக்களுடலிற் பற்றும் நோய்களின் கார ணத்தை அறிந்து இம்மருந்தினை உபயோகிக்கு மார்க்கத்தைப் பெருமை மிக்கதாக அறிவார் மருத்துவத்துறையிலுள்ளார் என்ப தாம்.

## காந்தச்செந்தூரம்

434 காந்தச்செந் தூரங் கனமா மமுததுவே
தாந்தச் சிவனுருவந் தப்பாது — வேந்தன்
முதலான நோயையெல்லா முன்பணியப் பண்ணும்
அதனு லதிகமதே யாம்.

(கு-ரை) காந்தச் செந்தூரம் பெருமை மிக்க அமுதத்தை ஒப்பதும் மறை முதல்வனுன சிவபெருமான் திருமேனியுருவத்தை ஒப்பதுமாகும்; இங்ஙனம் கூறுமது தவருகாது; வாத முதலான நோய்களையெல்லாம் அடிபணிந்து விலகும்படி செய்விக்கும்; இக் காரணங்களால் காந்தச் செந்தூரம் பிற மருந்துகளின் மேம்பா டுடையதாம்.

## அயச்செந்தூரம்

435 அயச்செந்தூ ரப்பெருமை யாயுள்வே தத்தோர்
நயக்கும் படிகுணத்தை நாட்டும் — வியக்கப்
புவியை மகிழ்விக்கும் போசனத்தை யூட்டும்
கவினை யுடற்களிக்குங் காண்.

(கு-ரை) அயச்செந்தூரத்தின் பெருமையான உபயோக மானது மருத்துவ நூலோர் விரும்புமாறு தன் குணத்தைப் பிணி நீக்கு முறையில் நிலைக்கச் செய்யும்; உலகிலுள்ளார் ஆச்சரிய மகிழ்ச்சி கொள்ளச் செய்யும்; போசனத்தைப் பசியெழுப்பி யுண் ணச் செய்யும்; உடம்பிடை நல்ல மேனியழகை வருவிக்கும் தன்மை யுடையதாம்.

## மகாவில்வாதி லேகியம்

436 நீடுமகா வில்வாதி லேகியத்தின் மாபெருமை
நாடறியும் பண்டிதர்கள் நாவறியும் — தேடும்
அலகறியு நோயினர்க ளாக்கை யறியும்
உலகறியு மாவியறி யும்.

(பொ-ரை) பெரும்புகழ் மிக்க மகாவில்வாதி லேகியத்தின் பெருமையை நாட்டு மக்களறிவர்; மருத்துவர்கள் பல நோயினர் கட்குரைத்துண்பிக்கும் வழக்கமுடையராதலின் அவர் தம் நாவறி

யும்; இம்மருந்தினை எதிர்பார்த்திருக்கும் நோயறியும்; நோயாளி களின் உடலறியும்; உயிருமறியும்; உலகமுற்றுமறியும்; மருத்துவர் தாம் பக்குவம் செய்த மருந்தினைத் தாமுட்கொண்டு சோதனை செய்த பின்னரே நோயினர்க்கு உபயோகிப்பராதலின் பண்டிதர் நாவறியும் என்றார்.

## இலகுவில்வாதி லேகியம்

437 நவிலு மதிலே லகுவில்வா திக்கு
தவியவிழ்த மாறில்லை சற்றும் — புவியின்
மருத்துவர்கை வாளாகி வன்பிணியைச் சாடுங்
கருத்தறியு மாகமங் கள்.

(பொ - ரை) மேற்சொன்ன வில்வாதி லேகியத்தின் வேறு பட்ட பாகமான இலகு வில்வாதிக்கு ஒத்த அவிழ்தம் வேறு இல்லை சிறிதளவும்; உலகில் மருத்துவர் கைக்கொண்டு நோய் வேட்டை புரியும் வாள் போலாகி வலிய எந்தப் பிணியையும் அழித்து நீக்கும்; இக்கொள்கையுடையதென்பதை மருத்துவாகமங் கள் அறியும் என்பதாம்.

## தாளிசபத்திரி

438 தாளிச பத்திரியின் தன்மை யெவரறிவார்
ஆளி மதமாவை யட்டிடல்போல் — நீளும்
பிணியை யடக்கிப் பெரும்பசியுண் டாக்கித்
தணியச் செயுமுடலத் தை.

(பொ - ரை) தாளிசபத்திரியின் குணத்தை யாவரறிவார் மதங்கொண்ட யானையைச் சிங்கம் கொல்லுதலைப் போல், நாட் பட்ட பெரிய நோயை அடக்கிப் பெரும் பசியையும் எழுப்பி உடலில் ஐ நோய் தணியச் செய்யும்.

## இஞ்சி ரசாயனம்

439 இஞ்சி ரசாயனத்தை யென்னசொல்வேன் காத்திரத்தில்
மிஞ்சு கபமதனை வீட்டியே—விஞ்சுபசி
தன்னை யெழுப்புஞ் சகலகுண மும்பெருக்கும்
அன்னை யெனவளர்க்கு மாம்.

(பொ - ரை) இஞ்சி ரசாயனத்தின் பெருமையை என்னென்று கூறுவேன், உடம்பில் மிதமீறிய கபநோயை நீக்கி, மேற்பட்ட பசியை எழுப்புவதாகி யெல்லா நற்குணங்களையும் உண்டாக்கும், தாய்போல உடம்பை வளர்க்கும் என்பதாம்.

## பூபதி மாத்திரை

440 பூபதி மாத்திரையின் பூஷணத்தை யாரறிவார்
பூபதிகள் கண்டுடலம் பூரிப்பார்—ஞாபகமாய்
அம்புவியி லேபழகும் ஆயுள்வே தர்க்குரித்தாம்
நம்புகுண சஞ்சீவி நல்.

(பொ - ரை) பூபதி மாத்திரையின் உபயோகப் பயனை அறிவார் யாவர்; உலகையாளும் அரசர்கள் உட்கொண்டறிந்த அனுபவத்தால் கண்டவுடன் பூரிப்பார், நினைவாற்றலுடன் உலகில் மருத்துவம் செய்து பழகிய மருத்துவ நூலறிவினர்க்கு நம்பிக்கையைத் தரும் குணசஞ்சீவியாகலின் அவர்கட்கு பிற மருந்துகளினும்காட்டில் உரிமையுடையதாம்.

## கட்டு

441 கட்டு முறைமை கருத்தாவுக் கேதெரியுங்
கட்டுநெறி கெட்டவர்க்குக் கட்டாது—கட்டினல்
வேதையுண்டாம் வேதையில்லை மெய்யிலு லோகமென
வோதையுண்டாஞ் சட்டைகரை யும்.

(பொ - ரை) கட்டுமுறைமை கருத்தனாகிய இறைவனுக்கே தெரியும்; அதனை யறியார்க்குக் கட்டும் முறைமை நெறிகெட்டதாகிவிடும்; முறைதவறாது கட்டினல் வேதை (வாதவித்தை) உண்டாம், வேறுபாடில்லை, உடம்பில் உலோகங்களில் உண்டாகுமாறு போல் ஓசையுண்டாகும், உடம்பின் மேற்சட்டையும் கழன்று மேனி ஒளியுடையதாகும்.

## களங்கு மகிமை

442 களங்கு வகையாற் களங்கமிலா லோகம்
விளங்கு மருமையெல்லாம் விள்ளும்—பளிங்கு
நிகராதி யும்முருகும் நீருகு மானல்
மகராச னாகியினி வாழ்.

(பொ - ரை) களங்கு வகையால் உலோகங்கள் களங்கமில்லாமல்விளங்கும்; நன்முறையில் பிணிகளை நீக்கும்; பளிங்கையொத்த வன்பொருள்களும் உருகும் பற்பங்களாகும்; அங்ஙனமானதால் அவ்வுபயோகத்தால் இனிப் பேரரசனுக வாழ்வாயாக வென்பதாம்.

## காரசாரப் பெருமை

443 காரசா ரத்தாலே காரியமெல் லாம்படியும்
காரசா ரத்தாலே காயசித்தி—தாரணியில்
உண்டாகு மாண்மை யுடைத்தாகு முண்டாகும்
தொண்டாகு மேலான சொல்.

(பொ - ரை) காரசாரமாகிய உப்பு வகைகளினுல் மருந்துகளின் கைமுறைகள் எல்லாம் வாசியாகும். மேலும் காயசித்தியுமாம், உலகில் ஆண்மை மிக உண்டாகும், உலக மக்கள் நோய் தீர்க்கும் அறமாகிய தொண்டுமுண்டாய், உரிமையாகவமையும்.

## இரசக் குளிகை

444 இரசக்குளிகை யாலே நவலோக மெல்லாம்
வசமாம் நினைத்ததெல்லாம் வாய்க்கும்—நிசமாய்
உரைத்தேனிப் பூமியிலே யும்பர்நிக ராகி
இருப்பா ரினிதுமொழி யில்.

(பொ - ரை) இரசக் குளிகையாலே ஒன்பது வகை உலோகங்களும் வேதையாக்க வசமாகும்; அங்ஙனமானபின் நினைத்தவாறெல்லாம் சித்தியாகும், இம்முறையை உண்மையாய்ச் சொன்னேன், இவ்வுலகில் தேவர்களையொப்ப இருப்பவராவர், இனிதாகச் சொல்லுவதாயின் என்பதாம்.

## சூதகுரு மகிமை

445 சூதகுரு வென்னுமொரு தோற்றநிச மானக்கால்
வேதையென்ன சொன்னம் வெளியாமே — ஆதலினுல்
பூராய மாயதனைப் போற்றிப் பிசகாமல்
கூரா -யியற்றிவைத்துக் கொள்.

(பொ - ரை) சூதத்தைக் குருவாக்கி அம்முறை பிசகாமல் அமையுமானுல், வேதையாவது அருமையன்று, பொன்னுனது வெளியாகும்; ஆகையால் புகழ்ச்சியாக அம்முறையைப் போற்றி, கைதவரு முறையாய் நுண்ணறிவோடு சூதகுருவையியற்றி வைத்துக் கொள்கவென்பதாம்.

## அனுபானப் பெருமை

446 அனுபானத் தாலே யவழ்தங்கட் காண்மை
கனமாகு மென்மையெல்லாங் காட்டும் — இனமான
பேதாபே தங்களெல்லாம் பேதித் தறிந்தவரே
நாதாக்க ளென்னுமறை நால்.

(பொ - ரை) அவிழ்தங்களுக்கு ஆற்றலைத் தருவன அவற்றை உபயோகிக்கத் துணையாகும் அனுபானங்களின் வலியாலாம்; பெருமையாவதும் மேன்மையாவதும் ஆகப் பயனளிக்கும்; ஒன்றற்கொன்று தொடர்புடைய பேத அபேதங்களை வேறுபடுத்தியறிந்தவரையே நாதாக்களென்று நான்காகிய மறைகள் நவிலும்.

## அவிழ்த உபசாந்தி

447 அவிழ்த வுபசாந்தி யாரறியப் போருர்
நவிலுமத னுலுண்டாம் நன்மை — கவலையறக்
கற்றவர்க்குஞ் சற்றே கலங்கு மனமதனுல்
அற்றமறச் செய்யிலில்லை யாம்.

(பொ - ரை) ஐயந்திரி பின்றியும் மனக்கவலை யில்லாமலும் கற்றுணர்ந்த பண்டிதர்க்கும், அவிழ்தவேகத்தையும் பின்விளைவையும் கண்டு மனங்கலங்குவ தியற்கை; ஆகவே, தீர்க்காலோசனையுடன் உன்னிப்பாகச் செய்யின் மேற்கண்ட குறைபாடில்லையாம். இங்ஙனம் கூறிய முறையால் நன்மையுண்டாம்; எனவே அவிழ்த உபசாந்தியை யாரே அறியப் போகிருர்கள்? அறிந்தாராயின் அவரே சிறந்த பண்டிதராவார் என்பதாம்.

## நோய்க் காரணம்

448 பிணிக்கெது காமம் பிறக்கு முறைமை
கணிக்குமுறை நன்னூற் கணங்கள் — பணிக்கும்

புடவி தனிலதனைப் புந்தியாற் பார்க்கப்
படியுநிலை யாலறிந்து பார்.

(பொ - ரை) நோய்கள் அசத்தாந் தன்மையுடையவையாத லால் அவைகட்கு உடம்பைப் பற்றி வருத்தஞ் செய்யும் நோக்க மில்லையாம்; நோயினர் உடற்பாங்கிற்கேற்ப அவை தோன்றுவன வாம்; அங்ஙனம் தோன்றுமுறைமையை ஆராய்ந்து மருத்துவ நூல்கள் கூறும்; அம்முறையை மருத்துவ பாண்டித்திய அறிவு கொண்டறிந்து நுண்ணறிவால் நோக்கி அவை தீருமுறைமையை நாடி மருத்துவம் ஆற்றல் வேண்டுமென்பதாம்.

## பத்திய பலன்

*449* பத்தியத்தி னாலே பலனுண்டா கும்மருந்து
பத்தியங்கள் போனாற் பலன்போகும் — பத்தியத்திற்
பத்தியமே வெற்றிதரும் பண்டிதருக் காதலினாற்
பத்தியமே யுத்தியென்று பார்.

(பொ - ரை) பத்தியத்தினால் மருந்து பலனுடையதாகும்; பத்தியங்கள் தவறுனல் மருந்தின் பயனும் இல்லையாம்; பத்திய முறையாக மருந்தூட்டும் பண்டிதர்க்கு அம்மருந்தினைக் காட்டிலும் பத்தியமே வெற்றி தருவதாகும்; ஆகையால் பத்தியமுறை மருத் துவமே நுண்ணறிவின் பாற்பட்டதாகும்.

## உபதை

*450* உபதை யறிந்துசெயி லுத்தமமுண் டாகும்
தபுதல் வராதுபுவி தன்னிற் — செபமகிமை
போலே மருத்துவர்க்குப் பூஷணமா மப்பெருமை
மேலே திடமுமது வே.

(பொ - ரை) மருத்துவ முறையை உபாயமறிந்து செய்வ ராயின் மேன்மையுண்டாம்; தவறேதும் வாராதாம்; உலகில் மந்தி ரம் செபிப்பார்க்கு அம்மந்திரப் பயன் கைகூடுமாறு போல, மருத் துவர்க்கும் இம்முறை கைவசமாய்ப் பூணும் அணிகலன் போலாம்; பெருமையும் வலிமையு மதுவாகவே யமையும் என்பதாம்.

## நற்காட்சி

451 குணமுரையி னலறிந்து கொண்டுபரி காரக்
கணமறிந்து செய்வதுநற் காட்சி — மணமறியும்
வண்டு நிகராக வையகத்தி லேநோயர்
கண்டுகொள்ள வேண்டியது காண்.

(பொ - ரை) பிணியாளர் வாய்மொழியால் நோய்க் குணங்களை உய்த்துணர்ந்து கொண்டு, பரிகார வகைகளில் ஏற்ற முறையையறிந்து செய்வதே மருத்துவர்க்கு நற்காட்சியாவதாம்; பூவின் மணத்தையறிந்து அதன் தேனை நுகரும் வண்டு போல் மருத்துவரின் பாண்டித்தியத்தை யறிந்து மருத்துவத்தின் பயனை யடைதல் நோயினர்க்கு நற்காட்சியாம்.

## அசனம்

452 அசன விரிவாலே யாயுள்வே தர்க்கு
வசன முறைமைசில வாய்க்கும் — பசியுறவாய்
வந்து லெபிக்கு மறையல் வெளிப்படையே
தந்து புகல்வதுமெய் தான்.

(பொ - ரை) போசன வகைகளினல் மருத்துவர்களுக்கு நோய்களின் தன்மையையறிந்து கூறும் சொல்திறம் சிற்சில வகையில் அமையும்; பசியின் உறவாகிய உணவினல் மேற்சொன்ன வசன முறை வாய்ப்பதாம்; இஃது இரகசியமன்று வெளிப்படையான வழக்கேயாம்; நூல்கள் கூறுவது மெய்யாகையால் என்பதாம்.

## நசியம் முதலியன

453 நசியம் புகைபற்று நாசிகத்தூ ளெண்ணெய்
இசையு மிவைநாலு மெண்ணி — இசையப்
புரியு மருத்துவரைப் போலொருவ ருண்டோ
தரணி தனிலினிது தான்.

(பொ - ரை) நசியமும் புகையும், பற்றும் நாசிகத்தூளும், எண்ணெயும் ஆகிய இவை நான்கையும் அறிந்து ஏற்புடையதாகப் புரியும் மருத்துவ பண்டிதரை ஒப்பாவாருலகில் உளரோ; இம்

முறை நல்ல இனிய முறையாவதனுல் என்பதாம்; நசியம் நாசிகத் தூள் என்னும் இரண்டையும் மூக்கின் உபயோகமாக ஒன்ருக்கி நான்கென்று தொகை கூறினர்.

## தாளகமாத்திரை

454 தாளக மாத்திரைமு தற்பெரிய மாத்திரையா
நாளு மதிகார நாட்டுமே — நீளுலகில்
மற்றவைக ளும்பெரிய மார்க்கமா மெப்படியு
முற்றதுசொன் னேன்மகிமை யும்.

(பொ - ரை) தாளக மாத்திரை பிற மாத்திரைகளிலும் முதன்மையாகப் பெருமையோடு அதிகாரம் நடத்துவதாம்; பெரிய உலகத்தில் மற்ற மாத்திரைகளும் நல்ல மார்க்கமானவையே எனினும் சிறப்புடையதனை விதந்து கூறி மகிமை யுரைத்தேன் என்பதாம்.

## சந்தனுதித் தைல ஸ்நானப் பயன்

455 சந்தனு தித்தயிலத் தானத்தால் பித்தசன்னி
மந்தங் கபாலவலி வாதமுதல் — எந்தப்
பிணியுமறுந் தாது பெருகு மெழிலுண்டாம்
கெணியமா மற்றதனைக் கேள்.

(பொ - ரை) சந்தனுதித் தைல முழுக்கால் பித்த சன்னி, பசி மந்தம், கபாலவலி, வாதம் முதலிய எல்லா நோய்களும் நீங்கும்; வீரிய விருத்தியுண்டாம்; தேக காந்தியு மழகுமுண்டாம்; மனத்திற் குற்சாகமுண்டாம்; ஆகவே, அத்தைல முறையினைப் பின்வருமாறு கூறுவதனைக் கேட்பாயாகவென்பதாம்.

## மேற்படி தயிலம்

456 கேள்சந்த னக்கட்டை கெண்ணியமு தற்கூறு
மாளுமற்ற வேர்களரைவாசி — யாளுங்
கஷாயமதிற் பாதி கழறு மிலைநீர்
கஷாயமிலை நீர்க்கத்தங் காண்.

(பொ - ரை) 12 பலம் சந்தனக் கட்டை ஒரு கூறு, பலத்துக்கு ஒரு மரக்கால் வீதம் 12 மரக்கால் நீரில் காய்ச்சி 4-ல் ஒன்ருகக் குறுக்கிய குடிநீர்க்கு, கூறப்பட்ட மற்ற வேர்கள் மேலதற்குப் பாதியாய் 6 பலம் 6 மரக்கால் நீரில் காய்ச்சி முன்போல் 4 ல் ஒன்ருகக் குறுக்கிய நீரை முன் குடிநீருடன் சேர்க்க நாலரை மரக்காலாம்; இலைச்சாறுகள் மேற்கண்ட குடிநீர்க்குப்பாதியாக இரண்டேகால் மரக்காலாகும்.

## இதுவுமது

457 காண்மதுப ழச்சாறு கன்னல் சுதையிளநீர்
காணிவைக்கெ லாம்பாதி காணெண்ணெய் —
காணெண்ணெய்
நாலிலொன்று கந்தப்பொடி நான்மூன்றி லேயிரண்டு
பால்குடிநீ ரொன்றிலரைப் பால்.

(பொ - ரை) தேன், எலுமிச்சம்பழச்சாறு, கருப்பஞ்சாறு, பால், இளநீர் இவைகள் முன்னைய இலைச்சாற்றில் பாதியாகவும், ஆகிய இவைகளின் அளவிற்குப் பாதி எண்ணெய் ஆகவும், நாலிலொன்று ஆமணக் கெண்ணெயாகவும், கற்கமாகிய கந்தப்பொடி வகைக்கு 1 வராகனெடையாக 2-பலம் ஆகவும், கொண்டு பால் அல்லது குடிநீர் இரண்டிலொன்ருல் அரைத்து, யாவையும் ஒன்ருகக் கூட்டுக.

## இதுவுமது

458 பாலரையை யஞ்சுபால் பண்டுகுக்கி டாக்கினிநாற்
பாலிலொன்று மாத்திரங்கொள் பாலைபிரமி—
மாலில்லாள்
துற்கிநா ளுந்தி சுடர்கமலங் குக்டகட
நற்கமல மேபருவ நாள்.

(பொ - ரை) மேற்கண்டவற்றை அடுப்பேற்றி, தைலமாக எரிக்கவும்; எரிக்குங்கால் டார்வதி, சரஸ்வதி லெட்சுமி, துர்க்கை, ஆகியவர்களின் நிறங்களாக முறையே மாறி மாறி வந்து கடைசியாகத், தைலம் சிறு கருநிறமா யமையும்.

## இதுவுமது

459 நாள்பச்சை வெண்மைமஞ்சள் நற்சிவப்பு டன்கறுப்பு
நீளிலைநீர் முன்குடிநீர் கலத்தலத் — தாளல்பிற

கெண்ணெய் கலத்த லெரித்தல் பொடிதூவி
வண்ணங் கறுப்பினிற்கொள் வாய்.

(பொ - ரை) குடிநீருடன் இலைநீரைக் கூட்டி எரிகலத்தில் நிறைத்து, எண்ணெய் கலத்தல் எரித்தல்களின் பின்னுகை கந்தப் பொடி தூவிப் பக்குவமாயெரித்து நிறங் கறுப்பாக வந்த பதத்தி லிறக்கி வடித்துக் கொள்ளவும்.

## இதுவுமது

460 வாயதனைத் தானியத்துள் வைத்ததுபின் ளுடநன்று
நீயகற்று வாய்புளியை நிற்கவே — தூயமகா
சந்தன தித்தயிலஞ் சாற்றிலிதன் கீர்த்தியர
விந்தன தித்தயில ·மே.

(பொ - ரை) வடித்த தயிலத்தைத் தானிய புடம் வைத்துப் பின் முழுகுதல் நன்றும்; புளியை நீக்க வேண்டும்; இங்ஙனமாக லின் இதனின் மிக்கதாகிய மகா சந்தனதித் தைலத்தின் கீர்த்தி கூறப்புகின் பிரமன் படைத்த முதல் தைலமாகும்.

## இலகு சந்தனதித் தயிலம்

461 செப்புலகு சந்தன தித்தயில மென்பதுமுன்
செப்பு சரக்குகளிற் சேர்ந்ததுகொண் — டொப்ப
ஒருவகைசெய் தாலுமுறை யொன்றுபிற ழாமல்
வருவதென வேயறிகு வாய்.

(பொ-ரை) சொல்லப்பட்ட இலகு சந்தனதித் தைலமென்பது முன்னே கூறிய சரக்குகளில் (சில நீங்கலாக) சேர்ந்தவற்றைக் கொண்டு, மேற்கூறிய செய்முறைக்கிணங்கப் பிறிதொரு வகை யாகச் செய்வதானும் முறை பிறழாமல் முடியுந்தன்மையதா மென அறிதல் வேண்டும்.

## நவநீத பற்பத்தின் பெருமை

462 தின்னுநவ நீதபற்பத் தின்பெருமை நீர்க்கட்டும்
மன்னுமெரி மேகவுன்ம வாய்வறும் — பன்னுமது
பண்ணுமுறை காராம் பசுவெண்ணெ யோர்தொடிக்கு
ளண்ணுகின்ற தூசனைக்கா லத்தி.

(பொ - ரை) உட்கொள்ளும் மருந்தாகிய நவநீத பற்பத்தின் பெருமையாவது, நீர்க்கட்டும் எரிமேகமும் குன்மவாயுவும் நீங்கும்; கூறப்பட்ட அப்பற்பம் செய்யுமுறையாவது, காராம் பசுவின் வெண்ணெய் ஒரு பலத்துக்கு, கொக்கின் காலெலும்பு பொருந்து மளவு கொண்டு செய்க.

## நவநீத பற்பம்

463 தன்னைப் பகன்றைமலர்ச் சாற்ரு லரைத்ததிலே
முன்னரென வைத்துநடு முக்காலும்—துன்னக்
கவசித்து மேலிலையாங் கட்டுக் கொடியாற்
கவசித்துச் சீலைமண் ணுங் காண்.

(பொ - ரை) பகன்றை - வட்டக் கிலுகிலுப்பை; அதனைப் பகன்றை மலர்ச் சாற்ருலரைத்து வெண்ணெயின் முன்னுகை நடுவில் வைத்து முக்காற் பகுதியும் பொருந்தக் கவசஞ் செய்து மேற்பகுதி யாகிய காற்பகுதிக்கு கட்டுக்கொடி யிலையாற் கவசம் செய்து பின் சீலை மண்ணும் செய்து அதன் பிறகு;

## இதுவுமது

464 காண வுலர்ந்தபின்பு கன்னலரைக் குள்ளாகி
யாணுகின்ற வல்லெருவி ணுற்புடஞ்செய்—காணுமே
பற்பமதை நீயயின்று பாருன் னுயிர்நிலையைக்
கற்பமென வேநிறுத்துங் காண்.

(பொ - ரை) நன்கு உலர்ந்த பின்னர் இயற்கை யெருவாகிய வல்லெருவில் அரை நாழிகைப் பொழுது புடம் செய்து நோக்க, பற்பமாகக் காணப்படும்; அங்ஙனமமைந்த பற்பத்தையுட்கொண்டு பார்த்தாயானல் உன் உயிர்நிலையாகிய உடம்பு, கற்பமருந்திய வாறு போல வலிமையும் உரனும் பொருந்தியிருப்பதனைக் காண் பாய் என்பதாம்.

## மிளகு மூதண்ட கற்பங்கள்

465 கற்ப முறைமை கறியொன் றிரண்டுமுறை
விற்பன மாகநிதம் வேண்டினேர்—நற்படிவம்

வேதண்ட மாமழகும் விற்பத்தி யுஞ்சேரு
மூதண்ட மும்படியு முன்.

(பொ - ரை) கற்ப முறையொன்று கூறுகிறேன்; நாள் தோறும் மிளகினை ஒன்று, இரண்டு, மூன்று என்னும் முறையாக மேற்கூட்டியும் பின் அவ்வாறே ஒவ்வொன்ருகக் குறைத்துக் கீழிறக்கியும் உட்கொண்டு பழகி வருவோர்க்கு, நல்ல உடம்பானது மலைபோல் வலிமையுடையதாகும்; அழகும் மேன்மேற் செழிப்புறத் தோன்றும்; கஞ்சாவும் முன்பே இம் முறையோடொப்பக் கற்பமாதற்கமைவதாம்.

## இந்திரிய நஷ்டம் தீர

466 சங்குதும்பை வன்னி தகரை புரசுவழை
புங்கிக்கு வேரைப் பொடியாக்கிப் — பங்கயநெய்
விட்டுக் குழைத்துருட்டி வெந்நீரி லுண்ணவிந்து
நட்டப் படுமுறுதி நைந்து.

(பொ - ரை) சங்கு, தும்பை, வன்னி, தகரை, புரசு, வழை, புங்கு, இக்கு (கரும்பு) இவற்றின் வேரைப் பொடியாக்கிய தூளில் ஒரு பங்கு வெள்ளாட்டின் நெய் கூட்டிக் குழைத்துருட்டிய மாத்திரையை வெந்நீரிலுண்ணின் விந்தூறல் நெகிழ்ந்து நட்டப்படும் (விந்து நட்டம்) சொப்பன துரித கலிதங்கள் மாறி இறுகி உறுதிப் படும் என்பதாம்.

## திரிகடுகு

467 திரிகடுகி லொன்றைத் தினமும் பெருக்கிப்
பருகுதுப்பாற் கற்பமெனப் பற்றி — எரிகனல்போல்
மூளும் பசியழகு மொய்ம்புவலி யொண்மை
நாளும் பெருகுமிது நல்.

(பொ - ரை) சுக்கு, மிளகு, திப்பிலியாகிய முக்கடுகுகளில் ஏதேனுமொன்றை, நாள்தோறும் ஒவ்வொன்ருகக் கூட்டி நெய் யுடன் சேர்த்துட்கொண்டு பின், முன்போலிறக்கி அவ்விதமே யுட் கொண்டும் கற்ப முறையாகப் பழகிவரின், எரியும் தீயைப் போல் பசி மூளும்; அழகு, தோள்வன்மை, உடம்பில் ஒளியானவைகள் நாளும் பெருகும்; இது நல்ல கற்ப முறையாம்.

## இலாக்கொட்டை

468 ஈர மிலாக்கொட்டை யிசமானுக் காக்கையதி
காரமிலாக் கோட்டையெனக் காண்பிக்கும் — வீரமிலாச்
சேனு பதியாக்குந் தின்னிதைநீ யெப்படியும்
நாணளு முண்டா நயம்.

(பொ - ரை) உலராத இஞ்சியை எவ்விதமாகவேனும் உட்கொண்டுவரின், நாள்தோறும் நயமே விளையும், சேத்துமத்தை வலியடங்கச் செய்யும்; வாதத்தின் அதிகாரத்தை உடம்பிற் செலுத்த வொட்டாமல், அரசனுணை செல்லாத வலிய கோட்டையை யொப்ப, வலிமையாக்குவிக்கும். ஆகையால் நாள்தோறும் இடைவிடாமல் இஞ்சியை உபயோகம் செய்க வென்பதாம்.

## அசமதாகம்

469 ஆட்டுவிக்குங் கோவை யமைச்சையர சாள்விக்கும்
ஓட்டுவிக்குந் தந்திரியை யுண்மையாய்த்—தாட்டீகம்
பூணும் பிரமசரம் போலப் பிணிகளுக்குக்
காணு மசமதா கம்.

(பொ - ரை) அடங்கிய வாதத்தைத் தன்னிலைக் கெழுப்பும், பித்தத்தை அரசு நிலைக்கு மேலோங்குவிக்கும்; சேத்துமத்தை நீக்கும், மெய்மையான வலிமையுடைய பிரமாஸ்திரம் போல் பிணிகளுக்குத் தீர்க்கு மருந்தாக உபயோகப்படும் ஓமம்.

## சோபி

470 முப்புருட ருக்குமற்ற மோசப் பசாசருக்கும்
பெப்புலிபோ லாண்மை பெருக்குமே—இப்புவியில்
வாகடருக் காஸ்திநிதி வைப்பா யிருக்குமுறை
ஆகுமது சோபியை யா.

(பொ - ரை) வாத பித்த சேத்துமமாகிய முக்குற்றங்களுக்கும் பேய்ப்புலி போல் ஆண்மையுடைத்தாய் அவற்றின் வலியை யடக்கும்; இவ்வுலகில் வாகட நூலோர் யாவர்க்கும் சேம நிதியைப் போல் வைப்பாக விருக்கும்; இங்ஙனமாகிய மகிமை யுடையது சோபியாகிய நேர்வாளமாம்.

## போசனகுடாரி-சீரகம்

471 போசனகு டாரியென்று பூதலமெ லாமறிய
மாசா மசீரணத்தை மாட்டியே—ராசனுக்கு
மந்திரிக்குஞ் சத்துருவாய் மற்றவனுக் குத்துணையாய்க்
கந்தரச மாஞ்சீர கம்.

(பொ - ரை) வயிற்றில் மாசுபோல் நின்று சீரணத்தைத் தடுத்து நிற்பதாகிய அசீரணமாகிய பசிமந்தத்தை நீக்கி உணவை ஊட்டுவதாகிய காரணத்தால் போசனகுடாரி யென்று பூவுலகத்துள்ளாரனைவருமறியப் படுவதாகிய சீரகம், வாதத்துக்கும் பித்தத்துக்கும் பகையாகியும் சேத்துமத்துக்குத் துணை செய்வதுமாகும்; சத்தாகிய ரசத்தின் மணங் கமழ்வதனால் கந்தரசமெனவுமாம்.

## சீரகம்

472 சீரகத்தை யொன்றொன்றாய்த் தின்னத் தினமும்வா
சீரகத்தைப் போகமாய்ச் செய்யுமே—காரகத்தைப்
போக்கும் பசியெழுப்பும் புண்கிரந்தி யைச்சொறியை
நீக்கு மதையறிவாய் நீ.

(பொ - ரை) சீரகத்தை நாள்தோறும் ஒவ்வொன்றாகக் கூட்டித் தின்றும், பின் அவ்வாறே ஒவ்வொன்றாகக் குறைத்துத் தின்றும் வரின், வாசியாகிய மூவகை சுவாச வோட்டத்தை முறை பிறழா வகையாகச் செய்து அதனால் உடம்பை வலுப்படுத்திப் போக பாக்கியங்களை யடையச் செய்யும், உஷ்ணத்தைப் போக்கும், பசியையுண்டாக்கும், புண், கிரந்தி, சொறி முதலிய சரும நோய்களை நீக்கும், ஆகவே மேற்கண்டவாறு உபயோகித்தறிந்து பார் என்பதாம்.

## அரிதகி

473 சொல்லு மரிதகிமேற் றேலை மதுவுடனே
அல்லும் பகலு மயிலவே—கல்லுங்
கரைய வுரமெழுப்புங் காயசித்தி யுண்டா
நரையுந் திரையுமிலை நை.

(பொ - ரை) கூறப்பட்ட கடுக்காயின் மேல்தோலைத் தேனுடன் கூட்டி இரவும் பகலுமுறையாக உட்கொண்டுவரின் கல்லைத் தின்றாலும் கரைந்து செரிக்கும் சீரண சக்தியை யுண்டாக்கும், காயசித்தியுண்டாம், நரை திரைகளும் உடலிளைப்புமில்லையாம்.

## தேற்றாங் கனி

474 மந்திரியில் லாதரசு மன்னனுக்குண் டாக்கிவரு
தந்திரியைக் கூடத் தழுவுமே—முந்திரிகை
காட்டுமுன்னே மேனோக்கக் காட்டிவிந்து வைக்கலைக்கும்
காட்டுமகா தேற்றாங் கனி.

(பொ - ரை) காட்டிற் றோன்றுவதாகிய தேற்றாங்கனியை முந்திரிகையென்னும் சிற்றளவில் உபயோகிப்பினும், இளகிய விந்துவை இறுகக் கட்டி மேனோக்கச் செய்தும், பித்தத்தின் உதவியில்லாமலே வாதத்தை வலுப்படுத்தியும் சேத்துமத்தை வாதத்துக் கிணங்கச் செய்தும் தன் மகிமையைக் காட்டுமென்பதாம், விந்து கீழ்நோக்கில் இளகியும், மேனோக்கில் இறுகியும் நிற்குமென்று கொள்க.

## வல்லாரைக் கற்பம்

475 வல்லாரைக் கற்பமுண்ண வல்லாரை யார்நிகர்வார்
கல்லாரைப் போலக் கலங்காமல் — வல்லாரைச்
சாறு மிலவணமுஞ் சாபத் திரியுமுண்ணப்
பேருமடி வல்லைப் பிணி.

(பொ - ரை) வல்லாரைக் கற்பத்தையுட்கொள்ள வல்லாரை நிகர்வார் யாவர்; (ஒருவருமில்லை என்றவாறு) ஆகவே, கற்றறிவில்லாரைப் போற் கலக்கங் கொள்ளாமல், வல்லாரையின் சாற்றுடன் சோற்றுப்பும் சாபத்திரியுங் கூட்டியுட்கொண்டுவரின் வல்லைப் பிணியும் சோம்பலும் நீங்குமென்பதாம்.

## மண்ணிலாக் கொட்டைக் கற்பம்

476 மண்ணிலாக் கொட்டையொன்று மாத்திரமே கற்பமென்ப
தெண்ணிக்கை யாகி யிருக்குமே — கண்ணுக்கு

நன்முறையாஞ் சீதளத்தை நாடாம லேயடிக்குந்
தின்முறைமை நீயறிந்து தின்.

(பொ - ரை) இலாக்கொட்டை என்னும் இஞ்சி ஒன்று மட்டுமே கற்பம் என்று கணக்கிடும் எண்ணிக்கையில் இடம் பெற்றிருக்கும்; அதன் உபயோகம் கண்ணுக்கு நல்ல பார்வையைத் தரும்; சீதளத்தை மிதமீறுமற் போக்கும்; கற்பமாக உட்கொள்ளு முறையையறிந்து உண்கவென்பதாம்; இவ்வாசிரியரே இஞ்சியைத் தேனிலூறவைத்துக் கற்பமாக உட்கொள்ளுமுறையைப் பிருண்டும் கூறியுள்ளார். (யமக வெண்பா)

## குமரி கற்பம்

477 வற்றுக் குமரிதன்னை வற்றலென வுண்ணினுஞ்சீர்
முற்றுக் குமரியென மூளுமே—நற்றுக்குஞ்
திண்மையு மில்லாத் தெரிவையரே யானலு
முண்மைமிகு நாளுமா யுள்.

(பொ - ரை) உலர்ந்து நீர் வற்றாத கற்றாழையைக் காய வைத்து வற்றி யுலர்ந்ததை யுட்கொண்டாலும், வயது முதிராத பெதும்பைப் பருவக் குமரியைப் போலவே உடற்கட்டுண்டாக்கும்; நல்ல உடற்கூறும் வலிமையுமில்லாத மகளிரேயாயினும் உண்மையாக நாள்தோறும் ஆயுள் விருத்தியுண்டாம்; இம்முறை பெண்பாலாரை நோக்கிக் கூறியவாறும்.

## ஆமலக கற்பம்

478 மூப்புளகா யந்தணிந்து மோகம் பிறக்குமிள
மாப்பிள்ளைபோ லேயழகு வாய்க்குமே—சேப்புவருங்
கோமயமு றுங்கறியைக் கொள்ள விரண்டுபங்காய்
ஆமலக முண்ணமுறை யால்.

(பொ - ரை) அகவையால் முதிர்ந்த மூப்பின் தளர்ச்சி நீங்கி, மணப்பருவம் வாய்ந்த மணமகனை யொப்ப அழகும் காம விருப்பமு முண்டாக்கும்; உடம்பிடத்துச் செந்நிறம் பரவும், கோமயத்தில் ஒரு பங்கு மிளகை ஊறவைத்து உலர்த்தியெடுத்து நெல்லிப் பழம் இரு பங்கு சேர்த்துட் கொள்ளவும்; அங்ஙனம் உட்கொள்ளின் முன் கூறிய நற்குணங்களுண்டா மென்பதாம்.

## பொற்றலைக் கையாந்தகரைக் கற்பம்

479 திருவுண்டாம் ஞானத் தெளிவுண்டா மேலை
யுருவுண்டா முள்ளதெல்லா முண்டாங்—குருவுண்டாம்
பொன்னாகத் தன்னாகம் பொற்றலைக்கை யாந்தகரைத்
தன்னாகத் தின்னாகந் தான்.

(பொ - ரை) பொற்றலைக் கையாந்தகரையின் சமூலத்தைப் பக்குவ கற்பமாக வுண்ணின், உண்டவர்க்கு உடம்பு பொன்னாகும்; திருப் பெருகும், ஞானத் தெளிவு பிறக்கும்; மேன்மையான உருவ வழகுண்டாம்; இன்னும் புருஷார்த்தமானயாவையு முண்டாகும்; நல்ல நிறமுண்டாம்.

## சிவன்வெற்றி

480 காயசித்தி யுண்டாகுங் காசினியெல் லாம்பணியு
பாயசித்தி யுண்டாகும் பாதமுடம்—பாதிசிவன்
வெற்றியிதைச் சூரணித்து வெண்ணெயுட னுண்ணுமுன்னே
குற்றமல்ல மெய்யென்று கொள்.

(பொ - ரை) சிவனாரின் வெற்றிமாலையாகிய தும்பை சமூலத்தைச் சூரணம் செய்து வெண்ணெயுடன் கூட்டியுண்ணின், உண்ணுதற்கு முன்னரே காயசித்தியுண்டாகும்; காசினியிலுள்ளார் பணியும் உபாயம் சித்தியாகும்; இக்கற்பம் குற்றமுடையதன்று; உண்மையேயென்று கொள்வாயாகவென்பதாம்; பாதமுடம்பு என்றதனால் வேருடன் சமூலமும் கொள்க.

## வெற்பேந்தி கற்பம்

481 வெற்பேந்தி சூரணமும் வெல்லமுமுண் டாலுடம்பு
கற்பாந் திரமாகும் காயசித்தி—உற்பாதம்
காட்டும் புணர்ந்திடினுங் காணாது விந்துணர்வு
பூட்டுங் குறுமுனியைப் போல்.

(பொ - ரை) மலைதாங்கியைச் சூரணித்து அச்சூரணமும் வெல்லமுங் கூட்டி யுட்கொண்டால் உடம்பு கர்பாந்த காலம்வரை நீடித்திருக்கும், அங்ஙனம் நீடித்தற்குரிய காயசித்திக்கான நிமித்தங்கள் முன்னறிவிப்பாக உடம்பிடையே தோன்றும், அன்றியும்

மங்கையருடன் கலவி செய்யினும் விந்திறக்கம் காணுது தம்பிக்கும். ஆகவே, உலோபாமுத்திரையாரை மணந்தும் பிரமச்சாரியாகவே கழித்த அகத்திய முனிவர்போல் வாழ்க்கையுறும் என்பதாம்.

## மாலனந்தல் கற்பம்

482 விந்திறுக்கிக் காயசித்தி வேண்டினோர் மாலனந்தல்
கந்தத்தி லுண்டாநீர் கற்கண்டு—தொந்தித்து
மண்டலமுண் பார்புளிப்பு மாதர்நல முந்துறந்து
உண்டபிற குண்மைதெரி யும்.

(பொ - ரை) ஆலம் விழுதின் சாறுடன் கற்கண்டு கூட்டி ஒரு மண்டலம் உண்டு புளிப்பும் மாதர் போகமும் நீக்கிப் பத்தியமா யிருந்தால் விந்து கட்டுப்பட்டுக் காயசித்தி யடைவர், பரிசோதனை யாக உண்டு பார்க்கின்பின் உண்மை விளங்கும்.

## இஞ்சி சுக்கு கடுக்காய் கற்பங்கள்

483 கால்கை பிடித்த கடுநோய்போ மண்டலத்தில்
ஏலுமுர முண்டா மிலாக்கொட்டை—மேலுமதன்
வற்ற லரிதகிகால் மத்தியான மாலையுண்ணக்
குற்றமல்ல மெய்யாகக் கொள்.

(பொ - ரை) இஞ்சியையும் அதன் வற்றலாகிய சுக்கையும் கடுக்காயையும் முறையே காலையிலும் நண்பகலிலும் மாலையிலு மாக உட்கொண்டு வரின் கால் கை முடக்கிய பிடிப்பு நோய்கள் ஒரு மண்டலத்தில் தீரும், உடற்கூற்றுக்குப் பொருந்திய வலிமையு முண்டாம், இம்முறை குற்றமுடையதன்றாகலான் மெய்மையாகக் கொள்க வென்பதாம்.

"கோலை யூன்றிக் குறுகி நடப்பவன்
காலை வீசிக் கடுகி நடப்பனே"

என்னுமிதனாலும் இதனையறியலாம்.

## விட்டுப்புக் கற்பம்

484 பார்த்திபற்குஞ் சேனா பதிக்கு மமைச்சனுக்கு
மேற்றபகை யெந்நாளு மென்றாலும்—சாத்திரத்தைக்

கேட்டுப்பு நூலோர் கிளர்ந்தா ருறவென்று
வீட்டுப்பு மாந்தரது மெய்.

(பொ - ள்) வாதபித்த சேத்துமங்களுக்குள் ஒன்றற் கொன்று பகைமையாந் தன்மை எந்நாளு முண்டேயெனினும், அவற்றின் பகைதணி யுபாயத்தை, பஞ்ச லவணங்களின் பண் பறிந்த மருத்துவ நூலோர் வீட்டிற் கையாள்வதாகிய சோற்றுப் பின் உபயோகத்தால் கண்டறிந்து உறவாகுமார்க்கத்தையும் நிலை நாட்டினர்; ஆகவே வீட்டுப்பு மக்கட்கு உடல் நலமளிப்பதாம்.

## மாக்கல்வ கற்பம் - மலைவேம்பு கற்பம்

485 மாக்கல்வ மாத்திரநீ வாயார வுண்மேகம்
போக்கிவெட்டை வெள்ளைமுதற் போக்குமே—
பாக்கியமாம்
வெற்பேந்தி யுண்ணீத்த விந்தையிறுக் கிக்காயம்
பொற்பேந்தப் பண்ணுநிதி போல்.

(பொ - ரை) செங்கழுநீரை (வயிறு நிறைய) வாயாரவுண் ணின், மேக நோயைப் போக்கி வெட்டை, வெள்ளையொழுக்கு முதலியவைகளையும் நீக்கும்; பாக்கியங்களுமுண்டாம்; மலைவேம் பினையுட்கொள்ளின் இந்திரியத்தைக் கெட்டிப் படுத்தி உடம்பினை யழகுடையதாகச் செய்யும் சேமிப்பு நிதியையொப்ப வென்பதாம்.

## வில்வாதி கற்ப மகிமை

486 கொண்டை கபித்தமுதற் கூவிள்மிம் மூன்றின்முன்னி
ரண்டை விடவுமகா நேர்த்தியே—மண்டலத்தில்
பித்த வியாதிப் பிணிக்கதனு லீசர்முன்னே
பத்திரமா கக்கொண்டார் பார்.

(பொ - ரை) இலந்தை, விளா, வில்வம் என்னும் இம்மூன்றில் முன்னின்ற இரண்டையுங் காட்டில் ஈற்றில் நின்ற வில்வமே பித்த நோய்களைத் தீர்க்குந் தன்மையுடையதாகையால் மிக நேர்த்தி யுடையதாம். இக்காரணத்தினுலே தான் ஈசனுகிய சிவபெருமா னும் வில்வத்தினைத் தமக்கு அர்ச்சனைக்குரிய பத்திரம் (பச்சிலை) ஆகக்கொண்டுள்ளார் என்பதாம்.

## அப்பிரக பற்பம்

487 பேயவரைச் சாறும் பிரசமும்விட் டப்ரகத்தைத்
தேய வரைத்துலர்த்திச் செய்புடத்தை—மாயவரைச்
சேரிலையப் பாலருந்தச் சேத்துமநோய் கட்குகுன்மம்
பேரிலையப் பால்வருமென் பேர்.

(பொ - ரை) பேயவரையின் சாறும் தேனும் விட்டு அப்பிரகத்தை நன்றாயரைத் துலர்த்திப் புடமிட் டெடுக்கப் பற்பமாம்; மாயவனாகிய திருமாலைப் பொருந்திய துழாய் ரசத்திலருந்தினால் சேத்தும நோய்கட் குறவாகிய குன்மம் தன் பேரில்லாது கெட்டோடும்; அப்பால் இம்முறை கூறிய என் பேர் நினைவிற்கு வரும் என்பதாம்.

## பவள பற்பம்

488 பின்னித் திரைவருமோ பித்தமுதிர்ந் தாலதற்குப்
பின்னித் திரைசேர் பிரவாளம்—தன்னைத்
தராபதியால் நீறுசெய்து தப்பாமலட்ட
பிரசத்திற் கொண்டுவிடு பேண்.

(பொ - ரை) பித்தம் தலைக்கேறி முதிர்ந்ததானால் பிறகு அந்நோயாளிக்கு உறக்கம் வருமோ? அங்ஙனம் அந்நோய் வந்தாயின், ஒன்றோடொன்று நெருங்கி மோதும்அலைகளையுடைய கடலில் உண்டாம் பவளத்தைப் பூவரசினால் நீறாக்கி, முறை பிசகாமல் காய்ச்சி வடித்த தேனிற் கலந்துண்ணின் மேற்கண்ட பித்தாதிக்கம் தீர்ந்து நலப்படும்; இம்முறையைக் கைவிடாமற் பேணிக்கொள்கவென்பதாம்.

## மவுத்திக பற்பம்

489 மாக்கல்வச் சாற்றால் மவுத்திகத்தை மத்தித்துப்
பாக்களவு செய்துலர்த்திப் பாலையுடன்—மீக்கவசித்
தானபின்பு நீறாக்கி யாச்சியந்தே னீருணப்போம்
ஊனீளபா ரிப்புவெம்மை யும்.

(பொ - ரை) செங்கழுநீர்ச் சாற்றால் முத்தை மத்தித்து (அரைத்து) பாக்களவுருட்டி யுலர்த்தி மேலே பாலையினால் கவசம்

செய்து பிறகு புடமிட்டுப் பற்பமாக்கி நெய், தேன், நீர் ஆகிய இவற்றிலொன்றிற் கூட்டியருந்தின் உடம்பிளைப்பு, ஈளை, உப்புசம் வெப்பம் ஆகிய நோய்கள் போம் என்பதாம்.

## மாலைக்கண் தீர

490 சீதை கணபதிபத் திரமயிறுத் தம்வெண்ணெய்
வேதமங்கம் வியார்த்தி வியாகரணம்—வீதமுன்வோ
மையாக்கி நீர்பால் மதுவிலிட மாலைக்கண்
பொய்பீளை நீரருகல் போம்.

(பொ - ரை) பொன்னாங்கண்ணி அறுகு மயில்துத்தம் வெண்ணெய் ஆகிய இந்நான்கையும் வேதம் அங்கம் வியார்த்தி வியாகரணம் ஆகியவற்றின் பிரிவுபோலக் கூட்டி மையாக்கி நீர் பால் தேன் இவற்றிலொன்றுடன் சேர்த்துக் கண்ணிலிட மாலைக் கண் நீங்கி, பீளை கண்ணீரருகல் எல்லாக் கண்ணோய்களும் போம் என்பதாம். வேதம் நான்கு, அங்கம் ஆறு, வியார்த்தி ஒன்று வியாகரணம் ஒன்பது முறையே சரக்குகளின் அளவாகக் கொள்க. போய்-பொய்யென செய்யுள் விகாரமாயிற்று.

## நேத்திர வாய்வு தீர

491 சொன்னபடி கேள்சீதை துத்தி யிலைரசத்திற்
பொன்னிமிளை துத்தம் பொடிசெய்து—பன்னு
வெண்ணெய்
மாத்திர மிட்டிழைத்து மையிடப்போ மையமில்லை
நேத்திர வாயுவறும் நீ.

(பொ - ரை) கூறுமொரு மருந்தினைக் கேள் நீ; பொன்னாங் கண்ணி துத்தியிலைச் சாறுகளில் பொன்னிமிளையையும் துத்தத் தையும் பொடி செய்து சேர்த்து வெண்ணெயிற் குழைத்து மையாக விடின் நேத்திர வாயு போம் என்பதாம்.

## மாலைக்கண் மாலின்கண்ணுக

492 மாறன்று ரின்வேர் மயிலவ ளுயுதவேர்
கூறுமொரு நீவியினிற் கூட்டியே—கீறுசெய்து

வெண்ணெயுடன் கண்ணில்மதி மேலுமிட நீவந்த
கண்ணன்கண் ணுமாலைக் கண்.

(பொ - ரை) வேம்பின்வேரும், கருவேலின்வேரும் சமமாகக் கொண்டு ஒரு குடுவையில் வைத்து நீருக்கி வெண்ணெயிற் குழைத்து, நாள்தோறும் ஒரு மாதத்திற்கு மேலும் நாட்கள் செல்ல, கண்ணிலிட்டுவரின் மாலைக்கண் நீங்கி, கண்ணபிரான் (செந்தாமரைக் கண்) கண் போல் ஆகும்.

## குருட்டுக்கண் தீர

493 காஞ்சனியின் பட்டை கணபதி பத்திரவேர்
ஆஞ்சீதை கைசா வரைத்துவெண்ணெய்—
வாஞ்சமையாய்
நன்கெண்ணோர் மாத நயனித்தா லிந்திரைகொண்
கன்கண்ணு குங்குருடன் கண்.

(பொ - ரை) மஞ்சளின் பட்டையும் அறுகும் பொன்னுங் கண்ணியும் ஆகிய மூன்றையும் ஒவ்வொன்றும் கார்பலமாக வெடுத்து வெண்ணெயிலிட் டரைத்து, ஆர்வத்துடன் ஒரு மாதம் கண்ணுச்கிட்டுவரின் திருமகள் நாதனுகிய திருமாலின் (தாமரைக்) கண்ணையொப்பாகும், குருடனின் பார்வையிழந்த கண் என்பதாம்.

## பூவிழுந்த கண்ணுக்கு

494 கரவீர வேருங் கருங்குன்றி வேரும்
ஒருநேர் மயிறுத்தத் தோடு—மெரிசெய்நவ
நீதத்தின் மையாக்கி நீர்பானெய் தேனிடக்கண்
பூதொத்தல் வெட்டருகல் போம்.

(பொ - ரை) அலரியின் வேரும் கருங்குன்றியின் வேரும் சம அளவாகக் கொண்டு மயில்துத்தத்துடன் எரித்த பொடியை வெண்ணெயிற் சேர்த்து மையாக்கி நீர் தாய்ப்பால் நெய் தேன் இவற்றில் முறையே கண்ணுக்கிடின் கண் பூவும், தொத்தலும், புழு வெட்டும், நீர் அருகலும் முறையே தீரும் என்பதாம்; நீரிலிடப்பூவும், பாலிலிடத் தொததலும், நெய்யிலிட வெட்டலும், தேனிலிட அருகலும் தீருமென்று கொள்க. தொத்தல்-பலக்குறைவு.

## வெள்ளிப் பற்ப மேன்மை

495 வெள்ளிபற்பந் தின்னவறும் மேகவறள் மேகவலி
புள்ளிரண மேகப் புணிலூறல்—விள்ளுமந்த
வாதங் கபமண்ட வாதமிவை யெல்லாந்
தீதின்றி மாறுமது செய்.

(பொ - ரை) வெள்ளிப்பற்பத்தை யுண்ணின், மேகவறளையும், மேகவலியும், சரும நோய்களான கரும்புள்ளி செம்புள்ளிகளும் மேகப்புண்ணின் ஊறலும், கூறும் வாதமும் கபமும் அண்டவாதமும் ஆகிய இவையெல்லாந் தவறுமல் நீங்குமென்பதாம்.

## வெள்ளிப் பற்பம் செய்முறை

496 ஒருதொடிவெள் ளிப்பொடிக்கே யொண்கா தணியோம்பி
யிருதொடிநீர் மூவிருநா ளிட்டுக்—கருவேலின்
மேற்புறணி மூசைநடு மேற்கீழ் மகிழந்தாது
பாற்பதியச் சீலைமண்ணும் பண்.

(பொ - ரை) ஒரு பலம் வெள்ளிப் பொடியை இரு பலம் கிடைச்சி (நெட்டி) நீரில் ஆறு நாள் ஊறவைத்துச் சேர்த்து, கருவேலின் மேற்புறணியாற் செய்த மூசையின் நடு வைத்து மேல் கீழ் ஆகிய ஈரிடத்தும் மகிழம்பூவின் மகரந்தப் பொடியை நன்கு பதிய வைத்துச் சீலை மண்ணும் செய்து பின்னும்,

## இதுவுமது

497 பண்முன்போ லாறுதினம் பார்த்துப் புடஞ்செய்ய
வெண்மைநிற முண்டாகும் வேறில்லை—நண்ணு
மதனை யனுபானத் தாலருந்த நன்றும்
விதன மெலாமகலு மே.

(பொ - ரை) அவ்வாறு சீலை செய்ததனை கவனமாகப் பார்த்து ஆறு நாள் சென்றபின் புடமிட்டெடுக்க வெண்மை நிற முண்டாகும்; வேறு வித்தியாச மேதுபாகாது; அங்ஙனம் பற்பமாகிய அதனை ஏற்ற அனுபானத்தி லுட்கொள்ளின் உடல்நல முண்டாம்; நோய்களெல்லா மகலுமென்பதாம்.

## செம்பு பற்பம்

498 குட்டங் கயவாதங் குன்மங் கபஞ்சன்னி
விட்டகலும் பித்தமறும் மெய்யுரமாங்—திட்டமாய்
ஆயுள் வளருமதற் காலம்பா லுலுபலம்
தேயு மொருபலமே செம்பு.

(பொ - ரை) குட்டநோய், க்ஷயநோய், வாதநோய், குன்மம், கபம், சன்னி நோய்கள் விட்டு நீங்கும்; பித்தாதிக்கம் தீரும், உடல் வலிமையாம்; கருவில் வரையறை செய்யப்பட்ட ஆயுள் மேலும் அதிகமாம்படி வளரும்; இங்ஙனங் கூறப்பட்டவற்றிற்கு ஏற்ற கற்பமாமொன்றைக் கீழே கூறுவேன்; ஆலம்பால் நாலு பலத்தில் ஒரு பலம் செம்பை;

## இதுவுமது

499 அஞ்சுநா ளூறியபின் ஞஞ்சிவனார் வேம்பிலைநீர்
அஞ்சுநாள் கொட்டிநெய்யி லப்படியே—அஞ்சு
நிலப்பனை யீயவேர் நீள்புறணி மூசைத்
தலத்திடுமுன் புன்னைநெய்யிற் றூன்.

(பொ - ரை) ஐந்து நாளூற வைத்து, பின் சிவனார் வேம்பின் இலை நீரில் முன்போலைந்து நாளூற வைத்துப் பின்னும் கொட்டிக் கிழங்கினின்றெடுத்த எண்ணெயிலும் அவ்வாறே ஐந்து நாளூற வைத்து, நிலப்பனைச் சாற்றிலும் அவ்வாறே யூறிய பின் ஈண்டின் வேரின் புறணியாலாகிய குகையிலிட்டு அத்துடன் புன்னை நெய்யும் விட்டு,

## இதுவுமது

500 ஆகு மிருபதுநா ளானபிற கம்மூசை
யேகுவதன் முன்கருமை யெய்துமே—வாகாய்
அதில்வைத்து மேல்மூடி யஞ்சுநாள் கஞ்சா
விதைநெய் நிதந்தப்பு மேல்.

(பொ - ரை) இருபது நாளான பிறகு மூசையிலூறும் மருந்து கருநிறங் கொள்ளும்; அப்பதத்தில் பொருத்தமாக மேல்மூடி

செய்து கஞ்சாவின் விதையில் எடுத்த நெய்யை நாள்தோறும் அதன்மேற் பூசி வரவும்.

## இதுவுமது

501 மேலு மதனை மிகவே கவசித்துச்
சீலைமண் ணிட் டாறியபின் சீராக—வாலையிலிட்
டூட்டு புடஞ்செய் தெடுக்க வெளுப்பாகும்
பூட்டுதிரு வெண்ணீறு போல்.

(பொ - ரை) மேலும் அம்மூசையை நன்கு கவசம் செய்து சீலை சுற்றி மண் பூசி யுலர்ந்த பின் வாலையில் வைத்துப் புடமிட் டெடுக்க வெள்ளை நிறமாய்த் திருநீறு போன்று பற்பமாகும்.

## செம்பு பற்பத்தின் பெருமை

502 நீரிழிவு நீரருகல் நீங்குமுதற் காந்தள்குடி
நீர்பதினா றுக்கொன்று நித்தியமுஞ்—சேரெட்டு
நாளூற வைத்தெடுத்து நற்கடம்பின் மேற்பிசினித்
தூளிருகை சாமுதலிற் சொல்.

(பொ - ரை) மேற்கண்ட பற்பத்தை காந்தள் குடிநீரில் எட்டு நாள் நாளொன்றுக்குப் பற்பத்தினளவுக்குப் பதினாறில் ஒரு கூறாக விட்டு ஊறவைத்து எடுத்து வைத்துக்கொண்டு, நல்ல சாதிக் கடப்பமரத்தின் பிசினைப் பொடிசெய்து அத்தூளில் மேற்கண்ட பற்பத்தைக் காற்பலத்துக்குக் காற்பலமாகச் சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு உபயோகிக்க நீரிழிவு நீரருகல் முதலிய நோய்கள் நீங்குமென்பதாம்.

## அப்பிரக பற்பம்

503 தொடியப் பிரகத்திற் சொல்லியவேப் பெண்ணெய்
தொடியிரண்டு விட்டரைத்துச் சொன்னா—ளடுமூன்று
மப்படியே வில்லை யதையேமேற் பூசிருநாள்
அப்புறம்போ டப்புடமெய் யாம்.

(பொ - ரை) ஒரு பலம் அப்பிரகத்திற்கு இரண்டு பலம் வேப்பெண்ணெய் விட்டரைத்து மூன்று நாள் தீயெரித்துக் காய்ச்சி

வில்லை செய்து வேப்பெண்ணெயை மேலே பூசி இரண்டு நாள் உலர வைத்துப் புடமிடப் பற்பமாம்.

## வெள்ளீய பற்பம்

504 சுரமுதலா நோய்போந் துளிர்க்கு முடம்பு
மரனிகர்வெள் ளீயபற்பத் தாலே—ஒருபானை
யார்த்தபன்னட் பையாக்கி யதிலோர் தொடிவைத்
தாரப் புனலிட் டடு.

(பொ - ரை) சுரமுதலாகிய நோய்கள் தீரும், உடம்புந் தழைத்து வலிமையுறும், வெள்ளீய பற்பத்தின் உபயோகத்தால். அது செய்யும் முறையாவது; ஒரு பானையில் நிறையத் தாமரை மலரை நிறைத்து ஒரு பலம் வெள்ளீயத்தை யதனுள்ளே வைத்து பானை நிறையும்படி நீர் விட்டு அடுப்பேற்றித் தீபாக்கினியாக எரித்து,

## இதுவுமது

505 ஏழாநாள் தீபாக்னி யேகியபின் கோவைவிரை
வீழாமற் பீர்க்கின்விரை யிரண்டுந்—தாழாத
மாக்கல்வச் சாறுவிட்டு மத்தித்து ..மூசைபண்ணி
நீக்காமல் வெற்பேந்தி நெய்.

(பொ - ரை) ஏழு நாளான பின் கோவையின் விதையும் பீர்க்கின் விதையுமாகிய இரண்டும் செங்கழுநீர்ச் சாறு குறையாமல் விட்டரைத்து மூசை செய்து மலைதாங்கி நெய் விட்டு,

## இதுவுமது

506 தப்பியந்த மூசைதனில் வைத்துச் சீலைமண்செய்
தொப்பு மொருநா ளொழிந்தபின்பு—தப்பாமற்
செய்யப் புடத்தைச் செயமா மதன்பெருமை
வையமிசை யாரறிகு வார்.

(பொ - ரை) நன்கு நனைத்துப் பின் மூசையில் வைத்துச் சீலை மண் செய்து ஒரு நாளிடை விட்டு மறு நாள் தவறின்றியே புட

மிடப் பற்பமாம்; அதன் பெருமையை உலகில் யார் அறிவார் என்பதாம்.

## காரீய பற்பம்

507 காரீய பற்பத்தாற் கம்பிப்பு பாண்டுசுரஞ்
சேரத்தீ வெப்புமுதற் றீருமே—யோரொன்ருய்க்
கோவைமுத லேடேக கோகனகம் பூனைக்கால்
மூவகையி லைச்சாறு முன்.

(பொ-ரை) காரீய பற்பத்தினல் உடலசைவு பாண்டு சுரம் வெப்ப முதலியவைகள் தீரும்; கோவைச்சாறு, ஓரிலைத் தாமரைச் சாறு பூனைக்காலிச்சாறு ஆகிய மூவகையிலைச் சாறுகளும் முன்னுக,

## இதுவுமது

508 காரீயங் காற்பங்கு காணதுமுக் காற்பங்கும்
ஆரவரை மூன்றுநா ளாமளவுஞ்—சேர
நிழலுலர்த்தி மூங்கிலெண்ணெய் நேர்பூசித் தோகை
தழையிற்கா லேமூடித் தான்.

(பொ-ரை) காரீயம் காற்பங்கு கொண்டு முன் சொல்லிய சாறுகள் முக்காற் பங்கில் மூன்று நாள் நன்ருயரைத்து ஒன்று சேர்த்து நிழலிலுலர்த்தி, மூங்கிலின் எண்ணெயை மேற் பூசி மூங்கிற்றேகையின் தழையால் மூடி, மேலும்;

## இதுவுமது

509 தானேரு மாலெச்சிற் றன்ஞற் கவசித்துத்
தானே புடமிட்டாற் ருன்வெளுக்குந்—தானே
அதன்பெருமை மேலே யறிவா ரெவர்சொல்
பதனறிந்து கொண்டதனைப் பார்.

(பொ-ரை) ஓட்டிலிட்டு மண்பூசிக் கவசம் செய்து புடமிட்டால் வெள்ளை நிறமாய் நீருகும்; அங்ஙனமான அதன் பெருமையை ஆரே யறியவல்லார்; சொல்லும் பதமறிந்துகொண்டு அதனை உபயோகித்துப் பார் என்பதாம்.

## காந்தச் சிந்தூரம்

510 காந்தசிந் தூரத்தைக் காணுமுன்னே குட்டமறு
மாந்தனுவெற் பென்னநிலை யாகுமே—காந்தம்
ஒருபலத்தி னுக்கிரட்டி யொண்மறியு ணூமூலி
இரதமிட்டு மத்தித்துவெய் யில்.

(பொ - ரை) மேற்கூறுவதாகிய காந்தச்சிந்தூரத்தைக் காண்பதற்கு முன்னரே குட்ட நோய் தீரும்; உடம்பு மலை போல் வலிமையும் நிலைமையுமுடையதாகும்; காந்தம் ஒரு பலத்திற்கு ஆடுதின்னாப்பாளையின் சாறு இருபங்கு சேர்த்து அரைத்து வெய்யிலில்.

## இதுவுமது

511 தன்னிலொரு நாளுலர்த்தித் தற்படியி லாக்கொட்டை
தன்னிலும் பின்வேங்கை வாயப்பு—தன்னிலுமே
அன்னபடி மூன்றுநாள் முப்புடமு மாகியபின்
னென்றுடனே சாம மிரு.

(பொ - ரை) ஒரு நாளுலர்த்திப்பின் இம்மாதிரியே இஞ்சி ரசத்திலும் வேங்கைச் சாற்றிலுமரைத் துலர்த்தி மூன்று நாள் வெய்யிற் புடமாகிய பின் இரண்டு சாமம் சூரிய புடம் வைத்து;

## இதுவுமது

512 கூறுமதை வெள்ளாட்டுக் கோமயத்தில் மூன்றுதின
மூறவைத்த தின்பாலே யூட்டியரைத்—தாறியபின்
வில்லைசெய்த பின்னர் வெய்யிலி லாதுலர்த்தி
வல்லையொரு சீலைமண்செய் வாய்.

(பொ - ரை) வெள்ளாட்டுக் கோமயத்தில் மூன்று நாளூற வைத்து அதன் பாலை விட்டரைத்து ஆறிய பின் வில்லை செய்து பின்னர் வெய்யிலில்லாத விடத்தில் நிழலிலுலர்த்தி சீலைமண் வலிதாகச் செய்து;

## இதுவுமது

513 புடங்காற் றிலாவிடத்திற் போட்டெடுத்து மீட்டு
நடங்காண் விருச்சிக்கூ லத்தாற்—றுடங்கியரை

அஞ்சுநா ளாம்புடமிட் டாகாசத் தாமரையில்
அஞ்சுபுடம் செய்யருண மாம்.

(பொ - ரை) காற்ருேட்டமில்லாதவிடத்தில் புடமிட்டெடுத்து மறுபடி தேள் கொடுக்கின் சாற்ருல் ஐந்து நாளரைத்து, ஆகாசத் தாமரையிலும் முன்போ லரைத்து, புடமிட்டெடுக்கச் செந்தீ வண்ணமாகச் செந்தூரமாம்.

## அயச்செந்தூர மகிமை

514 அயச்செந்தூ ரத்தா லசையாது தந்தந்
தியக்கித் திரையாது தேகம்—புயத்திளமை
போகாது ரோமநரை பூணுது மூப்புடைமை
யாகா ததன்மகிமை யால்.

(பொ - ரை) அயச்செந்தூரத்தினுல் பற்களசைவின்றி உறுதிப்படும்; தேகம் தோல் சுருங்கித் திரையடையாது; தோள் வலிமையும் இளமையும் போகாது நிலைபெறும்; உரோமங்கள் நரையடையாது; மூப்பு வராது; மேற்கண்ட அயச்செந்தூரத்தின் மகிமையினு லென்பதாம்.

## அயபற்பம் செய்முறை

515 இரும்பைப் பொடிசெய் திரட்டிசடைச் சாறு
பொருந்தவரை யேழுகன்னற் போது—திரும்ப
முளகிலைச்சாற் ருலரைத்து முன்போற் பிறகு
நிரம்பவரை நெய்தற்பூ நெய்.

(பொ - ரை) இரும்பைப் பொடி செய்து அதனளவுக்கு இரட்டிப்பான நெட்டிச் சாற்றில் ஏழு நாழிகை யரைத்து, மறுபடி மிளகிலைச் சாற்றிலுமவ்வாறே யரைத்து, பிறகு நெய்தற் பூவின் நெய்யிலும் முன்னதிலு மதிகமாகவே யரைத்துக் கொள்க.

## இதுவுமது

516 தன்னுலு முன்போற் றடவைக்கோர் சீலைமண்ணிட்
டுன்னு புடமிட் டொழிந்தபின்பு—பின்னுமதைத்

தக்கிரத்தி லுலரைநாள் சாரவைகை யாந்தகரைப்
பக்குவச்சாற் ருலுமுன்போற் பண்.

(பொ - ரை) மேற்கண்டவா றரைத்ததனை வில்லை செய்துலர்த்தி மூன்று சீலை மண் செய்து புடமிட்டு முடிந்த பின்னுமதை மோரிலரைநாளும் கையாந்தகரைச் சாற்றிலு முன் போலவே செய்து கொண்டு,

## இதுவுமது

517 பனங்கள் ளிலுமப் படிச்செய் குளவிப்
பனந்தனில்மத் தித்துவில்லை பண்ணி—நனைத்திடத்திப்
பாலாலும் வெப்பாலைப் பாலாலு மேற்பூசி
நாலவைப்பாய் மும்மூன்று நாள்.

(பொ - ரை) பனங்கள்ளினலு முன்போலவே செய்து குளவியிலைச் சாற்ருலும் மத்தித்து வில்லை செய்து அத்திப்பால், வெட்பாலைப்பால்களைத் தடவி முறையே மூன்று நாளான பின்;

## இதுவுமது

518 ஆனபின்பு நீயதனை யையாறு கன்னலுக்குள்
சீலைமண் ணுற்புடத்தைச் செய்தெடுக்கிற்—பால
ரவிபோ லிருக்குமதை நாடுமுன்னே ரோகங்
கெவிப்போ யொளிக்குநிசங் கேள்.

(பொ - ரை) மேல்முறைக ளெல்லாமான பின்பு முப்பது நாழிகையான காலத்திற்குள் வில்லைகளுக்குச் சீலைமண் செய்து புடமிட்டெடுக்க, காலையிளஞ் சூரியனைப் போல் செவ்வண்ணம் பெற்றுத் தோன்றும்; அதை உபயோகப்படுத்து மளவிலேயே நோய்கள் ஏங்கிப் பெருமூச்சு விட்டு விலகிப் போமென்பதுண்மையாம்; கேவி - கெவியென நெடில் குறிலாகி நின்றது.

## மகாவில்வாதி லேகியம்

519 கேளுமகா வில்வாதி கீர்த்தியை யென்சொல்வேன்
மூளு மிருமல்சய மூலநவி—நீளும்

அரோசிகம் விக்கல் சதிசத்தி குன்ம
மிராது சுரந்தீரு மே.

(பொ - ரை) இனி மகாவில்வாதி லேகியத்தின் பெருமையைக் கூறக் கேள்; அதன் உபயோகத்தால் இடைவிடாது மூண்டெழும் இருமல் சயம் மூலநோய் பெரிதாகிய அரோசிகம் விக்கல் சதி செய்யும் சத்தி குன்மம் ஆகிய நோய்கள் இராதனவாய் நீங்கும்; சுரநோயும் தீரும்.

## இதுவுமது

520 பசியுண்டாந் தாது பரவுமுர முண்டாம்
இசைய வதுசெய் யியல்கே—ளிசையுமந்த
வில்வவேர் மூன்றுமற்ற வேரிரண்டு மாகவைந்து
மொல்வதொரு பாண்டத்தி னுள்.

(பொ - ரை) பசியுண்டாகும்; வீரியம் (இந்திரியம்) பெருகும்; உடல்வலியுண்டாம்; பொருத்தமாக அவ்வவிழ்தம் செய்யுமுறையை இனிக்கேட்பாயாக; வில்வவேர் தூய்மையுடையதாய் மூன்று பங்கெடுத்துக் கொண்டு, மற்றும் சேர்க்கத் தக்க வேறு வகை வேர்கள் இரண்டு பங்கு கூட்டி இவை ஐந்து கூறுள்ள எல்லா வேர் வகைகளையும் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பானையில் வைத்து;

## இதுவுமது

521 சலத்தை நிரப்பியதைத் தீப மெனவே
நிலைத்தெரித்து மூன்றுநா ணீக்கிச்—சலத்தை
இறுத்ததற்குப் பாதி யிளநீர் பழந்தேன்
இறுத்தடுப்பி லேற்றியதை யே.

(பொ - ரை) தண்ணீர் இரு பங்காக நிரம்பவிட்டு அடுப்பேற்றித் (பிரமன் காலம்) தீபவனலாக நின்றெரியுமாறு எரித்து மூன்றுநாளான பின் வடித்து வைத்துக்கொண்டு, அச்சலத்தி னளவுக்குப் பாதியளவு இளநீரும் தேனும், பழச்சாறுகளும் கலந்து மீண்டும் அடுப்பேற்றி;

## இதுவுமது

522 தீபமுதல் மூன்றுமெரி தீக்கெட்டு நாழிகையாய்
ஞாபகமி ரண்டுமுக்கா ணழிகையும்—மாபருவம்
வேதனரன் மால்பொன்மை மேற்சிவப்பு நீலமிதில்
ஏதுகொதி சன்னத்த மே.

(பொ - ரை) தீபாக்கினி எட்டு நாழிகை, கமலாக்கினி எட்டு நாழிகை, காடாக்கினி எட்டு நாழிகையாகக் கொள்ள வேண்டும். ஈஸ்வர நாளாகிய முதல் எட்டு நாழிகையில் இரு முக்கால் நாழிகையை நினைவிற்கொண்டு கமலாக்கினியாக ஒன்றரை நாழிகை எரித்து நன்ருகத் துழாவிக் கலக்கிப் பாக்கி நாழிகையும் கமலாக்கினியாகவே எரித்து இறக்கிக் காய்ந்த அந்நீரைச் சமமாக இருபங்காக்கி இரு சட்டிகளில் ஊற்றி ஒவ்வொன்றிலும்,

523 முதலுக் கரைவாசி மொத்தரசத் தூணெய்
இதமித்த சர்க்கரைமற் றெல்லாம்—பதனறிந்து
வைசரக்கு வைதுடுப்பு வராதுழவு நேரறிந்து
வைசமயக் கையறிகு வாய்.

(பொ - ரை) முதலுக்கரைப் பங்கு சரக்குத்தூள் நெய் சர்க்கரை கனிகளைப் பதமறிந்து சேர்த்து, மாயன்காலத்தில் காடாக்கினியாக எரித்து,வைத்த துடுப்பை எடுக்காமல் துழாவிக் கொண்டே மூன்று கடவுளர் நிறங்களையும் கவனித்து (வேதன்-பொன்; அரன்-சிவப்பு;மால்-நீலம்;) அந்த நிறங்களில் கடைசியில் சொல்லப்பட்ட திருமாலின் நிறமான நடுத்தரமான கருப்பு நிற மாய காலத்தில் இறக்கி நன்ருய்க் கிளறி வைத்துக் கொள்ளவும்.

## இதுவுமது

324 வாய்த்த பிறகெடுத்து வைதானி யப்புடத்தில்
சேய்த்தின்மற் றுண்பத் தியமாக—வேய்த்தடந்தோள்
பெண்கடுகு கொள்புகையாம் பீரமது கூழ்ப்பாண்ட
மெண்கருத லாகா தினி.

(பொ - ரை) மேற்கண்ட முறைகளெல்லாம் செய்து பக்குவப்பட்ட பிறகு அதனை, சிறுபாண்டத்திலிட்டு மூடி இருதிங்கள்

வரை தானிய புடமாக வைத்து மூன்றாந் திங்களின் தொடக்கத்தில் நோய்களுக்கு உபயோகப்படுத்துங்கால், பத்தியமாக நீக்கத்தகும் பொருள்களாவன: பெண் போகம், ஆம்பிரமாகிய மாகள், பூசணிக்காய், எள் முதலியவைகளை மனத்திலும் நினைவு கொள்ளாமல் தவிர்க்க வேண்டுமென்பதாம்.

## இலகு வில்வாதி லேகியம்

525 நீடுமகா வில்வாதி லேகியத்துக் காஞ்சரக்கிற்
கூடியது கொண்டுசெய்து கொள்வதின்பேர்—நாடுலகு
வில்வாதி யாமஃதும் வெம்பிணிக ளைத்துரத்திக்
கொல்வாதி யாமறியுங் கொள்.

(பொ-ரை) உயர்வுடைய மகா வில்வாதி லேகியத்துக்குக் கூறிய சரக்குகளில் சில நீங்கலாக ஏற்றவாறு கூட்டிச் செய்யும் முறையா லமைந்தது இலகு வில்வாதி லேகியமென்று பெயர் பெறும்; அவ்விலகு வில்வாதியும் கொடிய பிணிகளைத் துரத்தி நீக்கும் வன்மை யுடையதாகுமென்று கொள்க என்பதாம்.

## தாளிசபத்திரி சூரணம்

626 தாளிச பத்திரிகோட் டம்பறங்கி தக்கோலந்
தூளா யிடித்ததனைச் சூரணித்து—நாளுமதைத்
தேனேயக் காரமிதிற் றின்பித்தம் வெம்மையனல்
தானகலுந் திண்மையுண்டாந் தான்.

(பொ-ரை) தாளிசபத்திரி கோட்டம் பறங்கிச் சக்கை தக்கோலம் இவைகளைத் தூளாக இடித்து வஸ்திரகாய சூரணமாகச் செய்து, நாள்தோறுமதனைத் தேன், நெய், வெல்லம் ஆகிய மூன்றில் ஒன்றை அனுபானமாகச் சேர்த்துண்ணின் பித்தம், வெம்மை, காந்தல் முதலியவை யகலும், உடல்வலிமை யுண்டாம்.

## தாளிசபத்திரி சூரணம்

527 தாளிச பத்திரிமுத் தக்காசு சுக்கேலம்
தூளா யொருநிறைக்குச் சூரணித்து—தூளிலரை
அக்காரங் கூட்டியுண வையைவர வொட்டாமல்
முக்காரம் போலிருக்கு முன்.

(பொ - ரை) தாளிசபத்திரி முத்தக்காசு (கோரைக் கிழங்கு) சுக்கு ஏலம் இவைகளை ஒரு நிறையாகக் கொண்டு தூளாக இடித்து, திப்பி நீக்கிச் சூரணமாக்கிக் கையிலெடுத்த சூரணத்திற் பாதியளவு சருக்கரை சேர்த்துண்ணின் சேத்துமத்தை வரவிடாமல், முக்காடிட்டாற் போல் மறைத்து நிற்குமென்பதாம்.

## இஞ்சிச் சூரணம்

528 இஞ்சித் துகளையிழு தாற்பைய வேவறுத்து
நஞ்சப் பொடிக்கு லவங்கத்தூள்—கொஞ்சஞ்
சருக்கரையுங் கூட்டியுணத் தண்கபபித் தம்போம்
அருக்கனெனு மிளமை யாம்.

(பொ - ரை) இஞ்சித்தூளை நெய்யில் வறுத்துப் பொடி செய்து இலவங்கத் தூளும் கொஞ்சம் சர்க்கரையும் கூட்டியுண்ண சீதள கபமும் பித்தமும் போம்; உடம்பு சூரியனைப் போல் இளமையுடன் பிரகாசிக்கும்.

## வச்சிரவல்லி வடகம்

529 நிச்சயமா யுப்புகறி நேர்மாடஞ் சீரகஞ்சேர்
வச்சிர வல்லி வடகத்தை—உச்சிதமாய்
உண்ண வசிரணம்போ மோயா விருமலறும்
புண்ணுமுத லானவும்போம் போம்.

(பொ - ரை) பிரண்டையுடன் உப்பு மிளகும் இவ்விரண்டினளவு உளுந்து சிரகம் சேர்த்துப் பாகஞ்செய்து வடகமாக்கி, சிறப்பாக உண்ணின் அசிரணமும் ஓயாத இருமலும் உடற்புண் தொண்டைப் புண்கள் முதலானவையும் போம்; போம் போம் என இருமுறையடுக்கிய நயம் உறுதிமேற்று.

## பூபதி மாத்திரை

530 பூபதி மாத்திரையாற் போமே பிணிகளெல்லாம்
மாபெருமை யுண்டா மனிதருக்கு—ஞாபகமா
சஞ்சீவி யாமதுசெய் தன்மை யெருக்குமுதல்
விஞ்சுபல மானவகை வேர்.

(பொ - ரை) மானிடர்க்கு உடல் நலமளித்துப் பெருமை தரத் தக்கதான பூபதி மாத்திரையின் உபயோகத்தால் நோய்களெல்லாம் நீங்கும்; நினைவில் வைக்க வேண்டிய சஞ்சீவியெனத் தகும்; பூபதி மாத்திரை செய்முறைமையாவது; எருக்கு முதலாகச் சொல்லப்பட்ட வேர் வகைகள் (வேர் முப்பத்தெட்டும் மற்ற சரக்குகள் செய்முறைகள் தேரையர் சேகரப்பாவில் கூறப்பட்டுள்ளது.) சமன் எடை வெட்டி இடித்துலர்த்திய தூள்;

## இதுவுமது

531 பத்துக் கிரண்டு பலஞ்சை வலச்சாறு
கைத்தாழைச் சாறு கடிதாட்டிச்—சுத்திசெய்த
மால்மனைமுன் சம்பத்தி மட்டுமுப்பான் கைசாவா
மேலுபதி னேழரையை யே.

(பொ - ரை) மேற்கண்ட தூள் பத்துப்பலம் எடுத்து அதற்கு இருபது பலம் வேலம்பாசிச் சாறும் கைப்பையுடைய கற்றாழைச் சாறும் விட்டு ஒவ்வொரு நாள் அரைத்து வில்லை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, பின்னர் சுத்தி செய்த தாளகம் முதல் செம்பருத்தி வரையுள்ள (இவையும் மேற்கண்ட சேகரப்பாவில் கூறப்பட்டுள்ளன) முப்பத்து நான்கு சரக்குகளும் ஆகியவற்றைச் சமனாக முப்பது காற்பலம் (ஏழரை பலம்) கொண்டு முந்திய வில்லையுடன் கூட்டிப் பதினேழரைப் பலம் அளவுள்ளதான,

## இதுவுமது

532 இதற்குச் சரியா யிசையமுகங் கள்ளு
மதித்தகட னீர்கழிநீர் வார்த்து—விதத்திலிரு
சாமமற வாமாப்பால் தாசேர கத்தின்பால்
நேமமுற முன்படிசெய் நீ.

(பொ - ரை) தென்னம்பாளைச் சாருகிய கள்ளில் ஒரு நாள் ஊறவிட்டு உலர்த்திப் பின் கடல்நீர் கழுநீர் வார்த்து ஊறவைத்து உலர்த்திக் கொள்ளவும்; பிறகு காட்டுப் பசுவின் பாலிலும் ஒட்டகத்தின் பாலிலும் முன் போலவே ஊறவைத்து உலர்த்திக் கொள்ளவும்.

## இதுவுமது

533 ஆன பிறகுநிறை யாமதற்குக் கால்வாசி
கோனை பச்சிலையுங் கூட்டியே—பானைவையா
முன்னிடித்துச் சொல்லினடு மூடியதைச் சில்லிசெய்து
பன்னுவிளக் காதியனல் பார்.

(பொ - ரை) மேற்கண்ட முறைகளெல்லாம் செய்தானபின் அதன் கூடுதல் நிறையளவுக்குக் கால்பங்காகப் பச்சிலையும் கூட்டி அரைத்துக் கொள்ளவும்; பின் ஒரு பானையில் மேற்கண்ட பாகப் படியமைந்துள்ள வில்லைகளை வைப்பதற்கு முன்னாக நெற்கதிர்களை இடித்துத் தூள் செய்து அத்தூளைப் பானையின் அடியிற் பரப்பி வில்லைகளை அதன்மேல் வைத்து அதன் மேலும் மேற்கண்ட நெற் கதிர்த்தூளைக் கொட்டி மேல் மூடிச் சீலை செய்து அடுப்பேற்றித் தீபவனலாக எரித்து;

## இதுவுமது

534 இருசாமம் போய்மீட் டெலுமிச்சை நீரால்
தெரியமத் தித்துவில்லை செய்து—பரியமண்ணிட்
டாற்றிப் புடமிட் டதைக்கரியு மித்தீயிற்
றேற்றியொரு சாமத் தினம்.

(பொ - ரை) இரண்டு சாமம் எரித்தபின் எலுமிச்சம் பழச் சாற்றா லரைத்து வில்லை செய்து, உலர்த்திக் கரியுமித் தீயில் ஒரு சாமம் புடமிட்டெடுத்துப் பின்னர்;

## இதுவுமது

535 மீட்டெடுத்து வல்லாரை விட்டரைத்து மூன்றுகன்னல்
ஊட்டிவில்லை செய்த துலைக்கேற்றி—மீட்டும்
ஒருசாமம் விட்டெடுத்த வொன்ருக நாலுக்
கரிதாமை யோடுநிறை யாம்.

(பொ - ரை) வல்லாரைச் சாறு விட்டு மூன்று நாழிகை யரைத்து வில்லை செய்து உலையில் ஏற்றி ஒரு சாமம் எரித்து எடுத்து அதன் அளவுக்குக் கால்பங்கு ஆமையோடு பொடித்த தூள் கூட்டி;

## இதுவுமது

536 ஆசினி யாண்டலைநீ ராலரைத்து வில்லைசெய்து
மாசில்கரிப் புட்டைநடு வைத்ததனை—மூசுமயிற்
பீலியால் மூடிப் பிறகிருநா ளாகியபின்
சேலாமை வன்மீனெய் சேர்.

(பொ - ரை) ஈரப்பலாச்சாறு, கோழிமுட்டைக் கருநீர் இவைகளாலரைத்து வில்லை செய்து குற்றமில்லாத கரிப்புட்டையின் நடுவில் வைத்து மயிலிறகால் மூடி வைத்து இரண்டு நாளான பிறகு, அதனுடன் சேல்மீன், ஆமை, முதலை இவைகளினின்றெடுத்த நெய் சேர்த்து வைத்துக் கொண்டு பின்னர் ;

## இதுவுமது

537 தூரிப்பா யாறுகன்னல் சொல்லதுபத் துக்கொன்று
சேரிப்பால் கச்சோதத் தின்னெச்சம்—நேர்சத்த
கன்னல்சம் பீரக் கனிச்சாறு விட்டரைத்துத்
தின்னும் பயறளவு செய்.

(பொ - ரை) ஆறு நாழிகை வரை அந்நெய்களை சுவறத் தடவி மண்சீலை ஆறுத முன் சுத்தமான புடமிட்டெடுத்து அதனளவில் பத்துக்கொரு பங்கு கச்சோதத்தின் எச்சம் (மின்மினிப்பூச்சி) கூட்டி எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஏழு நாழிகை யரைத்துப் பயறளவாக மாத்திரை செய்து கொள்க.

## இதுவுமது

538 செய்து நிழலுலர்த்தித் சேர்ப்பாய் கருட்கத்திற்
பையுள் வகைகள் பறக்கவே—ஐயமில்லை
பூதலத்து வாகடரைப் பொன்னாட்டு வாகடர்கள்
ஆதலெனச் செய்யுமிதை யா.

(பொ - ரை) மேற்கண்ட மாத்திரையை நிழலிலுலர்த்தி மருந்து வைக்கும் சிறு செப்பிலடைத்து மருந்துப் பெட்டியில் சேமஞ் செய்து வைத்துக் கொண்டு, நோய் வகைகள் நிலை கெட்டழியுமாறு உபயோகப் படுத்திவரின், ஐயப்பாடேதுமின்றியே

பூவுலகிலுள்ள மருத்துவ பண்டிதரைப் பொன்னுட்டு மருத்துவராக மதிக்குமாறு செய்யுமிப் பூபதி மாத்திரை என்பதாம்.

## தாளக பற்பம்

539 ஆமதனைத் தேனு லறலாலுண் வெம்மைகபம்
போமுனையிற் பத்தியம் புளியெண்ணெய்—ஆமாப்பால்
வேகவைத்து வல்லிரசம் விட்டரைத்தப் பாற்குகைநாய்ப்
பாகலிடத் தாளகபற் பம்.

(பொ - ரை) தாளகத்தை (அரிதாரம்) ஆமாவின் பாலில் வேகவைத்து, வல்லிரசம் விட்டரைத்துப் பின், நாய்ப்பாகற் சமூலத்தாற் குகை செய்து அதனுள் வைத்துப் புடமிட்டெடுக்க பற்பமாம்; பற்பமாகிய அதனைத் தேனிலுண்ண வெம்மை (சுரம்) யும் நீரிலுண்ணக் கபமும் தீரும்; பத்தியம் புளி எண்ணெய் நீக்கவும்.

## கந்தாதி கிருதம்

540 மலவந்த மாயுதிரம் மல்கியது தள்ளப்
பலவந்த மாமூலம் பாறும்—நலமுந்தும்
மாப்பிளைநே ராக்குவிக்கு மண்டுமழற் காயைவிட்டுச்
சாப்பிடக்கந் தாதிகிரு தம்.

(பொ - ரை) கந்தாதி கிருதத்தைக் காரம் நீக்கியுட்கொண்டு வந்தால், மலபந்தம் நீங்கும், வெளிவந்து உள்ளேறுத மூலமும் நீங்கி நலமுறும்; உடல்நலமுண்டாம்; மணமகன் போல் தேக காந்தியடையும்.

## கருணை லேகியம்

541 மூலமெங்கே போமோ முளையெப் படிப்போமோ
பாலிற் கருணைரசம் பாதிவிட்டு—நாலுகன்னல்
பேசளவட் டாறிலொன்று பெல்லமிட்ட லேகியத்னதக்
காசள்வு தின்றுவந்தக் கால்.

(பொ - ரை) நல்லாவின் பாலில் அதன் பாதியளவு கருணைக் கிழங்குச் சாறு கூட்டி நான்கு நாழிகை அளவு எரித்துக் காய்ச்சி,

காய்ந்த அதன் அளவுக்கு ஆறிலொரு பங்கு வெல்லமும் கூட்டிக் கிளறிய லேகியத்தைக் காசளவு நாள்தோறும் உண்டு வந்தால், மூலமும் மூலமுளையும் போனவிடந் தெரியாமற் போம் என்பதாம்.

## கருணை நெய்

542 காறுகின்ற கந்தத்தின் கந்தக் கருகுமரிச்
சோறு கறிலவணம் சுக்கிவையை—யூறவைக்க
நீரா மதற்குநிகர் நெய்விட்டட் டுண்மூலம்
வேராணி போகுமிது மெய்.

(பொ-ரை) காறு கருணையின் கிழங்குச் சாற்றுடன் கற்ருழைச் சோறு, மிளகு, உப்பு, சுக்கு ஆகியவற்றை ஊறவைத்து வெயிற் புடம் வைக்க யாவும் நீத்து நீராம்; அந்நீருடன் அவ்வளவு நெய் கூட்டிக் காய்ச்சியுட்கொள்ளின் வேராணியுடன் மூலமுளை தீரும், இஃதுண்மை என்பதாம்; (அளவு ஒரு தேக்கரண்டி வீதம்.)

## காருக் கருணை கருக்குக் குடிநீர்

543 காருக் கருணையிலை கண்டுபா றங்கியுப்பு
நீருக்கி யக்கணமே நீர்விட்டே—ஆறுமுன்னே
வெண்ணெயுங்கற் கண்டுமிட்டு மெய்யா யருந்தவறு
முண்ணைபல மூலமறு மோர்.

(பொ - ரை) காருக்கருணையிலை கண்டுபாறங்கி உப்பு மூன்றையும் வறுத்துச் சாம்பலாக்கி உடனே தண்ணீர் விட்டுக் காய்ச்சி சூடாறுமுன்னே பசுவின் வெண்ணெயும் கற்கண்டும் சேர்த்துட் கொள்ளின் துன்பந்தரும் உள்மூலந் தீரும் என்பதாம்.

## மூலந் தீர

544 மெய்கொப் பரைகொட்டி வெள்ளிறகி நாலுமறல்
பெய்தெரித்து நெய்த்துளியும் பெய்ததிலே—யெய்தகனல்
பின்னருந்த மூலப் பிணிகளெல்லா மோடிப்போம்
மெய்தெரிந்து செய்யாணை மெய்.

(பொ - ரை) பெருங்காயம், தேங்காய் நெற்றின் திருகிய பூ, கொட்டிக்கிழங்கு, மந்தாரை ஆகிய நான்கையும் நீர் விட்டடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி நெய்யும் விட்டுச் சூடாறியபின் அருந்த மூலப்பிணிகளெல்லாம் ஓடியொளிக்கும்; உண்மையறிந்து செய்க என்பதாம். மெய் மூன்றில் முன்னது காயம்; இரண்டாவது உண்மை; மூன்ருவது சத்தியம்; சொற் பின்வருநிலையணி.

## மூலநோய்க்குப் புகை

545 குடசவித்தி னைப்பொடித்துக் கோல வுதிரத்திற்
படவுலர்த்தி யவ்வெருவோர் பாண்டத்—திடைமூட்டி
ஆகு மதிலதுபெய் தப்புகைகொ ளாசனத்திற்
போகாவெண் மூலமெல்லாம் போம்.

(பொ - ரை) குடசப்பாலை விதையினைப் பொடி செய்து பன்றியின் இரத்தத்தில் ஊறவைத்துலர்த்தி, பன்றியின் மலத்தை ஒரு பாண்டத்தில் மேற்கண்ட சூரணத்துடன் வைத்து எரித்துண் டாகும் புகையை ஆசனவாயிற்படக் கொண்டால் போகாத வெளி மூலமெல்லாம் போம் என்பதாம்.

## முளை மூலக்குணம்

546 துருவை மலம்போற் சுருண்டு கழலா
தெருவை நிதமு மிழியும்—அருவருக்கும்
கல்லுமுளை யாக்கையெலாங் கம்பிக்குந் தம்பமிரா
கொல்லுமுளை மூலக் குணம்.

(பொ - ரை) முளை மூலநோய் கண்டால் ஆட்டின் புழுக் கையைப் போல் மலம் சுருண்டு இரத்தத்துடனும் வலியுடனும் நாளும் வெளியாகும்; கண்காணில் அருவருப்புண்டாம் உடம்பெல் லாம் பொறுக்க முடியாத வலியுண்டாம்; இந்திரிய நட்டமும் அடிக்கடி ஏற்படும்; மூல முளையின் கடுமையால் அடிவயிற்றைக் குடைவதுபோல் வருத்த முண்டாம்; இங்ஙனம் பலவாகிய துன்பங் களை முளை மூலம் விளைக்குமென்பதாம்.

## மூலத்திற்கு வேது

547 சூடுண்ட விட்டிகையைத் தோய்சிந்து வாரவெந்நீர்
மூடுண்ட மேனியுடன் முன்னுறக்கா—யோடுண்ட

நீர்போல்வேர் நீர்பறியு நீக்குணவு டன்புளிப்பு
வேர்போமுன் னுமிதுவே வேது.

(பொ - ரை) நெருப்பில் நன்கு காய்ந்த செங்கல்லை நொச்சி யின் தழை சேர்த்துக் காய்ச்சிய சூடான வெந்நீரில் வைத்து, உடம்பைப் போர்வை கொண்டு மூடி அவ்வெந்நீரின் ஆவியை உடம்பிற் சாரவாங்கினல், ஆற்று நீரோட்டம் போல் வியர்வை மிகுதியாகக் காணும்; மூல டிளையின் வேரறும்; உணவில் புளிப்பை நீக்கிப் பத்தியமாகக் கொள்க.

## இதுவும் மூலவேது

548 அசமதா கஞ்சுக் கரிசனம ரீசம்
முசியா திடித்துடலை மூடி—அசையாமற்
றீவிகையிற் றூவுபுகை சேரிதுவு மோரியல்பு
மேவு முபதையென வேது.

(பொ - ரை) ஓமம், சுக்கு, மஞ்சள், மிளகு நான்கையும் பருந்தூளா யிடித்து, தூபக்காலில் நெருப்பை வைத்து அதில் மேற்கண்ட தூளைத் தூவி புகை வெளியேருமல் நோயாளியின் உடலைப் போர்வையால் மூடி அப்புகையினை வாங்க மூலமுளை யறும். இங்ஙனம் செய்வதும் ஓர் உபாயமான கை முறையாம்.

## காசம் தீர

549 இல்லக் கனியை யிழைதாம் பிரப்பொடியைப்
புல்லவரைக் காடிப் புளிப்பூட்டி—வில்லைசெய்து
காசளவு காட்டுமுன்னே காணுங் கபபித்த
காசமது மேல்நோக்கிக் கால்.

(பொ - ரை) தேற்ரும்பழத் தூளுடன் தாம்பிர பற்பத்தைப் புளித்த காடியில் அரைத்து வில்லை செய்து ஒரு காசெடை உட் கொள்ளு முன்னேயே உடம்பிலுள்ள கபநோய் பித்த நோய்கள் விரைந்து நீங்குமென்பதாம்.

## இராச விரேசனம்

550 சோபிப் பருப்பைச் சுதையட் டளையாக்கி
ஞாபகமாய்க் கொண்ட நவநீதந்—தாபித்த

சுன்னத்தா ஞகவல்லி துய்க்க விரோசனமாம்
மன்னர்க்கா மாற்றுவெந்நீர் மை.

(பொ - ரை) நேர்வாளப் பருப்பைப் பாலுடனிட்டுக் காய்ச்சிப் பிரையிட்டுத் தயிராக்கிக் கடைந்த மோரைக் கொண்டு சுண்ணும்பைத் தாளித்து, அச்சுண்ணத்தை வெற்றிலையில் தடவிப் பாக்குடன் கூட்டி மென்றருந்த விரேசனமாம்; இது அரசர்க்காம் சுகபேதியாகும், இதற்கு மாற்று வெந்நீர்.

## விரேசனம்

551 வேதிக்கு ரோகணி காவேளைக் குக்கந்தி
பாதிக்குப் பாதி பகிர்குடிநீர்—ஊதிக்கை
யுண்டா லுடன்பேதி யுண்டா மிகுமதிகங்
கொண்டால்வெந் நீரைக் குடி.

(பொ - ரை) கடகரோகணி ஓரளவு எடுத்து அதிற்பாதி காய்வேளையும் அதிற்பாதி (கந்தி) பாக்குத் தூளும் சேர்த்துக் காய்ச்சிய குடிநீரைக் கை பொறுக்கும் சூட்டுடனருந்த உடனே விரேசனமாம்; பேதி அதிகமானல் வெந்நீரருந்த அடங்குமென்பதாம்.

## பாண்டுமை அண்டவாத விரேசனம்

552 பாண்டுமையெல் லாமரிசம் பங்கா மனலவணம்
வேண்ட வரைத்ததனை வில்லைசெய்து—தீண்டாமல்
ஏரண்ட நெய்தெறித் துண்ண விரேசித்துச்
சேரண்ட வாதமறுஞ் செய்.

(பொ - ரை) மிளகும் அதனளவுள்ள வீட்டுப்பும் கூட்டி யரைத்து வில்லை செய்து ஆமணக்கெண்ணெயிலுட்கொள்ள, விரேசனமாகி, பாண்டுமையும் அண்டவாதமும் தீரும் என்பதாம்.

## அண்ட வீக்கத்திற்கு

553 கழற்காய்வித் தேரண்டக் காய்வித் திரண்டும்
அழற்கா யிலைச்சாறிட் டாட்டித்—தழற்கேற்றிப்

பின்னதையொற் றத்திரும்பப் பேசா திடவீங்கும்
உன்னதவண் டங்கள்கரை யும்.

(பொ - ரை) கழற்சிப் பருப்பும் ஆமணக்கின் விதைப் பருப்பும் ஆகிய இரண்டையும் மிளகிலைச் சாற்றிலரைத்து முடி கட்டிச் சூடு காட்டி ஒற்றடமிட வீங்கிய அண்டவாதங் கரைந்து நன்மையாம்.

## அண்டவாதம் தீர

554 கழற்காயுள் வித்துங் கடுகி னதளும்
அழற்காய் விரையு மரைத்து—உழக்கெண்ணெய்
ஒக்கவிட்டு மேற்பூசி யுள்ளுக்குங் கொள்ளுமுன்னே
சுக்கிப்போ மண்டவா தம்.

(பொ - ரை) கழற்சிப் பருப்பு, கடுக்காய்த் தோல், மிளகு ஆகிய மூன்றையுமரைத்து உழக்கு ஆமணக்கெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வைத்துக்கொண்டு சிறு தேக்கரண்டி வீதம் உட்கொண்டும் மேற்பூசியும் வரின் அண்டவாதம் சுருங்கி வற்றிக் குணமாம்.

## சவுக்ய விரேசனம்

555 இந்துப் பயன்மனைநீ ரீர்க்கா மலகமிதைத்
தொந்தித் தனலிற் சுடவைத்துத்—தந்தத்திற்
றட்டா தருந்தச் சவுக்ய விரேசனமாம்
பட்டால்வெந் நீரடங்கும் பார்.

(பொ - ரை) இந்துப்பு பிரமியிலைச்சாறு நெல்லியீர்க்கு ஆகிய மூன்றையுமரைத்துக் கலந்து தீயிற் காய்ச்சி, பல்லிற் படாமல் அடி நாவிலிட்டருந்தச் சுகபேதியாம்; மிகுமாயின் வெந்நீரருந்தி லடங்கும்.

## பற்று விரேசனம்

556 பற்று விரோசனத்தாற் பந்தமுறு முந்தியினிற்
குற்ற மிராது குளிர்ந்தநீர்—உற்றமறை
ரோகணிவெண் சாரணைகோ ரோசனைசோ பிப்பருப்பு
பாகுசெய்துள் ளிச்சுதையாற் பார்.

(பொ - ரை) கடுகுரோகணி வெள்ளைச் சாரணை கோரோசனை சுத்தித்த நேர்வாளப் பருப்பு ஆகியவற்றை அளவுடன் கொண்டு உள்ளிப்பூண்டின் சாற்றிலிட்டுக் காய்ச்சிப் பாகுபோல் செய்தருந்த விரேசனமாம்; அடிவயிற்றில் மலக்கட்டால் வந்த குற்றந்தீரும், விரேசனமிகிற் குளிர்ந்த நீர் உட்கொள்ள வடங்கும்.

## சுக விரேசனம்

557 வெள்ளைத் திரிபுரையின் வேருந் திரிகடுகும்
உள்ளித் திரியோ டுறவரைத்துப்—பில்லைசெய்தே
ரண்டத் தயிலத்தி லிட்டதுண்வி ரோசனமாம்
முண்டானல் மாந்தழன்ற மோர்.

(பொ - ரை) சத்திச்சாரணையின் வேரும் திரிகடுகும் (சுக்கு மிளகு திப்பிலி) உள்ளிப் பூண்டின் திரி(பல்)யுடன் சேர்த்தரைத்து வில்லையாகச் செய்துலர்த்தி ஆமணக்கெண்ணெய் கூட்டியுட்கொள்ளின் விரேசனமாம்; அதிகப்படுமெனில் மோரில் வெந்நீர் கலந்துட் கொள்ள அடங்கும் என்பதாம்.

## விரேசன மாத்திரை

558 கைசாத் துடிமரிசங் காற்கழஞ்சு சோபியுநேர்
பைசாசப் பீரரசம் பாய்ச்சியரை—வைசால
மாத்திரையாய் நீரிளநீர் வாரணைதீ வாதபித்த
சேத்துமத்துக் கஞ்சாமற் செய்.

(பொ - ரை) ஏலம் காற்பலம் மிளகு காற்கழஞ்சு சுத்தித்த நேர்வாளப் பருப்பு காற்கழஞ்சு ஆகஎடுத்துப் பேய்ப்பீர்க்கஞ்சாறு விட்டரைத்து மாத்திரை செய்துலர்த்தி, தண்ணீரிலேனும் இளநீரிலேனும் உட்கொள்ள பித்தவாதம் பித்த சேத்துமம் குணமாம்; இம்முறையை அஞ்சாமற் செய்க வென்பதாம். வாரணை - தடுத்தல் முறையாம்.

## ஆக்கிராண இராசபேதி

559 ஆக்கிராணத் தாலே யரச விரோசனமாம்
ஆக்குமுல் லாச மதிமதுரம்—பாச்குக்கு

சோபி யதைப்பொடித்துச் சுன்னமெனநனையில்
தாபித்த லாக்கிராணந் தான்.

(பொ - ரை) ஆக்கிராணத்தாலே இராச சுகபேதியாகும் மனத்திற்கு முல்லாசத்தைத் தரும்; அம்முறையாவது: அதிமதுரம், களிப்பாக்கு, சுத்தி செய்த நேர்வாளம் ஆகியவற்றைப் பொடி செய்து நறுமண மலரில் மலரும் பருவத்துப் போதிடைத் தூவி அப்பூவின் மகரந்தத் தூள் மணத்துடன் முகர்ந்தால் நல்ல சுகபேதீ யாம் என்பதாம்.

## ஆமைக்கட்டுக்கு மருந்து

560 சோபி கறிகாமன் சுக்குவகை காற்கழஞ்சு
தாபி யரைலிகுசச் சாற்றுலே—நீபயருய்
நேமிக்க வோர்சிறுவெந் நீரிலொரு நாளருத்தில்
ஆமைக்கட் டெல்லா மறும்.

(பொ - ரை) சுத்தித்த நேர்வாளம் மிளகு திப்பிலி சுக்கு வகைக்குக் காற்கழஞ்சு வீதம் எடுத்து எலுமிச்சை ரசத்திலரைத் துப் பயறு போலுருட்டி நியமமாக வெந்நீரில் நோயாளிக்குண் பிக்க ஆமைக்கட்டு நோய் தீரும் என்பதாம்.

## சலப்பிணிக்கு மருந்து

561 கறுத்த குலுத்தத்தைக் காடியிலிட் டந்நீர்
இறுத்ததிற்சுக் கேலமிள கிட்டு—வறுத்ததெனச்
செய்ததனைச் சூரணித்துத் தின்னச் சலப்பிணிபோங்
கைமுறைதப் பாதிதுசெய் காண்.

(பொ - ரை) கருங்கொள்ளைக் காடியிலூறவைத்துப் பின் இறுத்தெடுத்து அதனுடன் சுக்கு ஏலம் மிளகு கூட்டி நன்கு வறுத் தெடுத்தது போலவுலர்த்திச் சூரணம் செய்து உட்கொள்ளின் சலப்பிணி நோய் தீரும்; இது கைம்முறை (கைகண்ட முறை) யாதலால் தப்பாகாது; செய்து பார் என்பதாம். சலப்பிணி - நீர்க் கோவை.

## குழந்தைகள் சரும நோய்க்கு மருந்து

562 புண்சிலந்தி செவ்வாப்புப் போகவென்ருற் பாலருக்கு
மண்சிலந்தி நூலாக்கு மாறன்ருர்—வெண்காயம்

எண்ணெயுடன் வாகா யெரித்ததனை மேற்றடவு
பண்ணையிலே போங்கிரந்தி பார்.

(பொ - ரை) புண் சிலந்தி செவ்வாப்புக் கட்டி முதலாகக் குழந்தைகட்கு வரும் சரும நோய்கள் தீரவென்றால் கீழ்வருமாறு செய்து கொள்க; சிலந்தி வலைநூல், மண், வேம்பு, வெண்காயம் ஆகியவற்றை எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி மேலே தடவ உடனே மேற்கண்டவைகள் தீருமென்பதாம்.

## விடமுட்டித் தைலம்

563 காஞ்சிரமும் வேம்புமழற் காயுங் கடிப்பகையு
மாஞ்செதிலும் வச்சிரமும் வாகாகப்—பாஞ்சு
கதுவிடத்தீப் பானை கவிழ்த்தெரிக்க வுண்டாம்
அதுவிடமுட் டித்தயில மாம்.

(பொ - ரை) எட்டியும் வேம்பும் மிளகும் கடுகும் மாமரப் பட்டையும் கள்ளியும் அளவுடன் கூட்டி ஒரு பானையிலிட்டு வாய் மூடிச் சீலைமண் செய்துலர்த்திக் குழிப்புடத் தயிலமாக (முடுகு தயிலம்) எரித்தெடுக்கவும் என்பதாம்.

## இதுவுமது

564 குட்டம் பதினெட்டுங் குற்றுடம்பு மெய்த்திமிரும்
பட்டங் கிடுமுன் பறக்குமே—சட்டமிதன்
பேர்விடமுட் டித்தயிலம் பேசிதற்குப் பத்தியம்வெந்
நீர்பயறுப் பக்கார நெய்,

(பொ - ரை) பதினெட்டு வகைக் குட்டங்களும், உடம்பு வலியும் உடம்பில் திமிரும் மேற்கண்ட விடமுட்டித் தயிலத்தால் பறந்துபோம்; இவ்விடமுட்டித் தயிலத்திற்குப் பத்தியவுணவாவன: வெந்நீர், பயறு, உப்பு, வெல்லம், நெய் ஆகியவைகளாம்.

## மாவிடமுட்டித் தயிலம்

565 மாவிடமுட் டித்தயில மார்க்கங்கேள் மாறன்றூர்
ஆவாரை யெட்டி யகில்தேக்கு—காவேளை .

வச்சிர மோமம் வழைதா தகிபிரண்டை
அச்சமுள்ளி வைத்திறக்க லாம்.

(பொ - ரை) மாவிடமுட்டித்தயில முறையாவது; வேம்பு, ஆவாரை, எட்டி, அகில், தேக்கு, காய்வேளை, சதுரக்கள்ளி, ஓமம், சுரபுன்னை ஆத்தி, பிரண்டை, அகத்தி, முள்ளி ஆகிய இவைகளைப் பாண்டத்திலிட்டுக் காய்ச்சி முடுகு தயிலமாக வடித்தெடுக்கவும்.

## மாவிட முட்டித் தயிலத்தின் உபயோகம்

566 கால்கை திமிர்த்துடம்பு கம்பித்த லோய்ந்திடுதல்
தோல்களிற்றின் றூல்போற் சொறிய தல்—மேல்வருமிந்
நோய்கட்கெல் லாமிதுவே நோயாகு மாவிடப்போ
பாய்புலிபோ லாகுமிது பார்.

(பொ - ரை) மேற்கூறிய மாவிட முட்டித் தயிலமானது கால் கை திமிர்த்து உடம்பு தம்பித்துக் கருவிகள் ஓய்ந்து போதல், சருமம் ஆனைத்தோல் போற் சொறிபிடித்துத் தடிப்பாதல் இவை போன்ற வேறுவகையான பலவகை நோய்களுக்கும் இதுவே நோயாகி அவற்றை நீக்கும்; விலங்குகள் இரிந்தோடப் பாயும் புலி போன்றதாகும்.

## இரசக் கட்டு

567 கட்டுமுறை யாலேலோ கங்கள்வச மாகுமதில்
இட்ட முறமுன் னிரதத்துக்—கொட்டகப்பால்
சிப்பிசங்கு நண்டணிலிற் செய்தயிலந் தூரிக்கத்
தப்பாமற் கட்டுமிர தம்.

(பொ - ரை) ஒட்டகப்பாலும், சிப்பி, சங்கு, நண்டு, அணில் களில் செய்முறையாக எடுத்த தயிலங்களும் இரசங் கட்டுதற்கா மாகலின், இவற்றில் வாய்ப்பானதைக் கொண்டு சுருக்கிட்டுத் தப்பாத வகையால் இரசத்தைக் கட்டி வைத்துக் கொண்டால், அக்கட்டு முறையாலே நவலோகங்களையும் வேதையாக்கவும் அவிழ்தமாக்கவும் உதவும் என்பதாம்; விவரம் சேகரப்பாவில் அறியலாம்.

## வங்கக் கட்டு

568 நரைதிரையில் லான்முட்டை நண்ணியபூ நாக
மருவு மிவைகளினுல் வாய்த்த—பருவமிகு
மெட்டுமெழு காமவ் விவரத்தா லக்கணமே
கட்டுமித மானவங் கம்.

(பொ - ரை) நரை திரையில்லான் முட்டையின் கருநீர் பூநாகம் இவ்விரண்டையும் சேர்த்துக் கைமுறைப்படி மெழுகாக்கி, வங்கத்தை உருக்கி உருக்கு முகத்தில் மேற்கண்ட மெழுகைச் சேர்க்க வங்கம் கட்டிப்போகும். நரைதிரையில்லான்-ஊர்க்குருவி; எட்டும்-வாய்க்கும்; வங்கம்-வெள்ளீயம், இதன் முழு விவரத்தை இவ்வாசிரிய ரியற்றிய சேகரப்பாவில் காண்க.

## நாகக் கட்டு

569 காரண்டத் தாஞகங் கட்டுமது வல்லாமல்
ஏரண்ட தாலு மிரதமொரு—சாரண்டக்
கட்டுமென்பார் கைவரிசை கண்டவரவ் வாறுபக
ரிட்ட முறைமையறி யில்.

(பொ - ரை) அண்டங் காக்கையின் தசையில் வடித்த குழித் தயிலத்தால் நாகங்கட்டும்; இஃதன்றியும் ஏரண்டத் தயிலத்திஞல் இரசம் ஒரு வகையில் பொருந்துமாறு கட்டுமென்று கைமுறை செய்து கண்டவர் கூறுவர்; அவர் கூறுமம்முறை செய்து கண் டுண்மையறியின் ஏற்றதெனக் கொள்ளலாம். விளக்கம் சேகரப் பாவிலறிக.

## அயக் களங்கு

570 களங்கிரும்பு செய்யவென்ருற் காக்கைவண்டு பிச்சு
விளங்கிற் குகைச்சபத்தோல் மேலே—துலங்குவச்சி
ரப்பாலு மாவிலிங்கத் தாலுமா குங்களங்கா
மெப்போதுங் கட்டவிதை யே.

(பொ - ரை) காக்கைப்பித்து வண்டினிறகு ஆமையோடு சதுரக்கள்ளிப்பால் மாவிலிங்கப் பட்டை இவற்றினின்று குழித்

தயிலமிறக்கி, அயத்தையுருக்கி உருக்குமுகத்தில் மேற்கண்ட தயிலத்தைச் சுருக்குக் கொடுக்க அயம் கட்டிக் களங்காகும். இதன் முழு விளக்கம் சேகரப்பாவி லுள்ளது.

## கந்திக்கட்டு

571 மாலாகப் பூரசத்தில் வார மிருக்கவைத்து
மேலாகப் ப்ரமதண்டு வித்தெண்ணெய்—யாலேயவ்
வாறுவைத்துப் புன்னைநெய்யவ் வாறுவைக்கப் பின்னெருப்பிற்
காருது கெந்தகம்பு கை.

(பொ-ரை) விஷ்ணுகாந்திப் பூவின் சாற்றில் ஏழு நாள ஊறவைத்து, மேலும் பிரமதண்டு வித்தின் எண்ணெயிலும் அவ்வாறு ஊறவைத்துப் பின்னும், புன்னை நெய்யிலும் அவ்வாருக வைத்து மும்முறையுமான பின்னர் கெந்தகம் நெருப்பிற் புகை காணுமல் கட்டுப்படுமென்பதாம்.

## கௌரி, தாளகம், கந்தகம் கட்டு

572 நீர்முள்ளி வித்துதொண்டை நெஞ்சோதிக் கண்டம்பொத்
தார்வா லுடலிந்த வைந்தாலுஞ்—சேர்செயினீர்
வேவாள கௌரியுற வேதாள கங்கட்டுந்
தேவியுர முங்கட்டுஞ் செய்.

(பொ-ரை) நீர்முள்ளி வித்துடன், ஓந்தியின் தொண்டை நெஞ்சு, கண்டம், வால், உடல்களும் மயிலின் உறுப்புகளும் பிற பொருள்களும் கூட்டிச் செய்நீர் செய்து, கௌரி, தாளகம், கந்தகம் முதலிய பாஷாணங்களுக்கு, இருப்புக் கரண்டியிலிட்டு மேற் கண்ட செய்நீரினல் சுருக்குக் கொடுக்க அவைகள் கட்டு மென்பதாம். முழு விவரம் சேகரப்பாவில் காண்க.

## மலடு நீங்க

573 வந்தியென்ப துண்டோ மகிமேற் சிதலைமனை
கந்தி மலாவகமுக் கால்வாசி—பிந்து
கணிச்சுதையால் மத்தித்தக் காரத்தா லுண்ணக்
கணிச்சுதையத் திற்புரிந்தக் கால்.

(பொ - ரை) புற்ருஞ் சோற்றுடன் சுத்தித்த கந்தகமும் பிண்ணுக்கு முக்காற்பங்கும் கூட்டி வேங்கையின் சாற்றில் மத்தித்து வெல்லத்தோடு உதய காலத்தில் வெறு வயிற்றிலுண்ண, பெண் மலடென்பதுண்டோ? உலகிலேயே இல்லை யெனும்படி மலடு நீங்குமென்பதாம்.

## இதுவுமது

574 போமலடு கொண்டைப் புறணியைத்தண் ணீருடனே
யாம லடுபோத திற்கரந்தைப்—பூமருதம்
பட்டைத் துகள்போட்டுப் பால்போ லிறக்கியருந்
திட்டமகி ழாகுமதி யில்.

(பொ - ரை) இலந்தையின் பட்டையைத் தண்ணீருடன் சேர்த்து நன்கு கஷாயமாகக் காய்ச்சும்போதே அதனுடன் சிவகரத்தைப் பூவும், மருதம்பட்டைத் தூளும் போட்டுப் பால் போல் சுண்டக்காய்ச்சி யிறக்கி யருந்த அடுத்த ஒரு மாதத்திலேயே அவா நிரம்ப விரும்பிய மகப்பேற்றுக்குக் காரணமான கருவுற்பத்தி யுண்டாம்.

## கலிக்க வகைகள்

575 கலிக்க வகைவா கடர்நோய்த் தளத்தைக்
கெலிக்க வகைகாட்டுங் கேட்டைச்—சலிக்க
நொறுக்குஞ் சலப்பிணியை நுங்குங் கபத்தை
அறுக்குஞ் சலக்கரணை யாம்.

(பொ - ரை) இந்நூலிற் பலவாறு கூறிப்போந்த கலிக்கங்கள் பொதுவகையாக மருத்துவர்கள் நோய்ப் பகைப் படையை வெற்றி கொள்ள வகை செய்வனவும், நோய்க் கேட்டைச் சலிப்புற்ருெடுங்குமாறு அழித்தொழிப்பனவும், நீர்ப்பிணிகளை வற்றி யொடுங்கச் செய்வனவும், கபப்பிணியை அறுத்துத் தீர்ப்பனவுமென்பதாம். ''அஞ்சனத்தால் ஐயந் தாழும்'' எனப் பிருண்டும் கூறியிருப்பதால் சலப்பிணி கபப்பிணிகள் கலிக்கத்தால் தீர்தலறியலாம். சலக்கரணை-விடுதல், சகாயம் எனப் பல பொருள் தரும்.

## கலிக்கம்

576 திரிபுரையின் வேருந் திரிகடுகுங் கூட்டி
வரிசையான் பாலின்மத் தித்துப்—பிரசத்தில்
அப்படியே செய்துலர்த்தி யாற்றிப் பிருந்தரசங்
கப்புமிகு நல்லகலிக் கம்.

(பொ - ரை) சத்திச்சாரணை வேரும், திரிகடுகும் கூட்டி ஆவின் பாலில் முறையாக வரைத்துப் பின் தேனிலு மவ்விதமே அரைத்துலர்த்தித் துளசியின் சாற்றில் கூட்டிக் கலிக்கமாக விடவும், இது நல்ல கலிக்கமாம்.

## கலிக்கம் வேறு வகை

577 இலிங்க மரிதார மெண்கச்ச மூன்றும்
புலிங்க முடையார்மேற் போட்டுக்—கலந்துலிகு
சக்கனிநீ ராலாட்டிச் சற்றே நிழலுலர்த்திற்
பக்குவமா குங்கலிக்கம் பார்.

(பொ - ரை) இலிங்கம் அரிதாரம் கடகரோகணி மூன்றையும் எரிந்தடங்கிய தீயிற்போட்டுக் கருகாமலெடுத்துத் தூளாக்கிக் கலந்து எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துச் சிறிதுபோழ்து நிழலி லுலர்த்திறற் பக்குவமான கலிக்கமாகும், செய்துபார் என்பதாம்.

## பூத கலிக்கம்

578 நிம்பவித் தாக்குப்பு நெய்தற்பூ நெய்தலப்பூ
விம்ப விலைச்சாற்றை விட்டரைத்துச்—சம்பீரச்
சாறுமிட் டரைத்துவட்டிச் சற்றே வெயிலுறநோய்
காறுமிது பூதகலிக் கம்.

(பொ - ரை) வேப்பம்வித்து, சமையலுப்பு, நெய்தற்பூ (நெய்தல் நிலக் கருப்பொருளாகிய) தாழையின்பூ ஆகியவற்றைக் கோவை யிலைச்சாறு விட்டரைத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு மீண்டுமரைத்துருட்டி வெயிலிலுலர்த்தி யுபயோகிக்க நோய்கள் தீரும், இது பூத கலிக்கமாம்.

## ஆனந்த கலிக்கம்

579 ஆடகியி லைச்சாற்றி லையவிவா ழைக்கனிசுக்
கோடு மிளகு முறவரைத்துப்—பாடலத்தின்
போதி லுலர்த்திப் பொருளாகக் கொள்பிணியைக்
காதுமா னந்தகலிக் கம்.

(பொ - ரை) துவரை இலைச்சாற்றில் கடுகு, வாழைக்கனி, சுக்கு, மிளகு நான்கையும் அளவுடன் கூட்டியரைத்துப் பாதிரிப் பூவில் வைத்துலர்த்தி அமைதியுறக் கலிக்கமாகக் கொள்ளின் பிணிகளையழிக்கும் ஆனந்த கலிக்கமாம்.

## பட்சிராச கலிக்கம்

580 பச்சோந்தி வாலிற் படுமிரத்த முங்கணையுங்
கச்சோத மெய்யுங் கலந்தரைத்து—மெச்ச
நிழலுலர்த்திக் கொள்ளதற்கு நீங்காத நோயுங்
கழல்பட்சி ராசகலிக் கம்.

(பொ - ரை) பச்சோந்தியின் வாலின் இரத்தமும் திப்பிலியும் மின்மினிப் பூச்சியும் சேர்த்து அரைத்து நிழலில் உலர்த்திக் கலிக்கமாகக் கொள்ளின் நீங்காத பிணிகள் நீங்கும்; இது பட்சி ராச கலிக்கமெனப் பெயர் பெறும்.

## கலிக்கம் (வேறு)

581 இப்படிக்குத் தானுதவா தென்னிற் றுவரைமிள
குப்பரிசி கொள்ளா முரைப்பதனுக்—கப்பிளநீர்
நாகவல்லி நீர்முலைப்பால் நாய்த்துளசி நீரிவைக
ளாகுமிது கைமுறைமெய் யாம்.

(பொ - ரை) மேற்படி கலிக்க வகைகள் அமையாதவிடத்து துவரை, மிளகு, உப்பு, அரிசி, கொள்ளுமாகிய இவைகளுக்கு, நீர் இளநீர் வெற்றிலைச்சாறு தாய்ப்பால் நாய்த்துளசி நீர் இவைகளை முறையே (நிரல் நிரையாக) ஏற்றவாறு பயன்படுத்திக் கலிக்க மாக்கிக் கைமுறையாகக் கொள்ளலுமாம்.

## கலிக்கங்களின் பயன்

582 சொன்ன கலிக்கமெல்லாந் துட்டநோ யின்பயனை
இன்ன தெனவறிந்திட் டேற்றினல்—மன்னரெல்லா
மன்னரென்று கொண்டாடி வாகடரைப் பூசிப்பார்
சொன்னமனை யில்வந்தெய் தும்.

(பொ - ரை) மேற்சொன்ன கலிக்க வகைகளை யெல்லாம் நோயின் தன்மையறிந்து இந்நோய்க் கிக்கலிக்கம் பொருந்துவதாமென யூகித்துப் பிரயோகம் செய்தால், மருத்துவரை மன்னர்களெல்லாம் தமக்கு மேலாம் மன்னரர்கக் கொண்டு போற்றுவாராவார்; அரச செல்வமாகிய பொற்குவை வாகட நூலார் மனைக் கண்ணதாம்.

## செங்கண்ணுக்குக் கலிக்கம்

583 நோக்க மவயவத்தி னுட்பமத னன்மனிதர்
தாக்கறிந்து கூருகிருந் தாக்காமல்—யாக்கைமிகக்
கம்பமிலா மற்புரிசெங் கண்ணு னற்சாந்தி
செம்பருத்திக் காய்ரசமாஞ் செய்.

(பொ - ரை) மக்களுடம்பிற்கமைந்தவுறுப்புகளுள் கண்களே மிக நுட்பமானவையும் இன்றியமையாதவையுமாகையால் அவ்வவர் தேகக் கூறுபாடறிந்து கலிக்கமிடுங்கால் விரல்களின் நகங்கள் கண்ணிற்பட் டூறு செய்யா வகையில் செம்பருத்திக் காயின் சாற்றினைச் சிவப்பேறிய கண்களிற் கலிக்கமாக விடின் கண்சிவப்பு மாறி நல்ல ஒளியுடையனவாகும் என்பதாம்.

## இரச குளிகை

584 இரதக் குளிகை யிறைவனுக் கொப்பாம்
வதரமுறு சித்தருக்கே வாய்க்குஞ்—சரதமோ
யோதுகிறே னறிந்த தொண்சிப்பிச் சூலமையும்
போதுரசம் பூட்கைவித்துப் போல்.

(பொ - ரை) பின்னர்க் கூறும் இரசகுளிகை முழுமுதலிறைவனாகிய சிவபிரானுக்கே ஒப்பாகும்; அவன் திருவருள் மெய்யடி

யார்க்கே வாய்ப்பாவது போல், இரசகுளிகை உபயோகமும் திருவருள் பெற்ற சித்தர்களுக்கே வாய்ப்புடையதாம்; இவ்வியையினை உண்மையாகவே யானறிந்தவாறு கூறுகிறேன்; முத்துச் சிப்பிக் கருவில் செய்த தயிலத்தை இரசத்திற்குச் சுருக்குக் கொடுக்க யாளிவித்துப் போல் இரசம் கட்டுப்படும்.

## இதுவுமது

585 போல்பண்ணை நாய்ப்பாகல் பூண்டிவையா லும்பொருளா
மேல்சிவனர் வேம்புகொக்கு மேனவி—மேலுநவி
வற்ச முனிகழுதை மன்னட்டை யன்றிலுடன்
நெற்செய் வயளையிலை நீர்.

(பொ - ரை) பண்ணைக்கீரை, நாய்ப்பாகல் சமூலம், உள்ளி இவைகளும் சிவனர்வேம்பு மாம்பிசின் நாவி மான் வற்சம் அகத்தி கழுதை ரத்தம் அட்டை அன்றில் ஆகியவற்றினுடன் வசளையிலைச் சாறு;

## இதுவுமது

586 இத்திறத்தாற் பூநீ றிருமூன்று திங்களிலாம்
நத்ததன லாமே ரசகுளிகை—அத்திறத்தை
என்னசொல்வேன் சித்தியெல்லா மீடேறும் பேய்பூதந்
துன்னது துன்னுமர சும்.

(பொ - ரை) மேற்கூறிய வகையால் கைமுறையாகச் செய்ய ஆறு திங்களில் பூநீறமையும், :அங்ஙனமாகிய பூநீறுடன் சங்கையும் கொண்டு செயும் முறையால் இரசம் குளிகையாம்; அங்ஙனமாகிய இரசகுளிகையின் மகிமையை என்னென்று சொல்வேன்; ஒருதலையாகச் சொன்னல் சித்திகள் யாவும் நிறைவேறும்; பேய் பூதங்கள் அணுகா தகலும்; அரச போகமும் உண்டாம் என்பதாம்.

## காரம்

587 காரசா. ரத்தருமை கண்டவருக் கேதெரியும்
பேரெறும்பு சிற்றெறும்பு பின்கிருமி—சேர்பிரண்டைச்
சாற்ருலு நாபிச் சரக்காலு மானவுப்பு
கூற்ருன காரமா கும்.

(பொ-ரை) காரசாரத்தி னருமை கோடியி லொருவரா யுள்ள கைமுறை தேர்ந்தவருக்கே தெரியும்; கட்டெறும்பு சிற் றெறும்புகளின் முட்டைகளுடன் கிருமியும் சேர்த்துப் பிரண்டைச் சாறுவிட்டு நாபி முதலிய சரக்குகளும் கூட்டிப் பூமியில் புதைத்து வைத்து, கூறிய மூன்று மாதம் கழித்தெடுக்க உப்பாகியிருக்கும்; இதுவே சரக்குகள் எல்லாவற்றையும் கட்டும்; விவரம் சேகரப் பாவில் உள்ளவாறு காண்க.

## சாரநீர்

588 தேள்பூவை பாம்புதும்பை செவ்வியகாட் டாமணக்கு
வாளான சாம்பிராணி மற்றிதெலா—மாளவரு
பூநீறே சாரமிது போதுஞ் சரக்குவகைக்
காநீறு போலுரிமை யாம்.

(பொ-ரை) நண்டுத் தெறுக்கால் நாகணவாய்ப் புள் பாம்பு சாம்பிராணி இவைகளுக்குத் தும்பைச் சாறுவிட்டுப் பனியில் ஊறவைத்து வெயில் வருமுன் எடுத்து, செவ்விய காட்டாமணக் கின் பாலிலும் அவ்விதமாகச் செய்து சிறு புடமிட்டெரிக்க உப் பாகும்; இதுவே பூ நீருகும் சாரமாமென்றுரைத்து மருத்துவர் போற்றுவர் என்பதாம். முழு விவரம் சேகரப்பாவில் கண்டு கொள்க.

## சூதகுரு

589 சூத குருமுறைமை சொல்ல வெளிதாமோ
நாத குருவதுவே நாடுங்கால்—பூதலத்தில்
வச்சிரத்தின் பாலிளநீர் வற்றியதேங் காய்மெழுகு
பச்சையெள்ரூ தம்பதியப் பண்.

(பொ-ரை) சூதகுருவின் செய்முறை உரைத்தற் கெளிதாவ தன்று, ஆகையால் கூறுவது அருமையேயாம்; ஆராயுங்கால் அதுவே மருத்துவ நூலார் கொள்ளும் குரு மருந்துகள் எல்லாவற் றிற்குந் தலைமையுடையதாம்; அதன் செய்முறை சேகரப்பாவில் விரிவாக ஓதப்பெற்றுள்ளது; இந்நூலில் சுருக்க முறையாகக் கூறு வாம்; சதுரக் கள்ளிப்பால் குரங்கின் குருதி பச்சை எள் முதலிய வைகளை ஒரு பெரிய தேங்காய் நெற்றின் கண்ணைத் திறந்து அத னுள்ளிட்டு இரசத்தை அதினிடையில் விட்டு மேலும் மேற்கண்ட

பொருள்களை இரசம் மறையும்படியிட்டுத் தேங்காயின் கண்ணை மெழுகு கொண்டு அடைத்து;

## இதுவுமது

590 பூமீது கண்ணீர் புடைசங்கு விட்டில்கொசு
வாமிதினீ ராற்சிலநா ளானபின்பு—நாமமிகு
கூவிளநிம் பம்பிருந்தங் கொ ண்
தாவுகெம்பு மம்முறைமை தான்.

(பொ - ரை) பின்செவ்வரக்கை வெற்றிலைச் சாற்றாலரைத்து தேங்காயின்மேல் பூசி, இரு முழம் ஆழமுள்ள குழியில் தேங்காயை வைத்து மணலால் மூடி இரு திங்கள் வரை அக்குழியுள்ளவிடத்தில் கள்ளும் நீரும் கலந்து நாள்தோறும் உள்ளுள்ள தேங்காய் நனையும்படி ஊற்றி வரவும்; பின் சங்கு விட்டில் கொசு எலி சேவல் இவற்றின் கறிகளில் ஒரு படி நீர் விட்டுக் காய்ச்சிய நீரை மேற்கண்ட தேங்காயுள்ள இடத்தில் நாள்தோறும் இரண்டு மாதம் வரை இரு முறையாக ஊற்றி வரவும்; பின் ஒரு திங்கள் உலர விட்டு, தேங்காயை எடுத்துடைத்துள்ளிருக்கும் பொருள்களை வில்வ இலைச்சாறு வேப்பிலைச்சாறு துளசிச்சாறு தாமரையிலைச்சாறு சிறுபீளைச்சாறு இவைகளைக் கொண்டு தனித்தனியரைத்தும் வில்லை செய்து உலர்த்தியும் வைத்துக் கொண்டு, அவ்விலைக ளைந்தாலும் மூசை செய்து அதற்குள் வில்லைகளை வைத்துச் சீலை மண் செய்து ஒரு வாரம் வரை உலரவைத்துப் பிறகு சிறு புடமிட்டு ஆறவைத்தெடுக்கவும். அங்ஙனமெடுத்த பின் முத்து, பவளம், கெம்பு முதலியவற்றை;

## இதுவுமது

591 தானுக வல்லிவெள்ளி தங்க முபரசமா
மேனுள் விடத்தேரி வேர்கூடக்—கானக்
கருங்கோழி முட்டைபிதா காணு வானும்
ஒருங்கிந் திரவெகுளி யும்.

(பொ - ரை) வெற்றிலைச் சாற்றாலரைத்து வில்லை செய்து உலர்த்திக் கொண்டு, பொன் வெள்ளி இரண்டையும் மேற்கண்ட வில்லைகளுடன் சேர்த்துப் பொடித்து, அதற்கு விடத்தேரி வேர்ச்சாறும் கருங்கோழி, பெருநாரை, வான்கோழி இவைகளின்

முட்டைகளின் நீரும் இந்திரகோபப்பூச்சியும் கொண்டு தனித் தனியாக அரைத்து வில்லை செய்து,

## இதுவுமது

592 உணியுதிரத் தாலு முபரசத்தி னாலும்
அணியு முலையுருக்கி னாலும்—மணிசெவ்
வுருவா முருக்கலரை யொத்திரவி போலாங்
குருவாகு நீயதுகைக் கொள்.

(பொ - ரை) குடஉண்ணியின் இரத்தத்தாலும் உபரசத் தாலும், அரைத்து வில்லை செய்துலர்த்தி, உலையில் வைத்துருக்க இரசமணியானது செந்நிறம் பெற்று முருக்கம்பூவையும், காலை யிளஞ் சூரியனையும்போற் காந்தி யுடையதாகிக் குருவாகும்: அதனைக் கைக்கொள்ளின் எல்லாவகைச் சித்திகளுமுண்டாமாத லின் அம்முறையைச் செய்து அக்குருமணியைக் கைக்கொள்க வென்பதாம்.

## இதுவுமது

593 கொண்டவர்க்கு நாளுங் குறைவில்லை லோகமெல்லாங்
கண்டவுட னேவேதை காட்டுமே—மண்டலத்தில்
தின்னுமுன்னே மாமேரு தேகமெல்லா முண்டாகு
மின்னுமழ காகமிக வே.

(பொ - ரை) மேற்கண்ட இரசகுளிகை கொண்டவர்க்கு வாழ்நாள் குறைவின்றி வளரும்; நவலோகங்களும் கண்டவுடனே வாத வைத்திய வேதைக் காகும்; பூவுலகில் உள்ளார் அதனை உட்கொள்ளுவராயின் பொன்மலை போல் உடம்பு வலிமையும் வண்ணமும் பெற்று மிக ஒளியுடைய அழகுமுண்டாம் என்பதாம்.

## அனுபானங்கள்

594 அனுபானத் தாலே யவிழ்தம் பலிக்கும்
இனிதான சுக்குகன்ன விஞ்சி—பினுமுதகங்
கோமயம் பால்முலைப்பால் கோநெய்தேன் வெற்றிலைநீர்
ஆமிதையா ராய்ந்துசெய்ய லாம்.

(பொ - ரை) அனுபானங்களின் சேர்க்கையாலே தான் அவிழ்தங்கள் நோய் நீக்கும் ஆற்றல் பெறுவனவாம்; அவ்வனு பானங்கள் பலவகைப் படுவனவாம்; அவையாவன சுக்கு, கரும்பு, இஞ்சி, நீர், கோமயம், ஆவின்பால், தாய்ப்பால், ஆவின் நெய், தேன், வெற்றிலைச் சாறு என்பனவாம்; இவற்றை நோய்க்கும் மருந்துக்கும் பொருந்துமாறு கூட்டிக் கொள்க என்பதாம்.

## ஆகா அனுபானங்கள்

595 சுதைபற்பத் துக்காகா துறுமாத் திரைக்கே
இதமான நெய்யாகா தென்றும்—விதமான
மற்றதிலு மந்த வகையறிந்து செய்தக்கால்
உற்ற பிணிகளொழி யும்.

(பொ - ரை) பால் பற்பங்களுக்கனுபானமாகாது; மாத் திரைகளுக்கு நெய் யனுபானமாகாது; இவை போல்வன பிற முறைகளுக்கும் ஆவனவும் ஆகாதனவுமான அனுபான வகை யறிந்து செய்தால் உற்ற நோய்கள் நீங்கும் என்பதாம்.

## அவிழ்தக் கடுமை

596 அவிழ்தக் கடுமையின லாகந்தளருங்
கவிரலர்போ லேயிருக்குங் கண்கள்—உவசாந்தி
செய்வதுமூ தண்டமுதற் சேர்வேர்நெய் பாளிதமெய்
பெய்குடிநீ ரேயமை யும்.

(பொ ரை) நோய் நீக்கு மருந்துகள் அளவின் மேற்படின் நோயைத் தாக்குதலோடு உடலுறுப்புகளையுந் தாக்குதலால் உறுப்புகள் தளர்ந்து மெலிவடையும்; கண்கள் முருக்கம்பூவைப் போற் சிவப்பேறும்; அதற்கு உபசாந்தியாகக் குடிநீர் கொள்ளுதல் வேண்டும்; குடிநீரில் அறுகம்வேர் முதலியனவும் பெருங்காயமும் சேர்க்க வேண்டும்; நெய், சர்க்கரை, பாற்சோறு முதலியன உண வாகக் கொள்ளவமையும்.

## காசம் நீங்க

597 காச மறுமே கணபதி பத்திரவேர்
பூசமல ரிந்துகணை பூதமுலை—பேசிவைகால்

வாசி கஷாய வகையிட் டதிற்பிரசங்
காசளவு கூட்டியுண்டக் கால்.

(பொ - ரை) அறுகம்வேர் புடலம்பூ இந்துப்பு திப்பிலி ஆலம் விழுதின் முளை என்னும் இவைகளைச் சமபாகமாகச் சேர்த்து நீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சிய கஷாயத்தில் காசளவு தேன் விட்டுக் கொள்ளக் காசநோய் நீங்கும்.

## நோய்க் காரணங்கள்

598 பிணிக்கேது கரமென்ப பேசுதல்வே றில்லை
தணிக்காத கோபத்தாற் றாகந்—தணிக்காமை
யாலுண்டி யாற்புணர்ச்சி யாலீரத் தாற்சுமையால்
மேலும் பிணிகளுறு மே.

(பொ - ரை) நோய்க் காரணங்களாவன அதிகமாகக் கோபப்படுதலால் மிக்க நீர்வேட்கை யுறுதலால் மாறுபாடான உணவுகளால் ஓதத்தால் வரை கடந்த புணர்ச்சியால் அதிகமான சுமையால் நோய்கள் உண்டாகுமென்பதாம்.

## பத்தியப் பெருமை

599 பத்தியம் போனாற் பலன்போ மருந்துகளுக்
கத்தியினி னேய்க ளணுகுமே—பத்தியங்கள்
உண்டான லுண்டா முறுதி யவிழ்தங்கட்
கெண்டானு முண்மையிதை யே.

(பொ - ரை) மருத்துவர் விதித்த பத்தியம் மாறினால் மருந்துகளின் பயனும் வீணாயொழியும்; அஃதன்றியும் உடம்பில் உள்ள தாதுகளில் எலும்பு வரை முன்னுள்ள நோய்கள் முன்னையினும் மிகுதியாகவே தோன்றி வருத்தும்; பத்திய முறைதவறாதாயின் மருந்துபயோகம் உடற்குறுதியாவதுடன் அவ்வவிழ்தங்கட்கும் நன்மதிப்புண்டாம்; ஐயனே இஃதுண்மையாமென் றறிவாயாக. அத்தி - அஸ்தி; எலும்பு.

## இதுவுமது

600 பத்தியத்தா லுண்டாகும் பண்டிதற்குப் பேராண்மை
பத்தியத்தா லுண்டாகும் பாண்டிதங்கள்—பத்தியத்தை

விட்டாற் பிணிவகைகள் வித்தரிக்கும் விட்டிடலே
விட்டாற் பறக்கும் வினை.

(பொ - ரை) பத்தியம் வகுத்து மருத்துவம் புரிதலால் பண்டிதர்களின் பண்டிதம் பேராண்மையெய்தும்; மருத்துவ முறைகளும் பயன் தருவனவாகும்; பத்தியமில்லையானுற் பிணிகள் விருத்தியடையும்; பத்தியம் விடுதலை அனுசரியாமல் விட்டு, பத்தியத்தை மேற்கொண்டால் நோய்கள் பறந்தோடுமென்பதாம்.

## பத்திய விலக்கான பொருள்கள்

601 இலவணம் புளிகடுவெண் ணுலு முதலாக
வொவொரு குணமா யொழிவாய்—நவிலிறைச்சி
கூழ்ப்பாண்ட மச்சம்பெண் கோத்திரங்கொள் பிரமபத்ரி
தீழ்ப்பாகு மெத்தவிது சீ.

(பொ - ரை) உப்பு, புளி, கடுகு, எள் என்னுமிந்நான்கு முதலாக மருந்து முறைக்கேற்ப ஒவ்வொன்ருக நீக்கத் தகுந்தவைகளை நீக்கவும்; இதன் மேலும் இறைச்சிவகை பூசுணைக்காய் மீன்வகை பெண்போகம் வரகு கொள்ளு புகையிலை ஆகியவைகள் மருந்து முறிவுப் பொருள்களா மாகையால் அவற்றையும் நீக்கவேண்டு மென்பதாம்; தீழ்ப்பு - கீழ்மை; சீ - உவர்த்தொதுக்கல் குறிப்புச் சொல்.

## உபதை

602 உபதை கிகுசங்கட் டுப்பிலங்தை சாகந்
தவசிகறி போசனகு டாரி—யிவைகள்பசு
நெய்பால்மோர் சுக்கேல நெற்பொரிபீர் சில்லிவங்க
மெய்யிவைக ளுஞ்சேரு மெய்.

(பொ - ரை) எலுமிச்சை, கட்டுப்பு, இலந்தை, கீரை, தவசி முருங்கை, மிளகு, சீரகம் ஆகிய இவைகளுடன் பசுவின் நெய், பால், மோர், சுக்கு, ஏலம், நெற்பொரி, பீர்க்கு, சிறுகீரை, கத்தரி, பெருங்காயம் ஆகிய இவைகளும் பத்தியத்திற் சேர்க்கத் தகும் பொருள்கள் என்பதாம். சாகம் - இலைக்கறி; மெய் - உண்மை; உபதை - உபாயம்.

## குணவாகட மகிமை

603 குணவா கடமகிமை கூறவெளி தாமோ
கணமா மருத்துவர்க்குக் கண்ணு—மணமில்லாப்
போதுநிக ராமஃதிற் பூதலத்து வேதியர்கள்
ஓதுமிஃதத் தனையுமுண் மை.

(பொ - ரை) மருந்துகள், சரக்குகள், உபகரண மூலிகைகள் ஆகியவற்றின் குணங்களை விவரித்துக் கூறும் குணவாகடமாகிய மருத்துவ முறை கூறும் நூலின் பெருமை கூறுதற்கெளிதாமோ? (மிக மேன்மையுடைத்தென்பதாம்). அம்முறையைக் கற்று மருத்துவம் புரியும் பண்டிதர் குழுவுக்கு பொருட்குணப் பண்புணர்வு கண் போல்வதாம்; அப்பண்பினை யுணராது புரியும் மருத்துவ முறைகள் மணமில்லா மலரை ஒப்பதாம்; இங்ஙனமாகப் புவியிலுள்ள ஆயுள் நூல் வல்ல மருத்துவ மேலோர் கூறுவதனைத்தும் உண்மையன்றிப் பொய்யல்லவென்பதாம்.

## பசுவின் பால்

604 வாதபித்த மாகுமிறை மந்திரிக்கு நன்மைதந்து
வேதை யடக்கியுடல் வெற்பாக்கு—மாதரவாய்
மேலாகுங் காயசித்தி விர்த்தியா குங்காந்தி
பாலா கியபசுவின் பால்.

(பொ - ரை) வாதமாகிய அரசனுக்கும் பித்தமாகிய மந்திரிக்கும் நன்மையை உதவி, அவற்றினலுண்டாம் நோயையடக்கி உடம்பினை மலைபோலுறுதி யுடையதாக்குவதும், உடம்பிற் காதாரமாய் நின்று காயசித்தியையளித்து விருத்தியுறச் செய்வதும் வெண்மை நிறமுடையதாகிய பசுவினது பால் என்பதாம்; காந்தி - ஒளி; நிறம். பால் - வெண்மை; வெண்மையைப் பாலுக்கும் பசுவுக்கும் கொள்க.

## காரவல்லி

605 பித்தமுதல் நோயைப் பிலக்கப் படுத்திநரர்
சித்த வுணர்வைச் சிதைக்குமே—யுத்தமத்தைச்
சேராமற் றிண்மை சிதறப் பறக்கடிக்குங்
காரவல்லி யாகியபா கல்.

(பொ - ரை) பித்த முதலிய நோய்களை அதிகரிக்கச் செய்து மனிதரின் சித்தத்துணர்வையும் மாருட்டமாக்கும்; மேன்மையான வற்றைச் சேரவிடாமல் வலிமையைச் சிதைத்து நீக்கும்; காரவல்லி யென்னும் பெயருடைய பாகலின் உபயோகம் என்பதாம். காரவல்லி - பாகல்.

## வெள்ளாட்டுப் பால்

606 நோய்க் கூட்ட மெல்லா நுவன்மந் திரங்கண்ட
பேய்க்கூட்டம் போலோடும் பேசாமல்—வாய்ப்பாக
நண்ணு முடலி னலமாகு மின்பமுறப்
பண்ணுவதும் வெள்ளாட்டுப் பால்.

(பொ - ரை) நோய்க் கணங்களை மந்திர செபத்தின் முன் பேய்க்கூட்டம் பேசாமல் நீங்குமாறு போல நீங்கச் செய்வதும் உயிர்க்குறைவிடமாக வாய்த்த உடம்பினை நலமுதவி இன்ப மூட்டு வதும் வெள்ளாட்டின் பாலின் குணமாம் என்பதாம்.

## செம்மறியாட்டுப் பால்

607 இன்னலெல்லாங் கூடி யிருக்க வுரமாக்கும்
பின்னமுறும் பித்தம் பெருகவே—துன்னுமுட
லூயுள் வளர வனுசரிக்கு மாகையினற்
பையுளுருச் செம்மறியின் பால்.

(பொ - ரை) துன்பங்களெல்லாம் சேர்ந்து தங்க இடமளித்து வளர்ப்பதும் கீழ்ப்படும் பித்தநோய் அதிகரிக்கவும், சேத்தும நோய் உள்ளே வளர்ச்சியடையவும் செய்வதும் செம்மறியாட்டுப் பாலின் குணமாகையால் துன்பத்தைத் தரும் நோய்களின் வேறு வடிவமாகச் செம்மறியாட்டுப் பாலைக் கூறலாம் என்பதாம்.

## இலைக்கறி

608 உண்டாகு நன்மை யுரைக்க வசமல்ல
கொண்டாடு நோய்போய்க் குணமாகி—யுண்டி
பலுக்க மலநீங்கிப் பந்தமற நன்மை
யிலைக்கறியா குங்கீரை யில்.

(பொ - ரை) பலவகையான கீரைகளின் கறிகளால் உடம்பிற்குண்டாம் நன்மைகள் உரைக்குந்தரமுடையனவல்ல (மேன்மையுடையன); உடம்பிற்றூன்றி நின்ற நோய்கள் நீங்கி, உடல் நலம் பெற்று மேலும் உணவுகளைச் செவ்வனேயேற்றுக் கொள்ளுந் தன்மையுற்று, மலக்கட்டை நீக்கி வெளிப்படுத்தி உடற்காம் நன்மை தருவன மேற்கூறிய கீரைக்கறிகள் என்பதாம்.

## வங்கம்

609 எக்கால் மும்பழகி யில்லாத மானிடர்க்கு
முக்கால முண்டாலு மோசமிராப்—பக்குவமாய்
அங்கந் தணிய வமர்பத்தி யக்கறியாம்
வங்கக்கா யுண்டறிகு வாய்.

(பொ - ரை) முன்பழக்கம் எப்பொழுது மிலராயினும் புதிதாகவே மூன்று வேளையுணவுடனும் கொள்வாரெனினும் கேடு பயவா துடற்குப் பொருந்தியவுணவாகும்; ஏற்ற பாகஞ்செய்து உடலுறுப்புகளி லுண்டாம் பிணிகள் தணியுமாறு பொருந்திய பத்தியக்கறியுமாம்; இம்முறையையறிந்து மேற்கண்ட கத்தரிக்காயை உண்டு அதன் நற்பயனை அறிவாயாக என்பதாம். வங்கம்-கத்தரி.

## காய்ந்தாறிய உதகம்

610 கடிய வரோசிகத்தைக் கண்டிக்கும் பித்த
வெடியை யகற்றும் வியாதி—மடியவெதிர்
பாய்ந்தோடி வாதப் பகட்டைப் பரிகரிக்கும்
காய்ந்தாறி யார்ந்தவுத கம்.

(பொ - ரை) கடுமையாக முற்றிய செரியாக் குணத்தினால் வந்த பசியின்மையை நீக்கிப் பசியை யுண்டாக்கும்; பித்தாதிக்கத்தைப் போக்கும்; நோய்கள் தீர எதிர்த்துத் தாக்கி வாதக் குற்றமாகிய பகட்டை வலியடக்கி நன்னிலைப் படுத்தும்; பக்குவமாகக் காய்ச்சி யாறவைத் தருந்தும் நீர் என்பதாம். உதகம் - நீர்.

## குளிர்ந்த தண்ணீர்

611 வாகான தேகத்தை மாதாவைப் போல்வளர்க்கு
மேகா திகளை விரட்டுமே—தேகத்திற்

சீரா யுளைப்பெருக்குந் தீபனமுண் டாக்குவிக்கும்
நேராய்க் குளிர்ந்ததண் ணீர்.

(பொ - ரை) வாய்ப்பான உடம்பினைத் தாயைப் போல் வளர்க்கும்; மேக வகைகளை நீக்கும்; வாழ்நாளை மிகுதிப்படுத்தும்; பசித்தீயை யெழுப்பி உணவை யுண்பிக்கும். இயற்கையிலேயே குளிர்ந்த நீரைப் புதுமட்கலத் திட்டும் விலாமிச்சைவேர் தாமரை மலர் முதலிய பொருள் சேர்த்துக் குளிர்வித்தும் உட்கொள்வ தாகிய குளிர்ந்த நீரின் உபயோகம் என்பதாம்.

## இலிகுசம் - இலாக்கொட்டை

612 லிகுச மிலாக்கொட்டை நீர்செதிள்பெய் பாண்ட
மிகுபுதிதி விட்டயினி வெம்மை—அகலவதன்
பின்னர்ப் புராதனித்துப் பின்னுணப்போம்
பித்தவெம்மை
அன்னவெறுப் பும்பசியுண் டாம்.

(பொ - ரை) எலுமிச்சம் பழச்சாறும் இஞ்சியின் கணுக் களும் சேர ஒரு புதுப்பாண்டத்திலிட்டு நீர் விட்டு, மூடி நீரின் வெம்மை தீரச் சில நாள் வைத்து, பதமாகிப் பழமையான பின் அந்நீரை யருந்திவரின் பித்தாகிக்கமும் அன்ன துவேஷமும் நீங்கும்; நல்ல பசித்தீபனமுண்டாம் என்பதாம்; இஞ்சித் துண்டை எலுமிச் சைச்சாற்றிலிட் டூறவைத்து ஊறுகறியாக்கிப் பசிமந்தம் செரி யாமை முதலிய நோய்களுக்கு உட்கொள்ளும் வழக்கம் நடை முறையிலிருந்து வருமாறறிக. லிகுசம் - எலுமிச்சை; இலாக் கொட்டை-இஞ்சி.

## பத்திய உபதை

613 பட்சணமில் லங்கணமாம் பத்தியஞ்செய் ரோகிகட்கி
லட்சணமாம் பற்றுலக நாயுருவி—முட்சுடுநீ
ருகியபின் காய்நீரி லாடாதோ டையிலைபெய்
வேகவது வேயுபதை மெய்.

(பொ - ரை) மருத்துவ பத்தியத்தில் (உப்பு புளி காரம் முதலிய உணவுச் சுவைதரும் பொருள்களை விட்டமையால் உணவு செல்லாமல்) பெரும்பாலும் பட்டினியாகவே இருந்து உடம்பினைத் தலால், அவ்விலங்கணமே அவர்க்குத் துணையானதால் அவ்

விளைப்பு நீங்க, நாயுருவி முள்ளைச் சேர்த்தெடுத்துச் சுட்டுச் சாம்பலாக்கி, அச்சாம்பலை நீரிலிட்டுக் காய்ச்சி வடித்துக் குடிநீராயருந்த மேற்கண்ட உடலிளைப்பு, பசி முதலியவை சாந்தப்படும்; இது நல்ல உபாயமான கைமுறையா மென்பதாம்.

## நீர்

614 அசனவித்தி யாச மடைந்தாற் பிணிகள்
விசனமிகு மேலிடுமே வெள்ள—நிசமாகு
மான படியா லசனிப்ப தோர்நெறியே
பானமிக லாகாது பார்.

(பொ - ரை) உணவு வகைகள் உடற் பண்பிற் கேற்றதாகவன்றி, மாறுபாடுறுமாயின், துன்பந்தரு நோய்கள் பல்கிஉடம்பைத் தாக்கும்; இஃதனுபவ உண்மையாம்; ஆகையால் உணவுகொள்வது உடலுக்கேற்ற உணவுகளை நெறியறிந் துண்பதேயாம்; உணவு கொள்ளுங்கால் இடையிடையே நீரருந்தல் ஆகாது; ஒரு கால் நீர் பருக நேரிடின் அந்நீர் தானும் உணவின் அளவுக்கு மேற்படலாகாது; ஆனல் உணவு கழிந்தபின் நீர்வேட்கைக் கேற்ப அருந்தில் உணவு செரிக்க வாய்ப்பாகும்.

## உணவு

615 நோயனுக்குப் புத்தி நுவலுவே னுண்டதற்ற
காய மறிந்து கடைப்பிடித்துத்—தீயலதை
யுண்கப் பசிமிகுதி யுற்றதறிந் தானக்கால்
அண்கற்ப நல்லுறுதி யாம்.

(பொ - ரை) பிணியுழந்து வருந்தும் நோயாளனுக்குப் புத்தி கூறுவேன்; அஃதாமாறு, முன்னுண்ட வுணவு செரித்தமையை அறிந்து, மேலுண்ணுமுணவின் தன்மையையும் அது செரிக்குந் தன்மையையுமறிந்து, தீயதானவுணவல்லாதனவற்றைப் பசித்தீயினளவுக்கேற்பவுண்க; அங்ஙனம் முறையறிந்துணவு கொள்ளின் பொருந்திய கற்ப முறையாயமைந்து உடற்குறுதியாம் என்பதாம்; இச்செய்யுள் ''அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல, துய்க்க துவரப் பசித்து'' எனவும், ''மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின், ஊறுபா டில்லை யுயிர்க்கு'' எனவும் வரும் குறட்பாக்களின் விளக்கமாமாறு அறிக.

## மருத்துவன் சொன்ன வழி கேட்டு நிற்றல்

616 நம்பிபரி காரி நவின்ற வழிகேட்டு
உம்ப ரவிழ்தமென வுட்கொண்டு—நம்பு
நினைவுடனே பத்தியத்தி னிற்றல்மற வாத
தனையனென வியாதியத் தன்.

(பொ - ரை) நமக்கின்ன வகையில் ஆதரவானவன் எனு முரிமை முறையான நம்பியென்னும் மருத்துவன் கூறிய வழிகளைக் கேட்டும், அம்மருத்துவனுதவும் அவிழ்தங்களைத் தேவாமிர்தமாக மதித்துட்கொண்டும், மருத்துவன்பால் நம்பிக்கையுடைய நினைவோடே பத்தியமானவற்றையும் நினைவிற் கொண்டு அதிலுறைப்புடன் நின்றும், மருத்துவனுக்கு மகன் போல அவன்வழி நிற்றலே நோயாளனுக்கு முறைமையும் கடமையுமாகும்; பரிகாரி - நோய் நீக்கி உடம்பைக் காப்பவன்; பரிகரித்தல் - நீக்கலும் காத்தலும் என இரு பொருள் தரும்.

## இதுவுமது

617 இன்னம் பலவுபதை யிப்படியே வாகடர்நூல்
பன்னு மதையறிந்து பண்டிதர்கள்—சொன்ன
வழிகேட்டு நின்றவர்க்கு வந்திருந்த நோயும்
வழிகேட்டுப் போகும்விரை வாய்.

(பொ - ரை) மேலுரைத்தமை போன்றனவாகிய பலவகை உபாயங்களும், மருத்துவ நூல்கள் கூறும் வழிவகைகளை யறிந்து மருத்துவர்கள் சொல்லுகின்ற வழிகளைக் கேட்டு அங்கியதியைக் கடைப்பிடித்து நின்றவர்களிடத்துள்ள நோய்களும் தாம் வெளியேறும் வழியை அவர்கள் மூலமாகவே கேட்டறிந்து விலகும் என்பனவற்றையே பொருளாக வுடையன வென்பதாம்.

## வேண்டா மருந்து

618 வேண்டா மருந்தென்று வீணுக் கருந்துவது
பூண்டாகு மெய்க்குப் பொருந்தியது—மீண்டுஞ்
செரித்த தறிந்ததனைத் தின்னிற் சிறுத்து
மரித்து விடாமல்வாழ் வார்.

(பொ-ரை) நோய் மருந்தென்று கருதிப் பயன் படாதன வாகிய மருந்துகளை வீணிலே யருந்துவதை வேண்டாராய், உடற்கும் நோய் நீக்கத்திற்கும் பொருந்துவனவாகிய மருந்துகளை யுட்கொள்வதனையே முறையாகப் பூண்பவராய், முன்னுண்டவுணவினை மீண்டுமுண்ணநேர்ந்தால் முன்னுண்டது செரித்ததனையறிந்துண்பவராய் முறைப்படி நடப்பவராயின் அவர்தம் உடம்பு நோய்களா லடர்ப்புண்டு மெலிந்து மரித்துப் போகா தாதலால் அவர் நீண்ட வாழ்க்கை யெய்துவர் என்பதாம். "மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது, அற்றது போற்றி யுணின்" என்னும் குறட்பாவின் பொருளும் இச்செய்யுளில் அமைந்துள்ளமை யறியலாம்.

## நசியம்

619 நசியம் புகைபற்று நாசிப் பொடிக்கே
இசைதும்பை சாம்பிராணி யென்னு—மிசைவான
வேலிப் பருத்தி மிகுபாலை சுண்டையிவை
யாலிக்கு மிப்பொருளே யாம்.

(பொ-ரை) நசியம், புகை, பற்று, நாசிப்பொடி ஆகிய நான்கிற்கும் முறையே தும்பையும், சாம்பிராணியும், வேலிப் பருத்தியும், பாலை, சுண்டைகளின் வேர்களுமாகியவற்றை முறைப் படி பாகப்படுத்தி உபயோகிக்கவும். நசியத்திற்குத் தும்பையும், புகைக்குச் சாம்பிராணியும், பற்றுக்கு வேலிப்பருத்தியும், நாசிப் பொடிக்குச் சுண்டை வேர் பாலை வேர்களுமாம்.

## பற்று

620 வேலிப் பருத்திரசம் வெள்ளுளிபு மூக்கரிசி
போலுப் புடன்வெடியும் பூட்டியே—மேலுக்குப்
பற்றெறியிற் காய்ந்தாறப் பண்குழம்பை நண்பலநோய்
பற்றற்றுப் போமதுவே பற்று.

(பொ-ரை) வேலிப்பருத்திச் சாற்றுடன் வெள்ளுள்ளி புழுங்கலரிசி சோற்றுப்பு வெடியுப்பு ஆகியவற்றைச் சேர்த்து மத்தித்துத் தீயிற் காய்ச்சி யாறவைத்து அக்குழம்பைப் பற்றிடப் பல நோய்கள் பற்றற நீங்கும் என்பதாம்.

## சன்னி நோய்க்குப் பற்று

621 கைகா லசந்து கடுத்து வெயர் வரும்பு
மெய்காலைக் குக்காலை வேருகும்—வெய்யவிடச்
சன்னியென்ற றிந்துவெடி சம்புதந்தி வேர்பொடித்துப்
புன்னைநெய்யிற் பற்றிடமுன் போம்.

(பொ - ரை) கை கால்கள் அயர்ந்து கடுத்து வலியுண்டாகி உடம்பு வெயர்த்து, தேகமும் ஒருகாலைக் கொருகால் வேறுபட்ட குறிகளையுடையதாகிய குணங்கள் கண்டால் கொடிய விடசன்னி யென்றறிந்து உடனே வெடியுப்பும் மெருகங் கிழங்கும் பொடி செய்து புன்னை நெய்யிற் குழைத்துப் பற்றிட மேற்கண்ட குணங்கள் மாறிச் சன்னி நோயும் தீருமென்பதாம்.

## பற்று

622 இல்லவித்தை மாறன்ரு ரெண்ணெ யுடன்கலந்தால்
நல்லவித்தை நோய்க்கு நமனதுவே—பல்லைக்கும்
மாரடைப்புக் கும்பிடிப்பு வாயுவுக்கும் பற்றிடப்போம்
நீரிலுந்தீ மாரகிலில் நீ.

(பொ - ரை) தேற்ரும் விதையைப் பொடிசெய்துகொண்டு வேப்பெண்ணெயுடன் கலந்தால் நல்ல கைமுறையாகும்; கீழ்க் காணும் நோய்களுக்கு நமனதுவேயாம்: கல்லீரல் நோய், மார டைப்பு, வாயுப்பிடிப்பு என்னும் நோய்களுக்கு ஏற்றவகையால் பற்றிடவும்.

## புகை

623 ஐயவி சரண மசமதா கஞ்சுக்கு
நையவி தெல்லா நறுக்கியே—துய்ய
நிறங்கொள் கலையூட்டி நீள்புகைமூக் கிற்கொ
ளுறங்குவா தம்போகு முன்.

(பொ - ரை) கடுகு, பெருங்காயம், ஓமம், சுக்கு ஆகிய நான் கையும் சமமாகக் கொண்டு நையத் தூள் செய்து தூய்மை வெள்ளைத் துணியில் பரப்பிச் சுருட்டித் தீயிற் கொளுத்தி மூக்கிற் புகைபிடிக்க உறங்குவாதம் தீரும்.

## ஒருதலை நோய்க்கு மாத்திரை

624 காமரு பித்தோகைக் காம்புந் தராபதியுங்
கோமயத்தை விட்டரைத்துக் குன்றிபோ—லாமதனை
மாத்திரைசெய் தேயிடவே மாறுமொ ருபுறத்தில்
நோத்தெரியா தானதலை நோய்.

(பொ - ரை) கத்தூரி கொளஞ்சி நாரத்தையிலைக் காம்பு பூவரசங்காய் மூன்றையும் பசுவின் சிறுநீர் விட்டரைத்துக் குன்றி யளவு மாத்திரை செய்துலர்த்தி யுட்கொள்ள ஒருதலைவலி தீரும்.

## கலிக்கம்

625 இலிங்கந் திரிகடுகோ டிந்துப்பு நிம்ப
நலங்கொணீர் விட்டரைத்து நன்ருய்ப்—பெலங்காணு
மாத்திரைவெந் நீரிலுண வாதப் பிரமையறுங்
காத்திரமு மானகலிக் கம்.

(பொ - ரை) இலிங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரை செய்துலர்த்தி வெந்நீரி லுண்ண வாதப்பிரமை நீங்கும். இதனையே முக்கியமான கலிக்கமாக உபயோகிக்கலாம்.

## நாசித் திரி

626 மதுவேரும் வெள்ளுள்ளி மஞ்சள் கறிகொள்
ளிதுவைந்து நேரே யிடித்துப்—பதிய
விரியா நற்சீலை விளக்கேற்றில் வீரந்
திரியாது நாசித் திரி.

(பொ - ரை) இலுப்பைவேரும் வெள்ளுள்ளி மஞ்சள் மிளகு கொள்ளு ஆகிய ஐந்து சரக்குகளையும் சமமாகக் கொண்டு இடித்துத் துணியிற் பரப்பிச் சுருட்டி, தீயிற் கொளுத்திப் புகைபிடிக்கவும், இதுவே நோய் நீக்கும் வீரமுடைய நாசித் திரியாகும்.

## இதுவுமது

627 சன்னியற நோயுஞ் சளியு மறப்பாரஞ்
சென்னியற வின்பந் திரமாகப்—புன்னைவித்தின்

நெய்வெள் ளுளிமிளகு நிம்ப மரிசனத்தாற்
செய்வதே நாசித் திரி.

(பொ - ரை) புன்னை நெய்யில் வெள்ளுள்ளி, மிளகு, வேப்பம் வித்து மஞ்சள் ஆகிய இவைகளைச் சேர்த்து அரைத்துப் பதத்தில் வழித்துச் சீலையில் தடவித் திரியாக்கிக் கொளுத்திப் புகை பிடிக்க, சன்னி, சளி, தலைப்பாரம் இவைகள் தீரும்; உடம்பு நல்ல நிலையடையும்; இன்பம் விளையும்.

## நாசிப் புகை

628 மாரடைத்து மூச்சு வராத கடுநோய்க்குக்
காரடத்தி ஞலே கழலுமோ—சீரகத்தை
அங்கோல வித்தை யரிசனத்தைக் கொண்டுதுண்ட
வங்கிற் புகைகொடா மல்.

(பொ - ரை) சீரகத்தையும் அழிஞ்சில் வித்தையும் மஞ்சளை யும் பொடிசெய்து சீலையிற் பரப்பித் திரியாக்கிக் கொளுத்திப் புகைபிடிக்க மாரடைத்து மூச்சுவிடமுடியாமல் வருத்துகின்ற கடுநோய் தீரும். இங்ஙனமில்லாமல் காருட வித்தையினுல் இந் நோயைத் தீர்த்தல் ஆமோ? ஆகாது என்பதாம். துண்டம்-மூக்கு, வங்கு-துளை, காரடம்-கருடத்தியானமாகிய மந்திரம்.

## சலரத்த சீப்பீனிசம் தீர

629 பச்சைப் புனுகுசெங்காற் பாசவித்து நேர்சமனுய்
அச்சமலர்ச் சாற்று லதையிழைத்து—வைச்சுத்
தலைபுருவ நெற்றியிட்டுச் சற்றிடமூக் கேகுஞ்
சலரத்த சீப்பினி சம்.

(பொ - ரை) சலரத்த சீப்பினிசம் தீரவென்ருல், பச்சைப் புனுகு செம்பருத்தி விதை இரண்டையும் சமமாகச் சேர்த்து அகத்தி மலரின் சாறு விட்டரைத்து, தலை புருவம் நெற்றி இவ் விடங்களில் சிறிதளவு பற்றிடவும். மூக்கேகும் - மூக்கினிடத்துண் டாம் நோய் என்று கொள்க.

## ஒற்றிடம்

630 தவிடுப்பெண் ணெய்க்குடுவைச் சாம்பல் சுணஞ்சாந்து
நவிலெழுநா சேரெருக்கு நாடித்—துவள்பருவம்
பார்த்ததுமெய் நோய்களறப் பற்றப்பை பையவைக்க
வூர்க்குளிது காய்ப்பிடஞ்சே யொற்று.

(பொ - ரை) தவிடு உப்பு எண்ணெய்க்குடுவை எருமுட்டைச் சாம்பல் நீறு செய்த சுண்ணத்தூள் சுண்ணும்புக் காரை இவைகளில் ஒன்றைக்கொண்டு நோய்க் கேற்றவாறு சமயோசிதமாக ஒற்றிடமிடவும். ஒற்றிட மிடும்போது எருக்கிலைப் பழுப்பை நோயுள்ள இடத்தில் வைத்தும் ஒற்றிட மிடலாம்.

## மேகப்புரை தீர

631 எண்ணெய் கறிகாம னிந்துப்புச் சாரணைவேர்
கொண்ணை யமைசோபி குன்றியிவை—எண்ணெய்க்
கரைகாலிட் டட்டருந்தி லாகாத மேகப்
புரையான நோய்களெலாம் போம்.

(பொ - ரை) எண்ணெய் மிளகு திப்பிலி இந்துப்பு சாரணை வேர் கொன்றை வேர் மூங்கில் வேர் சுத்தி செய்த நேர்வாளம் குன்றிவேர் இவைகளில் நேர்வாளம் எண்ணெயிற் காற்பலமாக வும் மற்றவைகள் முறையே அரைப்பலமாகவும் சேர்த்துக் காய்ச்சி உட்கொள்ள மேகப்புரை புண்கள் ஆகிய நோய்கள் யாவும் தீரு மென்பதாம்.

## திணை

632 சேந்தனிடந் தந்திரிக்காஞ் சீதரனூர் மந்திரிக்காம்
ஏந்து வருணனிட மேந்தலுக்கா—மீந்த
மருத்துவனூர் மூவருக்கும் வாயாது துற்கி
திருத்தலமா மானலுந் தீ.

(பொ - ரை) முருகனிடமாகிய மலை சார்ந்த குறிஞ்சி நிலம் சேத்துமத்திற்கும், மாயோன்மேய காடுசூழ் முல்லை நிலம் பித்தத் திற்கும், வருணன்மேய பெருமணல் பரப்பாகிய கடல் சார்ந்த நெய்தல் நிலம் வாதத்துக்கும் வீறு கொள்ளுதற்கு இடங்களாம்,

இந்திரனுக்குரிய மருத நிலம் முக் குற்ற நோயினரும் வசிக்க ஏற்ற இடமாகும்; துர்க்கையின் பாலை நிலமும் மேற்கண்டவாறு முக்குற்றங்களு மீருதெனினும் பாலை நிலத்தில் வெப்ப மிகுதியுண்டாம். ஆகையால் உறைவிடமாகக் கொள்ளலாகாது. மருத்துவன் - இந்திரன் பெயர்களிலொன்று.

## இதுவுமது

633 ஆனலு நன்ருகு மஃது சகிக்குமெனிற்
கோனதி மூவருக்குங் குற்றமிரா—தேனையதில்
தேவேந்த்ர னூருமா தீனமா மோர்வேளை
நோவேந்தி கட்கிகலி நோய்.

(பொ - ரை) மேற்கண்ட பாலை நிலத்தில் வசித்தல் அருமையாயினும், உறைவிடமாகத் தங்குதற்கு ஆமெனில் வாத பித்த சேத்தும நோயினர் மூவருக்கும் குற்றமேற்படாது; பிற நிலங்களில் மருத நிலம் நல்ல உறைவிடமாகும்; நோயினர்களின் நோய்க்கு நோய் செய்வதாகையால் யாவற்றினும் சிறப்புடையதாம்.

## மருத்துவத்திற்கு ஏற்ற மாதங்கள்

634 ஆடிமுதற் றைவரைக்கு மாகா தவைகளிலும்
நாடின் முதற்கடைசி நாட்டலாம்—பீடாகும்
மற்றதெல்லா முத்தமத்தில் வாய்ப்பவொரு நாலாக்கிக்
குற்றமில்லா தேய்ந்தததது கொள்.

(பொ - ரை) ஆடி மாத முதல் தை வரை இடையிலுள்ள தட்சணயன மாதங்களாகிய ஆறும் ஆகாதவைகளாகவும், அவற்றினும் முதலுங் கடையும் நின்ற ஆடியும் மார்கழியும் ஏற்றனவாகவும், பின்னின்ற தை முதல் ஆனி முடிய ஆறு மாதங்களும் பெருமையுடையனவாகவும் கொண்டு உத்தமமான காலங்களாக்கியும், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகைகளை முறையே உத்தமம் மத்திமம் அதமம் அதமாதமம் ஆக வைத்து மொத்தத்தில் உள்ளவற்றில் உகந்தவற்றை மருத்துவத்துக் கேற்ற மாதங்களாகக் கொள்க என்பதாம்.

## மருத்துவத்துக்குகந்த நாட்கள்

635 திங்கணன்று புந்திமத்தி தேவர் குருவதமஞ்
சுங்க னதமதமஞ் சொல்லுங்கான்—மங்கலன

தற்குங்கீ ழோர்முறைமை யாகாது சுத்தமாம்
அற்கனவன் சேயிவரை யா.

(பொ - ரை) மருத்துவத்திற்கும் மருந்துட்கொள்வதற்கும் ஏற்ற நாட்களையும் ஏலாத நாட்களையும் கூறுபடுத்துக் கூறுங்கால், திங்கட்கிழமை உத்தமம் நன்றும்; புதன் நாள் மத்திபமாம்; தேவர் குருவாகிய வியாழ நாள் அதமம் ஆகாத நாளாம்; சுங்கனும் வெள்ளியினுள் மேற்குறித்த எல்லா நாட்களிலும் தள்ளுண்ட ஆகாத அதமாதம நாளாம்; மங்கலனுகிய செவ்வாய் நாள் வெள்ளி நாளினுங் கீழ்ப்பட்ட நாளாம்; பகலவன் நாளும் அவன் சேயாகிய சனி நாளும் சுத்தமா யாகாத நாட்களாம். (ஞாயிறு, சனி வாரங்கள் ஆகாவாம்.)

## நற்பண்டிதர்

636 நோயறிந்து நோய்முதலி நோக்கறிந்து நோயுதவு
தாயறிந்து போக்குந் தரமறிந்து—காயநிலை
நொந்தழியா வண்ண நுகர்விப்பார் நோயினர்க்கு
தந்தையெனு நற்பண்டி தர்.

(பொ - ரை) நோய் நீக்கி நலம் விளக்கும் மருத்துவர்கள் நோயாளியின் பிணியை நாடிவகைகளா லறிந்து அந்நோயின் காரணத்தையும் நோயை விளக்கும் உடற்கூற்றின் பகுதியையும் நீக்கும் வகையையும் அறிந்து உடல்வன்மை சிதைவுரு வகையால் ஏற்ற மருந்துகளை நுகரப்பண்ணி நோய் தீர்த்து நலம் பயத்தலால் நோயினர்க்குத் தந்தையை ஒப்பார் என்பதாம். "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று செந்நாப் போதாரும் கூறுவதை ஈண்டு ஒப்பு நோக்குக.

## ஆமாத்தியர்

637 நாடி நிதானமுத னுயகமாம் பண்டிதர்க்குத்
தேடி யலையாமற் செப்புகிறேன்—நாடி
அறிந்த மருத்துவரே யாமாத் தியராம்
பிறிந்த கனமவர்க்கே பேர்.

(பொ - ரை) நல்ல மருத்துவரைத் தேடியலைந்து கண்டறிய மாட்டாது வருந்தும் நோயினர்க்கு உபாயமானதொன்றைக் கூறு

கிறேன்; அந்த நல்ல மருத்துவர் தாம் யாவரெனின், நாடி வகைகளின் தன்மையறிந்தவரே ஆமாத்தியராம் மருத்துவராவர்; ஆகவே நாடி நிதானமே மருத்துவர்தம் பாண்டித்தியத்திற்குத் தலைமையாவதாம்; அஃதுடையாரே பிறர் தம்மில் வேறுபட்ட பெருமையுடையோராவர்.

## பண்டிதர்க்குச் சிறப்பு

638 சாத்தியவ சாத்தியங்க டப்பாம லேயறிந்து
மேத்திய மான விதரணையாற்—பாத்திக்கு
நீர்பாய்ச்சல் போலுடலி னேரறிந்து நன்மருந்தின்
சீர்பாய்ச்சல் பண்டிதர்க்குச் சீர்.

(பொ - ரை) நோயின் சாத்தியம் அசாத்தியங்களை நுட்பவறிவால் தவறின்றியறிந்து இளம் பயிர் வளம் படு பாத்திக்கு நீர் பாய்ச்சுமாறு போல் உடலின் மென்மை வன்மைக் கேற்பப் பொருந்துவனவாகிய மருந்துகளைத் தந்து மருந்துகளின் குணங்களை உடலில் பொருந்துமாறுதவி நோய் தீர்த்தலே மருத்துவர்க்குச் சீரிதாம்.

## நற்பண்டிதர்

639 கைவாசி யுங்குணமுங் கண்ணோட்ட முந்திடமு
மைவாசி யில்லா மனமுமே—நைவாசி
சேரணியில் லாவயித்தியர் சேரு மகிமையுள
தாரணியி னற்பண்டி தர்.

(பொ - ரை) திருவளர் கைவாசியும் நற்குணமும் நோயினர்பால் கண்ணோட்டமும் நோய்க் கடுமையை அஞ்சிப் பின்னிடாத திட்பமும், மருத்துவக் கூலியை அவாவிப் பொருள் கருது நோக்கங் கொள்ளா மனமுமுடையராய், நைதலில்லா மேற்பண்பில் சேர்ந்தவரையே உலகில் நல்ல மருத்துவராக வைத்தெண்ணலாம்.

## வயித்தியர் மதிநுட்பம்

640 குணநாடி நோயறிந்து கொண்டுபிணி யாளர்
குணநாடி ஞாபகமுட் கொண்டு—நிணரா

யதது தணியு மடைவவிழ்த மீயு
மதியர் வயித்தியரா வார்.

(பொ - ரை) பிணியாளர் குணமறிந்து நோயின் தன்மையை நாடி வகைகளால் நாடியறிந்து ஞாபக சக்தியை மறவாது உள்ளத்திலிருத்தி வைத்துக்கொண்டு அவ்வவ்நோய்கள் தணிதற்கேற்ற அவிழ்தங்களை அளித்து நலம் பயக்கும் மதிநுட்பமுடையோரே மருத்துவராவார்.

## நரப்பிரமர்

641 அஞ்சு குணமு மரசன்முத லோர்குணமும்
எஞ்சல் மிகல்நள்ள லென்பதறிந்—தஞ்சாமல்
நாடுங் குணமுமுள நல்லாயுள் வேதியரே
யாடு நரப்பிரம ராம்.

(பொ - ரை) திருவளர் கைராசி நற்குணம் கண்ணோட்டம் மனத்திட்பம் பொருள்நசையின்மை என்னும் ஐந்து குணமும் பொருந்தியவராய், வாத பித்த சேத்துமங்களின் குறைதல் மிகுதல் தன்னியல்பான நிலைகளையுமறிந்து, அச்சமின்றி நோயினையாராயுங் குணமுமுடையராகிய மருத்துவரே மனிதவுருவத்தில் நடமாடும் பிரம தேவனை ஒப்பவராவார்.

## சாத்திய அசாத்தியத்தைச் சாத்தியமாகக் கூறல்

642 நூலர்நடை வாகனர்மேற் றோன்ருத நாடியர்கோ
பாலர்தொடா தாரெப்பேர்ப் பட்டவர்க்கு—மேலறிந்து
சாத்தியவ சாத்தியங்கள் சாத்தியமா நேர்த்திசெய்ய
மாத்தியரே பண்டிதரா வார்.

(பொ - ரை) கற்றோர் சிவிகையிற் செல்வோர் மேல் தெரியாத நாடியையுடையவர் அரசர் சிறு மகார் தொடத்தகாதார் ஆகிய எவ்வித நோயினர்க்கும் சாத்தியமும் அசாத்தியமும் ஆகிய நோய்களை சாத்திய நோயாகவே நேர்த்தியுடன் தீர்க்கவல்லவரே பண்டிதராவார்.

## தேவர்

643 குணவா கடமுதலாய்க் கூறியநன் னூலின்
மணமறிவு விற்பத்தி வன்மை—உணர்வுதயை

உண்மை பெருமை யுபாய மொழுக்கநிலை
வண்மை யுடையவர்தே வர்.

(பொ - ரை) பொருட்குணங்களை விரித்துக் கூறும் குண வாகட நூலிற் கூறப்படும் பயிற்சி அறிவு புலமை வன்மை உணர்வு அருள் உண்மை பெருமை உபாயம் ஒழுக்கம் நிலை வள்ளன்மை ஆகியவைகள் எஞ்சாமற் பொருந்தியுள்ள மருத்துவர் மனிதரே யாயினும் தெய்வத்தன்மையுடையவரே யாவர்.

## குரு

644 செய்யு மணிமந் திரவவிழ்த நன்முறைமை
ஐய மிலாம லறிந்தவரே—வைய
மிசைமா னிடரெனினும் விண்மருத்த ராகி
இசைவார் குருவா யெனக்கு.

(பொ - ரை) மணி மந்திரம் அவிழ்தமாகிய இம்மூவகை முறைமைகளையும் ஐயந்திரிபற அறிந்தவரே, இவ்வுலகிடையுலவு மனிதரேயாயினும் விண்ணுலக மருத்துவராகி எனக்குக் குரு வாகும் பெருமை படைத்தவராவார்.

## தன்மந்திரி

645 செய்பண் டிதங்கால தேசவர்த்த மானமறிந்
துய்மருந்தை யல்லாதை யோசித்து—மைபோல
இகத்துக்கவ் வாறே யியற்றுவா ரிந்தச்
செகத்துக்குத் தன்மந் திரி.

(பொ - ரை) கைவன்மை பெறச்செய்யும் செயல்வல்ல பண் டிதமும் காலதேச வர்த்தமானங்களுமறிந்து உய்விக்கும் மருந்து ஆகாத மருந்துகளை யோசித்து ஏற்றதைக் கொடுத்தும் தலைமைத் தன்மையுடையோராய் இவ்வுலகத்தோர்க்கு மருத்துவமியற்றும் பண்டிதர் இவ்வுலகத்திற்கு (மேலுலக மருத்துவராகிய) தன் மந்திரியாவார்.

## மருத்துவன் அறிய வேண்டியன

646 வண்கால தேசவர்த்த மானமறி பண்டிதர்க்குங்
கண்காண் வழக்கமே கைமுறையாம்—பெண்காணி

ஆனாலுஞ் செல்வாக்கே யாதீன மப்படிநீ
நானாலுஞ் சொல்லவறி நாள்.

(பொ - ரை) காலம் இடம் வழக்கம் மூன்றையும் முறையா யறிந்த மருத்துவர்க்கும், அவ்வப்போது அவ்வவ்விடங்களில் நிகழும் வழக்கமே கைமுறையாக அனுசரிக்கும் வழக்கமாக அமையும். அதுபோல் பெண்ணுரிமையாக (மகட்கொடை) உடைய விளைநிலமாக இருப்பினும் செல்வாக்கினியல்பிலேயே அவ்வுரிமை ஆட்சியாக நிற்கும்; ஆனமையின், மருத்துவ நூல் வழக்கு வெல்ல வேண்டுமாயின் மருத்துவவியல்பாகிய பதினாறனையும் மறவாமற் கொண்டு அவ்வவ்விடங்களில் கையாளவும் எடுத்துச் சொல்லவும் வல்லனாக மருத்துவன் இருக்க வேண்டும் என்பதாம்.

மருத்துவ இயல்புகள் பதினாருவன :

1. வியாதியை யறிதல், 2. அதன் காரணமறிதல், 3. அது நீக்கும் உபாயம் தேர்தல், 4. பிணி காலங்களின் அளவுணர்தல், 5, நோயாளி அளவறிதல், 6. சரீர சுபாவமறிதல், 7. பருவ நாடல், 8. வேதனைகளின் அளவறிதல், 9. சாத்தியமாய்தல், 10. அசாத்திய மோர்தல், 11. யாப்பிய முணர்தல், 12. மருந்து செய்தல், 13. பழைய மருத்துவர் முறையில் தவறாமை, 14. உதிரங் களைதல், 15. அறுத்தல், 16. சுடுதல்.

இங்ஙனம் கூறுமியல்புகளை அறிந்து முறைமையாக ஆற்ற வல்லவனே மருத்துவனாவான்.

## மேலாஞ் சரக்குகள்

647 மேலாஞ் சரக்குகளின் மேன்மைமா தேவபலம்
போலாஞ்சு தேவியுரம் பொன்காந்தம்—நாலாஞ்ச
ரக்குமுதற் பாஷாண லட்சணமோர் தல்வைத்ய
ருக்குமுறை யென்றுபக ரும்.

(பொ - ரை) மேலனவென்று கொள்ளப்படும் சரக்கு வகைகளில் மேன்மையுடையன இரசம், கந்தகம், பொன், காந்தம் ஆகிய நான்குமாம்; இச்சரக்குகளை முதன்மையாகக் கொண்டு பாஷாணங்களின் குணங்களை உள்ளபடி யறிதல் வைத்தியருக்கு முறைமையாமென்று மருத்துவ நூல்கள் கூறும்.

## கைவாசி

648 கைவாசி யாவதுநோய் கால்வாசி யாவதுபின்
செய்வாசி யாலதுவுந் தீர்மருந்—துய்வாசி
செய்யடா செய்யடா தேவர்முறை யெல்லாம்
பொய்யடா பொய்யடா போ.

(பொ - ரை) ஆக்கந்தரும் கைவாசியாவது நோயாளியை மருத்துவன் எதிர்ப்படும்போதே நோயானது கால்வாசியாகக் குறைவதாம்; (எனவே முக்கால்வாசி நீங்கிவிடுமென்பதாம்). பின்னர் அவிழ்தப் பிரயோகத்தினுல் எஞ்சி நின்ற கால்வாசி நோயும் நீங்கிவிடும். ஆக்வே, நோயினர் உய்யும் வழியாகிய வாசி தரும் மருத்துவ முறையைச் செய்க; தேவர் முறையாகிய ஏனைய வகைகளெல்லாம் பொய்யாம். செய்யடா செய்யடா, பொய்யடா பொய்யடா என வரும் ஈரிடத்தடுக்குத் தொடர்களும் வலியுறுத்தற் பொருளுடையன; உய்வாசி செய்யடா என்றதற்கு வாசியோகப் பயிற்சி செய்யென்று பொருள் கொள்ளலுமாம்.

## அறியா மருத்துவர்

64 ாயை யறிந்தந்த நோயா னதுபிறந்த
வாயை யறிந்து வரிசையு—பாய
மருந்தறிந்து செய்யா வயித்தியர்பூ மிக்குள்
இருந்தென்ன பாழ்த்தசுமை யே.

(பொ - ரை) நோயினையறிந்தும் நோய் தோன்றிய காரணத்தையறிந்து உபாய நெறியால் வகையான மருந்தையறிந்தும் மருத்துவத்தை முறையாகச் செய்யவியலாத வைத்தியர் உலகில் இருத்தலால் பயன் யாதெனில் மருத்துவத்துறைக்கும் உலகிற்கும் நோயினர்க்கும் வீணுன சுமையேயாம்.

## வக்கணத்தி மாத்திரை

650 வக்கணைவேர் வெண்மறிமோர் வார்த்தூற வைத்ததனை
ஒக்க வருசோகி யும்சேர்த்துப்—பக்குவமாய்
மால்மனை யாதி மதலைரச மிட்டரைத்துக்
கோல்வரிசை மாத்திரைகைக் கொள்.

(பொ - ரை) வக்கணத்தி வேரை வெள்ளாட்டு மோர் விட்டு ஊறவைத்துக் கூடப் பலகறை சேர்த்துப் பக்குவ முறையாய் ஆலம் விழுதினிரசம் விட்டரைத்துத் திரட்டு மாத்திரையாகச் செய்து கொள்க.

## தாளக மாத்திரை

651 தாளக மாத்திரையின் தாட்டீக மென்னசொல்வேன்
மூளுஞ் சுரத்தை முடுக்கியே—நாளுங்
குணத்தை யுயிர்நிலைக்கே கூட்டு மதுசெய்
வணத்தை யினியறிகு வாய்.

(பொ - ரை) தாளக மாத்திரையின் வன்மையை என்னென்று சொல்வேன்; மூண்டெழும் சுர நோயைத் தாக்கி நீக்கி நாள்தோறும் உடலுக்கு நல்ல குணத்தை உண்டாக்கும்; அது செய்யும் முறையை மேற் சொல்வேன்.

## இதுவுமது செய்முறை

652 குன்றி யரிதாரங் கோரோ சனைமூன்றும்
ஒன்ற விருசச்சா றூட்டியரைத்—தொன்றான
மாத்திரைதே னீரிலுண வாதசுரஞ் சேட்பசுரம்
மாத்திரமோ போம்பிணிய மன்.

(பொ - ரை) குன்றிவேர் தாளகம் கோரோசனை இம்மூன்றும் சமமாக எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துருட்டிய மாத்திரையை உலர்த்தித் தேனி லுட்கொள்ள வாதசுரமும் நீரிலுண்ணின் சேத்தும சுரமும் போம்; அம்மட்டோ டல்லாமலும் மற்ற நோய் களுக்கும் எமனைப் போன்றதாம்.

## தாளகமாத்திரை-வேறு

653 வமிசவான் மாதே வபலமரி தாரங்
குமுதமுண்மா தேவியுரங் கூடச்—சமமாச்சம்
பீரக் கனியிரதம் பெய்தரைத்த மாத்திரைமுன்
நீராநோய்க் காற்பாசத் தீ.

(பொ - ரை) உயர்ந்த இரசம், தாளகம், கந்தகம் மூன்றையும் சமமாகக் கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து

மாத்திரை செய்து உபயோகித்தால் நோய்களைப் பஞ்சில்பட்ட தீப்போ லழிக்கு மென்பதாம்.

## தாளகக் குளிகை

654 தாளகங்காற் சை ரக்கு மப்படிநேர்
வாளமரைக் காற்கைசா வாய்ப்பாக—நாளுமெலு
மிச்சையினுற் செய்குளிகை வேந்தன்முதன் மூவருக்கும்
அச்சையா மஞ்சனியு மாம்.

(பொ - ரை) தாளகம் காற்கஃசும் இரசம் காற்கஃசும் நேர் வாளம் அரைக்காற் கஃசுமாக வாய்க்குமாறு கொண்டு எலு மிச்சைப் பழச்சாற்றிலரைத்துக் குளிகை செய்து உட்கொள்ளின் வாத பித்த சேத்தும நோய்களுக்கு அற்சையும் சனியுமாம்; கஃசு காற்பலம்; மேற்கண்ட வகையறிந்து செய்க; (தற்கால மெட்ரிக் அளவுக்கு 10 கிராம் ஆகும்) அச்சை-அற்சை, துன்பம்; சனி-ஏழரை யாண்டுச் சனி.

## நேத்திரவலி மண்டைவலி தீர

655 வேலிப் பருத்தியதள் வேலம் பிசினியத்திப்
பாலிட் டரைத்துப் பயறுபோல்—சீலித்த
உண்டைசெய்து பாலி லுரைத்திடப்போ நேத்ரவலி
மண்டைவலி யுச்சியிலோ மம்.

(பொ - ரை) வேலிப்பருத்தி வேர்ப்பட்டை வேலம்பிசின் அத்திப்பால் விட்டரைத்துப் பயறு போல் மாத்திரை செய்துலர்த் திப் பாலில் உரைத்து உள்ளுக்குக் கொடுத்து, உச்சந்தலையில் ஓமப்பற்றுமிட நேத்திரவலி மண்டைவலிகள் நீங்கும்.

## காமாலை தீர

656 வெற்பேந்தி யின்வேர் வெருகடியா டாதோடை
நற்புறணி மூன்று நறுக்கியே—பொற்சிட்டுங்
கோமயமு நாற்பதுநாள் கொள்ள விடுங்கள்ளக்
காமாலை யாகியரோ கம்.

(பொ - ரை) மலைதாங்கி வேர், மெருகங் கிழங்கு, ஆடாதோடை வேர்ப்பட்டை மூன்றையும் நறுக்கித் தூள் செய்து உலோக மண்டூரமும் சேர்த்துப் பசுநீரில் குடிநீராக்கி உட்கொள்ளக் கள்ளக் காமாலை நாற்பது நாளில் தீரும் என்பதாம்.

## பாண்டு தீர

657 ஆனை வணங்கி யரமகள்வெற் பேந்தியிலை
ஈனறலைச் சிட்டத்தி லேற்றியே—ஆனபின்பு
வெள்ளாட்டு நீரில்மதி வேண்டியுணத் தீண்டாது
கள்ளமிகு பாண்டுரோ கம்.

(பொ - ரை) நெருஞ்சில் வாழை மலைதாங்கியிவைகளின் சாற்றில் சிட்டத் (மண்டூரம்) தை ஊறவைத்துலர்த்திப்பின் வெள்ளாட்டின் நீரிலும் அது போலவே செய்ய மடியும்; அதனைப் பொடி செய்துட்கொள்ளக் கள்ளத் தன்மையுடைய பாண்டு ரோகம் தீருமென்பதாம்; மதியென்றதைக் காலஅளவாகக் கொண்டு மண்டூர பாவனைக் காலமாகவும் மருந்துட்கொள்ளும் காலமாகவும் கொள்க.

## பாண்டு மூத்திரக் கிரிச்சிரம் தீர

658 எய்யின் முருந்து மிலவணமுங் காமனுநேர்
மெய்யி னிரதத்தை விட்டரைத்துச்—செய்குளிகை
மோரிலுணப் பாண்டுவறு மூத்திரக்கி ரிச்சியிள
நீரிலுணப் போம்பொசிப்பு நோய்.

(பொ - ரை) முள்ளம்பன்றி முள்ளின் அடிப்பகுதியாகிய முருந்தும் உப்பும் திப்பிலியும் சமமாகக் கூட்டி, மேனிச்சாறு விட்டு அரைத்துக் குளிகையாகச் செய்துலர்த்தி மோரிலுண்ணப் பாண்டு நோய் தீரும்; இளநீரிலுண்ண மூத்திரக் கிரிச்சிரமும் பொசிப்பு (அசீரண) நோயும் நீங்கும் என்பதாம்.

## சேட்ப வெப்ப வாத நோய்கள் நீங்க

659 காமன் மரிசங் கடுவா மலகமறிக்
கோமயத்தை விட்டரைத்துக் குன்றிபோல்—நேமவுண்டை

செய்துலர்த்தி நீரிலுணச் சேட்பமறும் வெப்பமறும்
நெய்தினப்போம் வாதமிள நீர்.

(பொ - ரை) திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லி ஆகிய நான்கையும் சமன் கொண்டு வெள்ளாட்டு நீரிலரைத்து முறையாகக் குன்றியளவு உருட்டி உலர்த்திய மாத்திரையை நீரிலுட்கொள்ள சேத்தும நோய் தீரும்; நெய்யிலுண்ண வெப்பு நோய் நீங்கும்; இளநீரிலுண்ண வாத நோய் தீருமென்பதாம்.

## வயிற்று வலி, வல்லை, பல்வலி தீர

660 இலவணந் திரிகடுகு நன்னரி வேம்பி
தொவொருகழஞ் சாகவரைத் துண்டை—வைபின்
வயிற்றுவலிக் கோமரசம் வல்லைக் கிளநீர்
எயிற்றுவலிக் கற்கவிலை யில்.

(பொ - ரை) உப்பு திரிகடுகு (சுக்கு மிளகு திப்பிலி) நன்னரி வேர் வேப்பம் பட்டை ஆகியவற்றை ஒவ்வொரு கழஞ்சு கூட்டி யரைத்து உருட்டிய மாத்திரையை ஓமக்குடிநீரி லுண்ணின் வயிற்று வலி தீரும்; இளநீரிலுண்ணின் வல்லை (ஈரல்) நோய் தீரும்; எருக்கிலைச் சாற்றில் உண்ணின் பல்வலி தீருமென்பதாம்.

## கக்குவான் தீர

661 சங்கம்வேர்ப் பட்டை சதகுப்பி யும்பொடித்துப்
புங்கம்வேர்ச் சாற்றினிலே போட்டதனைப்—பங்கீடாய்
ஒக்க வரைத்தவுண்டை யுண்ண விளநீரிற்
கக்குவான் போஞ்சிறுவர் கட்கு

(பொ - ரை) சங்கம் வேர்ப்பட்டையும் சதகுப்பையும் சமன் கூட்டிப் பொடி செய்து புங்கம்வேர்ச் சாற்றில் போட்டுற வைத்துப் பின் அச்சாற்றாலரைத்து உருட்டி உலர்த்திய மாத்திரையை இளநீரிலுரைத்தூட்டச் சிறுவர்களுக்குண்டாம் கக்குவான் என்னும் நோய் தீரும் என்பதாம்.

## கபம் பிரமியம் தீர

662 சோபி யிரதந் துடிமான் மனைகாமன்
நாபி யிடைகால் நறுக்கியே—மாபல்

வியமெழுப்பி நெய்விட் டியற்றுண்டை யாக்கை
யயமெழுப்பும் போம்பிரமி யம்.

(பொ - ரை) சுத்தித்த நேர்வாளம் இரசம் ஏலரிசி தாளகம் திப்பிலி நாபி இவை கால்பங்கு கால்பங்கு கூட்டி நறுக்கி, வட்டக் கிலுகிலுப்பைச் சாற்ருலரைத்து உருட்டி மாத்திரை செய்துட் கொள்ளக் கபத்தை நீக்கிப் பிரமியத்தைப் போக்கும் என்பதாம்.

## பித்தவாயு தீர

663 முத்தக்கா சோம மிளகசன கோடாரி
யொத்தநிறை தேனிலரைத் துண்டைசெய்து—
புத்தநெய்யிற்
றின்பித்த பேருடலைத் தீண்டினரைத் தீண்டிடினும்
புன்பித்த வாயுவெலாம் போம்.

(பொ - ரை) முத்தக்காசு ஓமம் மிளகு சீரகம் என்னுமிவை நான்கையும் ஒரு நிறையாகக் கொண்டு தேன் விட்டரைத்துருட்டி உண்டை செய்து புத்துருக்கு நெய்யில் தின்னக் கொடுத்து அதனைத் தின்றவர் உடலைத் தொட்டவரைத் தொடினும் கொடிய பித்தவாயுவான தெல்லாம் போமென்பதாம். முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

## தந்தவாயு பல்லசைவு தீர

664 வேலம் பிசினிகந்தி வெண்கடுகு மோர்நிறையாய்
ஆலம்பா லாலே யரைத்துருட்டிக்—கோலுதந்த
வாயுவுக்குந் தேனில் வளிக்குள்ளிச் சாரத்திற்
சாயுவுக்கு நீரிலுண்போந் தான்.

(பொ - ரை) கருவேலம்பிசின் களிப்பாக்கு வெண்கடுகு மூன் றையுமோர் நிறையாயெடுத்து ஆலம்பால் விட்டரைத்து உருட்டி, பற்களைச் சுற்றிய தந்த வாயுவுக்குத் தேனிலும், பல்வலிக்கு உள் ளிச் சாற்றிலும், பல்லசைவுக்கு நீரிலும் உட்கொண்டும் பூசியும் வரத் தீருமென்பதாம். சாயு - பல்லசைவு.

## வாத பித்த கப நோய்கள் தீர

665 தக்கோலங் காமன் தவிசிப்பூ விம்மூன்றும்
ஒக்க வரைத்ததனை உண்டைசெய்து—இக்குடைந்த

நீரிலுணச் சேட்பமறு நெய்யிலுண வாதமறு
மோரிலுணப் பித்தமறு முன்.

(பொ - ரை) தக்கோலம் திப்பிலி தவசிமுருங்கைப்பூ இம் மூன்றையும் ஓரளவாகக் கூட்டி யரைத்து உருட்டி மாத்திரை செய்து கரும்பைப் பிழிந்த சாற்றிலுண்ணின் சேத்தும நோய் தீரும்; நெய்யிலுண்ணின் வாத நோய் தீரும்; மோரிலுண்ணின் பித்த நோய் தீருமென்பதாம்.

## குன்மம் தீர

666 ஆனை வணங்கிரசத் தாலசம தாகத்தை
ஊன மறவே யுலர்த்தியே—யானபின்பு
நாகவல்லி யிற்பொசிக்க நாடாது குன்மமெல்லாம்
போகுமந்த மெய்த்திமிரும் போம்.

(பொ - ரை) நெருஞ்சிச் சாற்றில் ஓமத்தை ஊறவைத்துலர்த்திப் பொடித்து வெற்றிலையிற் பொதிந்து தின்ன, குன்ம வகைகளெல்லாம் போம்; பின் அணுக மாட்டா; குன்மத்தால் வந்த பசி மந்தமும் மெய்த் திமிரும் நீங்கும் என்பதாம்.

## காக்கைவலி நீர்க்கோவை தீர

667 யாந்தகரை நீர்க்கோவைக் காகு மனுபானஞ்
சாந்தி லிகுசஞ் சதகுப்பி—சீந்தில்கறி
பாக்கிதுதந் தாவளநீர் பாச்சியரைத் துண்டைசெய்துண்
காக்கைவலிக் காவாரை கை.

(பொ - ரை) சதகுப்பை, சீந்தில், மிளகு, பாக்கு, நான்கையும் யானை நீரை விட்டு அரைத்து உருட்டி மாத்திரை யாக்கி வைத்துக் கொண்டு காக்கை வலிப்புக்கு ஆவாரைச் சாற்றிலும், நீர்க்கோவைக்குக் கையாந்தகரைச் சாற்றிலும் அனுபானித்துட்கொள்ள நீங்கும், மருந்து சாந்தியாக எலுமிச்சம்பழச் சாறு கொள்க என்பதாம்.

## பிணித்துன்பம் தீர

668 பொல்லாத துன்பம் புகுதுமட வித்திரங்க
ளெல்லா மறுமே யிலாக்கொட்டை—வல்லாரைச்

சாற்றி லதிமதுரஞ் சாபத் திரியுரைத்து
மேற்றடவி யுண்ணுகர வே.

(பொ - ரை) இஞ்சி, அதிமதுரம், சாதிப்பத்திரி மூன்றையும் வல்லாரைச் சாற்றிலுரைத்து உள்ளுக்கும் கொண்டு, மேலுந்தடவி வர, பொல்லாத துன்பந்தரும் உடல்நோய் சருமநோய்கள் அடர்ந்த கானகம் நிலைகெட்டழியும் என்பதாம்,

## சன்னி தீர

669 வேலிப் பருத்தி விடத்தேரி வேரிரண்டும்
பாலிட் டரைத்துப் பயறுபோற்—சீலித்த
மாத்திரையாய்த் தேனிலொரு மண்டலமுண் டாற்சன்னி
கோத்திரமெல் லாம்பறக்குங் கொள்.

(பொ - ரை) வேலிப்பருத்தி, விடத்தேரி என்னும் இரண்டின் வேரையும் பாலிலரைத்துப் பயறுபோலுருட்டி மாத்திரையாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு மண்டலம் தேனிலனு பானித்துட் கொள்ள, சன்னி வகைகள் தம்தம் கிளைகளுடன் தீரும் என்பதாம்.

## வாதம் பித்தம் நீங்க

670 அக்காரம் போசனகு டாரி முசுமுசுக்கை
முக்கார மும்பையுள் முக்காரம்—இக்காரந்
தன்னோடுஞ் சம்பீரஞ் சார்ந்தாற் பயந்தமைச்சன்
முன்னோடு வானரசன் முன்.

(பொ - ரை) வெல்லம், சீரகம், முசுமுசுக்கை, திரிகடுகு என்னும் இக்காரப் பொருள்களுடன் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்த அவிழ்தத்தை உபயோகிக்க நோய் நீக்கிப் பின்வராமல் தடுக்கத் தாழ்க்கோலுமாகும்; அமைச்சனுகிய பித்தம் அரசனுகிய வாதத்தைவிட விரைவிற்போம் என்பதாம்; வாதபித்தங்கள் தம் நிலை தவருவாம் என்பது கருத்தாகக் கொள்க.

## சீத சுரம் நீங்க

671 பாறங் கியுமாயிற் பட்டையுங்கொட் டைப்பாக்குங்
கூழெட்டி ரெட்டியொட்டி கூட்டியே—யாறுதினம்

ஆதலொடு பூநீ றதனிலிட் டுண்ணதுவே
சீதசுரக் காட்டையடுந் தீ.

(பொ - ரை) கண்டுபாறங்கி ஒரு பங்கும் (ஒட்டி) ஆயில் பட்டை இரண்டு பங்கும் (இரட்டி) கொட்டைப்பாக்கு ஒரு பங்கும் (ஒட்டி) கூட்டிக் குடிநீராக்கியதில் பூநீறு சேர்த்து காலைமாலை இரு பொழுது ஆறுநாட்கள் உட்கொள்ளின், அது சீதசுரமென்னும் காட்டை எரித்தழிக்கும் தீப்போன்றதாகும்.

## சேட்பம் காங்கை பித்தம் நீங்க

672 கண்டுபா றங்கி கடுக்கா யதிவிடையங்
கொண்டைரசத் தாலரைத்து கூட்டுமகா—யுண்டைதனை
நீரிலுணச் சேட்பமறு நெய்யிலுணக் காங்கையறும்
மோரிலுணப் பித்தமறு முன்.

(பொ - ரை) கண்டுபாறங்கி கடுக்காய் அதிவிடையம் மூன் றையும் இலந்தைச் சாற்றிலரைத்துருட்டி உலர்த்திய மகாமகிமை யான மாத்திரையை நீரிலுண்ணின் சேத்துமநோய் போம், நெய்யி லுண்ணின் உஷ்ணம் போம்; மோரிலுண்ணின் பித்தநோய்போம் என்பதாம்.

## சீத அனல் உப்புசம் இரைப்பு நீங்க

673 தந்த தபனடைபூ சர்வாங்க முமிடித்து
வெந்த கிருதத்தில் வீசியே—பந்தித்த
உண்டையுணச் சீதவன லுப்புசமேல் மூச்சிரைப்பு
தெண்டனிட்டுப் போமிதுமெய் செய்.

(பொ - ரை) வன்னியின் சமூலத்தை இடித்து நெய்யிலிட்டுக் காய்ச்சிச் சுண்டியபின் உருட்டி யுட்கொள்ளின் சீதவனல் (கப உஷ்ணம்) உப்புசம் மேல்மூச்சு இரைப்பு முதலானவைகள் வணங்கி வெளியேறும்; இம்முறை உண்மையனுபவ மாகையால் இதனைத் தவிராது செய்க என்பதாம்.

## சன்னி நீங்க

674 வேலிப் பருத்தி கொடிவேலி யிதின்வேரைக்
காலிட் டதினேர் கடிப்பகைசெல்—மாலெச்சில்

ஈண்டு பிருந்தரச மிட்டிழைத்த மாத்திரையாற்
றுண்டிவிடுஞ் சன்னிபா தம்.

(பொ - ரை) வேலிப்பருத்தி சித்திர மூலம் ஆகிய இவ்விரண்டின் வேர்கள் கால் பங்காக எடுத்து, அதன் அளவுக்கு ஒத்த வேம்பின் வேர் புற்றுஞ்சோறும் கூட்டித் துளசியின் சாற்றிலரைத்து உருட்டிய மாத்திரையால் சன்னி பாதமாகிய நோய் நீங்குமென்பதாம்.

## வாந்தி கபம் நீங்க

75 ஓமங் கறிவசம்பிந் துப்புகணை தக்கோலம்
நேம மிகவே நிறையிட்டுக்—கோமயத்தில்
மத்தித்துப் பெண்ணைவட்டம் மாத்திரங்கூட்
டிக்கொளப்போம்
பத்துவகைச் சத்தியின்க பம்.

(பொ - ரை) ஓமம் மிளகு வசம்பு இந்துப்பு திப்பிலி தக்கோலம் எனுமிவற்றைச் சமமாக நிறுத்தெடுத்து, பசுவின் கோமயத்தாலரைத்து, அதனளவு பனைவட்டுங் கூட்டிக் கொள்ள, பத்துவகை வாந்தியும் கபமும் நீங்குமென்பதாம்.

## இளைப்புநோய் நீங்க

676 வாராக பட்சணியை மாத்திரமுண் டாலுமுண்ட
பேராக நாளும் பெருக்குமே—நேராக
மாவாக்கி யக்கார மாகிருத மாதுடியால்
கோவாக்கி வைக்குங் குணம்.

(பொ - ரை) கோரைக் கிழங்கை வேறொன்றும் கூட்டாமல் இடித்து மாவாக்கிச் சிற்றுண்டியாகச் செய்தருந்தினும் உண்டவர் உடம்பை நலம்பட வளம் படுத்தும்; அன்றியும் அதனையே மாவாக்கி வெல்லம் பசுநெய் பேரேலம் கூட்டியருந்தின் அதன் குண நன்மையால் அரசனுக்கி வைக்கும் என்பதாம்.

## காலசதி நீக்க

677 காற்பலமுண் டாகாமுன் காற்பலமுண் டாவதுமெய்
காற்பாச வித்துங் கடிப்பகையு—மேற்புறணி

யில்லமுநேர் சூரணஞ்செய் திஞ்சி ரசத்தினிற்ருன்
செல்ல லுருவசதி தீர்ந்து.

(பொ - ரை) பருத்திவிதை வேப்பம்பட்டை தேற்ருன்வித்து மூன்றும் சமமாகச் சூரணம் செய்து இஞ்சிச் சாற்றிலுட் கொள்ளின், நடக்க முடியாத காலசதி தீர்ந்து கால்களில் நல்ல பலமுண்டாகும் என்பதாம்; 'காற்பலமுண் டாகாமுன் காற்பலமுண் டாவது மெய்' என்னும் தொடரில் உள்ள நயம் உய்த்துணர்ந்து மகிழ்க.

## இனிய குரல் உண்டாக

678 ஆனந்தத் தேனை யருந்திறைற் போற்கீத
கானந்தப் பாதுவருங் கண்டத்திற்—றேனுந்துப்
புஞ்சுக்குந் திப்பிலியும் போசனகு டாரியுமிவ்
வஞ்சுக்கு மெப்படியு மாம்.

(பொ - ரை) சுக்கு திப்பிலி சீரகம் மூன்றையும் பொடி செய்து தேனும் நெய்யும் கூட்டி மத்தித்துட் கொள்ளின், பேரின்பப் பெருந்தே னருந்திறைற் போன்று பண்ணிசைக்கும் இனிய குரலுடைய கீதகானம் கண்டத்திற் பொருந்தும் என்பதாம்.

## காமாலை மண்டைவலிக்கு

679 ஆடுதின்ருப் பாளை யமுக்கிரு நன்ருரி
கூடு மிவைகளின்வேர் கூட்டியரைத்—தாடகிபோல்
உண்டைசெய்து நெய்யி லுரைத்திடப்போங் காமாலை
மண்டைவலி போமுரையா மல்.

(பொ - ரை) ஆடு தீண்டாப்பாளை, அமுக்கிரு, நன்ருரி இவைகளின் வேரைக் கூட்டி யரைத்துத் துவரையளவு உருட்டி மாத்திரை செய்து நெய்யில் உரைத்திட, காமாலை மண்டைவலியாகிய நோய்கள் சொல்லாமற் போய்விடும் என்பதாம்.

## மாலைக் கண்ணுக்கு

680 காலைக்கண் ணுகக் கருதி நடப்பாரும்
மாலைக்கண் ணுக மரிப்பாரும்—பாலிற்கை

யாந்தகரை நாரத்தை யாமலக மிட்டதனை
மாந்துமுறை கேளா தவர்.

(பொ - ரை) காலையே கண்ணாகக் கொண்டு நடப்பவரும் (கண் தெரியாத குருடர்) மாலைக் கண்ணோயால் இறந்துபடுவாரும் ஆகிய இவ்விருவகை நோயினரும், கையாந்தகரை நாரத்தை நெல்லிமுள்ளி மூன்றையும் பாலிலிட்டுக் காய்ச்சி யருந்தி மேற் கண்ட நோய்களைப் போக்கிக் கொள்ளும்வகை தெரியாதவ ராவார். இம்முறையை மேற்கொண்டால் மேற்படி நோய் தீர்ந் தொழியுமென்பதாம்.

## கண் புகைச்சலுக்கு

681 கோல மருப்புந்தக் கோலமுமா டப்பருப்பும்
ஏலமுங் கூட்டி யிளநீர்வார்த்—தேல
அரைத்துண்டை யாக்கி யதையரைத்து நெய்யிற்
பொருத்துமுனே கண்புகைச்சல் போம்.

(பொ - ரை) பன்றிக் கொம்பும் தக்கோலமும் உளுத்தம் பருப்பும் ஏலமும் கூட்டி இளநீர் விட்டு மைபோலரைத்து உருட்டி உலர்த்திய மாத்திரையை நெய்யிலுரைத்துக் கண்ணில் இட்டு வரக் கண் புகைச்சல் தீரும் என்பதாம்.

## காரகத்திற்கு

682 சீந்திற் சருக்கரைநெய் சீரகமக் காரமறை
காந்திதின மானமா கலந்துண்ணச்—சாந்தியதாங்
காரகமூப் பானேருங் காளையரா வார்நலிபோஞ்
சீரகமுண் டாகுமிது செய்.

(பொ - ரை) சீந்திற் சர்க்கரை நெய் சீரகம் வெல்லம் ஆகிய வற்றைக் கைமுறை செய்து சூரிய கிரகண நாளில் (காந்திமறை தினம்) மாவுடன் கூட்டியுண்ண உஷ்ணநோய் சாந்தப்படும்; மூப் படைந்த முதியோரும் நரை திரை நீங்கிக் காளைப் பருவத்தின ராவார்; உடல் நலிவுகள் தீரும்; சீர்மை உடம்பினுள் உண்டாம்.

## சூலை, பித்தசன்னி, சோகை, குன்மம், காலெரிவுக்கு

683 கொண்டைக் கனிவற்றல் கூவிளப்பிஞ் சும்மஃதி
ரெண்டைப் பொடிசெய்து நெய்கலந்து—மண்டலமுண்

சூலையுறு பித்தசன்னி தொந்தித்த சோகைகுன்மங்
காலெரிவு மாறவென்றக் கால்.

(பொ - ரை) சூலை மிகுதியாகிய பித்தசன்னி தொந்தப்பட்ட சோகை குன்மம் காலெரிவு முதலிய நோய்களெல்லாம் தீர வேண்டின், இலந்தை வற்றலும் வில்வப் பிஞ்சும் ஆகிய இரண்டையும் பொடியாகச் செய்து நெய்யுடன் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ள மேற்கண்ட நோய்கள் யாவும் நீங்கும் என்பதாம்.

## விக்கல், தொண்டைப்புண், அரோசிகம் தீர

684 துடிசீ ரகமதிங்கந் தொந்தித்து வாட்டிப்
பொடியாக்கித் தேனிலது போட்டே—அடிநாக்கிற்
பூசுமுன்னே விக்கலறும் புண்மாறுந் தாகமிலா
ரோசிகம்போம் வேதைத விரும்.

(பொ - ரை) ஏலம் சீரகம் அதிவிடையம் மூன்றையும் சமன் கூட்டி வறுத்துப் பொடியாக்கித் தேனிற் கலந்து அடிநாக்கிற்றடவ விக்கல் தீரும்; தொண்டைப்புண் மாறும்; பசி தாகம் நீங்க உண்டாகிய, உணவு வெறுப்பு (அன்னத் துவேஷம்) நீங்கும்; வேதனை தீரும் என்பதாம்.

## வாத சுரத்திற்கு

685 கோட்ட மிலவங்கங் கோரோ சனைலவணங்
காட்டு மிவைகடமைக் காற்கூருய்க்—கூட்டுபொடி
ஆத லெனப்பிரசத் தாலுணது வேயடரும்
வாதசுரத் தைக்கொலுந மன்.

(பொ - ரை) கோஷ்டம், இலவங்கம், கோரோசனை, உப்பு என்னுமிவைகளை காற்பங்கு வீதமாகக் கூட்டிப் பொடிசெய்து தேனிலனுபானித் துண்ணின் அது உடற் கருவிகளை யடர்ந்து சிதைக்கும் வாதசுரத்தை அழிக்கும் நமனுகும்.

## வாய் வன்மை, புத்தி தெளிவு உண்டாக

686 வாய்த்தாட்டி யுண்டா மனது தெளிவுண்டாம்
நோய்த்தாட்டி யெல்லா நொறுங்குமே—வாய்த்தமுலைப்

பாலோ டதிமதுரம் பற்பாடங் கோட்டமிரு
காலுமொரு திங்களுண்டக் கால்.

(பொ - ரை) தாய்ப்பாலில் அதிமதுரம் பற்பாடகம் கோஷ்டம் மூன்றையும் மத்தித்து நாள்தோறும் காலை மாலை இரு பொழுதுங் கொள்ள, நோய்க்கடுமைகளை யெல்லாம் அடக்கி வாய் வன்மையைத் தந்து புத்தியைத் தெளிவித்து வளம்படச் செய்யு மென்பதாம்.

## தெத்துவாய் போக

687 கரிசலாங் கண்ணி கறிசுக்கு மேனி
பிரசந் தனியே பிசறி—யருணுதயம்
மேய்போது மாதமுண வேதாகம சாஸ்திரம்
வாய்வாயா குந்தெத்து வாய்.

(பொ - ரை) கரிசலாங்கண்ணி, மிளகு, சுக்கு, குப்பைமேனி இவைகளைத் தேனிற் கலந்து அருணோதயமாகும்போது ஒரு மாதம் உண்ண, தெத்துவாய் (தடுமாற்றம்) நீங்கி வேதாகம சாஸ்திரங்களைச் சிக்கற வோதும் வாயாக வாய்க்கும் என்பதாம். அருண + உதயம் - அருணோதயம் என விருத்தி சந்தியாக வரற்பாலதாகிய தொடர் சந்தவின்பம் நோக்கி அருணுதையமெனக் குணசந்தி யாயிற்று.

## மாருச்சளி இருமலுக்கு

688 மஞ்சள்கறி காஞ்சொறிமெய் வாய்த்த புழுக்கரிசி
அஞ்சுமா வாக்கி யடைதட்டி—யஞ்சுநாள்
கூஃறு யுணவறுமேற் கொண்ட சளியுடனே
மாருது மீறுமிரு மல்.

(பொ - ரை) மஞ்சள் மிளகு காஞ்சொறிவேர் பெருங்காயம் புழுங்கலரிசி ஐந்தையுங் கூட்டியரைத்து மாவாக்கி அடையாகத் தட்டி அளவாக ஐந்து நாள் உண்ண, சளியுடன் சேர்ந்து மாருத மீறிய இருமல் நோய் நீங்கும் என்பதாம்.

## புகைந்து இருமல், சேத்தும நீர் போக

689 சம்புக் கனியிரதஞ் சாதிக்காய் சாபத்ரி
நம்பிக்கை யாயிழைத்து நாலுநாள்—கெம்புக்கல்
போலருந்தப் போமே புகைந்திருமிச் சேத்துமநீர்
மேலிருந்து காறும் வினை.

(பொ - ரை) நாவற்பழச்சாற்றில் சாதிக்காய் சாதிபத்திரி பொடிசெய்து இழைத்து நம்பிக்கையுடன் நாலுநாள் கெம்புக்கல் அளவு உட்கொள்ள, புகைச்சலுடன் இருமலையும் எழுப்பிச் சேத்தும நீருடன் காறுதலை உண்டாக்கும் நோய் நீங்கும்.

## மூலத்திற்கு

690 ஆசன ரூடி யறுமே சிறுதேனிற்
போசனகு டாரி பொடிசெய்து—ரோசனையும்
போட்டுக் குழைத்துடனே பூசியதை யேயருந்த
நீட்டித்து நில்லாமல் நேர்.

(பொ - ரை) சிறிதளவு தேனில் சீரகப் பொடி கூட்டிக் கோரோசனையும் சேர்த்துக் குழைத்து மேலுக்கும் தடவி உள்ளுக் குங் கொள்ள ஆசனரூடி என்னும் மூலநோய் தீருமென்பதாம்.

## யானைக்கால் கரடு போக

691 வாங்குஞ் சுயோதனனார் மாலை யிரலைமருப்
போங்கு மிதனதனை யொன்றாகத்—தேங்கு
வருடைச் சிறுநீரை வார்த்தரைத்துப் பூசக்
கரடப்ப மீறானைக் கால்.

(பொ - ரை) நந்தியாவர்த்த மலருடன் மான் கொம்புங் கூட்டி இரண்டையும் சேர்த்து ஆட்டுநீரை விட்டரைத்துப் பூசி வர, மீறிய ஆனைக்கால் கரடுகள் நீங்கும்; கரள் தப்ப வாங்கும் என்று கூட்டிப் பொருள் காண்க; கரள் - கரடு.

## வெம்மை, நளிர், உட்டண வாதத்திற்கு

692 வெள்ளுளியைக் காய்ந்தசுதை விட்டரைத்து மீட்டுமதிற்
றுள்ளக் கொதிக்கவைத்துச் சுண்டியபின்—எள்ளளவு

வட்டதிலிட் டுண்ணவெம்மை வாங்கு நளிர்நீங்குந்
தட்டழியு முட்டணவா தம்.

(பொ - ரை) வெள்ளுள்ளியைக் காய்ச்சிய பால் விட்டரைத்துப் பாலிலேயே கொதிக்க வைத்துச் சுண்டிய பிறகு சிறிதளவு பனைவெல்லத்தில் அனுபானித்துண்ண உஷ்ண நோயும் குளிரும் போம்; உஷ்ணவாதமும் நிலைகெட்டு நீங்கும் என்பதாம்.

## குட்டம் போக

693 அசமதா கத்தரிசி யாமலக வித்து
வசலை விரைசமனுய் வைத்து—மசகத்தேன்
விட்டரைத்து ருட்டியப்பு விட்டிழைத் திடப்பறக்கும்
நொட்டெழுத்து குட்டமெட்டு நோய்.

(பொ - ரை) உமி போக்கிய ஓமம் நெல்லிமுள்ளி வசலை விரை மூன்றும் சமனுயெடுத்து, கொசுவின் தேன் விட்டரைத்து உருட்டிய மாத்திரையைத் தண்ணீரிலிழைத் துட்கொள்ளின் அழுத்தித் தள்ளும் குட்ட வகைகள் நீங்கும் என்பதாம்.

## குறிவற்று, புற்றுக்கு

694 வல்லியத்தின் கானகத்தை மர்க்கடத்தெச் சத்துடனே
வெல்லுஞ் சசிநீரை விட்டரைத்த—வில்லைகுறி
வற்றுக்கு நெய்யிலிட வாதைக்கு மோரிலிடப்
புற்றுக்கு நீரிலிடப் போம்.

(பொ - ரை) புலி நகத்தைக் குரங்கின் எச்சத்துடன் கூட்டி கற்பூர நீரில் அரைத்து வில்லையாகச் செய்து நெய்யில் கலந்து தடவ (ஆண் பெண்) குறிகளின் சுருக்கம் போம்; அங்ஙனமே வாதைக்கு மோரிலும் புற்றுக்கு நீரிலும் இட்டு மேற்பூசப் போம் என்பதாம்.

## அரோசகம் நீங்க

695 பாலி லிலவங்கப் பட்டையுஞ்சா பத்திரியும்
மேல வுலர்த்தி யிவையிரண்டிற்—கேல

அதிமதுரங் கூட்டி யரைத்துணத்தே னிற்போங்
கதியாகு மாரோச கம்.

(பொ - ரை) இலவங்கப் பட்டையும் சாபத்திரியும் சமமாகப் பாலி லூறவைத்து உலர்த்தி இவ்விரண்டுக்கும் பொருந்துமளவு அதிமதுரங் கூட்டிப் பால்விட்டரைத்துத் தேனில் அனுபானித்து உண்ண விரைந்து நீங்கும் அரோசகமாகிய நோய் என்பதாம்.

## அத்திசுரம் நீங்க

696 அரிசி வசம்புசம்பு லானவர னன்னை
அரிசி வசம்புசம்பு வானெய்—வரிசைமுதல்
அத்தமுறை மாவாக்கி யந்தத்தி லுண்ணதுவே
யத்திசுர வத்திக் கரி.

(பொ - ரை) கடுக்காய், நெல்லிக்காய், நாவல்வித்து தாமரைக் கொட்டை நிலப்பனைக் கிழங்கு, வாய்விளங்கத்தரிசி வசம்பு, சம்பங்கோரைக் கிழங்கு ஆகியவைகளை முறையே அரைப் பங்கு வீதம் கூட்டி மாவாக்கித் திரிகடியளவு இறுதியிற் கூறிய பசுவின் நெய்யிலுண்ண, அதுவே அத்திசுரமாகிய யானையைப் பாய்ந்து கொல்லும் சிங்கம் போன்றதாம்; சிவ - சிவை; விகாரம். யமகம் பற்றித் திரிபடைந்தது. வ்ரனனை - வரனன்னை என்பது விரித்தல் விகாரம்.

## மேக நோய்க்கு

697 காயிதழி வித்துடனக் காரலிகு சக்கனிநீர்
ஓயா தறிந்தருந்த வுண்மையாய்—நாய்போல
வைதொழிநீ யென்னும் வயித்தியர்முன் னேபயந்து
கைதொழுது நிற்குமே கம்.

(பொ - ரை) கொன்றைக் காயின் வித்தும் வெல்லமும் எலுமிச்சம்பழச்சாற்றுடன் கூட்டிக் குடிநீராக (பானகம்) ச் செய்து வேண்டும்போ தெல்லாம் அருந்தினால், சீ சீ நாயே விலகிப் போவாய் என்று வைது அவிழ்தப் பிரயோகத்தால் விரட்டும் மருத்துவர்க்குப் பயந்து கைகூப்பித் தொழுது விலக விடைகேட்டு நிற்கும் மேக நோய்கள்; இஃதுண்மையே யாம்.

## சூதக வாயுபோக

698 ஆக வொருவச்சி ராயுதமா கும்மருந்து
நாகவல்லிச் சாற்றிலொரு நாளளவும்—வேகவைத்துப்
பாதிரிவே ருப்புகறி பண்பொடியைத் தேனிலுணச்
சூதக வாயுமலை தூள்.

(பொ - ரை) பாதிரிவேர், உப்பு, மிளகு மூன்றையும் பொடியாக்கி வெற்றிலைச்சாற்றில் ஒருநாள் முழுதும் வேகவைத்தெடுத்து அதனைத் தேனில் அனுபானித்துண்ணச் சூதக வாயுவானது மலை வச்சிராயுதத்தால் தூளாக நொறுக்கப்படுமாறுபோல் நீங்கிக் கெடும் என்பதாம்.

## சேத்துமக் கழிச்சலுக்கு

699 சிந்துவா ரத்தளிரும் சீரகமுஞ் சுக்குமரைத்
தந்தநிறைக் காய்ச்சியமு மக்கார—முந்தொடுத்து
வாட்டியனல் முக்காலும் வைத்துணப்போ மைக்கழிச்சல்
காட்டுவ யிறெய்வரு கல்.

(பொ - ரை) நொச்சித் தளிரும் சீரகமும் சுக்கும் என்னும் மூன்றையும் சம அளவாக்கி யரைத்து அதன் கூடுதல் நிறையளவுக்கு நெய்யும் வெல்லமும் கூட்டித் தீயிற் காய்ச்சி வைத்துக் கொண்டு மூன்று வேளையும் உட்கொண்டுவரின் வயிறுளைந்து சுருட்டி வலிகாண வருதலையுடையதான சேத்துமக் கழிச்சல் தீரும் என்பதாம். வருகல் - வருதல். காட்டு - (வினைத்தொகை) தோற்றுவிக்கும்.

## சீதக் கழிச்சலுக்கு

700 சிந்துவா ரத்தழையைச் சேதித்த சுக்குடனே
தொந்தித் தரைத்துமுக்கால் துப்புடனே—வெந்தபின்பு
மீதொக்க வெல்லத்தை விட்டவித்துண் டாலகலுஞ்
சீதக் கழிச்சலெனுந் தீ.

(பொ - ரை) நொச்சியின் தழையும் சுக்கும் சேர்த்து நறுக்கிக் கலந்து அரைத்து மூன்றுபங்கு நெய் விட்டுக் கொதிக்க வைத்து

வெந்தபின் அதனுடன் வெல்லம் கூட்டிக் கிளறிப் பதமாக இறக்கி உண்ணின் சீதபேதியாகிய தீயநோய் தீருமென்பதாம்.

## மேக வெட்டை, வாத வெட்டை, குட்டத்திற்கு

701 முன்பல் லியமெழுப்பி மூலக் கிருதத்தோ
டன்பான போசனகு டாரிகுளந்—தின்போர்க்கு
வாங்குமகா மேகவெட்டை வாதவெட்டை குட்டமுதல்
போங்கடிதல் சிந்தமன்றேற் போம்.

(பொ - ரை) வட்டக்கிலுகிலுப்பை வேர்கொண்டு செய்யப் பட்ட நெய் (கிருதம்) யுடன் சீரகமும் வெல்லக்கட்டியும் சேர்த்துட் கொள்ள பெரிய மேகவெட்டை, வாதவெட்டை, குஷ்டம் அடியோடு நீங்கும்; புளி பத்தியமாக நீக்க வேண்டும்; புளி நீக்காவிடில் மருந்தின் பயன்போம் என்பதாம்.

## முயலக வலி உப்புசம் போக

702 வச்சிர வல்லியைமோர் வார்த்தூற வைத்துலர்த்திக்
கச்சூரஞ் சுக்கு கலந்தபொடி—யைச்சலத்தில்
உண்டால் முயலகன்போ முப்புசம்போந் தக்கிரத்திற்
கொண்டாலா காதுதிலங் கொள்.

(பொ - ரை) பிரண்டையைக் கரணையாக நறுக்கி மோரில் ஊறவைத்துலர்த்தி, பேரீச்சம்பழமும் சுக்கும் சேர்த்துப்பொடித்து நீரிலுண்ண முயலகன் என்னும் வலிநோய் தீரும்; மோரிலுண்ண உப்புசம்போம்; இவ்விரு முறைக்கும் எள்ளும் கொள்ளும் பத்திய மாக நீக்கப்பட வேண்டும் என்பதாம்.

## மிளகு சாம்பற் குடி நீர்

703 வாதபித்த சேட்ப வகைமூன்று மூன்றுகைக்குச்
சாதகமா மிந்தச் சடலத்தை—ஆதரிக்கு
மூலிகைகற் பங்களிலு முத்துமுத்தா கத்தகுமெக்
காலிறுநீர்ச் சாம்பற் கறி.

(பொ - ரை) வாத பித்த சேத்தும வகை நோய்கள் நிலை பெறுதற்குரிய சாதனமாகிய, கருவி கரணங்களும் எழு வகைத்

தாதுக்களும் சேர்ந்துள்ள, மக்களுடம்பிற்கு நோய் நீக்கி யாதரிக்கும் மூலிகைகள் கற்பங்கள் என்று வகைப்படுத்துக் கூறும் அவிழ்தங்களெல்லாவற்றிலும் சிறந்ததாகும், எக்காலமும் மிளகைச் சுட்ட சாம்பலிட்டுறி வடித்த குடிநீர் என்பதாம்.

## மேக குட்டத்திற்கு

704 மாலனந்தற் ரேுலு மறியுண மூலிவித்தும்
மாலெச்சிற் பூவும் வரிசையாய்க்—கால்வாசி
யாகக் குடிநீ ரருந்த வொருமதியில்
மேககுட்ட மெல்லாம் விடும்.

(பொ - ரை) ஆலம்பட்டை ஆடுதீண்டாப்பாளை விதை பூநீறு மூன்றும் சமனய்க் கொண்டு நீர் விட்டுக் காய்ச்சி, கால் பங்காக வற்றிய பின் குடிநீராக அருந்தி வர ஒரு திங்களில் மேக குஷ்ட நோய்கள் யாவும் தீர்ந்துவிடும் என்பதாம்.

## அதிசாரத்திற்கு

705 காமவல்லி சீதை கரிசலாங் கண்ணியறு
காமிவையை மத்தித் தடுப்பேற்றி—வேமுனவ
நீத மரிதகிபெய் நீரிறக்கி மோரொடுண
வேதையதி சாரமறு மே.

(பொ - ரை) நன்னரி வேர், பொன்னுங்கண்ணி, கரிசலாங் கண்ணி, அறுகம் வேர் இவைகளை நறுக்கிக் கலந்து பாண்டத்தில் நீருடன் சேர்த்துக் காய்ச்சும்போது வெண்ணெயும் கடுக்காய்த் தூளும் போட்டுப் பதமாகக் காய்ச்சி இறக்கிப் பசுவின் மோருடன் உட்கொள்ளத் துன்பந்தரும் அதிசாரம் ஆகிய நோய் தீரும்.

## மேக வாதப் பிணிகள் போக

706 சங்கி னதள்பறங்கிச் சக்கைசுக்கு மூன்றுமொரு
பங்காய்க் குடிநீர்பெய் பாண்டத்தில்—பொங்கவைத்து
மாந்தக் கெடுமேக வாதப் பிணிநோய்கள்
சாந்தப் படுமாகந் தான்.

(பொ - ரை) சங்கம் பட்டை, பறங்கிச் சக்கை, சுக்கு மூன்றையும் ஓரளவாகப் பாண்டத்திலிட்டு நீர்விட்டுப் பொங்கக் காய்ச்சி குடிநீராக்கி யுட்கொள்ள மேக வாதப் பிணியாகிய நோய்கள் தீர்ந்து போம்; உடல்நிலை சாந்தப்படும்.

### நரை நீங்க

707 வேங்கைவாய்ப் பின்றேல் விருச்சிகக்கூ லப்பட்டை
பாங்கு வெருகடிவேர் பாலாக—வேங்குடிநீர்
வேளைக்கு வேளை விரும்பவொரு திங்களிலெந்
நாளைக்கு மில்லை நரை.

(பொ - ரை) வேங்கை மரப்பட்டைப் பின்தோலும் தேள் கொடுக்குப் பட்டையும் பூனைக்காலி வேர்ப் பட்டையும் ஒன்று கூட்டிக் காய்ச்சிய குடிநீர் உணவு கொள்ளும் வேளைகளில் நாள் தோறும் ஒரு திங்கள் வரை கொள்ள எந்நாளிலும் நரையணுகா தென்பதாம். பின்றேல் என்றது பட்டையின் உள்புறம் மேற்புறம் என்று இருவகையாக்கிக் கூறினமையால் உய்த்துணர்ந்து ஆமாறு கொள்க. பாலாக என்றமையால் வேர்கள் அரைப்பலம் வீதமாகக் கொள்க.

### தோஷ சுர தாகம் நீங்க

708 தாகமறு மேதறிமு தற்கிரிகை வால்மிளகு
பாகஞ் சமனுக்கிப் பாண்டத்திற்—சாகவேர்
ஒக்கவிட நீர்குறுணி யோர்படியாய்க் காய்ச்சியளி
சிக்குவரு தோஷவிஷஞ் சேர்.

(பொ - ரை) செம்பருத்தி வால்மிளகு இரண்டையும் சமபங்காகக் கொண்டு ஒரு பாண்டத்திலிட்டு அதனோடு கூட, சிறுகீரை வேர் சேர்த்துக் குறுணி நீர் விட்டு ஒரு படியாகச் சுண்ட எரித்துக் காய்ச்சி உண்ணக்கொடுப்பின் தோஷ சுரத்திலுண்டாம் சிக்கு ஆகிய தாகம் தீரும் என்பதாம்.

### பித்த குணம் நீங்க

709 காமனிலாக் கொட்டை கறியிந்துப் போர்நிறையாய்
ரர்முழுதுந் தீபவனல் நண்குடிநீர்—ஆமலக

வித்தின் பொடிகலந்து வெய்யவன்முன் னேகுடிக்கப்
பித்தின் குணமேது பின்.

(பொ - ரை) திப்பிலி இஞ்சி மிளகு இந்துப்பு நான்கும் ஒரு நிறையாகக் கொண்டு நீரிலிட்டுத் தீபவனலாக எரித்து இரா முழுதுங் காய்ச்சி நெல்லிமுள்ளிப் பொடி கலந்து உதயத்தின் முன் அதிகாலேயில் வெறுவயிற்றிற் கொள்ள, பித்தாதிக்கம் தீர்ந்து சமநிலேப் படுமென்பதாம்.

## பித்த சுரம் நீங்க

710 ஆடுமுன்னே விட்டோடு மாதொண்டை வேர்கபித்த
வோடு பிருந்த முறுபுறணி—பாடலப்பூ
வைத்ததுகால் மோரூற வைத்திருநா ளட்டுணவே
பித்தசுர மென்றுவந்த பேய்.

(பொ - ரை) ஆதொண்டை யென்னும் காற்ருேட்டிவேர் விளாம்பழத்திேைடு துளசிப் பட்டை பாதிரிப்பூ நான்கையும் வகைக்குக் கால் பலமாகக் கொண்டு பசு மோரிலூற இரண்டு நாள் வைத்துப் பின் காய்ச்சியுட் கொள்ள, பித்தசுர மென்னும் பெயரோடு வந்த பேய் தன் வலியடங்கி விட்டு நீங்குமென்பதாம்.

## பல்லிறுக

711 செம்மையொடு பன்னேய்போய்த் திண்பல்லாங் கந்திகறுத்
தம்மயில வன்ன யுதத்தளர்க்—கம்மிவையொன்
ருக்குங் குடிநீரை யஞ்சுநா ளுண்ணரவி
போக்கும் பனியிருள்கள் போல்.

(பொ - ரை) களிப்பாக்குத்தூள் கருவேலம்பட்டைத்தூள் எருக்கம்பட்டைத்தூள் என்னு மூன்றையும் நீரிற் சேர்த்துக் காய்ச்சிக் குடிநீராக்கி ஐந்து நாள் கொப்பளிக்க பல்லீற்றில் இரத்தம் வருதலுடன் பல் நோய் பலவும் இரவிமுன் பனி நீங்கு மாறு போல் நீங்கும். பற்கள் திண்மையடையும்; ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால் உண்ணவென்பதை வாய்கொப்பளித்தலாகக் கொள்ளப்பட்டது.

## காசம் தீர

712 இந்திரன்பார் மாறன்ரு ரீர்க்கு மிளகுசுக்குந்
தொந்த மிகுகுடிநீர் சோதனைபோ—லைந்துநாள்
காலமிரண் டும்பருகக் காசம் புலிமுனசம்
போல மிரண்டுருண்டு போம்.

(பொ-.ரை) மருதம்பட்டை வேப்பீர்க்கு மிளகு சுக்கு நான்கையும் சமமாகக் கலந்திடித்துக் குடிநீர் காய்ச்சி, இக் கைமுறையைப் பரீட்சிப்பது போல் ஐந்து நாள் காலை மாலை இரு வேளையும் பருகிவரின் காசநோயானது புலியை எதிர்ப்பட்ட ஆட்டைப் போல் மிரண்டு வெருவி விலகி நீங்கும் என்பதாம்.

## திரை நீங்க

713 அங்கோல வித்து மரனிம்ப வேர்ப்புறனும்
தங்கு வரனனையின் தண்டுலமும்—பங்கீடாய்
ஆண்டோ ரரைக்கா லருந்தக் குடி நீராய்த்
தீண்டா துடம்பிற் றிரை.

(பொ-ரை) அழிஞ்சில் வித்தும் சிவனார் வேம்பின் வேர்ப் பட்டையும் வாய் விளங்கத்தரிசியும் ஒரு சமனாய்க் கொண்டு, குடிநீராக்கி ஒரு மண்டலம் உட்கொள்ள உடம்பினிடத்துண்டாம் திரை(தோற் சுருக்கம்) உண்டாகாதென்பதாம். ஆண்டோ ரரைக் கால்-ஒன்றரைத் திங்கள்.

## உப்புசம் தீர

714 தந்தி யதள்கா தணியோம்பிப் பூவிரண்டுந்
தொந்தித்து நீரிற் சுடவைத்துக்—கந்திசில
போட்டிறக்கா முன்னுப் புசமா னதுதலையைக்
கேட்டிறக்கிக் கொள்வதுகெட் டி.

(பொ-ரை) அத்திப்பட்டை நெட்டிப்பூ இரண்டையும் நீரிற் கலந்து காய்ச்சி அதில் சில மணப்பொருள்களை இட்டு அருந்து முன்னேயே வயிற்றுப்புசம் நீங்கும்; பின்னிரண்டடிகளிலுள்ள அணி நயம் காண்க.

## உட்டணவாதம் உளைப்பு ஈளை தீர

715 உட்டண வாத முளைப்பீளை யாதிவினை
கெட்டகல வென்று கெலிக்குமே—சுட்டகறி
இஞ்சிரசங் கற்கண் டிளநீ ருடனருந்தில்
அஞ்சுதினந் தன்னிலிதை யா.

(பொ-ரை) உஷ்ணவாதம் உளைப்பு ஈளை முதலிய நோய்கள் கெட்டு நீங்கும் படி அவற்றை வென்று தீர்க்கும்; மிளகை வறுத்துப் பொடித்து முறையே இஞ்சிச் சாற்றிலும் கற்கண்டுத் தூளிலும் இளநீரிலும் ஐந்து நாள் அருந்திஞல் தீர்க்கும் என்பதாம்; இஞ்சி நீரில் வாதமும், கற்கண்டுத் தூளில் உளைப்பும் இளநீரில் ஈளையுந் தீருமென்று நிரல் நிரையாகக் கொள்க.

## விஷசுரம் தீர

716 எல்லா மகலு மெழுநாவாற் சீவனத்தை
நல்லா யெரித்திறக்கி நாவிகணை—வில்லிவ்வகள்
போட்டாடா தோடையிலை போட்டதுபா னிக்கவெளி
காட்டா விஷச்சுரச்செய் கை.

(பொ-ரை) நாவி, திப்பிலி மனேசிலை மூன்றையும் நீரிலிட்டுக் காய்ச்சி ஆடாதோடையிலையும் போட்டிறக்கிய குடிநீரையருந்த விஷசுரத்தின் வேகம் வெளிப்படா தடங்கும் என்பதாம். எழுநா-தீ. அளவு கூறப்படவில்லையாகையால் ஏற்ற பெற்றி யறிந்து செய்து கொள்ளவும்; மனேசிலையைப் பற்பமாகக் கொள்ளவும்.

## வாத பித்த கபம் தன்னிலை அடைய

717 வாதபித்த சேட்ப வகைமூன்று மோர்நிலையாய்
ஆதரிக்க வேணுமென்ரு லச்சவித்து—மாதளைவித்
துங்கறியு மொன்ருகத் தொந்தித்து நீரளைதேன்
பங்கறியக் கொள்வார் பார்.

(பொ-ரை) அகத்திவிரை மாதளைவிரை மிளகு மூன்றையும் சமன் கொண்டு பொடித்துக் கலந்து அளவாக நீரில் கொள்ள வாதமும், தயிரில் கொள்ளப் பித்தமும், தேனிற் கொள்ள சேத்துமமும் தத்தம் நிலை தவருமல் உடலையாதரிக்கும் என்பதாம்.

## பல்லே தீர

718 சொல்லுந் திரிகடுகுந் தும்பைமெய்யுங் காவட்டம்
புல்லுஞ் சயிந்துப் புடன்குடிநீர்—அல்லும்
பகலுங் கொளக்கோவை பற்றறுமுன் பல்லே
யகலும் பசிமிகுதி யாம்.

(பொ - ரை) திரிகடுகு தும்பை பெருங்காயம் காவட்டம்புல் இந்துப்பு என்று சொல்லப்படுகின்ற ஐந்தும் அளவுசெய்து கூட்டிக் குடிநீர் காய்ச்சி இரவும் பகலுமாகிய இரு காலமும் பருகி வர நீர்க்கோவையும் பல்லே நோயுமகலும்; பசி மிகுதியாம். இரவிலுண்ண நீர்க்கோவை நீங்கும் பகலுண்ணப் பல்லே நோய் தீரும் என்றுகொண்டு நிரல் நிரையாக்கினுமமையும்.

## பித்த சன்னிக்கு

719 கூவிளத்தின் வேரும் கொடிவேலி யின்வேரும்
காவேளே வேருங் கஷாயமாய்—வேவித்த
சுத்தசலங் தன்னின்மது தூவிக் குடிக்கவறும்
பித்தசன்னி வாதப் பிணி.

(பொ - ரை) வில்வவேரும் கொடிவேலி வேரும் காய்வேளே வேரும் என்னும் மூன்றையும் நல்ல நீரிற் கஷாயமாகக் காய்ச்சி அக்கஷாயத்தில் தேன் விட்டுக் குடிக்க பித்த சன்னியும் வாதப் பிணியும் நீங்கும் என்பதாம்.

## நடுக்குவாதம் தீர

720 தவசிவேர் காஞ்சொறிவேர் தாதகிவேர் மூன்றுங்
கவலே யறுகுடிநீர் காய்ச்சிச்—செவ்வையாய்
மடுக்க விருபோதும் வாரத்துக் குள்ளே
நடுக்குவா தம்போ நலிந்து.

(பொ - ரை) தவசி முருங்கை வேர் காஞ்சொறிவேர் ஆத்தியின் வேர் ஆகிய மூன்றையும் நீரிற்காய்ச்சிக் குடிநீராக்கி நன்முறையாய் இரு நேரமும் உட்கொண்டு வர ஒரு வாரத்தினுள்ளேயே நடுக்குவாதமாகிய நோய் நலிந்தொழிந்து தீர்ந்து போம் என்பதாம்.

## அதிசாரம், குன்மம் தீர

721 ஆறு ரிலைமுகிள்கா யாச்சுதையா லட்டதனைத்
தேனீர் நவநீதஞ் சீனியனு—பானமெனக்
கொண்டா லதிசாரங் குன்ம மெரியுருக்கு
விண்டோடும் பொய்யலா மெய்.

(பொ - ரை) அத்தியின் இலை, துளிர், காய் ஆகிய மூன்றையும் பசுவின் பாலில் சேர்த்துக் காய்ச்சி தேனிலுண்ண அதிசாரம் போம்; நீரிலுண்ணக் குன்மம் போம், வெண்ணெயிலுண்ண: எரி குன்மம் போம், சீனியிலுண்ண எரி குன்மம் போம், இது பொய்யன்று மெய்யேயாம் என்பதாம்.

## திமிர்வாத வாயு போக

722 அங்கோல மெட்டி யதவுவேர்ப் பட்டைகளைப்
பங்கோடு காய்ச்சிப் பருகவே—திங்கள்
அமைய வதைத்தானே யட்டறலா லாடத்
திமிர்வாயு தெல்லாந் தீர்ம்.

(பொ - ரை) அழிஞ்சில் எட்டி அத்தி எனுமூன்றின் வேர்ப் பட்டை சம எடை கொண்டு நீர் சேர்த்துக் காய்ச்சி ஒரு திங்கள் பருகியும், மேற்கண்ட சரக்குகளை நீரிலிட்டுக் காய்ச்சி அந்நீரைக் குளிநீராகக் கொண்டு முழுகியும் வர உடம்பிலுள்ள திமிர்வாயு முழுதும் தீருமென்பதாம்.

## சீத சுரம் தீர

723 பிரசத்திற் சீவனத்தைப் பொய்யாமுன் சீத
சுரசத்தை விட்டோடுந் தூர—வரசுக்கு
மந்திரிபோ லானளிரும் வந்தவழி யைப்பார்க்கு
மிந்தமுறை யையமிலை யே.

(பொ - ரை) தேனில் நீரைக் கலந்துண்ணத் தொடங்கு முன்னமேயே, சீதசுரமானது தான் நின்ற விடத்தை விட்டகலும் தூரத்தே; அரசாகிய வாதத்திற்கு மந்திரியாகிய பித்தத்தைப் போன்ற, சுரத்துக்கு மந்திரி போன்றிருந்த நளிரும் வந்த வழியைப்

பார்த்து மீண்டும் போம்; இந்த முறை ஐயமில்லாத செய்முறையாம். "பயப்படு பிரசமுன் பழகு மைச்சுரம், பயப்படும்" என இவ்வாசிரியர் தம் கரிசல் நூலில் கூறியுள்ளமையும் காண்க.

### கை முடம் நீங்க

724 ஏடேக கோகனக மேரண்ட வேர்ப்பட்டை
யீடா நிறுத்தவிடை மாலூரம்—கோடாமல்
வெம்புனலோர் மண்டலங்கொள் மேலுந் தடவுவச்ரக்
கம்பியா கும்முடவன் கை.

(பொ - ரை) ஓரிலைத் தாமரையும் ஆமணக்கு வேரின் பட்டையும் சமனுக நிறுத்தெடுத்து அவ்விரண்டின் அளவாக வில்வ வேரும் கூட்டி, பிசகாமல் காய்ச்சிய குடிநீரை ஒரு மண்டலம் உட்கொண்டும் மேலுக்குத் தடவியும் வரின் முடம்பட்ட கை முடம் தீர்ந்து வச்சிரக் கம்பி போலாகும்.

### கால் முடம் நீங்க

725 ஆம்பிரம் பிண்டி யரிதகியி லாக்கொட்டை
காம்பீர வேர்கள் கஷாயமாய்த்—தாம்பிறிவு
கால்கால்கால் கால்பங்கு காய்ச்சியுண மண்டலத்திற்
கால்கால்கால் கால்பங்கு கால்.

(பொ - ரை) மா அசோகு கடுக்காய் இஞ்சி முருக்கு ஆகிய வற்றின் வேர்கள் ஒவ்வொரு வகைக்கும் கால்பங்கு வீதம் எடுத்துக் கூட்டி நீர் விட்டுக் காய்ச்சி காற்பங்காகச் சுண்டக் காய்ந்த நீரையுண்ண ஒரு மண்டலத்தில் முடவன் கால் முடம் நீங்கி முழுக் காலாகும் என்பதாம். பங்கு கால் - முடவன்கால்; கால் கால் கால் கால் - நாலு கால் ஒரு கால்; முழுக்காலாகும் என்க.

### மாட்டுக்கு வரும் கோமாரி, அடைப்பு, வெக்கை தீர

726 மாட்டுக்கு ரோகங்கோ மாரி யடைப்புவெக்கை
காட்டுப் பிலாவேர் கடுக்காய்வேர்—வீட்டுப்
பிளநீர்மோர் காடிகஞ்சி யென்னு மிதிற்கூட்டி
யுள்வார்க்க முன்னரொழி யும்.

(பொ - ரை) பசுமாடுகளுக்கு வரும் நோய்களான கோமாரி, அடைப்பான், வெக்கை முதலானவைகள் காட்டுப்பலாவின் வேர், கடுக்காய்வேர், சோற்றுப்பு ஆகியவைகளை முறைப்படி பாகம் செய்து இளநீர், மோர், காடி, கஞ்சி என்னுமிவைகளில் ஒன்றில் கலந்து உட்புகட்டினால் மேற்படி நோய்கள் தீர்ந்து போமென்பதாம்.

## விடசன்னி, கபநாடி மீண்டு கட்டுப்பட

727 வன்னிச் சிறையடலை: மாலனந்தற்: பாலிலுணக்
கன்னிச் சிறைபோங் கதைபோலச்—சன்னிவிடம்
விட்டுக் கபநாடி மீளா ததுமீண்டு
கட்டுப் படுஞ்செய்து காண்.

(பொ - ரை) கிளியிறகுப் பற்பத்தை ஆலம்பாலில் கலந்துட் கொள்ளின், விடசன்னி நீங்கி, மீளாத சேத்தும நாடி தன்னிலையடைந்து கட்டுப்பட்டு நன்னிலையடையும்; இதற்குவமையாக வரும் கன்னிச் சிறை போங்கதையாவது, தலைவனுடன் உடன்போக் கொருப்பட்ட தலைமகள் நற்றாயின் இற்செறிப்பிலிருந்து பற்றற நீங்கிய துறைக்கருத்து அமையப் பெற்றுள்ளது காண்க.

## வெம்மை, பித்தம்

728 வெம்மையறும்: பித்த வியாதியறுங் . குன்மமறுஞ்
செம்மை பிறக்குமகா தேகத்துக்—கிம்மையிலே
தானேகொள் சீதை சதகுப்பி யாமலகி
யானேய மாடுமுறை யால்.

(பொ - ரை) பொன்னாங்கண்ணி, சதகுப்பை, நெல்லி. இவை மூன்றும் சேர்த்து எண்ணெய் கூட்டிக் காய்ச்சித் தயிலமாக வடித்துப் பூசி வெந்நீர் விட்டு முழுகி வரும் முறையைக் கைக்கொள்ளின் உடல் வெப்பம் பித்த நோய்கள் குன்ம நோய்கள் நீங்கி செவ்விய உடல்நலம் வாய்க்கும்.

## பெருநோய் தீர

729 காஞ்சிரத்தின் வித்துங் கணிப்பிசினுந் தாதகியின்
பூஞ்சினையு மொன்றாய்ப் புடைத்ததனில்—வாஞ்சநெய்யை

ஐவனமா வோடுண் டதைமாத்தி ரம்பூச

நொய்வனமாப் போம்பெரிய நோய்.

(பொ - ரை) எட்டிவித்து, வேங்கைப்பிசின், ஆத்தியின் அரும்பு மூன்றையும் ஒரு அளவாக எடுத்து நறுக்கி அதனுடன் வாஞ்சை தரும் நெய் கூட்டி மலைநெல்லின் மாவுடன் சேர்த்துட் கொண்டும், மாவை நீக்கி மேலுக்குப் பூசியும் வரின் பெரு நோயா கிய தொழுநோய் (குட்ட நோய்) தீப்பற்றிய கானகம் வேகுமாறு நீங்குமென்பதாம். நொய்வனம் - அழிந்த காடு; ஐவனம் - மலைநெல்.

## உச்சிப்பிளவை தீர

730 வாச வரிசனமும் வன்மீ னடிநகமும்

ரோசனையு நைய நொறுக்கியே—காசளவு

பச்சைப் புனுகுடனெய் பக்குவமா யட்டதிட

வுச்சிப் பிளவையொழி யும்.

(பொ - ரை) கத்தூரி மஞ்சள் முதலைக்கால் நகம் கோரோ சனை மூன்றையும் நைய இடித்துப் பொடியாக்கி, காசளவு பச்சைப் புனுகும் நெய்யும் சேர்த்துக் காய்ச்சிய மருந்தைத் தடவிச் சீலை யாற் கட்டி வரின் உச்சிப் பிளவை நீங்கும் என்பதாம்.

## உச்சிப்பிளவை தீர

731 வெள்ளாட்டுப் பாலும் வெதுப்படக்கிச் சாறுநிறை

கொள்ளவதி லேகறுத்த கொள்ளையிட்டக்—கொள்ளளவு

காட்டா மணக்கின்வேர் காணப் பொடிசெய்து

போட்டாலுச் சிப்பிளவை போம்.

(பொ - ரை) வெள்ளாட்டின் பாலும் வெதுப்படக்கிச் சாறும் ஒரு நிறையாகக் கொண்டு அத்துடன் கருங்கொள்ளைக் கூட்டி, கூட்டிய கொள்ளின் அளவு காட்டாமணக்கின் வேரைப் பொடி செய்து கூட்டியாக்கிய பற்றைத் தடவிச் சீலையிட்டுக் கட்டிவரின் உச்சிப்பிளவை நீங்கும் என்பதாம்.

## துர்ச்சன்னி வர்க்கம்

732 நாகவல் லிச்சாறு நாரணன்றூர்ப் பன்னரசம்

ஆகுமிதற் கெண்ணெயிரண் டாகவே—வேக

மரிச மரிசனம்பெய் மாதயில மீதாற்
கரிசறுந்துர்ச் சன்னிவற் கம்.

(பொ - ரை) வெற்றிலைச்சாறு துளசிச்சாறு இரண்டையும் சம அளவாகக் கொண்டு சாற்றின் இரு பங்கு எண்ணெய் சேர்த்து அதில் காரமுள்ள புதிய மிளகு மஞ்சள் இரண்டையும் சேர்த்துத் தயிலமாக எரித்துப் பதத்தில் வடித்துக் காசளவு உட்கொள்ளின் துற்சன்னி வகைகளின் கடுமை தீர்ந்து நீங்குமென்பதாம்.

## பித்தசன்னி தீர

733 கையாந் தகரைபொன்னுங் காணி பொடுதலைநீர்
நையா தொருபடிநெய் நாலிலொன்று—பெய்தெண்ணெய்
முத்தக்கா சோம மிளகிட்டட் டாடிலறும்
பித்தசன்னி யென்னும் பிணி.

(பொ - ரை) கையாந்தகரை பொன்னுங்கண்ணி பொடுதலை யாகிய மூன்றின் சாறு சமமாக ஒரு படி எடுத்து அதற்கு நாலி லொரு பங்கு ஆவின் நெய் சேர்த்து, சாற்றளவுக்குச் சமமாக எண் ணெய் சேர்த்து, முத்தக்காசு ஓமம் மிளகு ஆகிய மூன்று கற்கத் திரவியங்களை மேற்கண்ட சாற்றிலரைத்து அவற்றுடன் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து முழுகிவரின் பித்தசன்னி யென்னும் நோய் தீருமென்பதாம்.

## பாரிசவாயு தீர

734 ஓர்பாதி மெய்யி லுறுப்பசரு முண்சரும
மார்போயும் பாரிச வாயுவிது—தீரும்
முறைகாஞ் சிரநிம்ப மோடித் தயிலம்
வறுநென்மா விற்கொள்மரு மம்.

(பொ - ரை) உடம்பிலுள்ள உறுப்புகளில் ஒரு:பக்கத்திலுள் ளனவாகிய உறுப்புகளும் ஒரு புறத்து மார்பும் சோர்ந்து அயர்ந்து உணர்வு நீங்கும்; இங்ஙனமாயின் அது பாரிச வாய்வு எனப்படும்; இது தீர்வதற்கு முறையாவது எட்டி வேம்பு திப்பிலி மூலம் இவை சேர்த்துச் செய்யப்பட்ட தைலத்தை வறுத்த நெல் லின் மாவில் (பொரிமா) கொள்ளவும்; இது மர்மமான முறை யாகும்.

## காதிரைச்சல்

735 வுச்சிர வல்லி மதுவிந்த வேரிரண்டுக்
குச்ச மரிசமரைத் தொன்ருக்கிப்—பச்சையெண்ணெய்
நீசமிரா தட்டாட நீங்குஞ் செவிடடைப்பி
சாசமென்னுங் காதிரைச்சல் தான்

(பொ - ரை) பிரண்டை இலுப்பை என்னுமிவ் விரண்டின் வேருடன் இவற்றின் அளவுக்கு அதிகமாகவே மிளகும் கூட்டி யரைத்து ஒன்ருகச் சேர்த்துப் பச்சை எண்ணெயிற் கலந்து காய்ச்சி முழுகிவரின் காதிரைச்சலால் ஏற்பட்ட செவிடடைப்பு என்னும் பைசாசம் நீங்குமென்பதாம்.

## பிறவிச் செவிடு தீர

736 தக்கோலம் வானவம்பு சங்கணி யருக்கமிவை
யிக்கிளநீர் கால்வாசி யெண்ணெய்செய்—தக்காயோர்
மாத முழுகவிதழ் மாற்றமுங்கேட் குஞ்செவிடர்
காதுபிற விச்செவிடன் காது.

(பொ - ரை) தக்கோலம் ஆகாயத் தாமரை வேங்கை எருக்கு இவற்றைக் கருப்பஞ்சாறு இளநீர் இவற்றுடன் கூட்டி இளநீர் கருப்பஞ்சாறுகளின் அளவுக்குக் கால்வாசி எண்ணெய் கூட்டி எரித்துத் தயிலமாக்கித் தக்கபடி ஒரு திங்கள் முழுகிவரின், இத முசைத்து முணுமுணுக்கும் சிறு குரலும் பிறவிச் செவிடு இடை யிட்ட செவிடுகளும் நீங்கிக் காது நன்ருகக் கேட்கும் என்பதாம்.

## செம்பட்டை தீர

737 நாய்ப்பாகல் வித்தும் நரிப்பயற்றங் காய்விரையும்
பேய்ப்பீர்க்கின் சாற்றிற் பிசறியே—வாய்ப்பாகக்
கையாந் தகரையெண்ணெய் காய்ச்சி யதுபூச
மையாஞ்செம் பட்டை மயிர்.

(பொ - ரை) நாய்ப்பாகல் விரையும் நரிப் பயற்றங்காய் விரையும் சம அளவு கூட்டிப் பேய்ப் பீர்க்கின் சாறும் கையாந்தக ரைச் சாறும் கூட்டி எண்ணெயில் கலந்து காய்ச்சித் தலைக்கிட்டு

வரின் செம்பட்டையான தலைமயிர் கரிய நிற மை போற் கறுத்து வளம்பெறு மென்பதாம்.

## சூசிகா வாய்வு நீங்க

738 கொடிவேலி வேர்கடுகு குன்றிவித்து மூன்றும்
குடிநீ ரதிலரக்குக் கோட்டம்—பொடியாய்ப்
பழவெல் லமுமிட்டுப் பண்ணு மிலேக
மொழிசூ சிகவாய்வுக் குண்.

(பொ - ரை) கொடிவேலிவேர் கடுகு குன்றிவித்து மூன்றையும் நீர் சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி அதனுடன் பழவெல்லமும் சேர்த்துப் பாகு கிண்டி அதில் அரக்கும் கோஷ்டமும் பொடி செய்து சேர்த்து இலேகியமாகக் கிளறி உட்கொள்ளின் சூதக வாய்வு தீரும் என்பதாம்.

## சிரநீர் நோய்க்கு

739 மெய்யதனில் வாதுமையின் வித்தை நனைத்தெடுத்து
நெய்யிறைச்சி நாவியுட னேருரைத்துப்—பையவொரு
நாசிவிட்டு நாசிவிட நாடாச் சிரநீர்நோய்
ஆசு முகவசிய மாம்.

(பொ - ரை) வாதுமைப் பருப்பையும், புனுகுச் சட்டத்தையும் நெய்யிலிட்டுக் காய்ச்சி ஒரு நாசித் துளையை விட்டு மற்றொரு நாசியில் நசியமாக விட்டால் தலையில் உண்டாகிய நீர்க்கோவை அகலும்; பின் மீண்டும் நாடாது. முகவசியமும் உடலழகும் உண்டாம்.

## இஞ்சி இரசாயனம்

740 பசியுண்டா நல்ல பலமுண்டாந் தெய்வ
ருசியுண்டா முண்டாம ரோகம்—ரசாயனமி
லாக்கொட்டை யைப்புரிந்து நாற்பதுநா ளுண்போர்க்கு
நோய்க்கூட்டத் துக்கதுவே நோய்.

(பொ - ரை) இஞ்சியை இரசாயன முறையாற் கைப்பாகம் செய்து நாற்பதுநாளுண்ணுமவர்க்கு நல்ல பசித்தீபனமும் உடல்

வலிமையுமுண்டாம்; உண்ணுமுணவு வகைகளின் நல்ல சுவையறியுந்தன்மை நாவிற்குண்டாம்; உடலுக்கு நோய்களில்லாதவாறு ஆரோக்கியமுண்டாம்; ஒருதலையாகக் கூறின் உடலைப்பற்றும் நோய்க்கணங்களுக்கு மேற்கண்ட இஞ்சி ரசாயனமே நோய்செய்து நீக்கவல்லதாம்.

## தங்க பற்பம்

741 ஆணிக் கனகபற்ப மங்கசன்வின் னீர்த்திப்பி
காணிக்கு நாலாங் கனியிரதம்—பாணிக்கும்
மெல்லிதினுங் கொள்ளமத்தி மென்பருமை காஞ்சனிமா
வல்லி யரிசனமர் மம்.

(பொ - ரை) ஆணிப்பொன்னாகிய உயர்வுடைய தங்கத்தைப் பற்பமாக்கும் முறையாவது: கருப்பஞ்சாற்றைத் திப்பி நீக்கி வடித்துக் கொண்டு தங்கத்தினளவுக்கு நாலுபங்கு கூட்டி யரைத்துலர்த்திக் கொண்டு, அங்ஙனமே வாழைப்பழச் சாறும், வெற்றிலைச்சாறும் மேற்கண்டவாறு விட்டு அரைத்துலர்த்தி வில்லைசெய்து முறைப்படி புடமிடப் பற்பமாம். மென்பருமை, பருமை மென்மை என மாறி தங்கத்தின் வன்மை மென்மையாய் நுண்ணிய பற்பமாகுமென்க. காஞ்சனி, மா, வல்லி-பொன்னின் பெயர்கள். அரிசனமர்மம்-பிறவகைப் பற்புங்கள் வெண்மை முதலிய வண்ணங்களாகத் திரியினும், தங்கபற்பம் மாத்திரம் "குலம் பொய்யா நிறமு மஞ்சள்" என்னுமாறு மஞ்சளின் வண்ணம் பெற்றிருக்குமாமென்க.

## சாத்திய அசாத்திய நாடி நடை

742 மூவருமொன் ருய்நடக்கில் மோசம் பெரிதாகும்
மூவரும்வெவ் வேருனல் மோசமட்டு—மூவருந்தந்
தன்மைநடை யாகிலொரு தாட்சியில்லை தாட்சியுண்டாம்
வன்மைநடை யாகிலறி வாய்.

(பொ - ரை) மூன்ருகிய வாத பித்த சேத்துமங்கள் ஒரு நெறியாய் நடந்தால் பெரிதான கேட்டை விளைக்கும்; வெவ்வேறு வகையானல் அபாயமான நிலையை எய்துவிக்கும், ஆனல், உயிர்ச்சேதம் அவ்வளவு விரைவில் ஏற்பட்டுவிடாது; அம்மூன்றும் தத்தமக்கு வகுத்த நடையிலியங்குவனவாயின் தாழ்வொன்று

மில்லை; தத்தம் நடையிலியங்கிடினும் அவற்றின் வேகம் அதிகமானல் உடம்புக்குக் கேடும் இறுதியும் உண்டாம் என்பதாம்.

## இதுவுமது

743 தத்த நெறிநடக்கிற் சாத்தியம சாத்தியமாம்
பித்த முறைமை பிறழ்ந்திட்டாற்—வித்தியாச
மான லரச னுமைத்தாந் தந்திரியிற்
போன லுடனுவி போம்.

(பொ - ரை) வாத பித்த சேத்துமங்கள் தத்தமக்கியன்ற நெறியிலே நடந்தால் நோய் தணித்தல் சுலபமாக வியலும்; அவற்றுள் பித்தமானது தன் முறையிற் பிறழ்ந்ததானல் மிக முயன்று உயர்ந்த அவிழதப் பிரயோகங்களில் ஒருவாறு நோய் தணித்தலுமாம்; அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டால் வாதம் தனியாய் மற்றவற்ரோடு கூடாதாகிவிடும்; வாதம் சேத்துமத்தை நோக்கி நடந்தால் கால நீட்டித்தலின்றியே உயிர் பிரியும் என்பதாம்.

## பிணி தீர்க்கும் முறைக்கு உவமை

744 மீகாம னுவாயை வேலைதனி லேநடத்தும்
வாகாக நல்ல வயித்தியர்கள்—சோகநலி
யுற்றவன் றன்பிணியை யுத்தியறிந் தோட்டுவது
மற்றென்சொல் வேன்றுணிந்து வாய்.

(பொ - ரை) மாலுமியானவன் மரக்கலத்தைக்கடலினிடத்து நடத்துகின்றவாறுபோல, நல்ல மருத்துவர்களும், மனச்சோர்வு கொண்டு நோயுற்றவன் பிணியை நுண்ணிய திறனறிந்து மருத்துவத் தொழிலை நடத்தலாம் என்று கூறுவதன்றி வேறெவ்விதமாக அமைதி கூறுவே னென்பதாம்.

## பாம்பு மயங்க

745 காலயில்வார் வேலை கடையக் கயிறுவார்
மாலயில்வார் பூவில் மயங்குவார்—பாலெனுமெய்
தோரை யிலைச்சாற்றிற் ரேய்ந்துவருங் காற்றடித்த
பேரையெதிர் கொண்டாலும் பின்.

(பொ - ரை) காற்றினையுட் கொள்வதும், திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை மத்தாகக் கொண்டு சுழற்றத் தாம்பாவதும், தன்பாலுள்ள நஞ்சினை அஞ்சி யாவரும் தன்னை நலிவர் என்னுமச்சத்தால் மற்றுள்ள உயிர்களை யொப்பவுலவுவதற்கு மயங்குவதும், மல்லிகை தாழை முதலிய நறுமலர்களின் மணத்தை நுகர்ந்து மயங்குவதுமாகிய நாகப்பாம்பானது, மூங்கிலிலையின் இரசத்திற்றோய்ந்து வீசுங் காற்றினிடைப் பட்டுத் தன்பாலடைந்தவரை யெதிர் காணினும் முன்னிலுமதிகமாகவே மயங்குமென்பதாம். மூங்கிலிலையின் இரசம் பாம்புக்கு மயக்கந்தருமென்க

## சர்ப்பம் ஆடாதிருக்க விநோதம்

746 வெள்ளுள்ளி சோபி விரவவரைச் சாற்றாட்டிக்
கொள்ளை வெயிலுலர்த்திக் கொண்டதனை—எள்ளளவு
நற்பசுச்சா ணத்துடனே நாறுதல்கண் டாற்காணுஞ்
சற்பமா டாவினோ தம்.

(பொ - ரை) வெள்ளைப் பூடும் நேர்வாளமும் என்னுமிரண்டையும் அவரைச் சாற்றிற் கலந்தரைத்து நல்ல நண்பகல் வெயிலிலுலர்த்தி வைத்துக் கொண்டு சிறிதளவு எடுத்துப் பசுவின்சாணத்துடன் கலந்து பாம்பின்முன் காட்டின் பாம்பு படம் விரித்தாடாது சுருட்டிக் கொள்ளும் ஆச்சரியங் காணலாம்.

## காட்டு மரவட்டைக் கடி நீங்க

747 ஆலே சடல மசங்கிதமா மாயுளஃகும்
மேலே யதுபோம் வெடியுப்பு—பாலையுப்பு
போட்டடுவேப் பெண்ணெய் புகையாக்கி மாவிலுண்ணக்
காட்டுமர வட்டைக் கடி.

(பொ - ரை) காட்டு மரவட்டைக் கடியால் உடம்பில் தடிப்பும் புண்களுமேற்படுதலால் உடல் அருவருப்புடையதாகும்; அத்துடன் அவ்விடத்தால் ஆயுளும் குறைந்து விடும்; (அதற்குத் தீர்க்கு முறையாக) வெடியுப்பு வெள்ளையுப்பு இரண்டையும் வேப்பெண்ணெயிற் சேர்த்து எரித்து அதனிலுண்டாம் புகையை உடம்பிற் பிடிக்க அசங்கிதம் போய் நல்ல மேனியுண்டாம்; அவ்வெண்ணெயை மாவிற் கலந்துண்ணின் கடிவிஷந் தீர்ந்து ஆயுள் விருத்தியாம் என்பதாம்.

## பாம்புக்கடிக்கு

748 வெண்குன்றி வேரை வெருகடிச்சாற் ருலரைத்து
எண்கெச்சங் கூட்டி யிசைமாத்ரை—கண்காதா
யுள்ளவர்க்குக் காலனதே யுண்ணுமுன் னேவிஷம் போம்
எள்ளளவு நீரிலதை யே.

(பொ - ரை) வெள்ளைக் குன்றிமணியின் வேரைப் பூனைக் காலிச் சாற்ருலரைத்துக் கரடியெச்சமுங் கூட்டியுருட்டிய மாத்திரையை எள்ளினளவு நீரில் சேர்த்துண்ணு முன்னே பாம்பு விஷம் நீங்கும்; கண்ணையே காதாகவுடைய பாம்பு (கட்செவி) க்குக் காலன் போன்றது மேற்கண்ட மாத்திரையாகுமென்க.

## காணுக்கடிக்கு

749 மறியுண மூலிவிரை வன்மீ னெருவை
யுறவூட்டி நன்ரு யுலர்த்திப்—பிறகதனை
யூண யறலிலுண வுப்புசம்போந் தேனிலுணக்
காணுது காணுக் கடி.

(பொ - ரை) ஆடுதின்னுப் பாளையின் விதையுடன் முதலை இரத்தத்தைச் சுவறப் பூசி யுலர்த்திப் பின்பு அதனை நீருடன் உண்ண உப்புசம் போம்; தேனிலுண்ணக் காணுக்கடி நீங்கிக் காணுதொழியும்.

## வண்டுகடிக்கு

750 நன்னரி வேரை நறுக்கி யரைத்துமதன்
வின்னரி யூணல் வெதுப்பியே—தின்னவெறி
தோணுது கற்ருழைச் சோற்றிற் கலந்துண்ணக்
காணுது வண்டுக் கடி.

(பொ - ரை) நன்னரி வேரைச் சிறு துண்டுகளாக நறுக்கி யரைத்து மன்மதன் வில்லின் நாணியாகிய வண்டின் உணவாகிய தேன்கூட்டிவெதுப்பித் தின்ன, பித்தவெறியடங்கும்; கற்ருழையின் சோறு கலந்துண்ணின் எல்லா வகையான வண்டுக்கடியும் நீங்கும்.

## தெறுபதக்கடி போக

751 கூட்டத் தெறுபதமுங் கோகிலமு மோர்குடத்தி
லீட்ட வதுகளையுண் டெச்சமிடுங்—கோட்டமில
வங்கமிள குப்பெருக்கு மத்தித்த வுண்டைகள்தேள்
எங்கெங்கே யென்னுமதை யே.

(பொ - ரை) நண்டுத்தெறுக்காலைக் கூட்டமாகப் பிடித்துக் குயிலுடன் ஒரு குடத்தில் வைத்திருந்தால் குயில் அவைகளைத் தின்று எச்சமிடும், அவ்வெச்சத்தை கோஷ்டம் இலவங்கம் மிளகு உப்பு எருக்கம் வேர்களுடன் சேர்த்து மத்தித்து அருந்தின் தேள்கடி விஷங்கள் எங்கே யென்னும்படி தீரும் என்பதாம்.

## தேள் கடி போக

752 வெள்ளை யருக்கத்தின் வேராட்டுக் கோமயத்தைக்
கொள்ள வுலர்த்திவைத்துக் கொண்டதனை—எள்ளளவு
வெற்றிலையி லுள்ளியுடன் மெல்லுமுன்போ மாரடைத்தல்
சிற்றெறும்பு போல்வருக்கத் தேள்.

(பொ - ரை) வெள்ளைஎருக்கின் வேரை ஆட்டின் சிறுநீரில் ஊறவைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு வேண்டும் பொழுது வெற்றிலையில் உள்ளிப்பூடும் மேற்கண்ட வேரும் வைத்து மென்று உட்கொள்ளின் தேள் கடி விடமும் அதனலேற்படும் மாரடைப்பும் போய் சிற்றெறும்புக் கடிபோல் மாறும் என்பதாம்.

## எலிக் கடிக்கு

753 முருங்கையதள் மாவிலிங்க மொக்கு கடுக்காய்
பிரண்டைரசஞ் சோற்றுப் புடனே—யிரண்டரையாக்
கூட்டி :யொருவாரங் கொண்டாற் பிறகுதலை
காட்டா தெலியின் கடி.

(பொ - ரை) முருங்கைப் பட்டை மாவிலங்க மொக்கு கடுக்காய் பிரண்டைச்சாறு சோற்றுப்பு ஆகியவற்றை ஒன்ருகக் கூட்டி (முறைப்படி பாகமாக்கி) ஒரு வாரம் கொண்டால் எலிக்கடி விடம் தலைகாட்டாதொழியு மென்பதாம். இரண்டரையாக வென்

னுந் தொடரை எண்ணுக்காது தொனிப் பொருளாக்கி ஒன்றாக என்று பொருள் கொள்க.

## நரை உண்டாக்க

754 வச்சிரத்தின் பாலில் மதுநெய்யின் திப்பியரைத்
துச்சிதப்பா கிற்கிண்டி யுண்டைசெய்து—நிச்சயமாய்
எண்ணெயிலிட் டூட்டமயி ரெவ்வனர்க்கும் வெண்ணிறமாய்ச்
சண்ணுமறை மாவினே தம்.

(பொ-ரை) கள்ளிப்பாலுடன் தேன் நெய் கூட்டி அரைத்த திப்பியை வெல்லப்பாகு கூட்டிக் கிண்டி உண்டை செய்து எண்ணெயில் ஊறவைத்து அந்த எண்ணெயைக் கேசத்திற்குத் தடவி வர இளமைப் பருவமுடையவர்க்கும் தலைமயிர் நரைமயிராகச் செய்யுமென்பதாம்.

## பேய் நாய் நரிக்கடிக்கு

755 பேய்நாய் நரிகடித்த பேர்கடித்த பேர்க்கவிழ்தம்
வேய்நீபங் காஞ்சிரமிவ் வேர்மூன்றுங்—காய்நீரில்
வேப்பெண்ணெய் குத்தி விளாவிக் குடிபொடிமுன்
பேய்ப்பெண்ணைப் போலடங்கும் பின்.

(பொ-ரை) வெறிபிடித்த நாயும் நரியும் கடிக்கப் பெற்றவர்களுக்கு மேற்கண்ட வெறி கொள்ளும்; அவ்வெறிகொண்டவர் வெறியின் வேகத்தால் எதிர்ந்தோரைக் கடிப்பர், அவ்வாறு கடியுண்டவர்க்கு அவ்வெறிநோய் பரவாமல் தடுப்பாக, மூங்கில், கடம்பு, எட்டி ஆகிய இம்மூவகை வேரையும் நீரிற் சேர்த்து நன்றாகக் காய்ச்சிக் குடிநீராக்கி வேப்பெண்ணெயும் விட்டுக் குடிக்கச் செய்தால் மந்திரித்த திருநீற்றைத் தூவிய அளவில் பேயால் தீண்டப்பெற்ற பெண் பேயாட்டம் நீங்கி அடங்கினாற் போல, வெறியடங்கப் பெறுவர்.

## மதனகாமேசுரம்

756 தாசே ரகக்குட்டி தாய்முலைப்பா லுண்பருவத்
தாசோதை யாகா வதன்தீனி—யேசேரும்

பையெடுத்துள் தக்கோலம் பாச்சாமுன் னேமதனங்
கையெடுக்கும் பொய்யலமெய் காண்.

(பொ - ரை) ஒட்டகத்தின் குட்டி தாயினிடத்துப் பாலருந் தும் பருவத்தில் அஃதருந்திய பால் செரியாமுன் அக்குட்டியின் வயிற்றிலுள்ள இரைப்பையை வெளியிலெடுத்து அதனுள் உள்ள பாலுடன் தக்கோலபபொடியை யிட்டு முறைப்படி மாத்திரை செய்துஉண்ணின் மதனகாமேசுரமாகுமென்பதாம். இதன் முழு விளக்கத்தைத் தேரன் மகாகரிசலில் மதனகாமேசுரத் தலைப்பின் கீழ்க் காண்க.

## தம்பனக் குளிகை

757 வேங்கைப் பிசினும் வெருகடிவித் தக்காரத்
தாங்காவு தன்சுதையாற் சாரவரைத்—தாங்குளிகை
நெய்யிலுண விந்திறுகி நிற்கு மயர்ச்சியுண்டாந்
தையலர்க்கு மாற்றுலிகு சம்.

(பொ - ரை) வேங்கை மரத்தின் பிசினும் பூனைக்காலியின் விதையும் வெல்லத்துடன் சேர்த்துப் பசுவின் பாலில் நேகவரைத் துருட்டிய குளிகையை நெய்யில் உட்கொண்டால் விந்திறுகிக் கீழ் நோக்காது நீடித்து நிற்கும்; மங்கையர்க்கு அயர்வுண்டாம்; இதன் மாற்றுக எலுமிச்சம் பழச்சாற்றைக் கொள்ளவும்.

## நீர்த்தோஷம் தீர தம்பனம் உண்டாக

758 பழுத்த வரமகளைப் பாலினிற் காய்ச்சாமுன்
சுழிக்க வரிசனத்தின் சுன்னம்—பழத்தையுண்டால்
ஆகாத தம்பனமுண் டாகுமந்தப் பால்குடிக்கப்
போகாத நீர்த்தோஷம் போம்.

(பொ - ரை) வாழையின் கனியைக் காய்ச்சிய பாலிற் கலந் துண்ண வீரியத்தம்பன முண்டாம்; மஞ்சட் பொடியை மேற்கண்ட பாலிற் கலந்து காய்ச்சியுண்ணின் நீர்த்தோஷம் போம் என்பதாம். காய்ச்சா - காச்சி; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

தேரையர் வெண்பா மூலமும் உரையும்
குறிப்புரை பொழிப்புரைகளும்
முற்றும்.